உரிமை வெளியீட்டாளருக்கு

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| சிறப்புரைகள் | 01 |
| முன்னுரை | 15 |
| முதற்பதிப்பின் முன்னுரை | 36 |
| நூல் ஆரம்பம் | 45 |
| வலி என்பவர் யார்? | 46 |
| வலியுல்லாஹ்வின் மகத்துவம் | 49 |
| மஸ்னவி ஷரீபு முழக்கம் | 51 |
| குலிஸ்தான் போதனை | 51 |
| குத்பின் பெருமை | 52 |
| வலியின் ஆரம்பம் | 55 |
| மரணத்திற்கப்பாலும் ஹயாத்துண்டா? | 57 |
| பத்திரிகையில் வெளி வந்த செய்தி | 71 |
| வஸீலா தேடலாமா? | 74 |
| வஸீலா..... | 94 |
| கறாமத்து உண்டா? | 110 |
| கப்ரு, ஜியாரத்து கூடுமா? | 126 |
| ஜியாரத்தின் ஒழுங்கு முறை | 137 |
| கபுரை முத்தமிடலாமா? | 142 |
| கொடி ஏற்றலாமா? | 154 |
| உர்ஸு (கந்தூரி) நடத்தலாமா? | 156 |
| நேர்ச்சை செய்யலாமா? | 164 |
| கபுருகளில் போர்வை போர்த்தலாமா?<br>சந்தனம் பூசலாமா? புஷ்பம் போடலாமா?<br>வாசனைத் திரவியங்கள்<br>சாம்புராணி புகை போடலாமா? | 168 |
| முடிவுரை | 173 |



அச்சிட்டோர்: மாஹின் பிரிண்டர்ஸ்

29, அப்பு மேஸ்திரி தெரு, சென்னை-1. ✆: 5225143

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

**இந்நூலின் முதற் பதிப்பைச் சரிபார்த்து, சிறப்புரை வழங்கிய மேன்மை தங்கிய உலமாக்கள் அரபியில் அளித்த வாசகங்களின் சில குறிப்புரைகளும் அவர்களது பெயர் விபரங்களும்**

بسم الله الرحمن الرحيم

الحمد لله الذي جعل العلماء مصابيح الانام والصلوة والسلام على
خير الانبياء الكرام سيدنا محمد وآله وصحبه العظام ما زارت الزوار
لا سيما اهل التقى مرة وبعد فقد اطلعت على الكتاب المنيف السفر المعظم
المنتخب من آثار كالعقد المنظم في فضائل زيارة قبر النبي والولي المحترم
المصنف بحق ابناء الانام الى زيارة الاولياء الكرام لمؤلفه العالم
اللبيب والفاضل الاديب محمد باقر صاحب البلخوي ابن محمد يوسف
صاحب من اهل ناكور فرأيت فيه ما يستبشر به الناظرون في الاجابة
وتقربه عيون اولي الالباب لاتيانه باقوال الائمة والعلماء
والفحول الجهابذ الجلة فلله ما اطول باعه وما اكثر
اطلاعه فشكر الله سعيه واجتهاده ونفع به عباده آمين
كتبه محمد اسمعيل ... آمين

٢٠.٩.١٩٥٠

1. காயல்பட்டணம் உலமாக்களில் தலைசிறந்தவர்களும், மஜ்லிசுல் புகாரிஷ் ஷரீபின் முக்கியஸ்தரும், சிறந்த முப்தியுமான, மௌலானா மௌலவி, அல்ஹாஜ், நஹ்வி முஹம்மது இஸ்மாயில் ஆலீம் முப்தி அவர்கள் அளித்தது:

(ஹம்து ஸலவாத்திற்குப் பின்பு)

ஹிதாயதுல் அனாம்-இலாஜியாரதில்-அவுலியா இல்கிராம் என்ற இந்நூலை நான் நல்லவிதமாக கவனித்து பரிசீலித்து நோட்டமிட்டுப் பார்த்தேன். இந்நூலாசிரியர் நாகூர் முஹம்மது பாக்கர் ஆலிம் சாஹிபு அவர்களது இச்சிறந்த நூலைப் படிப்பவர்களது உள்ளங்கள் மகிழ்வுறும்; அறிவாளர்களது அகங்கள் நிறைவுபெறும். ஏனெனில் இந்நூலில் அவர்கள் காண்பிக்கின்ற அத்தாட்சிகள் சன்மார்க்க மேதைகளின் சான்றுகள்; சங்கைக்குரிய அறிஞர்திலகங்களின் அத்தாட்சிகள்.

என்னே இந்நூலாசிரியரின் சிறந்த சேவை! எத்தனை எத்தனை அரும்பெரும் கிரந்தங்களை எல்லாம் ஆராய்ந்து தேடி சான்றுகளை திரட்டித் தந்துள்ளார்! இவருடைய இந்த உயர்ந்த சேவைக்கு அல்லாஹ் அதிகமான நற்கூலிகளைக் கொடுத்தருளி அவர்களது பிரயாசையையும் முயற்சியையும் நல்லடியார் களுக்கு நற்பயனுடையதாய் ஆக்கியருள்வானாக, ஆமீன்.

இப்படிக்கு (ஒப்பம்)
முஹம்மது இஸ்மாயில்-இபுனு-ஸெய்யிது
அஹ்மதுல்-அல்லாமதுந் நஹ்வி
*காயல்பட்டணம்: 20-9-1950*

2. காயல்பட்டணம், மஹ்ளறா, மத்ரஸதுல் காதிரிய்யா ஸதர் முதர்ரிஸும், பிரபல முப்தியுமான மௌலானா மௌலவி அல்ஹாஜ் முஹியித்தீன் தம்பி ஆலிம் அவர்கள் அளித்தது:

''இந்நூலை ஆதி முதல் அந்தம் வரை நன்கு நோட்டமிட்டு மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். முழுவதும் குர்ஆன் ஆயத்துக்களாலும், நபி நாயகம் (ஸல்) அவர்களது ஹதீதுகளாலும் பிக்ஹு சட்ட வாக்கியங்களாலும், ஸஹாபியாக்களின் நடைமுறை விபரங்களாலும் நிறைந்துள்ளன. அருமந்த இந்நூல் மிகச் சிறந்த பயனை அளிக்கவல்லது. இது போன்ற நூல்களை காண்பது அபூர்வம். இது மட்டில் இத்தகைய முறையில் யாரும் நூல் வெளியிட்டதில்லை. எனவே: இந்நூலாசிரியரின் அபூர்வமான சேவைக்காக நான் மனமுவந்து பாராட்டுகிறேன். அல்லாஹு தஆலா நம் சார்பிலும், ஏனைய முஸ்லிம்கள் சார்பிலும் இந்நூலாசிரியருக்கு நற்கூலி ஈந்தருள்வானாக.

இந்நூல் ஸு¬ன்னத்து வல்ஜமாஅத்தின் கொள்கைகளுக்கும் மத்ஹபுகளின் அடிப்படைக்கும் ஏற்ற முறையில் சிறப்பாக அமைந்துள்ளது.

இப்படிக்கு (ஒப்பம்-ஸீல்)
முஹ்யித்தீன் தம்பி-இப்னு-முஹம்மது-அப்துல்காதர்

هذه الرسالة التي ألفها أخونا العالم محمد باقر [illegible] هو صحيحة
موافقة للشريعة المطهرة المحمدية شكر الله سعيه وجزاه عنا وعن
سائر المسلمين خيرا آمين كتبه محمد عبد القادر ابن العلامة محمد أبوبكر مسكين صاحب
الصديقي القاهري عفا الله عنهما آمين

3. காயல்பட்டணம், பிரபல முப்தியும், ஜாவியா மத்ரஸதுல் பாஸிய்யா பேராசிரியருமான, மௌலானா மௌலவி முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் ஸித்தீக்கி, அவர்கள் அளித்தது:

''நமது சகோதரர் நாகூர் முஹம்மது பாக்கர் ஆலிம் அவர்கள் கோர்வை செய்துள்ள இந்நூல் ஸஹீஹானது. பரிசுத்தமான ஷரீஅத்துல் முஹம்மதிய்யாவுக்கு நேர்பாடானது. இந்நூலாசிரியரது முயற்சியை அல்லாஹ் ஏற்றுக்கொள்வானாக. நம் சார்பிலும் ஏனைய முஸ்லீம்கள் சார்பிலும் இந்நூலாசிரியருக்கு அல்லாஹ் நற்கூலி கொடுத்தருள்வானாக. ஆமீன்''

இப்படிக்கு (ஒப்பம்)
முஹம்மது அப்துல் காதர் - இபுனுல்
அல்லாமா முஹம்மது அபூபக்கர் மிஸ்கீன்
காயல்பட்டணம்.

4. காயல்பட்டணம், ஸாஹிபு அப்பா தைக்கா மானேஜரும் புகழுடைய பெரியாருமான மௌலானா மௌலவி அல்ஹாஜ் பா.சு.முஹம்மது அப்துல்லாஹ் லெப்பை அஸ்ஸதகலி ஆலீம் அவர்கள் அளித்தது:

''நாகூர் குத்பு ஷாஹு¬ல் ஹமீது நாயகம் அவர்களது பேரப்பிள்ளை மௌலவி முஹம்மது பாக்கர் ஸாஹிபு ஆலீம் அவர்கள் இயற்றிய இந்நூலை நான் நோட்டமிட்டு பார்வையிட்டேன். மறுக்கமுடியாத ஆணித்தரமான அத்தாட்சிகளால் நிறைந்துள்ளது. இந்நூலாசிரியரின் உயர்ந்த கல்வி மேம்பாட்டை என்னென்பேன்! அருமந்த சேவை. எல்லாப்புகழும் ஆதியிலும் அந்தத்திலும் அல்லாஹ்விற்கே உரியது''.

இவ்வண்ணம் (ஒப்பம் - ஸீல்)
முஹம்மது அப்துல்லாஹ் இபுனுன்னிஹ்ரீர
காளீ - சுலைமான் லெப்பை ஆலிமில்
ஹாஜில் ஹரமைனிஸ் ஸதக்கலி
காயல்பட்டணம். 18-11-50
ஹிஜ்ரி 1370 ஸபர் 7 சனிக்கிழமை.

5. காயல்பட்டணம், முத்துவாப்பா ஒலியுல்லாஹ் அவர்களது திருப்பேரரும், பெரியாருமான மௌலானா மௌலவி ஸூபி முஹம்மது இஸ்மாயீல் லெப்பை ஆலீம் (கொம்பாலீம்) அவர்கள் வழங்கியது.

''மகத்துவமிக்க மேலான இந்நூலின் விஷயங்கள் அனைத்தும் மிக மிக முக்கியமானவை. தீனுல் இஸ்லாமை ஏற்றுள்ள மக்கள் யாவருக்கும் சிறந்த பொக்கிஷமாகும். பன்னெடுங்காலமாக பெரும் பாடுபட்டு இந்நூலாசிரியர் இதைத் தயாரித்துத் தந்துள்ளார்கள். இந்நூலில் உள்ள விஷயங்கள் ஆதாரத்தால் வலுவானவை; ஏற்றுக்கொள்ளத் தகுந்தவை; சரியானவை. நேர்மையுடைய நல்லறிவாளர்கள் அங்கீகரித்துக் கொள்ளக்கூடிய சிறந்த ஆதாரபூர்வமான விஷயங்களாகவே முபாரக்கான சிறப்புடைய இந்நூலின் விஷயங்கள் அனைத்தும் உள்ளன. துனியாவிலும் ஆகிரத்திலும் சீர்வதித் தன்மையை அல்லாஹ் அதிகமதிகம் தந்தருள்வானாக. ஆமீன்''

இப்படிக்கு (ஒப்பம்)
முஹம்மது இசுமாயில் - இபுனு
ஷெய்கு சுலைமான் லெப்பை ஆலீம் ஆரிபுல் பக்ரிய்யி
காயல்பட்டணம்.

6. மதராஸ் அரசாங்க காஜி மௌலானா மௌலவி அல்ஹாஜ் முஹம்மது ஹபீபுல்லாஹ் ஸாஹிபு அவர்கள் அளித்தது.

''முஹக்கிக் ஆகிய இந்நூலாசிரியர் இயற்றிய இந்நூல் ஸஹீஹானது. கண்ணியத்திற்குரிய உலமாக்கள் இதை ஏற்று அங்கீகாரம் செய்வார்கள். ஏற்று அனுஷ்டித்து நடப்பதற்கு இந்நூல் தகுதியுடையது.''

இப்படிக்கு (ஒப்பம் - முத்திரை)
முஹம்மது ஹபீபுல்லாஹ் - இபுனு - ஷம்சுல்
உலமா - உபைதுல்லாஹ் - காஜீ
மதறாஸ்; ஹஜ்ரி 1370 ரபீவுல் அவ்வல் 22

7. குர்ஆன் தப்ஸீர் விரிவுரையாளரும் பன்னூல் ஆசிரியரு மான மௌலானா மௌலவி, அல்ஹாஜ் உத்தமபாளையம் முஹம்மது அப்துல்காதிர் ஆலிம் பாகவி அவர்கள் அளித்தது:

ஹஜ்ரத் செய்யிதினா குத்புல் மஜீத் ஷாஹுல் ஹமீது மாணிக்கப்பூரின் நாகூரீ (ரலி) அவர்களின் ஜியாரத்திற்காக நாகூர் சென்ற சமயம் நமது சகோதரர் உத்தம குணசீலர் மௌலவி முஹம்மது பாக்கர் ஆலிம் சாஹிபு அவர்கள் கோர்வை செய்துள்ள ஹிதாயத்துல் அனாம் - இலா - ஜியாரத்தில் அவுலியா இல் கிராம் என்ற நூலை நோட்டமிட்டுப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்நூல் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் நேர்பாடான முறையிலும் சுன்னத்துவல் ஜமாஅத்துக் கோட்பாடு களுக்கு ஏற்ற முறையிலும் அமைந்திருப்பதாகக் காண்கிறேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இந்நூலை அல்லாஹுத்தஆலா கபூல் செய்து ஏற்றுக் கொள்ளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு (ஒப்பம்)
முஹம்மது அப்துல்காதர் பாகவி
உத்தமபாளையம் 2-3-51

8. கொழும்பு அல்ஜாமிஉல் அள்பர் சம்மங்கோட்டு பள்ளி வாசலில் இமாமாக பணியாற்றிய மௌலானா மௌலவி கிருஷ்ணாப்பட்டணம் அபுல்ஜமால் முஹம்மது பதுருத்தீன் ஆலிம் நூரி அவர்கள் அளித்தது:

''எனது அன்பிற்குரிய உத்தமர் முஹம்மது பாக்கர் சாஹிபு ஆலிம் அவர்கள் இயற்றிய இந்நூலை நான் நோட்டமிட்டுப் பார்த்ததில் உலகத்தின் முளைகளாயுள்ள நாதாக்களான குத்புமார்கள், அவுலியாக்களைக் கொண்டு வஸீலா தேடக் கூடிய வழியில் உண்மையை நேர்மையாக எடுத்து சொல்லக் கூடிய இன்றியமையாத முக்கிய நூலாகவும், ஜியாரத்தை அறவே கூடாது என்று முரண்டுத்தனமாக தடை செய்பவர் களுக்கு அறிவு உணர்ச்சியைத் தரவல்லதாகவும் இருக்கக் காணுகிறேன். ஆண் விரச் சிங்கங்களான அவுலியாக்களின் விஷயத்தில், அவர்களோடு தொடர்பு கொள்ளும் துறையில் தடைக்கல்லாக நின்று எதிர்ப்புச் செய்யும் அந்தப் பிடிவாதக் காரர்களுக்கு எவ்வித அறிவும் ஆற்றலும் கிடையாது. அவர்கள்

வெளித் தோட்டைத்தான் பார்க்கிறார்களே தவிர தோட்டின் உள்ளிருக்கும் பருப்பையோ அகமிய இரகசியத்தையோ நோட்டமிட்டுப் பார்க்கிறார்களில்லை. ஜியாரத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகள் அளவில் இவர்கள் பார்க்கிறார்கள் இல்லை. ஆனால் பாமர ஜனங்களின் செய்கைகளைத்தான் துருவித் துருவி ஆராய்ந்து பார்க்கிறார்கள். இவர்களை அல்லாஹ்தான் நேரிய வழியில் செலுத்த வேண்டும். இந்நூலின் மூலம் எதார்த்தத்தை ஹக்கான உண்மையை அப்பட்டமாக எடுத்துரைத்தற்குரிய நற்கூலியை இந்நூலாசிரியர் அவர்களுக்கு அல்லாஹ் ஈந்தருள்வானாகவும்''

இப்படிக்கு (ஒப்பம்)
அபுல் ஜமால் முஹம்மது பதுருத்தீனுள் நூரி இபுனு
ஷெய்கு அஹ்மது லெப்பை ஆலிம் ஸித்தீக்கி
கிருஷ்ணாப்பட்டணம்
*ஹிஜ்ரி 1369 துல்ஹஜ் 26. 9-10-50*

9. கோட்டாறு, மௌலானா மௌலவி அல்ஹாஜ் செய்யிது முஹம்மது ஆலிம் (கத்திபு, ஜாமிஆ மஸ்ஜிது, துல்லார், சிங்கப்பூர்) அவர்கள் அளித்தது:

''தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்நூலை நான் நன்கு நோட்டமிட்டுப் பார்வையிட்டேன். இந்நூல் குர்ஆன் ஆயத்துகளாலும் நபி நாயகம் (ஸல்) அவர்கள் ஹதீதுகளாலும், சன்மார்க்க சட்ட மேதைகளான இமாம்களின் பிக்ஹு சட்டங்களாலும், அகத்தூய்மை பெற்ற ஸூபியாக்களின் நடவடிக்கை முறை விபரங்களாலும் நிரம்பி இருப்பதாக காணுகிறேன். இத்தன்மையில் ஹக்கான நேர்மையான உண்மை விஷயத்தை ஒளிவு மறைவின்றி எடுத்தறிவித்துள்ள இந் நூலாசிரியர் அவர்களுக்கு அல்லாஹ் அதிகமான புண்ணியங் களை ஈந்தருளட்டும்.

இப்படிக்கு (ஒப்பம்)
செய்யிது முஹம்மது இபுனு ஷெய்கு முஹிய்யித்தீன்
*12-10-1950*

## சரிபார்த்து சிறப்புரை வழங்கிய மற்றும் பெரியார்களின் பெயர் விபரங்கள்

10. ஹளரத்து, மௌலானா மௌலவி, ஷாஹ் சுல்தான் கலீபா சாஹிபு ஷத்தாரி, காதிரி, கவர்ன்மெண்ட் டவுன்காஜி, நாகூர், (ஒப்பம் - முத்திரை)

11. மௌலானா மௌலவி அல்ஹாஜ் முஹியத்தீன் அப்துல்காதிர் ஆலிம் சாகிபு நூரி, ஸத்ரு முதர்ரிஸ்-காதிரிய்யா மத்ரஸா-நாகூர்.

12. மௌலானா மௌலவி, அல்ஹாஜ், அஸ்ஸெய்யிது ஹுஸைன் ஸாஹிபு காதிரி, நாகூர்.

13. மௌலானா மௌலவி அல்ஹாஜ் குலாம் தஸ்தகீர் என்னும் நானா சாஹிபு, நாகூர்

14. மௌலானா மௌலவி ஸெய்யிது அஹ்மது ஸாஹிபு காதிரி, நாகூர்.

15. மௌலானா மௌலவி காஜி கத்திபு அல்ஹாஜ் ஷெய்கு ஹஸன் ஸாஹிபு ஷத்தாரீ காதிரி, நாகூர்.

16. மௌலானா மௌலவி செய்யிது முஹம்மது அலி சாஹிபு காதிரி என்னும் சின்னதம்பி சாஹிபு, நாகூர்.

17. மௌலானா மௌலவி அல்ஹாஜ் செய்யிது முஹியித்தீன் சாஹிபு காதிரி, நாகூர்.

18. மௌலானா மௌலவி ஹாபிளு ஷாகுல் ஹமீது, மேலப்பாளையம்

19. மௌலானா மௌலவி முஹம்மது மீறான், மேலப்பாளையம்.

20. மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஹாபிளு முஹிய்யித்தீன், மேலப்பாளையம்.

21. மௌலானா மௌலவி அஹமது முஹியித்தீன் ஸித்தீக்கீ நூரி, கிருஷ்ணாபட்டணம்.

22. மௌலானா மௌலவி அபுல்ஹஸன் அலி ஷாதுலி, நூரீ தென்காசி.

23. மௌலானா மௌலவி ஹுஸைன் முஹம்மது ஆலிம் என்னும் ஆயக்குடி சூபிஹஜ்ரத் (மதறாஸ் பெரம்பூர் ஜமாலிய்யா அரபி கலாசாலை, தலைமைப் பேராசிரியர்) - ஆயக்குடி, பழனி.

24. மௌலானா மௌலவி அப்துல் மஜீது நூரீ, ஆயக்குடி (பழனி).

25. மௌலானா மௌலவி முஹம்மது அபூஸாலிஹ் ஆலீம் காலங்குடி இருப்பு, கிரிஸ்நியா நகரம் (திருநெல்வேலி ஜில்லா)

26. மௌலானா மௌலவி முஹம்மது கலீலுர்ரஹ்மான் ஸாஹிபு காதிரி, பீஹார்.

27. மௌலானா மௌலவி முஹம்மது பஸீஹுத்தீன் ஸாஹிபு கவர்ன்மெண்டு டவுண் காஜி, மதறாஸ்.

28. மௌலானா மௌலவி கான் முஹம்மது ஸாஹிபு, நூரீ, திண்டுக்கல்.

29. மௌலானா மௌலவி ஷெய்கு முஹம்மது - இபுனு பீர் முஹம்மது நூரீ, கோட்டாரீ - பேராசிரியர், மத்ரஸா நூருல் இஸ்லாம், தொடுபுழை (கேரளா)

30. மௌலானா மௌலவி ஷெய்கு அப்துல் காதர் பாகவி இபுனுல் ஹாஜ் அஷ்ஷைகு அப்துல் மஜீது காதிரீ, பள்ளப்பட்டி

★ ★ ★

31. உலகமெல்லாம் இஸ்லாமை பரப்பும் பணியில் அரும்பெரும் சேவை செய்த உத்தமர், காதிரிய்யா தரீக்காவின் புகழ் மிக்க ஷெய்கும், முர்ஷிதுமான மீரட், ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி மௌலானா (மர்ஹூம்) அவர்களது அருந்தவப் புத்திரர் நதர் முயீனுத்தீன் நூரானி ஸித்திக்கி மௌலானா அவர்கள் அளித்த சிறப்புரை:-

''மாமேதைகளான சங்கைக்குரிய உலமாக்கள் குர்ஆன், ஹதீது இஜ்மா உடைய ஆதாரங்களைக் கொண்டு தரிபடுத்தி, அவுலியாக்களின் சிறப்புமிக்க உரூஸ் வைபவங்களை

நடத்தலாம். கண்ணியமிக்க அவர்களது கபுர்களை ஜியாரத்துச் செய்வதற்காக பிரயாணம் போகலாம். அவர்களது சமுகங்களி லிருந்து உதவி தேடலாம்'' என்ற விஷயங்களை எல்லாம் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார்கள்.

''எவரிடமிருந்து அவரது ஹயாத்தில் உதவி கோரி தேடப்பெறுகிறதோ அவரிடமிருந்து அவரது மௌத்திற்குப் பிறகும் உதவி கோரி தேடப்பெறும்'' என்று ஸெய்யிதினா இமாம் கஸ்ஸாலி (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். வயோதிகர்களுக்கும் வாலிபர்களுக்கும் நேரிய வழியில் நடக்க துணையாக உள்ள அருமையான இந்நூலை இயற்றியுள்ள நாகூர் மௌலானா மௌலவி முஹம்மது பாக்கர் சாஹிபு ஆலிம் அவர்கள் இத்தகைய அருமையான சேவையின் மூலம் அவுலியாக்களின் கண்ணியத்தை மேன்மைப்படுத்தி இருக் கிறார்கள். இதற்கு நல்லுதவி செய்த அல்லாஹ்வுக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஸுன்னத்து வல் ஜமா அத்து அனுஷ்டானங்கள் பிரகாரம் நாம் அனைவரும் சீரிய முறையில் நடப்பதற்கு அல்லாஹுத் தஆலா நல்லுதவி செய்தருளுமாறு. அவனது ஹுப்பையும் அவனது ஹபீபான அருமைநாயகம் (ஸல்) அவர்களது ஹுப்பையும், அவர்களை யார் யார் நேசம் வைக்கிறார்களோ அவர்களது ஹுப்பையும் தந்தருள் செய்யுமாறும் நாம் பிரார்த்திப்போமாக!

இப்படிக்கு (ஒப்பம்)

**நகர் முயீனுத்தீன் நூரானி இபுனு ஹஜரத் ஷெய்குல் மஷாயிகு மௌலானா ஷாஹ் முஹம்மது அப்துல் அலீம் ஸித்தீக்கி காதிரி**

*மீரட்*
*ஹிஜ்ரி 6-5-1370*

**'ஹிதாயத்துல் அனாம்-இலா-ஜியாரத்தில் அவுலியா இல் கிராம்' என்ற இந்நூலின் இரண்டாம் பதிப்புக்கு நற்சான்றுகள் அளித்துள்ள உலமாப் பெருந்தகையாளர்களின் விபரங்கள்**

32. ஆலி ஜனாப் மௌலானா மௌலவி உத்தமபாளையம் அல்ஹாஜ் முஹம்மது அபூபக்கர் ஆலிம் ஹஜ்ரத் கிபுலா நாஜிர் - மத்ரஸத்துல் காதிரிய்யா - மஹ்லறா, காயல்பட்டணம் (முன்னாள் நாஜிர், பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் மத்ரஸா, வேலூர்) அவர்கள் அளித்துள்ளது.

''ஹிதாயதுல் அனாம் இலா ஜியாரத்தில் அவுலியா இல்கிராம்'' என்ற இந்நூல் ''நானும் எனது ஸஹாபாக்களும் எதில் ஆகி இருக்கின்றோமோ அதுவே ஸுன்னத்துவல் ஜமாஅத்து கூட்டமாகும், என்று நாயகம் (ஸல்) அவர்கள் சிறப்பித்துக் கூறிய அந்தக் கூட்டத்தைச் சார்ந்து அதில் சேர்ந்து இருக்க வேண்டும் என்ற ஆவல் உள்ள பாக்கியவான்களான, ஹக்கையும் நேர்மையையும் ஈடேற்றத்தையும் நாடியிருக்கும் நல்லடியார்களுக்கு நிச்சயம் நற்பயனை அளிக்ககூடியதாக உள்ளது.

இதைக் கோர்வை செய்த நமது அன்பிற்குரிய அருமைச் சகோதரர் மௌலானா மௌலவி முஹம்மது பாக்கர் ஆலிம் அவர்களது சேவை மிக மிக திறமையுடையது. அல்லாஹ்வுக்கு உகந்த அரும் பணி.

இந்நூலில்அவர்கள் காண்பித்திருக்கும் அத்தாட்சிகள் ஸுன்னத்து வல் ஜமாஅத்திற்கு இசைந்தவை; ஆணித்தரமானவை; அங்கிகரிக்கத்தக்க சன்மார்க்க மேதைகளின், இமாம்களின் ஆதாரங்களோடு கூடியவை.

நீதியையும், நேர்மையையும் நாடி இருக்கக்கூடிய நல்ல உள்ளம் படைத்த நல்லடியார்களுக்கு அல்லாஹ் இந்நூலை என்றென்றும் நற்பயனளிக்கச் செய்வானாக. தங்களது மன எழுச்சிகளுக்கு அடிபணிந்து, தங்கள் மனம் போனபடியெல்லாம் நடக்கும் ஸுன்னத்து வல்ஜமாஅத்திற்குப் புறம்பான வழிகெட்ட கூட்டத்தார்களது தாக்குதல்களுக்கும், பெரிய ஆபிதீன்கள் போன்று வெளிக்கு தோற்றமளித்துக் கொண்டு அகீதாக் கொள்கைகளில் மிக மோசப்பட்டுப் போயிருக்கும் காரிஜீக்களான கூட்டத்தார்களது எதிர்ப்புகளுக்கெல்லாம் எத்தகைய

மதிப்பும் கிடையாது அத்தகையவர்களுடைய எதிர்ப்புகளை எல்லாம் தகர்த்திட இந்நூல் தக்க அரணாகும்.

''எனது சமூகத்தார்களிலுள்ள சத்தியவந்தர்களான நற்கூட்டத்தினர் ஹக்கின் மீது நிலைத்து வெற்றியுடன் நீங்காவண்ணம் ஆகி இருப்பார்கள்; எவர்களுடைய எதிர்ப்புப் பழிச்சொற்களுக்கும் அவர்கள் அஞ்சமாட்டார்கள்'' என்று ஹஜ்ரத் நபி நாயகம் (ஸல்) அவர்கள் அருள் செய்துள்ளார்கள்.

அல்லாஹ்வின் அருட்கொடைக்கு பாத்தியமான அன்பியாக்கள். ஸித்தீக்கீன்கள் ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் எவ்வழி நடந்தார்களோ அவ்வழியிலேயே நம்மனைவரையும் அல்லாஹ் நடக்கச் செய்து ஜெயமுறச் செய்வானாக! எல்லாப் புகழும் ஏக வல்ல றப்புல் ஆலமீனாகிய அல்லாஹ்வுக்கே உரியது.

(ஒப்பம்) முஹம்மது அபூபக்கர்
நாஜிர் மஹ்லரதுல் காதிரிய்யா, காயல்பட்டணம்
ஹிஜ்ரி 1390 ஜமாதுல் அவ்வல் 22.

33. இந்தியா - இலங்கை ஹிஸ்புல்லாஹ் சபை தலைவர்; மௌலானா மௌலவி அல்ஹாஜ் ஷெய்கு அப்துல் காதிர் ஆலீம் ஸித்தீக்கீ ஸூ-பி ஹஜ்ரத் அவர்கள் அளித்தது.

''தன்னுடைய நேசர்களான அவுலியாக்களை நேசிப்பதன் மூலம் தனது நேசத்தையும் தன் சார்பிலிருந்து நற்கூலிகளையும் பெறுவதற்கு வஸீலாவாகவும், தனது அவுலியாக்களான நேசர்களை விரோதித்து நடக்கிறவர் எவரோ அவருக்கு தனது விரோதத்தையும், தண்டனையையும் ஆக்கிவைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் புகழ்ச்சியும். அல்லாஹ்வின் மஹப்பத்திலே ஆன மஹ்பூபீன்களுக்கெல்லாம் தலைவராகிய அருமை நாயகம் முஹம்மது முஸ்த்தப்பா (ஸல்) அவர்கள் மீதிலும், அவர்களது கிளைஞர் மீதிலும், தோழர்கள் மீதிலும், இறுதித் தீர்ப்பு நாள்மட்டில் அவர்களைப் பின்பற்றி நடக்கும் உத்தமர்கள் அனைவர் மீதிலும் ஸலவாத் எனும் கருணையும் ஸலாம் எனும் ஈடேற்றமும் உண்டாவதாக.

நமது அருமைச் சகோதரர் நாகூர் மௌலவி முஹம்மது பாக்கர் ஆலீம் ஸாஹிபு அவர்களது ஹிதாயதுல் அனாம் றஇலா-ஜியாரத்தில் அவுலியா-இல் கிராம், என்ற இந்நூலை

நன்கு நோட்டமிட்டுப் பார்த்தேன். அவ்வாறு பார்வையிட்டதில், ஸுன்னத்து-வல்-ஜமா அத்தார்களின் கொள்கைகளான அகீதாக்களுக்கு சரியான, ஏற்றமான முறையில் இருப்பதாக காணுகிறேன்.

ஆதாரபூர்வமான அத்தாட்சிகளுடன் அரும்பாடுபட்டு இந்நூலை கோர்வை செய்துள்ள இந்நூலாசிரியருக்கு அல்லாஹ் சிறந்த நற்கூலியை அருள்வானாக.

இப்படிக்கு (ஒப்பம்)
காதிமுல் கவும்
ஷெய்கு அப்துல்காதிர்

34. தமிழ்நாட்டில் பிரபல்ய ஆலிமும் முப்தியுமான மௌலானாமௌலவி, அல்ஹாஜ் முஹம்மது தமீம் ஆலிம் ஸாஹிபு முப்தி, அவர்களது அருமைப் புத்திரர், மௌலவி அபுல்பரகாத், ஸிப்கதுல்லாஹ் ஆலிம்-முதர்ரிஸ் - நாஸிர், மத்ரஸா, யூசுபிய்யா அவர்கள் அளித்தது;

நல்லோர்களுக்கு நற்சான்று இறுதித் தீர்ப்புநாள் வரையிலும் குன்றாது மேலோங்கியே நிற்கும்.

ஹிதாயதுல் அனாம் என்ற இந்நூலை நான் நன்கு நோட்டமிட்டுப் பார்வையிட்டேன். பதினான்காம் பிறையின் பரிபூரணச் சந்திரனைப் போன்று இது சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. இத்தகைய சிறந்த நூலை வெளியிடச் செய்த அல்லாஹ்வை நாம் போற்றுவோம். ஆணித்தரமான அற்புத ஆதாரங்கள்! பெருமானார் நாயகம் (ஸல்) அவர்களது பொன்னுரைக் கோவைகள்! இவற்றால் ஆதாரபூர்வமாகத் தரப்பட்டுள்ள இந்நூல், சங்கைக்குரிய அவுலியாக்களின் ஜியாரத்துக்களைத் தடைசெய்யும் வழிகெட்ட முன்கிரீன்களுடைய மூக்குகளை அறுபடச் செய்யவல்லது......

மகத்துவம் பொருந்திய இந்நூலைக் கோர்வை செய்தது மிக மிகப் பாராட்டத்தக்கது. அல்லாஹ்வுக்கு உகந்த வீரத்தனமான நற்சேவை. இந்நூலாசிரியருக்கு அல்லாஹ் அளவிடற்கரிய அழகிய நற்கூலிகளை ஈந்தருள்வானாக.

நம்மனைவர்களையும் அல்லாஹ், அவனது அவுலியாக்களின் வஸீலாவின் பொருட்டால் நேர்வழியில் நிலைத்திருக்கச் செய்வானாக. மறதிகளை விட்டும், ஆபத்துகளை விட்டும்

துன்பங்களை விட்டும், வியாதி பிணிகளை விட்டும் சருலகிலும் நம்மை காப்பாற்றுவானாக.

இப்படிக்கு (ஒப்பம் - ஸீல்)
அபுல்பரகாத் முஹம்மது ஸிப்கதுல்லாஹ்

35. காயல்பட்டணம், ஜாவியா, மத்ரஸதுல் பாஸிய்யா பேராசிரியர், மௌலவி அல்ஹாஜ் கத்தீபு சா. சாகுல்ஹமீது ஆலிம் முப்தி அவர்கள் அளித்தது.

விருப்பு, வெறுப்பு என்ற எந்த வகையான கண்கொண்டும் நோக்காது, நியாயம் என்ற நோட்டம் கொண்டு நான் இந்த ஹிதாயதுல் அனாம்-இலா ஜியாரத்தில் அவுலியாஇல் கிராம் என்ற நூலை ஆதிதொடுத்து அந்தம் வரை நோட்டமிட்டுப் பார்த்ததில் அவை அனைத்தும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரப்பூர்வமான முஃதபரான கிரந்தங்களின் அத்தாட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதையே காணுகிறேன்,

பாரதூரமான அரும்பெரும் கிரந்தங்களின் இத்தகைய அபூர்வமான மேற்கோள்களை எல்லாம் இந்நூலாசிரியர் எப்படித்தான் ஆராய்ந்து, துருவி அடைந்துகொண்டார்கள் என்பது பெரும் வியப்பாக உள்ளது! இம்மாதிரி ஓர் அபூர்வ நூல் எழுதுவதென்றால் அது மலையைப் புரட்டுவது போன்ற கடுமையான வேலை. இலேசானது அல்ல. அதுவும் இக்காலத்தில் இம்மாதிரியான நூலை காண்பது என்றால் அண்டரண்டப்பட்சியைக் காண்பது போல அபூர்வமே. இதுபோன்ற மற்றொரு நூல் எதையும் காண்பது இயலாது. இத்தகைய அபூர்வ நூலை இயற்றியவர்கள் மாபெரும் மதிப்பிற்குரிய அல்ஆலிமுல்பாளில் முஹம்மது பர்க்கர் ஸாஹிபு நாகூரி அவர்களாவர், அல்லாஹுத்தஆலா அன்னாரது வாணாளை நீடித்து வைத்து இன்னும் இவர்கள் போன்ற நல்லறிஞர்களை அதிகப்படுத்துவானாக!

யாரும் கண்டு வியந்து போற்றும் அளவுக்கு அபூர்வமான ஆதாரங்களைக் கொண்டு அழகுற இந்நூலாசிரியர் எடுத்து ரைத்து, அதற்குரிய மகத்தான புண்ணியத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இது எப்படி சாத்தியமாயிற்று என்பது வியப்பைத் தரத்தான் செய்கிறது! ஆனால் வியப்படைவதற்கு

வழி இல்லை. ஏனெனில், இந்நூலாசிரியரின் பாட்டனார் யார் என்பதை நோட்டமிட வேண்டும்! அல்குத்புர் ரப்பானி, நாகூர் ஷாஹுல் ஹமீது வலிய்யுல்லாஹில் ஹக்கானி (ரலி) அவர்களல்லவா! அந்த அண்ணல் பாதுஷா நாயகம் (ரலி) அவர்களது பேரர் அல்லவா இந்நூலாசிரியர்!

''விசுவாசம் கொண்டார்களே அவர்களுடன் அவர்களை பின்பற்றிய அவர்களது சந்ததியினரையும் நாம் சேர்ப்போம். அவர்களுடைய கிரியைகளிலிருந்து யாதொன்றையும் நாம் குறைக்கவில்லை'' என்று அல்லாஹ்த்தஆலாவும் தனது திருமறையில் *(52:21)* அருள் செய்துள்ளான்.

இப்படிக்கு (ஒப்பம்)

*ஷாஹுல் ஹமீது (இபுனு சாஹிபு தம்பி மரைக்காயர்)*

காயல்பட்டணம்

ஹிஜ்ரி 1390, ரபீவுல் ஆகிர் 11

---

கிருபையுள்ள நாயனே! சத்தியத்தை சத்தியமாகவே எங்களுக்கு காண்பித்துத் தந்து அதன் பிரகாரம் நாங்கள் அனைவரும் நடக்க நல்லுதவி செய்தருள்! அசத்தியத்தை அசத்தியமாகவே எங்களுக்கு காண்பித்து தந்து அதை விட்டு நாங்கள் விலகி இருக்கச் செய்தருள்! ஆமீன்.

வஸ்ஸலாம். வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

---

# பொருளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| நூல் ஆரம்பம் | 02 |
| வலி என்பவர் யார்? | 03 |
| வலியுல்லாஹ்வின் மகத்துவம் | 05 |
| மஸ்னவி ஷரீபு முழக்கம் | 07 |
| குலிஸ்தான் போதனை | 07 |
| குத்பின் பெருமை | 08 |
| வலியின் ஆரம்பம் | 11 |
| மரணத்திற்கப்பாலும் ஹயாத்துண்டா? | 12 |
| பத்திரிகையில் வெளி வந்த செய்தி | 24 |
| வஸீலா தேடலாமா? | 27 |
| வஸீலா | 45 |
| கறாமத்து உண்டா? | 59 |
| கப்ரு, ஜியாரத்து கூடுமா? | 73 |
| ஜியாரத்தின் ஒழுங்கு முறை | 83 |
| கபுரை முத்தமிடலாமா? | 87 |
| கொடி ஏற்றலாமா? | 97 |
| உர்ஸு (கந்தூரி) நடத்தலாமா? | 99 |
| நேர்ச்சை செய்யலாமா? | 106 |
| கபுருகளில் போர்வை போர்த்தலாமா?<br>சந்தனம் பூசலாமா? புஷ்பம் போடலாமா?<br>வாசனைத் திரவியங்கள்<br>சாம்புராணி புகை போடலாமா? | 110 |
| முடிவுரை | 114 |

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# ஹிதாயத்துல் அனாம் - இலா ஜியாரத்தில் அவ்லியா இல் கிராம்

**ஹிதாயத்துல் அனாம் - இலா ஜியாரத்தில் அவ்லியா இல் கிராம்**

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியது. ஸலவாத் எனும் கருணையும் ஸலாம் எனும் ஈடேற்றமும் எம்பெருமானார் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதிலும் அவர்களது கிளையினர், தோழர்கள் அனைவர்கள் மீதிலும் உண்டாவதாக.

இக்காலத்தில் கற்றோர்களில் சிலர் உண்மைக்கு மாறாக விஷமப் பிரசாரஞ் செய்வது வருந்தத்தக்கது. கல்வியின் முன்னேற்றத்தால் நன்மைகள் பல உண்டாகியிருப்பினும் இக்கலியுகத்தில் உண்மைக்கும், சத்தியத்திற்கும் பஞ்சமாகவேயிருக்கின்றது. அத்தகைய விஷமப் பிரசாரங்களுள் அவுலியாக்களை, குத்புமார்களை நிந்திப்பதும், கப்ரு ஜியாரத்தை 'கப்ரு வணக்கம் அவுலியாப் பூஜை' என இழித்துக் கூறுவதும், கறாமாத்துக்களைக் கேலி செய்து பழிப்பதும் ஒன்றாகும்.

உண்மையை அறியாதவர்கள், தான் அவ்வாறு பிதற்றித் திரிகிறார்களென்றால், அறிந்தவர்கள் கூட உண்மையைக் கூறாது வாய்மூடி இருப்பது தான் விந்தையாக இருக்கின்றது. பஸாது குழப்பத்திற்கு அஞ்சி மௌனமாக இருப்பவர்கள் சுயமாகத் தங்கள் அபிப்பிராயங்களைக் கூறாவிட்டாலும் அக்கூற்றை மறுத்து முன்னோர்கள் கொடுத்திருக்கும் 'பத்வா' எனும் மார்க்கத் தீர்ப்பையாகிலும் எடுத்துக் காண்பிக்கலாமே. அதன் காரணமாக அவர்கள் உண்மையை உணர்ந்து நேரான பாதையில் நடக்க அனுகூலமாயிருக்கும். அவர்களது விஷமப் பிரசாரத்தில் கற்றோர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தாது கண்மூடித்தனமாயிருப்பது நேர்மையன்று. பேயன் எறியும் கல்லும் அபாயத்தை விளைவிக்குமாகையால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறே விஷமத்தனமான பிரசாரத்தைத் தடுத்து நிறுத்தி மெய் இன்னதென மக்களுக்கு எடுத்துரைத்துக் காட்ட வேண்டியது கடமையாகும்.

வலி என்பவர் யார்? அன்னாரது மகத்துவம் யாது? வலியின் ஆரம்பமென்ன? மவுத்துக்குப் பின்னும் அவர்களுக்கு ஹயாத்துண்டா? கறாமத் எனும் அற்புதங்கள் காண்பிக்க அவர்களுக்கு வல்லமையுண்டா? அவர்கள் பால் வஸீலா எனும் உதவி தேடலாமா? நாட்ட தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க அவர்களுக்குத் தத்துவமுண்டா? கபுருக்கு எதிரே கைகட்டி ஸியாரத்துச் செய்யலாமா? கொடி ஏற்றலாமா? உரூஸ் - கந்தூரி நடத்தலாமா? நேர்ச்சைகள் செய்யலாமா? கபுறுகளையோ அவற்றின் வாசற்படிகளையோ முத்தமிடலாமா? போர்வை, பூ, புஷ்பம் போடலாமா?

என்பன தற்போது விவாதத்திற்கு உரியவையாயிருக்கின்றன. இவை போன்ற ஐயவினாக்களை தெளிந்து தெரிய குர்ஆன், ஹதீது, இஜ்மாஉ, கியாஸ் கொண்டும், சரித்திர ஆதாரங் கொண்டும் அத்தாட்சிகள் தருகின்றோம். அறிவுடையோர் அறிந்துணர்க!

விளங்க சக்தியற்றோர் ளாஹிர், பாத்தின் இவ்விரண்டும் ஒருங்கேயமைந்த அறிஞர் பெருமக்களான உண்மை உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்க.

''நீங்கள் அறியாதவர்களாயிருப்பின் (முஷாஹதாவுடைய) அறிவு பெற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்'' என்பது திருமறை (16:43) போதனையாகும்.

## வலி என்பவர் யார்?

**அல்லாஹ்வின் கட்டளைகளையும் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போதனைகளையும் சிரமேற்கொண்டு ''தீன்'' எனும் சன்மார்க்க நெறியில் நடந்து, ஷரீஅத்-தரீகத்-ஹகீகத் எனும் மன்ஸில்களைப் படிப்படியாகக் கடந்து, இறுதியில் மஅரிபத் எனும் சாசுவத பேரின்ப வீட்டையடைந்து நித்திய ஜீவனைப் பெற்றவர்களே அல்லாஹ்வின் அவுலியாக்களாவார்கள்.**

எம்பெருமானார் றஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''நான் கல்வியின் பட்டணம். அலி அதன் வாயில்'' என்பதாகத் தங்களது வாரிசாக ஸெய்யிதுனா அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

''அறிஞர்களே நபிமார்களின் வாரிசுகள்'' என்பது மற்றொரு நாயக வாக்கியம்.

அவ்வாறு மெய்யறிவின் முதிர்ச்சியால் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாரிசாகக் கூடியவர்களைப் பற்றி, ''என்னுடைய சமூகத்தார்களிலுள்ள அறிஞர்கள் பனீ இஸ்றாயீலிலுள்ள நபிமார்களைப் போன்றவர்களாவர்'' என்பதாக நபிகளுக்கரசர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

''எனது ஸஹாபாத் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றுள்ளார்கள். அவர்களுள் எவரைக் கொண்டு பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழி பெற்றவர்களாவீர்கள்'' என்பதாகவும் நபிகட்திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உரைத்துள்ளார்கள். (மிஷ்காத்து)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உண்மை வாரிசாகவும், அறிவின் வாயிலாகவம் திகழக்கூடிய ஸெய்யிதுனா அலி

ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மற்றும் ஸஹாபாக்கள் இன்னும் வேறு பெரியார்களில் நின்றும் ஆரம்பமான ஆன்ம சந்ததியாகிய 'ஸில்ஸிலாவின்' தொடர்பு கொண்டு, அனுபவ வழிகளைப் பற்றிய மார்க்கங்களைத் தெரிந்தொழுகிய காரணத்தால், **'இல்முல்லதுன்னீ'** எனும் இறைசார்பிலிருந்து அருளப்படும் மெய்ஞ்ஞான பாக்கியம் பெற்றார்கள். சென்ற காலத்திய நபிமார்கள் மு∴ஜிஸாத்து எனும் அற்புதங்களை காண்பித்ததைப் போல் இவர்கள் கறாமாத்து எனும் அற்புதங்களைக் காட்டினார்கள். பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உத்திரவைப் பெறக்கூடிய திருஷ்டி வாய்ந்தவர்களாய் வாழ்ந்தார்கள். அவர்களது ஏவல் பிரகாரம் உலகின் பல பாகங்களுக்கும் சென்று "தீன்" சுடர் கொழுத்திய மகான்களுக்கே இக்காலை அவுலியா என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர்களே நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பிரதிநிதிகள் உண்மை வாரிசுகள்.

'உமது இறைவன் புவியில் நிழலை எவ்வாறு பரப்பியிருக்கின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா' (25:45) எனவும் "பூமியை நாம் விரிப்பாக்கி (அதில்) **மலைகளை** முளைகளாய் ஆக்கவில்லையா?" (78:6,7) எனவும் ஆண்டவன் தனது பரிசுத்தத் திருமறையில் கூறியுள்ளான். இவை அவுலியாக்களைப் பற்றிய குறிப்பேயாம். இத்தகைய மெய்யடியார்களையெ இறைவன் 'நிழல்' (ளில்லு) என்றும், மலை (ஜிபால்) என்றும் வருணித்துள்ளான். (ரூஹுல் பயான் தப்ஸீர் மொத்தம் 10 பாகங்கள் உண்டு. அதில் 4-வது பாகம் 199-வது பக்கத்திலும், 10-வது பாகம் 293-வது பக்கமும் நோட்டமிடுக)

"எனது அடியான் நபிலான வணக்கங்களையும் விருப்புடன் பேணிச் செய்பவனாக நீங்கா வண்ணமாகி எனது முடுகுதலைப் பெறும் வண்ணம் நெருங்கி நான் அவனை நேசிக்கும் அளவுக்கு ஆகிவிடுகிறான். நான் அவனை நேசித்துவிட்டேனேயானால் அவன் கேட்கும் காதாகவும் - பார்க்கும் கண்ணாகவும் - பிடிக்கும் கரமாகவும் - நடக்கும் பாதமாகவும் நான் ஆகிவிடுகிறேன்" என்று அல்லாஹுதஆலா கூறுவதாக ஹதீது குத்ஸியில் வந்துள்ளது. (ஸஹீஹுல் புகாரி)

பறுலான வணக்கங்களைச் செய்வதுடன், நபிலான வணக்கங்களைக் கொண்டும் ஆண்டவன் பிரியம் வைக்கும் வரையில் கலப்பற்ற விதமாக வணக்கம் செய்து அவனளவில் பனாவாகி இரண்டற்ற நிலைமையிலாகி விட்டால் அவருடைய செவி, கண், மூக்கு, நாக்கு, கை, கால் இன்னும் இதர உறுப்புகள் அனைத்தும் ஆண்டவனது சொல், செயல் வெளியாகும் தானங்களாகின்றன. அவை, அவனது செயல்களைச் செய்கின்றன. ஆண்டவனுடைய நாட்டத்திலுள்ளவையனைத்தும் அன்னார் மூலம் நிகழுகின்றன. ஆண்டவனுடைய சக்தியானது அசலாகும். அடியானுடைய சக்தி ஆண்டவனால் அருட்கொடையாக, இரவலாகக் கொடுக்கப்பட்டதாகும். அவுலியாக்கள் அல்லாஹ்வின் அன்பில் (மஹப்பத்தில்) மையலான காரணத்தால் இந்தச் சக்தி அவர்களுக்குப் பாக்கியமானது. எனவே

இறைவனது கட்டளைப்படி அஞ்சிப் பயந்து தக்வாச் செய்து ஜெயம் பெற்றவர்களானபடியால் அவர்கள்தான் நபிமார்களுடைய வாரிசு பாத்தியத்திற்குரிய அவுலியாக்களாக விளங்குகின்றார்கள்.

பலதரப்பட்ட அந்தஸ்துக்களை உடையவர்களாக வலிமார்களை அல்லாஹ் ஆக்கிவைத்து மானிடர்களை நேரான பாதையை விட்டும் வழிதவறி நாசமடையாதிருக்கும் பொருட்டு வழிகாட்டிகளாகவும் இரட்சகர்களாகவும் அவர்களை அல்லாஹ் ஆக்கி வைத்துள்ளான்.

## வலியுல்லாஹ்வின் மகத்துவம்

வலி என்னும் பதம் ‘வலா’ என்ற மூலத்திலிருந்து பிறந்தமையால் அப்பதத்திற்கு சாமீபம், சாட்சியம் என்று பொருள்படும்.

“மனிதன் எனது இரகசியம், நான் அவனது இரகசியம்” (அல்இன்ஸானு ஸிர்ரீ, வஅனஸிர்ருஹு) என்று அல்லாஹ் கூறியதாக ஹதீது குதுஸியில் வந்துள்ளது.

மானிடனை இறைவன் தனக்குப் பிரதிநிதியாக்கி உலகிலுள்ள எல்லாக் கருமங்களையும் அவன் வசம் ஒப்படைத்து அவனைத் தனக்கும் தன்னுடைய சிருஷ்டிகளுக்கும் இடையே நடுமையமாய் நிறுத்தி, சிருஷ்டிகள் ஆண்டவனுடைய தஜல்லியைக் கொண்டு கரிந்து போகாமல் காப்பாற்றக்கூடிய திரையாக ஆக்கியிருப்பதால் மானிடன் ஆண்டவனுடைய உலூஹிய்யத்துடைய தஜல்லியில் வெளியாகி விட்டான். உலூஹிய்யத்துடைய தஜல்லி ஒருவனில் வெளியானால் அவன் ஆண்டவனிடத்தில் சொந்தமான சில பதவிகளைப் பெறுவான். அவ்விதம் பெற்றதும் அவன் உலகத்தார் சகலருக்கும் ‘றஹ்மத்’ தாகி விடுவான். ஆகவேதான், அவுலியாக்கள் ஆண்டவனது பிரதிநிதிகளாக இருக்கின்றனர்.

எங்ஙனம் **நபி கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகத்தார்களுக்கு அருட்பிளம்பு (றஹ்மதுன்லில் ஆலமீன்)** ஆக இருக்கின்றார்களோ அங்ஙனமே அவுலியாக்களை ஆண்டவன் அகிலத்தாருக்கு கிருபையாளராகப் புவியின் கண் உண்டாக்கி இருக்கின்றான். ஆகையால், அவர்களும் அவனுடைய பிரதிநிதிகளாகவே இருக்கின்றார்கள், அவர்கள் சொல்வது அல்லாஹ் சொல்வதுதான். அது அல்லாஹ்வுடைய அடியாரின் நாவிலிருந்து வெளியானாலும் சரியே என்பதாக மஸ்னவீ-ஷரீபில் மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ரூமி றஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

றஸுலுக்கு வழிப்படுவது அல்லாஹ்வுக்கு வழிப்படுவதென்றும், றஸுலுடைய கரத்தை அல்லாஹ் தன்னுடைய கரமென்றும், றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எறிந்த மண்ணை அல்லாஹ் தானே எறிந்ததாயும் குர்ஆன் ஷரீபில் காணப்படும் ஆயத்துகளெல்லாம்

நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உரியதாயிருந்த போதிலும், குத்புமார்கள், ஆரிபீன்கள் - காமலீன்கள் - அவுலியாக்கள் ஸாலிஹீன்கள் ஆகியோரையும் சார்ந்தவையே. ஏனெனில் இவர்கள் அனைவரும், "உலமாக்கள் அன்பியாக்களுடைய வாரிசுகள்" என்ற ஹதீதுப் பிரகாரம், திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உண்மை வாரிசுகளாவர்.

**"நான் அல்லாஹ்வுடைய ஒளியில் நின்றுமுள்ளவன்: சகல வஸ்துக்களும் என்னுடைய ஒளியில் நின்றுமுள்ளவை" (அனமின்னூரில்லாஹி - வகுல்லுஷையின் மின்னூரீ)** என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதை ஆராயந்துணர்ந்தோர் ஒருவாறு அறிவர்.

சிருஷ்டிகள் அனைத்தும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஜோதியில் சம்பந்தப்பட்டதாயினும், அந்த ஜோதி ஆண்டவனைச் சார்ந்ததேயாம். எந்த வஸ்துவுக்கும் கொடுக்கப்படாத விலை மதிக்கவொண்ணா மாணிக்கமாகிய பகுத்தறிவு, படைப்புகளில் மேலான படைப்பாகிய இன்ஸான் எனும் மானிடனுக்கு மட்டிலுமே கொடுக்கப் பட்டிருக்கிறது என்பது வெட்ட வெளிச்சமாக விளங்கக் கிடக்கின்றது. அந்தப் பகுத்தறிவைக் கொண்டு மானிடன், நான் எனும் அனானிய்யத்தைப் போக்கி விட்டால் தரிப்பட்டிருப்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நூர் என்னும் ஜோதிப் பிரகாசமேதான். அங்ஙனமே அமல் செய்து அந்த நூரில் தரிபட்டிருப்பவர்கள் வலிமார்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடைய பிரதிநிதிகளாவர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய பிரதிநிதிகள் உள்ரங்கத்தில் (ஹகீகத்தில்) அல்லாஹ்வுடைய பிரதிநிதிகளேயாவர். இவர்களைப் பின்பற்றுதல் நேர் வழியாகும். ஏனெனில், இவர்களெல்லாரும் அல்லாஹ்வுடைய அஸ்மாஸிபாத்து வெளியாகும் மள்ஹரு (தானம்) ஆக இருப்பதால் இவர்கள் அவனது பிரதிநிதிகளாயிருந்து ஹுக்முகளை வெளிப்படுத்துகின்றார்கள். இவர்களுடைய நாட்டம், சொல், செயல் அனைத்தும் அவனுடையதாயிருப்பதால் இன்னவர்களுக்கு வழிப்படுதல் ஹகீகத்தில் அவனுக்கு வழிப்படுதலேயாகும். இவர்களுக்கு மாற்றஞ் செய்தல் அவனுக்கே மாற்றம் செய்தலாகும்.

இறைவனும் குர்ஆன் ஷரீபில், **"றஸுலுக்கு வழிபட்டவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவராவர்"** (4:80) என்றும், **"எவனொருவன் அல்லாஹ்வுக்கும் றஸுலுக்கும் மாறு செய்வானோ அவன் நிச்சயமாக வெட்ட வெளிச்சமான வழிகேட்டிலானான்"** என்றும், **"ஓ, ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு வழிப்படுங்கள். இன்னும் றஸுலுக்கும் உங்களில் நின்றுமுள்ள காரிய கர்த்தர்களுக்கும் (தீனைப் பரப்பக்கூடிய உலமாக்களுக்கும், அவுலியாக்களுக்கும்) வழிப்படுங்கள்"** (4:59) என்றும் கூறியுள்ளான். (தப்ஸீர் கபீர், 3-வது பாகம்,

243-வது பக்கம்-தப்ஸீர் ரூஹுல்பயான், 1-வது பாகம் 624-வது பக்கம் காண்க.)

*'என்னுடைய அவுலியாக்கள் எனது பரிவட்டத்திற்குள்ளிருப்பவர்கள். என்னைத் தவிர வேறு யாரும் அவர்களை அறிய மாட்டார்கள்'* என்ற ஹதீது குதுஸி அவுலியாக்களின் மகத்துவத்திற்கு நற்சாட்சியாக இருக்கின்றது.

மேலும், மஸ்னவீ ஷரீபு முழங்குவதைப் பாருங்கள்:-

*"அவுலியாக்கள் ஆண்டவனுக்கு உகப்பானவர்கள் -*
*அந்தரங்க, பகிரங்க விஷயங்களை அறிந்தவர்கள் -*
*முத்லக்கான அல்லாஹ்வுக்கு அவுலியாக்கள் கண்ணாடியானவர்கள் -*
*அவுலியாக்கள் அல்லாஹ்வின் சொந்தமான*
*கண்ணாடியாக இருக்கின்றார்கள் -*
*ஒவ்வொரு வலியும் நூஹு அலைஹிஸ்ஸலாம்*
*உடைய கப்பல் என்று அறி*
*இவர்களை நேசித்தால் நாசம் என்னும் வெள்ளத்தில்*
*நின்றும் தப்பித்துக் கொள்வாய்*
*அல்லாஹ்வுடனிருக்கப் பிரியமுள்ளவர்கள்*
*அவுலியாக்களுடைய சமுகத்தில் இருப்பார்களாக -*
*அவுலியாக்களுடைய சமுகத்தில் நின்றும் விலகி*
*இருப்பீர்களேயானால், உள்ரங்கத்தில்*
*அல்லாஹ்வை விட்டும் தான்*
*விலகி இருக்கின்றீர்கள்"*

**குலிஸ்தான்** போதிக்கின்றதாவது :-

"அவுலியாக்களுடைய முந்தானையைப் பற்றிப் பிடிப்பதில் பயம் **வேண்டாம்.** ஏனெனில், நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களோடிருக்கையில் வெள்ளத்தைப் பற்றிய அச்சம் எதற்கு!" ஆகவே, **இறைவன் அன்று அன்பிய்யாக்களைக் கொண்டு நடத்தியவற்றை எல்லாம் இன்று அவுலியாக்களை கொண்டுதான் நடத்துகின்றான்.** அவர்களை முன்னிட்டே உலகமும் நிலைபெற்றிருக்கின்றது. ஆகையால் "வலியை

அறிவது அல்லாஹ்வை அறிவதைவிட மிகக் கடினம்" என்பதாக ரூஹுல் பயான் பாகம் 9, 531-வது பக்கம்: பாகம் 10, பக்கம் 9 கூறுகின்றன.

## குத்பின் பெருமை

உலகில் ஏக காலத்தில் பல எண்ணிக்கையுள்ள, பலவகை படித்தரங்கள் உடைய அவுலியாக்கள் - குதுபுமார்கள் - அப்தால்கள் - அவுத்தாதுகள் - நுகபாக்கள் - நுஜபாக்கள் என்ற பதவி உடையவர்கள், உலக முடிவு நாள்வரையில் இருந்தே வருவார்கள் என்றும், ஹகீகத்தில் ஈருலகையும் கண்காணிப்பவர்கள் அவர்கள் தானென்றும், அவர்களை முன்னிட்டே பலாய், முஸீபத்துகள் விலக்கப்படுவதாயும் ஹதீதுகள் பல காணப்படுகின்றன, அன்னார் அனைவருக்கும் குத்பே அதிபராவார். அன்னாரை கௌது என்றும் சொல்லப்படும். இது பற்றிய ஆதாரங்கள் பல இருப்பினும் சிலவற்றை மட்டிலும் இங்குக் குறிப்பிடுவது போதுமெனக் கருதுகின்றோம்.

"ஆண்டவா! என் மீது நபிமார்கள் நடந்து திரிந்தார்கள், அவர்களுக்குப் பிறகு நபிகள் பெருமான் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைச் சுமந்திருந்தேன். தற்போது அவர்களும் சென்று விட்டார்களே, நான் தனித்துவிட்டேனே, என் மீது எந்த நபியும் இல்லையே" என்பதாய் பூமி பிரலாபித்து இறைவனிடம் முறையிட்டுக் கொண்டது.

'நான் சில அவுலியாக்களை அனுப்புவேன். அவர்களது இருதயங்கள் நபிமார்களது இருதயங்களைப் போலிருக்கும். அவர்கள் யுகமுடிவு வரை உன் மீது சஞ்சரிப்பார்கள்' என்று ஆண்டவன் பூமிக்கு அறிவித்தான்; என்ற இவ்விஷயத்தை ஸாலிஹான, இறையருள் நேசரான, பெரியார் ஒருவர் தமது உலக யாத்திரையின் போது, நித்திய ஜீவனுடைய ஹஜ்ரத் கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சந்தித்த சமயம் அன்னாரைக் கேட்டுத் தெரிந்து கொண்டதாக, 'மவாஹிபுல் மஜீது பீ மனாகிபி ஷாஹில்ஹமீது' எனும் கிரந்தத்தில் காணப்படுகிறது.

*"அந்த அவுலியாக்கள் ஏகத்தில் 440 பேர்கள். அவர்களுள் நுஜபாக்கள் 300, நுகபாக்கள் 70, அப்தால்கள் 40, அகியார்கள் 10, உறபாக்கள் 7, அன்வார்கள் 5, அவுத்தாதுகள் 4, முக்த்தார்கள் 3, குதுபு ஒருவர். குத்பே அனைவருக்கும் அதிபராவார். இன்னாரை கௌது என்றும் சொல்லப்படும். இவர்களுள் யாரும் மரணமாவார்களாயின் அவர்களுக்கடுத்த (தரஜா) படித்தரத்திலிருப்பவர்கள் அந்த ஸ்தானத்திற்கு மாற்றப்படுவார்கள். அங்ஙணம் பதவியில் உயர்த்தப்படும் போது, கீழ்ப்படித்தரத்திலுள்ள நுஜபாக்கள் காலியாகுமிடத்தில் ஸாலிஹீன்களான முஸ்லீம்களில் ஒருவர் அந்தத் தானத்தில் அமர்த்தப் படுவார்"* என்று கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

கூறியதாக மனாகிபுகுத்பில் மஜீதிஸ்ஸையிது ஷாஹுல் ஹமீதில் மாணிக்கப்பூரயீல் மவுலிதிந் நாகூரிய்யில் மர்கதி' என்ற கித்தாபில் மாதிஹுர் ரஸூல் அல்லாமதுஷ் ஷைகு ஸதக்கத்துல்லாஹில் காஹிரிய்யிஸ் ஸித்தீக்கி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சீடர் அல்லாமா ஆரிபுபில்லாஹ் மஹ்மூது தீபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், மவாஹிபுல் மஜீது பீ மனாகிபி ஷாஹில்ஹமீது எனும் கித்தாபில், காயல்பட்டணத்தில் பிறந்து கீழக்கரையில் அடங்கி இருக்கும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்ற அல்லாமத்துல் பாளில் ஸையிது முஹம்மது ஆரிபுபில்லாஹி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் கூறுகின்றார்கள்.

இவை போன்ற பல அபூர்வ விளக்கங்களை 'மஜ்மூ அத்துர் ரஸாயில் 2-வது பாகம் 264-வது பக்கத்தில் 'றத்துல் முஹ்த்தார்' இயற்றிய அல்லாமா இபுனு ஆபீதீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் விபரமாக வரைந்துள்ளார்கள்.

மேலும் இமாம் ஷ.ஃ.ரானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'அல்யவாக்கீத்து வல் ஜவாஹிர்' என்னும் கிரந்தத்தில் குத்புமார்களின் தரஜா, பதவிகளை விவரமாக எழுதியுள்ளார்கள். இன்னும், இமாம் இபுனு ஹஜர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்கள் 'பதாவா ஹதீதிய்யாவிலும்' விரிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், என்னுடைய உம்மத்துகளில் நாற்பது நபர்கள் நபி இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய இருதயத்தையுடையவர்களாய் என்றும் இருந்தே வருவர். அல்லாஹ்தஆலா அந்த நபர்களைக் கொண்டு பூலோகத்தில் வாழுபவர்களை விட்டும் பிணிகளைப் போக்குவிப்பான். அவர்களுக்காக மழையைப் பொழியச் செய்வான். அன்னவர்களைக் கொண்டுதான் பூலோகத்திலுள்ளவர்களுக்கு உதவி புரியப்படும் என்பதாய் எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீது தபறானீயில் காணக் கிடைக்கின்றது.

குத்புக்கே கௌது என்று பெயர். அவர் ஒருவருக்குப் பின் ஒருவராக வருவார். படைப்புகளை எல்லாக் கருமங்களிலும் அன்னார் இரட்சிக்கக் கூடியவராக இருப்பதனால் கௌது என்று பெயர். அன்னவருக்கு வலம், இடம் இருபக்கங்களிலும் அரசர்களுக்கு இருப்பதுபோல இரு அமைச்சர்கள் உள்ளனர். கௌது உடைய உத்தரவு கொண்டு வலது பக்கமிருப்பவர் மறைவுலகங்களான ஆலமுல்கைபு, ஆலமுல் மலகூத்தை நிருவகித்து வருகின்றார். இடது பக்கமிருப்பவர், வெளியுலகமான ஆலமுஷ்ஷஹாதத்தைக் கண்காணித்து வருகின்றார் என்ற விபரத்தை வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்து அரபிக் கலாசாலை மத்ரஸா ஸ்தாபகர், ஹஜ்ரத், அல்லாமா, ஷைகு அப்துல் வஹ்ஹாபு ஸாஹிபு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது ஞான குரு ஹஜ்ரத் ஆரிபு பில்லாஹி, அல்லாமா ஷைகு ஷாஹ் முஹியித்தீன் ஸாஹிபு வேலூரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்

**ஜவாஹிருஸ்ஸுலூக்கு** எனும் கிரந்தத்தில் 114-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

மேலும் இது போன்ற விபரங்கள் ரூஹுல்பயான் தப்ஸீர் பாகம் 2, பக்கம் 363லும், இபுனு அரபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு விபரமாகச் சொல்வதை அறிவிக்கப்படுகிறது.

**"அந்தரங்க, பகிரங்க ஆபத்துக்களில் நின்றும் குத்புமார்களைக் கொண்டே ஆண்டவன் அகிலத்தைப் பாதுகாத்துக் கொள்கிறான்"** என்று தப்ஸீர் ரூஹுல்பயான் 9-வது பாகம், 102-வது பக்கத்திலும் கூறப்பட்டுள்ளது.

மேலும் விபரமாகத் தெரிய முஜ்த்தஹிது, ஹாபிளு அஹா தீதெ நபவிய்யா, இமாம் ஷைகு ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இயற்றிய ரிஸாலா-அல்-கபருத்தால்லு அலாவுஜுதின் னுகபா-வல்-அக்த்தாபி-வல்-அவ்த்தாதி-வல்-அப்தால் என்ற நூலையும் அல்லாமா பகீஹ் இபுனு ஆபிதீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இயற்றிய மஜ்முஅதுர் ரஸாயில் நூலையும் நோட்டமிடுக.

அவுலியாக்களுள் இரு வகுப்பாருண்டு, ஒரு வகுப்பார் ஆண்டவனுடைய பாதையில் கஷ்டப்பட்டுத் தெண்டித்து அவனளவில் தன்னையழித்து பனாவாகியவர்கள். இவர்களுக்கு கஸ்பீ என்று சொல்லப்படும். மற்ற வகுப்பார் ஆலம் அர்வாஹ் எனும் ஆன்ம லோகத்திலேயே ஆண்டவனால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். இவர்களுக்கு **'அத்தாயீ'** என்று கூறப்படும். குத்பு கௌதுகள் அத்தாயீ வகுப்பைச் சேர்ந்தவர்களே. (ஜவாஹிருஸ்ஸுலுக்கு 114-வது பக்கம் பார்க்க)

குத்பு என்ற பதத்திற்கு 'முளை' 'துருவம்' என்றும், கௌது என்ற பதத்திறகு 'இரட்சிப்பவர் - நாயன் நோட்டமிடும் ஸ்தானம்' என்றும் பொருளைப் பயக்கி நிற்பினும், அவற்றின் அந்தரங்கம் பல அரும்பெரும் இரசகியப் புதையல்களைத் தன்னுள் அடக்கியதாய் அமைந்து கிடக்கின்றன. இன்னவர்கள் மூலமாகத் தான் முதலவன் தன்னிருக்கையை அறிக்கை செய்ய வேண்டியதிருக்கிறது அன்றேல், அஞ்ஞான இருள்படர்ந்து மூடி, அகிலம் அந்தகாரத்துள்ளாழ்ந்து பாழ்பட்டுப் போடும்.

இறைவன் தன்னடியார்களுக்கு அளித்துள்ள கைம்மாறிளக்க வொண்ணாப் பெரும் அருட்கொடைகள் அத்தனையையும் ஒரு தட்டிலும், குத்பை அனுப்பித் தந்த அருட்பெருங்கொடையை மற்றொரு தட்டிலும் வைத்து சீர்தூக்கிப் பார்ப்போமாயின், குத்பால் பெற்ற கிருபையளவே கனத்து முறுகி நிற்கக் காண்போம். இன்னாரைப் பற்றி **இறைவன் குர்ஆன் ஷரீபில், "நிச்சயமாக அல்லாஹ் உடைய அவுலியாக்களுக்கு பயமென்பதுமில்லை கவலையென்பதுமில்லை"** என்பதாய் (10:62) அருளியுள்ளான்.

## வலியின் ஆரம்பம்

அரூபியான அல்லாஹ்தஆலா அகிலத்தில் தனக்குப் பிரதிநிதியாகச் சொரூபியான ஸெய்யிதுனா அபுல்பஷர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை உண்டாக்கினான்.

“லாயஸாலு அப்தீ... என்னுடைய அடியான் நபிலான வணக்கங்களையும் விருப்புடன் பேணிச் செய்பவனாக நீங்கா வண்ணமாகி எனது முடுகுதலைப் பெறும் வண்ணம் நெருங்கி நான் அவனை நேசிக்கும் அளவுக்கு ஆகிவிடுகிறான்...” என்ற ஹதீது குத்ஸியின் படி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குர்பு-பறாயிலு, குர்பு-நவாபிலு அமல் செய்து நிறப்பமானபடியால் அல்லாஹ்வுக்கு கலிபாவாயிருந்து, உலகத்தின் காரியாதிகளை நடத்தி வந்திருக்கின்றார்கள். அவர்களில் நின்றுமே பஷரிய்யத்தென்னும் மனுவர்க்கம் இறுதித் தீர்ப்பு நாள் பரியந்தம் வெளியாகிக் கொண்டே வருகின்றது.

ஸெய்யிதுனா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உள்ரங்கத்தில் விலாயத்தும் வெளிரங்கத்தில் நுபவ்வத்தும் உடையவர்களாயிருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு பல நபிமார்கள் வெளியாகி இறுதி நபியாக எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோன்றினார்கள். எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு நபியில்லையாகையால் அவர்கள் பால் பகிரங்கமாக இருந்த நுபவ்வத் அந்தரங்கமாகி அந்தரங்கமாக இருந்த விலாயத் பகிரங்கமாயிற்று. அதைச் சுமந்தவர்கள் தான் அவுலியாக்களாவர். ஆகவே நபியுடைய முடிவு வலியுடைய ஆரம்பமாகும்.

நுபவ்வத்தாகிய நபித்துவத்தில் தொடர்பு முடிவடைந்து விட்டபடியால் ஒவ்வொரு காலத்திலும் நபியின் பிரதிநிதியாக ஒருவர் நியமனமாகின்றார். அத்தகையவர் யுகமுடிவு நாள் வரை ஏற்பட்டுக் கொண்டேயிருப்பர். அவரே ஆண்டவனுக்கு முடுகுதல் பெற்ற வலி, கூட்டத்தினருக்கு இமாம், அவரே நேர்வழி காட்டக்கூடிய ஹாதியும் மஹ்தியுமாவார். வலது, இடது இரு பக்கங்களிலும் அன்னாருக்கு அமைச்சர்கள் இருக்கின்றனர், அவர்களும் வலிமார்களாகவே இருக்கின்றனர் என்பதாக மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு மஸ்னவி ஷரீபில் குறிப்பிட்டுள்ளார்கள்.

‘அல்லாஹுதஆலா நபிமார்களுக்குத் தனது திருவசனமாகிய வஹியைக் கொண்டு பயிற்சியளித்தான். அவுலியாக்களுக்கு தெய்வீக உதிப்பாகிய இல்ஹாமைக் கொண்டு பயிற்சியளிக்கிறான். அவுலியாக்கள் நபிமார்களுடைய நிருவாகப் பொறுப்பாளர்களாகவும் பிரதிநிதிகளாகவும், வாரிசுகளாகவும் ஊழியர்களாகவும் இருக்கின்றார்கள். இத்தகைய நல்லடியார்களே உலகப் பிரஜைகளுடையவும், உலகத்துடையவும் காரியஸ்தர்களாகவும் உலகத்தை நிலைப் பெறச் செய்பவர்களாகவும்

இருக்கின்றார்கள். அவர்களைக் கொண்டே உலகமும் நிலைபெற்றிருக்கின்றது. அவர்கள் சிருஷ்டிகளை ஆளுபவர்களாகவும், மெய்ப்பொருளின் பிரதிநிதிகளாகவும் இருப்பது புறத்தோற்றத்தில் அன்று உள்ரங்கத்திலேயாம்'' என்பதாக தாஜுல் அவ்லியா ஸெய்யிதுனா முஹ்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பத்ஹுர்ரப்பானியில் உபதேசித்துள்ளார்கள். எனவே அன்னாரே சர்வ இரட்சகர், அன்னாரைப் பொறுத்தே சகல லோகக் காரியாதிகளெல்லாம் சுற்றியாடுகின்றன. அன்னாரைக் கொண்டே அல்லாஹுதஆலா உலகங்களைக் காக்கின்றான். அன்னாரே மஹ்தீ என்றும், காத்தமுல் அவுலியா என்றும் சொல்லப்படும். அன்னவர் காலத்தில் அன்னார்தான் காத்தமுல் அன்பியா, ஸெய்யிதுனா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பதவியாகிய மகாமன் மஹ்மூதாவில் தரிபட்டிருப்பவர். அன்னாரே கலீபத்துல்லாஹ் என்ற தெய்வப்பிரதிநிதியாக இருக்கின்றார்'' என்பதாக ஆரிபு றப்பானி ஹஜ்ரத் ஸெய்யிது அப்துல்கரீம் ஜியலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இன்ஸான் காமிலில் கூறுகிறார்கள்.

## மரணத்திற்கப்பாலும் ஹயாத்துண்டா?

இத்தகைய தத்துவத்தையுடையவர்கள் மரணித்து மண்ணோடு மண்ணாகிப் போய் விடுவதில்லை! உடல்களும் நசிப்பதில்லை, ஜீவியத்தில் இருந்தது போலவே கபுரிலும் சடலம் கோர்வை குலையாமலிருக்கும்.

''அன்பியாக்களுடைய உடல்களைத் தின்பதை இறைவன் நிச்சயமாக பூமிக்கு ஹறாமாக்கிவிட்டான்'' என்று நபிகரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஹதீது. அபூதாவூது - இபுனு மாஜா - பைஹகீ முதலிய ஸஹீஹான கிரந்தங்களில் காணப்படுகின்றது.

ஆகவே, அவர்கள் ஜீவியத்தில் எப்படியிருந்தார்களோ அப்படியே, பூலோகத்தை விட்டு மறைந்த பின்பும் கபுரில் இம்மைக்கும் மறுமைக்கும் மத்தியிலுள்ள ஆலம் மிதாலாகிய பர்ஜகில் உலகமுடிவு நாள் வரை ஹயாத்தாகவே இருப்பார்கள்.

''அல்லாஹ்வுடைய பாதையில் (பீஸபீலில்) வெட்டப்பட்டவர்களை மவுத்தானவர்களென்று சொல்லாதீர்கள். அவர்கள் ஹயாத்தையுடையவர்கள். ஆனால், அறியமாட்டீர்கள்'' (2:154) என்றும், ஆண்டவனுடைய பாதையில் வெட்டப்பட்டவர்களை மரணித்தவர்கள் என்று நினைக்கவும் வேண்டாம். ஆனால் அவர்கள் ஜீவனுள்ளவர்கள். ஆண்டவன் பக்கமிருந்து ரிஸ்கை கொடுக்கப் படுகிறார்கள்; ஆனந்தமாக இருக்கிறார்கள்'' (3:169,170) என்றும் அல்லாஹுதஆலா குர்ஆன் ஷரீபில் திருவுளம் பற்றியுள்ளான்.

மேலே கண்ட ஆயத்திற்கு விளக்கமாக, முஷ்ரிக்குடன் யுத்தஞ்செய்து வெட்டப்பட்டு ஷஹீதானாலும் சரி; தம்முடைய நப்ஸுடன் ஆத்மார்த்திகப்

போர் செய்து அதை வெட்டி வீழ்த்தினாலும் சரி, இரண்டுமே பீஸபீல்தான்'' என்று மெய்ஞ்ஞான சொரூபர், ஷைகுல் அக்பர், முஹ்யித்தீன் இபுனு அறபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது தப்ஸீரில் 1-வது பாகம், 137-வது பக்கத்தில் கூறியுள்ளார்கள்.

இவ்வாறே ஷைகு இஸ்மாயில் ஹக்கீ பரூஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது தப்ஸீர் ரூஹுல் பயானில் 2-வது பாகம் 126-வது பக்கத்திலும் சொல்லியுள்ளார்கள்.

மேலும் இவ்வாறே தப்ஸீர் அறாயிஸுல் பயான், தப்ஸீர் ஹுஸைன், தப்ஸீர் அஸீஸீ ஆகியவற்றிலும் வருகின்றன. இவ்வாறாகவே, அல்லாமா காழீ தனாவுல்லா பானிபட்டீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் தஸ்கிரதுல் மவுத்தா-வல்-குபூரி என்னும் கிரந்தத்தில் கூறுகின்றார்கள்.

இவ்வாறாக அல்லாஹ்வின் பாதையில் ஷஹீதானவர்கள் தத்துவாதிகளைப் பொதிந்து ஜோதிவொளியில் ஐக்கியமாகிவிடுகிறபடியால் ஹயாத்துள்ளவர்கள் நாயனிடம் ரிஸ்கு-உணவு பெறுகிறார்கள். ஒரு இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு மாறுகிறார்கள். இதற்கிணங்க, தன் நபுஸின் பேரில் பீஸபீல் செய்து தன் நபுஸில் செலுகின்றவர்களின் ஹயாத்தானது மவுத்தில் ஹயாத்தாய், ஒளியோடு ஒளியாய் சேர்ந்துக் கொள்வதாய் சொல்லப்படுகிறது.

ஒரு சமயம் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தபூக்கு யுத்தத்தில் வெற்றி பெற்று ஜெயபேரிகையுடன் ஸஹாபாக்கள் சகிதம் மதீனா நகருக்குள் நுழைந்த போது, ''சிறிய போரிலிருந்து பெரிய போர் அளவில் மீண்டுள்ளோம்'' என்று கூறினார்கள்.

உடனே, ஸஹாபாக்கள், யாரஸூலல்லாஹ்! இப்போது பீஸபீல் செய்து திரும்பினோம். இதைவிட பெரிய பீஸபீல் யாது என்று வினவ, பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''நபுஸுடன் போராடுவதுதான் பெரிய (பீஸபீல்) போராட்டம்'' என்று விடையளித்தார்கள். இந்த ஹதீது பைஹகீ, இஹ்யா உலூமித்தீன், தப்ஸீர் ரூஹுல் பயான் ஆகியவற்றில் காணப்படுகின்றது.

''அல்லாஹ்வுக்கு வழிபட்டு தன்னுடைய நபுஸுடன் போர் புரிபவர் எவரோ, அவரே வீரர்'' என்ற ஹதீதும் மிஷ்காத்தில் காணப்படுகின்றது.

எனவே, பீஸபீலில் போர்புரிந்து உயிர்த் தியாகம் செய்த ஷுஹதாக்களும், நபுஸுடன் போர் தொடுத்து வெற்றியடைந்த மகானுபாவர்களும் மவுத்திற்குப் பின்பும் ஹயாத்தை உடையவர்கள் என்பது குன்றின் மேலிட்ட தீபம் போல தெரியக் கிடக்கின்றது. இந்த அஸ்திவார அடிப்படையிலே மையித்துகள் கேட்கின்றன- பார்க்கின்றன- சுற்றத்தாரையும் அன்பர்களையும் அறிகின்றன - ஸலாமுக்குப் பதிலும் சொல்கின்றன என்னும்

விஷயங்கள் பற்றி ஹதீதுகள் பலவற்றைக் குறிப்பிட்டு, இமாம் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹுஸ்ஸுதூரில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

இதுவே ஸுன்னத்து வல்ஜமாஅத்தாரின் ஏகோபித்த அகீதாவெனும் கொள்கையாகும். மையித்துக்கு உணர்வு இருப்பதால்தான் மவுத்துக்குப் பிறகும், கபுரில் (ஆலம் அஜ்ஸாமுக்கும் ஆலம் அர்வாஹுக்கும் இடையே ஆலம் பர்ஜக்கில்) கேள்விகளும், பாவபுண்ணியங்களுக்குத் தக்க பலாபலன்களும் ஏற்படுகின்றன. அவற்றிற்கு அத்ததைய உணர்ச்சிகள் இல்லை எனின் நன்மை தீமைகளுக்குள்ள பலாபலனை, சுகதுக்கத்தை எவ்வாறு அவை அனுபவித்தறிய முடியும்?

மரணத்திற்குப் பிறகு, கல் கரடுகளைப் போல் கேட்டறிய சக்தியில்லை என்று எண்ணுவது ஷீயா, மு.்.த்தஸிலா போன்ற வழிகெட்ட கூட்டத்தார்களுடைய கொள்கையாகும்.

**“மையித்து செவியேற்காது என்று கூறுகிறவன் மடையனும் (ஜாஹிலும்) வழிகெட்டவனும் (முல்ஹிதும்) ஆவான்.” என்பதாய் நான்கு மதுஹபுகளையுடைய ஸுன்னத் வல் ஜமாஅத்து உலமாக்கள் அனைவரும் ஏகோபித்துக் கூறியுள்ளனர்.**

பத்ரு யுத்தத்தில் மரணித்த குப்பார்களுடைய பிரேதங்கள் குவிக்கப்பட்டிருந்த இடத்திற்கு, போர் ஓய்நத பின்பு நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்று அங்கு நின்று கொண்டு அப்பிரேதங்களை நோக்கி “எங்கள் நாயன் கூறிய வாக்குறதியை நாங்கள் உண்மையாகப் பெற்றுக் கொண்டோம். உங்கள் நாயன் கூறிய வாக்குறுதியை நீங்கள் உண்மையாகப் பெற்றுக் கொண்டீர்களா?” என்று கேட்டபோது அங்கு பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடனிருந்த உமர்பாறூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் “யா றஸுலுல்லாஹ்! மரணமடைந்தோர் எங்ஙனம் தங்கள் வார்த்தைகளைக் கேட்பார்கள்?, என்று வினவினார்கள். அதற்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “உங்களை விட அவர்கள் நன்றாகக் கேட்பார்கள். உங்களுக்கு வெளிக்காது உண்டு. அவர்களுக்கு ஆன்மார்த்தச் செவியுண்டு, அதனால் அவர்கள் எல்லாவற்றையும் கேட்கிறார்கள்” என்பதாக விடையளித்தார்கள், என்று ஸஹீஹ் முஸ்லிம் கிரந்தத்தில் வருகின்றது.

“மையித்து உனது பாதரட்சையின் சப்தத்தையும் கூட கேட்கின்றது” என்பதாக ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், அபூதாவூது, நஸயீ ஆகிய கிரந்தங்களில் வந்திருக்கின்றது. இது சம்பந்தமாக அநேகமான ஹதீதுகளை குறிப்பிட்டு அதிவிரிவாக, ஷரஹுஸ்ஸுதூர் பீஷரஹில் மவுத்தா வல் குபூர் என்ற நூலில் இமாம் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்.

உதாரணத்திற்காக சில நிகழ்ச்சிகளை இங்கு கூறுவது பொருத்தமெனக் கருதுகின்றோம்.

நபி பிரான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருவரை இஸ்லாத்தின் பால் அழைத்த போது அவர், குழந்தைப் பருவத்தில் இறந்து போன தனது மகளை உயிர் பெறச் செய்தால் ஈமான் கொள்வதாகக் கூறினார். அக்குழந்தையின் கபுருக்குச் சென்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அக்குழந்தையைக் கூப்பிட்டு அழைத்தார்கள். உடனே அக்குழந்தை, 'அடிபணிந்தேன்' என்று மறுமொழி கூறியது. திரும்பி உலகுக்கு வரக்கூடிய எண்ணமுண்டா என்று கேட்டார்கள். 'அல்லாஹ்வுடைய றஸூலே! ஆண்டவன் மீது சத்தியமாக எனக்கு அத்தகைய எண்ணமில்லை. இம்மையை விட மறுமையையே மேலாகக் காண்கிறேன்' என்று பதில் கூறியது.

இவ்வரலாற்றை இமாம் பைஹகீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தலாயிலில் சொல்வதாய், ஹுஜ்ஜதுல்லாஹி அலல் ஆலமீன் 422-வது பக்கத்தில் அல்லாமா ஷெய்கு யூசுபுன்னபஹானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறுகின்றார்கள்.

''நபிமார்கள் ஜீவனுள்ளவர்களாக இருக்கின்றார்கள், அவர்கள் கபுருகளில் (பர்ஜகில்) தொழுது கொண்டுமிருக்கிறார்கள்'' என்று அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு பைஹகீ ஹதீதுக் கிரந்தத்தில் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.

(உதாரணம்) மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செம்மை நிறமான மேட்டின் மீதுள்ள கபுரில் நின்று தொழுது கொண்டிருந்ததை மிஃராஜ் உடைய இரவில் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டார்கள் என்ற ஹதீது அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ஸஹீஹ் முஸ்லிம், நஸயீ கிரந்தங்களில் ரிவாயத்துச் செய்யப் பெற்றிருக்கிறது.

''நபிமார்கள், ஷுஹதாக்கள், அவுலியாக்கள் ஆகியோர் ஹயாத்துள்ளவர்கள். அவர்களுடைய கபுருகளில் அவர்கள் தொழுது கொண்டும், ஹஜ்ஜு செய்து கொண்டும் இருக்கின்றார்கள். இங்ஙனம் ஸஹீஹான ஹதீதுகள் வந்திருக்கின்றன'' என்பதாய் இமாம் றமலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறுவதாக, அல்லாமா இமாம் ஷெய்கு சுலைமானுல் ஜமல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அல்புதூஹாத்துல் அஹ்மதிய்யா 90-வது பக்கத்திலும் அல்லாமா ஷைகு ஹஸனுல் அதவி மிஸ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மஷாரிகுல் அன்வார் 67-வது பக்கத்திலும், அல்லாமா ஷைகு யூசுபுன் னபஹானீ மிஸ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஷவாஹிதுல் ஹக்கு 69-வது பக்கத்திலும் வரைகின்றார்கள்.

(உதாரணம்): மக்கா, மதீனாவுக்கிடையே நபி கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்று கொண்டிருக்கையில், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காதில் கையை வைத்து தல்பியாச் சொல்லிக் கொண்டு அர்ஜுக் ஓடையைக் கடந்து சென்று கொண்டிருந்ததைப் பார்த்ததாகவும், அவர்களது நிறம், முடியின் இலட்சணம் பற்றியும் விபரித்துள்ளார்கள்.

மேலும் யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கம்பளி ஜிப்பாவுடன் சென்நிற ஒட்டகையில் ஷாஷாலுப்த் என்னுமிடத்தில் ஓடையைக் கடந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டதாயும் ஒட்டகையின் மூக்கணாங்கயிறு பேரீத்த மரத்தின் நாரினால் செய்யப்பட்டிருந்தது என்றும் திருவுளம் பற்றியுள்ளார்கள். இந்த ஹதீது இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ஸஹீஹ் முஸ்லிமில் ரிவாயத்துச் செய்யப்படுகின்றது.

“அல்லாஹ்வுடைய அவுலியாக்கள் நிச்சயமாக மரிப்பதில்லை. ஆனால் ஓர் இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்குச் செல்கிறார்கள்.” என்ற ஹதீதை, ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் முஹம்மது கஸ்ஸாலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அர்பயீன் ஹதீது என்ற நூலிலும், இமாம் பக்ருத்தீன் றாஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தப்ஸீர் கபீர் 3-வது பாகம் 95-வது பக்கத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

(உதாரணம்): பிரபல்யமான வலியுல்லாஹ் அபூஸயீது கர்ராஜ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மக்காவிலிருந்த காலத்தில் ஒரு வாலிபரின் மையித்து பனூஷைபா வாசலில் இருந்தது. அதை அவர்கள் உற்றுநோக்கினார்கள். “அபூஸயீதே! ஆண்டவனுடைய நேசர்கள் ஜீவனுள்ளவர்கள். அவர்கள் ஓரில்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு செல்வதே மரணமாகும் என்பதை அறியவில்லையா?” என்பதாய் அந்த மையித்து சிரிப்புடன் சொல்லிற்றாம். இந்நிகழ்ச்சியை இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹுஸ்ஸுதூர் 86-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

ஸூபிய்யாக்கள் (அவுலியாக்கள்) மவுத்தாவதில்லை. எனினும் மனிதர்களுடைய வெளிரங்கமான பார்வையை விட்டும் மறைகிறதேயல்லாது வேறில்லை. ஏனெனில் அவர்களையும் மவுத்தானார்களென்று சொல்வதற்காகவே.

முஷாஹிதீன், முஹக்கிகீன்களுடைய உடல்களும் கோர்வை குலையாது. குத்ஸியான ரூஹ் நிச்சயமாக ஒருபோதும் அழியாது. இது போல் கியாமத் வரை ஹயாத்தும் அழியாது. இத்தகைய ஹயாத்தும் ரூஹும் உடைய கபுரில் (ஆலமுல்பர்ஜகில்) ஜீவனுள்ளவர்களாகவே இருப்பர். அவர்களுடைய திரேகம் உலகிலிருந்தது போலவே இருக்கும். இப்பதவியுடையவர்கள் அந்தரங்கமான ஹயாத்துடனே இருப்பார்கள், ரூஹுல்

குதுஸியுடனுமிருப்பார்கள். மரணித்திற்கப்பாலும் பூமியில் நடந்து திரிவார்கள். அவ்வமயம் எந்த மனிதரும் அவர்களைக் காண்பார்கள். அவர்களுடன் பேசிக் கொள்ளவும் செய்வார்கள். அவர்களை இன்னாரென தெரியவராது. அவர்கள் நாடின போதெல்லாம் கபுரில் மறைந்து விடுவார்கள். அவர்களுடைய திரேகத்தை மண், புழு, பூச்சி, ஜவா மிருகம் எதுவுமே தின்னாது. ஆதிமுதல் அந்தம் வரையில் ஹயாத்து. ரூஹு, ஜிஸ்மு இம்மூன்றுடனும் இறுதிநாள் வரையிலிருப்பார்கள். அவர்கள் புவியிலிருக்கையில் உந்தியின் கீழிருந்து மூச்செழும்பி மூளைக்கேறி வெளிப்படுவது இயற்கை. கபுரில் இயற்கைக்கு மாற்றமாகவே, மூச்சு மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும். இதனால் யாக்கையழியாது (வயிற்றிலிருக்கும் சிசுக்களுக்கும், சொர்க்கவாதிகளுக்கும் இவ்வாறே) கபுரில் ஜீவனைப் பெற்றவராயிருந்தால் ஜீவனுக்குள்ள இலட்சணங்கள் ஒன்றுமே குறையாது'' என்பதாக மிர்அத்துல் முஷாஹிதீனில் சொல்லப்பட்டுள்ளது.

''வலியுடைய கபுரை ஒருவர் ஸியாரத்துச் செய்தால் அவரை அந்த வலி அறிவார். அவர் ஸலாம் சொன்னால் வலி அதற்குப் பதில் சொல்வார். அவருடைய கபுருக்கு அருகாமையாக ஒருவர் திக்கு செய்தால் அந்த வலியும் சேர்ந்து திக்ரு செய்வார். லாஇலாஹ இல்லல்லாஹு எனும் திக்ரைச் செய்தாலோ அந்த வலி சம்மனங் கொட்டி உட்கார்ந்து திக்ரு செய்பவருடன் சேர்ந்து திக்ரு செய்வார். அவுலியாக்கள் மவுத்துக்குப் பிறகும் ஹயாத்துப் பெற்றவர்களே. மவுத்தின் மூலம் அவர்களை ஒரு வீட்டை விட்டு மறு வீட்டளவில் திருப்பப் பட்டிருக்கிறது. ஹயாத்தில் அவர்களை சங்கை செய்வது போல் மவுத்திலும் சங்கை செய்யவேண்டும். ஒரு வலி மவுத்தானால் அன்னார் பேரில், அன்பியா அவுலியாக்களுடைய அர்வாஹுகள் தொழும்'' என்பதாக குத்பு றப்பானீ, இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷ.்.ரானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தபகாத்துல் குப்ரா பாகம் 2 பக்கம் 65ல் கூறுகின்றார்கள்.

''ஸியாரத்துச் செய்ய மிகவும் ஏற்றமான நாள் திங்கள், வியாழன், வெள்ளி, சனி இந் நான்குமாக இருக்கும். ஜும்ஆத் தொழுகைக்குப் பின்பு ஸியாரத்துச் செய்வது மிகவும் சிறப்பானதாகும்'' என்று பதாவா ஆலம்கீரியில் வந்துள்ளது.

''மவுத்தானவர்கள் வெள்ளிக்கிழமை இரவிலும், வெள்ளிக்கிழமை முழுநேரங்களிலும், சனிக்கிழமை, காலையிலும், எந்த நேரங்களிலும் ஜியாரத்து செய்பவர்களை அறிவார்கள். இதற்காக அந்நேரங்களில் ஸியாரத்துச் செய்வது முஸ்தஹப்பாகும்'' என்பதாக மஷாரிகுல் அன்வாரில் வந்துள்ளது.

''மவுத்தானவர்கள் ஸியாரத்துச் செய்யக் கூடியவரை அறிவார்கள், பேச்சையும் கேட்பார்கள் எனறு ஹதீதுகளின் மூலம் அறியப்பட்டிருக்கிறது'' என்பதாயும் மஷாரிகுல் அன்வாரில் சொல்லப்பட்டுள்ளது.

“மையித்தானது தன்னைக் குளிப்பாட்டுபவர்களையும் சுமந்து செல்பவர்களையும், கபுருக்கு முடுகி நிற்பவர்களையும் அறிவார்கள் பேச்சுக்களையும் கேட்பார்கள்” என்று பதாவா குப்ராவில் தலீல் அத்தாட்சிகளுடன் நகல் செய்யப்படுகிறது. மேலும் இவ்வாறே ஷரஹுஸ்ஸுதூரிலும், ஷரஹுபர்ஜகிலும் விரிவாக நகல் செய்யப்பட்டுள்ளது.

ஷைகுல் அக்பர் முஹ்யித்தீன் இபுனு அரபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வபாத்தான பிறகு அவர்களே தங்களது வீட்டிற்கு வந்தார்கள். தங்களது வெள்ளாட்டியைக் கண்டு அவளது சுக செய்திகளையும் நிலைமைகளையும் விசாரித்தார்கள். எல்லா விஷயங்களையும் அவள் சவிஸ்தாரமாக எடுத்துக் கூறினாள். அவர்கள் அவளிடமிருந்து விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து சென்றார்கள் என்பதாக புஸுஸுல் ஹிக்கம் உடைய ஷரஹில் இமாம் ஷைகுஜுந்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுவதாக ஸஆதத்துத் தாரைன் 402-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

“அவுலியாக்களுக்கு ஆண்டவனால் அருளப்பட்டிருக்கும் கறாமாத்து அதிசயத்தின் பொருட்டால் ரூஹானியத்தான சக்தியைக் கொண்டு ஹயாத்திலும் மவுத்துக்குப் பிறகும் அவர்கள் வெளிப்பட்டு உலகில் நடமாடும் சக்தியுண்டு” என்பதாக இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அல்கபருத்தால்லு அலா-வுஜுதில் குத்பி வல் அப்தால், என்ற நூலிலும், இமாம் ஸெய்யிது ஷஹாபுத்தீன் அஹ்மது ஹுஸைனீ ஹமவீ ஹனபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நபஹாத்துல் குர்பிவல் இத்திஸால், என்ற நூலிலும் கூறுகின்றார்கள்.

“அவுலியாக்களில் பெரும்பாலோர் வபாத்துக்குப் பிறகும் கபுருகளிலிருந்து புறப்பட்டு வெளியே போகவும் செய்கிறார்கள். திரும்பவும் கபுருக்குள் மீளவும் செய்கிறார்கள். போகவர அவர்களுக்கு எத்தகைய தடையுமில்லை” என்பதாக அல்குத்பு இமாம் ஷ∴றானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் லத்தாயிபுல் மினன் 1-வது பாகம் 144-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

“நபிகரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தங்களது மவுத்தாகிப் போன ஸஹாபாக்களின் அர்வாஹுகள் சகிதம் எல்லா உலகங்களையும் சுயேச்சையாகச் சுற்றி வருவதை அவுலியாக்கள் கண்கூடாகக் கண்டிருக்கின்றார்கள்” என்பதாக இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஆதாரத்துடன் கூறுவதை, தப்ஸீர் ரூஹுல் பயான் பாகம் 10, பக்கம் 99ல் காணலாம்.

இதற்காதாரமாக வபாத்துக்குப் பிறகு நிகழ்ந்த சில சம்பவங்களைக் காண்க:

இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷ.்ரானி ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் ஸியாரத்துச் செய்வதற்காக ஸெய்யித் உமர் இபுனு பாரிலு ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களுடைய கபுரு ஷரீபுக்குச் சென்றபோது அங்கு அவர்களைக் காணாதபடியால் திரும்பிவிட்டார்கள். பிறகு உமர் இபுனு பாரிலு ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் இமாம் ஷ.்ரானீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா இடம் சென்று தேவையை முன்னிட்டு வெளியே சென்றிருந்ததாகத் தெரிவித்து மன்னிப்புக் கோரியதாக இமாம் ஷ.்றானீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களே தங்களுடைய 'லதாயிபுல் மினன்' 1-வது பாகம் 144-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

ஸெய்யிது ஷைகு அப்பாஸ் முர்ஸீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களை சனிக்கிழமை சூரியோதயத்திற்கு முன்னும், ஸெய்யிது இபுறாஹிமுல் அ.்ரஜ் ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களை வெள்ளிக்கிழமை மக்ரிபுக்குப் பின்பும் ஸெய்யிது யாக்கூத்துர் அர்ஷீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களைச் செவ்வாய்க்கிழமை லுஹருக்குப் பின்பும் அவரவர்களுடைய கபுருக்குச் சென்று ஸியாரத்துச் செய்யும் படியும் அவர்களெல்லோரும் குறிப்பிட்ட அந்த நேரங்களில் தான் கபுரில் ஆஜராயிருப்பார்களென்றும், இவ்வுண்மையை அகக்கண்ணை உடையவர்களைத் தவிர மற்றெவரும் அறியமாட்டார்களாகையால், கபுருகளில் அவர்கள் இருக்கவே செய்கின்றார்கள் என்ற எண்ணத்துடன் கஷ்பில்லாதவர்கள் செய்யவேண்டுமென்றும் ஸெய்யிது அலி பதவி ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் உபதேசித்திருப்பதாக மேற்சொன்ன லாதயிபுல் மினன் அதே பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

ஆகவே, இறப்பு என்பது அழிவுக்குரியதன்று. சில படித்தரங்களைக் கொண்ட ஜடதத்துவ மாறுதலாகும் - ஒரு நிலையிலிருந்து மறு நிலைக்கு முன்னேறிச் செல்வதாகும். ஏனெனில், ஆத்மா அழிவில்லாதது. இறப்பும் பிறப்புமற்ற நிலையிலுள்ளது.

இமாம் கஸ்ஸாலீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் கீமியாயே-ஸஆதத் பீடிகையில் குறிப்பிடும். ''மனுஷ்ணன் அனாதியல்லனாயினும் முடிவற்றநித்தியன்'' எனும் பொன் மொழியிலிருந்து, மரணத்தோடு மனிதனின் வாழ்க்கை முடிவடைந்து விடவில்லை என்ற உண்மை வெளியாகின்றது. நிர்யாணத்தினின்று ஒரு புதிய வாழ்க்கை உதயமாகி அது என்றும் அழியா நித்தியமாய் நின்று நிலவத் தொடங்குகிறது. ஜடவுலகத்தைப் பற்றி நிற்கும் பூததேகத்தின் சுகபோக இன்பங்களின் வாசல் அடைபட, சகல நுகர்ச்சிகளையும் அந்தரங்கத்திலிருந்து அனுபவித்து வந்த அந்த மனுஷ்யன் என்ற சுயம்பொருள் சூட்சமமாய்க் கிரியை புரிய சக்தி பெறுகின்றது. பிணி, மூப்பு, தளர்ச்சி, இயலாமை முதலிய தங்கட, சங்கடமின்றி மறதியற்ற முழுமனிதப் பண்பும் அவனில் அமைந்து காணப்படுகின்றது.

இவ்வுலகில் சஞ்சரித்து வந்தது போலவே எல்லாவிதமான புலன்களும் வதியத்தக்க யோக்கியதையுடையவனாய் ஆகும் போது தேகமும் அவற்றைத் தொடர்ந்தே நிற்கும். இம்மையில் பூத குணத்தின் மிகைப்பால் ரூஹு உடலுக்குள் மறைந்து காணப்படுவது போல, மறுமையில் ரூஹானிய்யத்தின் மிகைப்பால் தேகம் ரூஹுக்குள் மறைந்து காணப்படும். ஹிஸாபு என்ற கேள்வி கணக்கிற்கும், பாவ புண்ணியத்திற்கேற்ற பலா பலன்களுக்கும் இத்தேகமே பொறுப்பாக விளங்கும்.

‘‘அல்லாஹ்வின் சிருஷ்டிகளுள் எனது ஜோதியே முதன்மையானது’’ என்று பெருமானார் நபிகரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

எனவே, ஒளிவாகிய நூர் என்னும் ஒரே அஸ்திவாரத்திலான உயிர்-உடல் என்ற இவ்விரு வஸ்துக்களும் ஒன்றோடொன்று ஐக்கியப்பட்டு மறைவதும், வெளிப்படுவதும் ஆன்ம சக்திமிக்கப் பெரியாரிடத்து அதிசயிக்கத்தக்க கருமமன்று.

‘‘அவுலியாக்களிடத்தில் ஸ்தூலத்திற்கும், சூட்சுமத்திற்கும் மத்தியில் பிரமாதமான வித்தியாசம் ஒன்றுமில்லை. சூட்சுமத்துள் ஸ்தூலம் அடங்குவது அன்னாரிடத்தில் ஒரு பெரிய கருமமன்று’’.

அல்லாஹ்வின் மெய்யடியாரான அவுலியாக்கள், தாங்கள் சிருஷ்டிகளின் பார்வையிலிருந்து மறைய நாடும் போது மரணம் என்ற போர்வைக்குள் புகுந்து கொள்வதும், அடக்கம் செய்யப்பட்ட பின் ஸ்தூலத்தை சூட்சுமத்துள்ளடக்கி கபுருகளிலிருந்து வெளியே புறப்படுவதும் அன்னவர்களுக்கு எளிதான கருமமாகும். ஆண்டவன் அவர்களுக்கு அத்தகைய தத்துவத்தைக் கொடுத்துள்ளான். இத்தியாதி காரணங்களைக் கொண்டு மரணத்திற்குப் பின்னும் அவுலியாக்கள் ஜீவனுள்ளவர்கள், அழியாத தேகத்தை உடையவர்கள் கிரியைகள் புரியும் சக்தியுடையவர்கள் எனத் தெரிய வருகின்றது’’.

அடியிற்கண்ட நிகழ்ச்சிகளே இதற்குப் போதிய சான்றுகளாகும்.

ஹஜ்ரத் கிலுரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள், இமாமுல் அ∴லம் அபூஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது வ∴ளு மஜ்லிசுக்குத் தினந்தோறும் காலை வேளையில் ஆஜராகி ஷரீஅத்துடைய இல்முகளைக் கற்று வந்தார்கள். இமாம் அவர்கள் வபாத்தான பிறகு அந்த மஜ்லிசு நடைபெறவில்லை. கிலுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆண்டவனது உத்தரவு பெற்று, ஹயாத்தில் நடந்தது போலவே மவுத்துக்குப் பின்பும் இமாமுல் அ∴ளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது கபுரு ஷரீபுக்கு ஒவ்வொரு காலையிலும் சென்று, ஷரீஅத்துடைய இல்முகளைக் கேட்டுவந்ததாக இமாம் இபுனு ஜவ்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ‘பதாயிஉ’ எனும் பிக்ஹுக் கித்தாபில் வருகிறதாக

ஷைகு ஹஸனுல் அதவீ மிஸ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மஷாரிக்குல் அன்வார் 69-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

நான்கு மதுஹபுடைய இமாம்களுள் ஒருவராகிய அஹ்மது இபுனு ஹம்பலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது ஸியாரத்திற்குச் சென்ற குத்பு றப்பானீ கௌதுஸ்ஸமதானீ, முஹிய்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அன்னாருடைய கபுறு ஷரீபுக்கெதிரே, அதபுடன் நின்று, ''அஸ்ஸலாமு அலைக்கும் யாஇமாமல் கிராம்'' (சங்கைக்குரிய இமாம் அவர்களே) என்று அழைத்து ஸலாம் சொன்னார்கள். உடனே, கபுரு ஷரீபு இரண்டாகப் பிளந்தது. இமாம் அவர்கள் ஜோதிப் பிரகாசத்தோடு வெளியே பிரசன்னமாகி கௌதுல் அ.:.ளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கட்டித் தழுவி ஆலிங்கனஞ் செய்தார்கள் நூரானீயான பரிவட்டத்தைப் போர்த்தி, ''ஸெய்யிது அப்துல் காதிரே, ஷரீஅத்துடைய இல்முகளும், ஹகீகத்துடைய இல்முகளும் தங்கள்பால் ஹாஜத்தாகின்றன,'' என்று பகர்ந்து விடைபெற்று மறைந்தார்கள். இச்சம்பவம் 'பஹ்ஜத்துல்-அஸ்றாரு' கிரந்தத்தில் அறிவிப்பு செய்யப்பட்டிருப்பதாய் 'தப்ரீஜுல்காத்திர்' 40-வது பக்கத்திலும், 'பஸ்லுல் கிதாபு' 129-வது பக்கத்திலும் ஹள்ரத் ஷெய்கு அப்துல்ஹக் முஹத்திதுத் திஹ்லவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் 'ஜுப்ததுல் அஸ்றார்' நூலிலும் காணப்படுகின்றது.

குத்புஸ்ஸமான், இமாம் அப்துல் வஹ்ஹாபு ஷ.:.றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்:-

''நான் எனது குருநாதர் (உஸ்தாது) ஹஜ்ரத் ஸெய்யிது முஹம்மது ஷனாவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடன் அல்குத்புஷ்ஷஹீர், ஸெய்யிது அஹ்மது பதவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது தர்காவுக்கு ஸியாரத்திற்காகச் சென்றிருந்தேன். அவ்வமயம் எனது உஸ்த்தாதவர்கள் கபுரு ஷரீபை முன்னோக்கி, 'நாயகமே! இன்ன காரியத்தை முன்னிட்டு மிஸ்ருக்குப் போகப் பிரயாணமாயிருக்கிறேன். விடை கொடுத்தனுப்புங்கள்' என விண்ணப்பித்து நின்றார்கள்.

''அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்தவராய் போய் வருக'' என்ற நல்வாக்கு கபுருக்குள்ளிருந்து வெளிவந்த சப்தத்தை எனது வெளிரங்கமான இரு காதுகளைக் கொண்டும் நன்கு கேட்டேன்'' என்பதாக.

இவ்வரலாற்றை இமாம் ஷ.:.றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் லதாயிபுல் மினன்' 1-வது பாகம், 180-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

அமீருல் மு.:.மினீன், ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக்கு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வபாத்தாகும் போது, ''என்னுடைய ஜனாஸாவை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முபாரக்கான

அறையின் முன்னால் வையுங்கள். கதவு திறக்கப்பட்டு, அபூபக்கரை உள்ளே கொண்டு வாருங்கள் என்று உத்தரவு வந்தால் மட்டில் அவ்வறையிலேயே அடக்கம் செய்யுங்கள். இன்றேல், பொதுக்கபுருஸ்தானத்தில் அடக்கி விடுங்கள்'' என்று வஸிய்யத்துச் செய்திருந்தார்கள். அவ்வாறே செய்யப்பட்டது. பூட்டப்பட்ட அறைவாயிலின் முன்பு ஜனாஸாவை வைக்கப்பட்டபோது, வாயில் கதவு தானாகவே திறந்து கொண்டது.

''தோழரைத் தோழரிடம் அனுப்பி வையுங்கள்'' என்ற உத்தரவு புனிதர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ரவுளா ஷரீபிலிருந்து வெளிவந்தது. அவ்விதமே அங்கு அடக்கப்பட்டார்கள். இவ்வரலாற்றை இமாம் பக்ருத்தீன் றாஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தப்ஸீர் கபீர், 5-வது பாகம் 685-வது பக்கத்தில் கூறுவதாய் 'தப்ரீஹுல் அத்கியா பீ-அஹ்வாலில் அன்பியா', பாகம் 2, பக்கம் 376-ல் வரையப்பட்டுள்ளது.

இத்தகைய நிகழ்ச்சிகள், ஆதாரங்கள் இன்னும் எவ்வளவோ காண்பிக்கலாம். உலகத்தார் யாவரும் ஏற்றிருக்கும் இமாம்கள் சம்பந்நதபட்டவற்றையும், அவை பற்றிய அங்கீகரிக்கப்பட்ட (மு.ஃ.த்தபரான) ஆதாரப்பூர்வமான கிரந்தங்களையுமே ஆதாரங்களாகக் காண்பித்துள்ளோம். அன்பியா, அவுலியாக்கள் மவுத்துக்குப் பின்பும் ஹயாத்துள்ளவர்கள் என்பதற்கு மேற்கூறிய உதாரணங்களோடு இன்னும் இரண்டு தருகின்றோம்.

உதயகிரி முதல் அஸ்தகிரி வரை பிரபல்யமடைந்து, உலகம் ஒப்புக்கொண்டு ஓதிவரும் 'தலாயிலுல்-கைறாத்' இயற்றிய அல்லாமத்துல் பகீஹ், ஆரிபுல் காமில் முஹம்மது இபுனு சுலைமானுல் ஜுஸுலிஷ் ஷாதுலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது எண்ணிக்கையற்ற கராமத்துக்களில் நின்றும் ஒன்று ஜாமிவுல் கறாமாத் 1-வது பாகம், 165-வது பக்கத்தில் காணப்படுகிறது. அடியில் அதைக் குறிப்பிட்டுள்ளோம்.

குத்புஷ் ஷஹீர், ஷைகு முஹம்மது இபுனு சுலைமானுல் ஜஸுலிஷ் ஷாதுலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி 870-வது வருஷத்தில் வபாத்தாகி, சூயஸ்பட்டணத்தில் அடக்கப்பட்டார்கள். 77 வருஷங்களுக்குப் பிறகு ஹிஜ்ரி 947-வது வருஷம் அவர்களது கபுரைத் தோண்டப்பட்டது. அவ்வமயம் அவர்களது திரேகம் (தபன்) அடக்கம் செய்யப்பட்ட சமயம் எவ்விதமிருந்ததோ அவ்விதமே உறுப்பில் எத்தகைய சேதமும், மாறுபாடுமின்றி. கபன் துணியில் கூட மண் ஒட்டாமலிருந்தது, அந்தத் திரேகம் கஸ்தூரி வாடையுடன் கமழ்ந்துக் கொண்டிருந்ததைக் கண்ணுற்ற திரளான ஜனங்கள் பேராச்சரியப்பட்டு மயங்கி நின்றனர். ஆண்டவனுடைய பாதையில் ஷஹீதானவர்கள் இறந்தவர்கள் அல்லர். அவர்கள் ஜீவனுள்ளவர்கள். அவர்களுடைய பூத உடல்களை மண் தின்னாது. புழுப்பூச்சி, ஜவாமிருகங்கள் எதுவுமே தீண்டாது என்று அல்லாஹ்வும், றஸூலும் கூறியவாக்குகளை மெய்ப்பிக்கும் அத்தாட்சிகளாகவே அவர்கள் காணப்பட்டார்கள்.

மேலே குறிப்பிட்ட சம்பவத்தின் போது அக்கூட்டத்திற்கு சிலர் சோதிப்பதற்கென்றே, வசீகரத்துடன் ஜோதிப் பிரகாசமாக இலங்கிக்கொண்டிருந்த அந்த வலியுல்லாஹ் அவர்களுடைய திருமுகத்தில் விரலைவைத்து அழுத்திப் பார்த்தனர். விரல் பட்ட இடத்தைச் சூழ்ந்து செந்நிறமாக இரத்தத்தின் அறிகுறி காணப்பட்டது. விரலை எடுத்ததும் அந்த உதிரக்கட்டு உடலில் பரவி மறைந்தது.

பிறகு அவர்களது பரிசுத்தத் திருமேனி ஆப்பிரிக்காவிலுள்ள மொராக்கோவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது. அவர்களது கபுரு ஷரீபில் இன்று வரை ஸலவாத்தின் பரக்கத்தை முன்னிட்டு கஸ்தூரி வாடை கமழ்ந்து கொண்டிருக்கிறது. நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் ஸியாரத்திற்காகச் சென்று, தலாயிலுல் கைறாத்தை ஓதி நற்பேறுகளைப் பெற்று வருகின்றனர்.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஸஹாபாத் தோழர்களான ஹஜ்ரத் ஹுதைபத்துல் யமனீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஹஜ்ரத் அப்துல்லாஹ் இபுனு ஜாபிருல் அன்சாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகிய இருவரும் ஷஹீதாகி இறாக்கில் பகுதாது நகருக்குச் சமீபமாக ஆற்றோரத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். பிற்காலத்தில் வெள்ளப் பெருக்கால் இரு கபுருகளுக்கும் சேதம் ஏற்பட்டது. அவை ஆற்றில் மூழ்கிப் போய் விடுமோ என்ற பீதியும் உண்டானது. அது சமயம் இறாக்கில் ஆட்சிபுரிந்த அமீர்பைஸல் (மக்கா ஷரீபு ஹுஸைனுடைய மகன்) உலமாக்களிடம் பத்வா (மார்க்கத் தீர்ப்பு) வாங்கி அவ்விரு கபுருகளையும் தோண்டி எடுத்து அவற்றை வேறு இடத்தில் அடக்கம் பண்ண ஏற்பாடு செய்தார். இவ்விஷயம் விளம்பரப் படுத்தப்பட்டது. உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் இலட்சக் கணக்கான ஜனங்கள் குறிப்பிட்ட தேதியில் அங்கு ஆஜராயினர். அவ்விரு கபுருகளும் 1300 வருடங்களுக்குப் பிறகு தோண்டப்பட்டு அவ்விரு சடலங்களும் வெளியே எடுக்கப்பட்டு உயர்ந்த மேஜை மீது வைக்கப்பட்டன. திரேகத்தில் எவ்வித பேதமும், மாறுபாடும் காணப்படவில்லை. வியர்வை சொட்ட அவ்விரு முகங்களும் ஒளிப்பரகாசத்துடன் இலங்கின.

அனைவரும் இக்காட்சியைக் கண்டு பேராச்சரியத்தில் மூழ்கிப் போயினர். காரீ ஒருவர், “அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டப் பட்டவர்களை மரணித்தவர்களென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அவர்களோ ஜீவனுள்ளவர்கள். ஆண்டவன் பக்கமிருந்து அவர்களுக்கு உணவளிக்கப் படுகிறது. அதையருந்தி அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள்” என்ற கருத்துள்ள குர்ஆன் வேத வாக்கை ஓத ஆரம்பித்தார்.

அதற்கு அத்தாட்சியாகக் கண்முன் பிரத்தியட்சமாக அவ்விரு நாதாக்களின் பரிசுத்தத் திருமேனிகள் இருக்கும் காட்சியை நோக்கும் போது இந்த ஆயத் அவ்வயமந்தான் அருளப்பட்டது போல காணப்பட்டதாம்!

பிறகு அங்கு கூடியிருந்த ஜனசமுத்திரம், அலைகள்போல் அடுத்து நின்று தொழுது பகுதாதுக்கு 20 மைல் தூரத்தில் பாழடைந்து இருபிளவாகப் பிளந்து கிடக்கும் கிஸ்றா கோட்டைக்குச் சமீபமாக, ஸஹாபி ஸல்மான் பார்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது கபுரு ஷரீபுக்கு அடுத்தாண்மையாக மற்றொரு கட்டிடத்தினுள் அவ்விரு ஸஹாபிகளும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இந்நிகழ்ச்சி ஆங்கில வருடம் 1932-ல் நடைபெற்றது. பத்திரிக்கைகள் பலவற்றிலும் இச்சேதி வெளியிடப்பட்டது. மதறாஸில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகை ஸைபுல் இஸ்லாமிலும், வட நாட்டின் உருதுப் பத்திரிகைகளிலும் இவ்விபரம் வெளிவந்துள்ளது.

## பத்திரிகையில் வெளி வந்த செய்தி

6-11-1964, நூருல் இஸ்லாம் தமிழ் வாரப் பத்திரிக்கையில் ‘வாடாமலர்’ என்ற பகுதியில் **“இஸ்லாத்தின் அதிசய நிகழ்ச்சி”** என்ற தலைப்பிலும் வந்துள்ளதையும் நோட்டமிட்டுப் பாருங்கள்.

“இதர தேசங்களின் இராஜாங்கப் பிரதிநிதிகளும் இராக் அரசாங்கத்தின் சர்வ அதிகாரிகளும் திரண்டிருக்க ஷாஹ்பைசல் அரசருக்கெதிரே முதன் முதலாக ஹஜ்ரத் ஹுதைபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய பரிசுத்த பிரேதம் கிரேன் (பாரந்தூக்கி) மூலமாக பூமியிலிருந்து அதிஜாக்கிரதையாக அப்படியே தூக்கப்பட்டது. அந்த ஜனாஸா ஸ்டிரெச்சர் (விரிப்புப் பலகை) மீது அழகாய் அமைந்து விட்டது. பின்னர், கிரேனிலிருந்து ஸ்டிரெச்சரைத் தனியே பிரித்து, அதை மாட்சிமை தங்கிய ஷாஹ்பைசல், முப்த்தியே அஃஜம், இராக், துருக்கி ஜனநாயகப் பொது அமைச்சர் மிஸ்ரு இளவரசாயிருந்து பாரூக் முதலானோர் தோள் மீது தூக்கிச் சென்று அழகிய கண்ணாடிப் பெட்டகமொன்றுக்குள் வைத்தனர். இதற்குப்பின் ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லா அவர்களின் பரிசுத்த மேனியும் அடக்கஸ்தலத்திலிருந்து இதே வகையில் அழகிய முறையில் வெளியில் எடுக்கப்பட்டது.

பரிசுத்த மேனியின் கபன் துணியும், அவர்களது முகத்திலிருந்த முடியும் அப்படியே அப்பழுக்கின்றி இருந்தன. இப்பெரியோர்களின் பிரேதங்களைக் கண்டவர்கள், “இவை 1300 ஆண்டுகளுக்கு முன்னுண்டான பிரேதங்கள் தாமா?” என்று நம்ப முடியவில்லை. ஆனால், பிரஸ்தாப மேன்மை மிக்க தேகங்கள் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன்னே இறந்துபட்டவர்களின் தேகங்களைப் போன்றே புத்தம் புதியனவாய்த் தென்பட்டன. இது மட்டிலுமல்ல. பிரஸ்தாப இரு பெரியார்களான ஸஹாபாக்களின் நேத்திரங்கள் இரண்டும் திறந்திருந்தன. அவை நல்ல பளிங்கு போன்ற பளபளப்புடன் தென்பட்டன. இதைக்கண்ட அக்கம் பக்கத்திலிருந்த பக்தர்கள் அவர்களின் கண்களை முத்தியிடத் துடிதுடித்தனர். ஆனால், எவருக்கும் இதற்கான அனுமதி கிடைக்கவில்லை.

மாபெரும் டாக்டர்களான வைத்தியர்கள் பலர் இந்நிகழ்ச்சியைக் கண்டு திடுக்கிட்டனர். ஒன்றும் புரியாமல் திகைத்தனர். பிரஸ்தாப நிகழ்ச்சியின் போது பிரபலமான ஜெர்மன் கண் டாக்டர் ஒருவர் இருந்தார். இவர் இந்நிகழ்ச்சியின் போது பெரிய ஆர்வத்துடன் பங்கு கொண்டார். அவர் இத்தகைய தோற்றத்தைக் கண்டதும், பிரஸ்தாபப் பெரியார்களான ஸஹாபாக்களின் பிரேதங்கள், கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே அவருக்கு ஒன்றும் புரியாமல் இராக் பிரதம முப்த்தீ அவர்களுடைய கரத்தைப் பிடித்துக் கொண்டு, “தங்களுடைய மார்க்கமான இஸ்லாம் சத்தியமானதுதான்” என்பதற்கு இந்த ஸஹாபாக்களின் பெருமை மிக்க நிகழ்ச்சியைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டியிருக்கிறது? இதோ யானும் முஸ்லிமாய் விட்டேன். ‘லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்’ என்று கூறி முஸ்லிமாகி விட்டார்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் திரைப்படம் பிடிக்கும் ஒரு ஜெர்மன் கம்பெனி, அதிக தொலை தூரத்திலிருந்தெல்லாம் இந்நிகழ்ச்சியைக் காண வந்திருந்தவர்களுக்குப் பெரிய உபகாரம் செய்தது. பிரஸ்தாபப் படம் எடுக்கும் கம்பெனியார், இராக் அரசரின் அனுமதி பெற்று தங்கள் செலவிலேயெ ஒரு காரியத்தைச் செய்தனர்.

அடக்கஸ்தலத்தின் மேலே இருநூறு அடி உயரமுள்ள நான்கு கம்பாஸ்களின் மீது ஏறக்குறைய முப்பது அடி நீளமும், இருபது அடி அகலமுமுள்ள டெலிவிஷன் திரைகளைப் பொருத்தினர். இதனால் அங்கு குழுமியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் நின்றவண்ணமாகவும், அமர்ந்த வண்ணமாகவும் பிரஸ்தாப அடக்கஸ்தலங்கிளிலிருந்து கௌரவமிக்க இரு ஸஹாபாக்களின் பிரேதங்களைத் திறப்பதையும், வெளியே எடுப்பதையும் தங்களின் கண்களால் நிதரிசனமாய நல்ல முறையில் காண சந்தர்ப்பம் கிட்டியது.

மறுநாள் பக்தாது நகரிலுள்ள சினிமாக் காட்சி சாலைகளில் எல்லாம் இந்நிகழ்ச்சி திரையிடப்பட்டு மக்களுக்கு காண்பிக்கப்பட்டது. இவ்விஷய நிகழ்ச்சிக்குப் பின்பு பக்தாத் நகரிலேயே ஒரு பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டது. அளவற்ற வகையில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் தங்கள் குடும்பத்தாருடன் எவ்விதக் கட்டாயமுமின்றி பள்ளிவாயில்களுக்கு வந்து இஸ்லாத்தைத் தங்கள் மனமாற ஏற்றுக்கொண்டனர். நிதரிசனமான இந்நிகழ்ச்சி பண்டையக்கால வரலாற்று ஏடல்ல.

இது நமது காலத்திலேயே நமது கண்களால் நிதரிசனமாய்க் கண்ட ஒரு நிகழ்ச்சியாகும். இத்ததைகய அதிசயம் கி.பி.1932. ஆம் ஆண்டில் நடந்த ஒரு விஷயமாகும். இந்நிகழ்ச்சியை ஒவ்வொரு மதத்தினரும். அன்னிய நாடுகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்களும் கண்ணாரக் கண்டனர். அகிலத்திலுள்ள பல பத்திரிகைகள் இது குறித்து விசேஷமாய்ப் பிரசுரம் செய்தன. அன்றியும், இவ்வடக்கஸ்தலங்கள் பெயர் தெரியாத ஒரு சிலரைச்

சார்ந்ததல்ல. இறுதி நபியாம் முஹம்மது ரஸுலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அத்தியந்த நண்பர்களான இரு ஸஹாபாக்களின் பிரேத நிகழ்ச்சியாகும். அவர்கள் யாரென்பதை முஸ்லிம் உலகம் முன்னரே அறியும். அவர்கள் எத்தகையோர் என்பதை முஸ்லிம் உலகம் ஏற்றுக் கொண்டே இருக்கிறது. தற்சமயமோ ஆயிரக்கணக்கான மக்கள் பிரஸ்தாபப் புதிய அடக்கஸ்தங்களுக்குச் சென்று தரிசித்து வருகின்றனர்''.

இவை போன்ற இன்னும் பல அற்புதங்களையறிய ஆவலுள்ளவர்கள் அல்லாமா ஷைகு யூசுபுந் நபஹானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது 'ஜாமியுல் கறாமாத்' எனும் நூலை நோட்டமிடுவார்களாக.

ஏதோ சொற்பப் பேர்கள் மட்டும் இத்தகைய பதவியடைந்துள்ளார்கள் என்று எண்ணிக்கொள்ளவேண்டாம். ''ஏகறப்பில் ஆலமீனருட்காளான வேழை பங்காளர் கோடி...தேகமழியாத நற்பாகம் படைத்த மாசித்தர்களனந்தங்கோடி'' என்பதாய் குணங்குடி மஸ்தான் சாஹிபு வலியுல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஏனவே, மேற்சொன்ன பல சான்றுகளைக் கொண்டு அன்பியா, அவுலியாக்களது சடலங்கள் மவுத்திற்குப் பின்னும் அழியாது. அவர்கள் ஹயாத்துள்ளவர்கள் என்பது தெளிவாக அறிய முடிகின்றது.

குர்ஆன், ஹதீது, இஜ்மா., கியாஸ் ஆகியனவற்றுக்கு முற்றிலும் மாற்றமாக அன்பியா, அவுலியாக்களுக்கு மௌத்திற்குப் பிறகு எத்தகைய சக்தியும் இல்லை என்றும் கபுருகளுக்குள் எலும்புக் கூடுகளாயினும் கிடைக்குமா என்பதே சந்தேகம்தானென்றும், அவர்களது உரோமம் உள்பட மடிந்து உக்கியிறந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது என்றும் கூறி விதண்டவாதம் செய்பவர்கள் இனியேனும் அறிவு பெறுவார்களாக! அறிஞர்களையடுத்து அறியாமையைப் போக்கிக் கொள்வார்களாக!!

## வஸீலா தேடலாமா?

அவுலியாக்களிடம் வஸீலா தேடுதல், உதவி தேடுதல், இரட்சிப்புத் தேடுதல், நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித் தர கேட்டல் முதலியன வெல்லம் கூடாது - அவை ஷிர்க்காகும் என்று விஷயம் அறியாதவர்கள்தான் கூறித் திரிகிறார்களென்றால், அதை மனதுக்குள் வெறுத்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாரிசுகள் எனப் பாத்தியதை கொண்டாடும் மௌலானா மௌலவிகள், அந்த ஜனங்களுக்கு உண்மையை உபதேசித்திருப்பார்களானால் மேன்மையாக இருக்கும். அதை விடுத்து, விஷயமறிந்த அவர்கள் வாய்பொத்தி பாராமுகமாக இருப்பது தருமமன்று.

“அவுலியாக்களை நினைவு கூர்வதால் அல்லாஹ்வின் கிருபாகடாட்சம் உண்டாகின்றது. நாட்ட தேட்டங்கள் கைகூடுகின்றன” என்பதாய ஸையிதுல் ஆரிபீன் ஹஜரத் அபுல் காஸிம் ஜுனைதுல் பகுதாதி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

“அவுலியாக்களிடத்தில் உதவி யொத்தாசை தேடலாம் என்று பலமான ஆதாரங்களைக் கொண்டு ஸுன்னத்து வல் ஜமாஅத்தினர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க, அவுலியாக்களிடத்தில் உதவி தேடக்கூடாது என்று இக்காலத்தில் ஒரு நவீன கூட்டம் ஏற்பட்டிருக்கிறது” என்று ஆச்சரியத்துடன் ஷைகு அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ‘அஷிஅத்துல் லம்ஆத்-தர்ஜுமா மிஷ்காத்’ 3-வது பாகத்தில் தெளிவுபடக் கூறியிருப்பதாக ‘பஸ்லுல் கித்தாப்’ 119-வது பக்கத்தில் ஷைகு ஷாஹ் முஹிய்யத்தீன் சாஹிபு வேலூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள்.

அன்பியா, அவுலியாக்களைக் கூப்பிட்டு உதவி இரட்சிப்புத் தேடுவது ஸஹாபாக்கள், தாபியீன்கள், ஸாலிஹீன்கள், முஜ்தஹிதாக உலமாக்கள் ஆகியோர்களுடைய கிரியைகளைக் கொண்டு ஆகுமென்பது ஸ்திரமாக்கப் பெற்றிருக்கின்றது. இதை இன்கார் செய்வது அறியாமையாகும்” என்பதாய மதறாஸ் முப்தி அல்லாமா மஹ்மூது சாஹிபு அவர்கள் பத்ஹுல் ஹக் 62-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

ஆண்டவனின் பிரதிநிதியும், மானிடவர்க்கத்தின் ஆதி தந்தையுமான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், மலக்கூத்துடைய ஆலத்திலிருக்கையில் அல்லாஹ்வின் கட்டளையை வெளிரங்கத்தில் மீறி நடந்தபோது அவர்கள் நாஸூத்துடைய ஆலமாகிய இவ்வுலகில் இறக்கப்பட்டார்கள். அன்று முதல் சுமார் முன்னூறு வருடங்கள் தமது குற்றத்தை மன்னிக்குமாறு ஆண்டவனிடம் பிழை பொறுக்கத் தேடியும் அங்கீகரிக்கப்படவில்லை. நபி முஹம்மது முஸ்த்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வஸீலாவை கொண்டு பாவமன்னிப்பு அங்கீகாரம் கிடைக்கக்கூடும் என்று எண்ணம் அவர்களுக்கு உண்டானபோது “இறைவா (முஹம்மது ஆகிய) இந்தப் பிள்ளையின் பொருட்டால் (ஆதம் ஆகிய) இந்தத் தகப்பனுடைய பிழையைப் பொறுத்தருள்வாயாக” என்று வஸீலா (சிபாரிசு) தேடினார்கள்.

உடனே, அவர்களுக்கு பாவமன்னிப்பு கிடைக்கப் பெற்றது என்று ஹாக்கிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஸஹீஹு முஸ்த்தத்ரக்கிலும், பைஹக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தலாயிலுன்னுபுவ்வாவிலும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

ஸுபுஹான மவுலிதுடைய முதல் ஹிக்காயத்திலும், மற்றும் பிரபலமான கிரந்தங்களிலும் இவ்விபரம் கூறப்பட்டுள்ளது.

இன்னமும், ‘‘முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு, பாத்திமா ரலியல்லாஹு தஆலா அன்ஹா, ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹுஸைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களைக் கொண்டு வஸீலாத் தேடியதன் பொருட்டால் ஆண்டவன் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குக் கிருபை செய்தான்’’ என்று நபி கரீம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டுள்ள ரிவாயத்து, தப்ஸீரு துர்ருல் மன்தூரில் இமாம் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு கூறுகின்றார்கள்.

மேலும், ‘‘முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு, பாத்திமா ரலியல்லாஹு தஆலா அன்ஹா, ஹஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹுஸைன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களைக் கொண்டு ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வஸீலாத் தேடியதை முன்னிட்டு அவர்களின் தவ்பா ஒப்பக்கொள்ளப்பட்டது’’ என்பதாய் நுஸ்ஹத்துல் மஜாலிஸ் 2-வது பாகம், 307-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

இன்னமும் பலமான ஸனதைக் கொண்டு, முஹத்திது தப்றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்கிறார்கள்.

என்னவெனில், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துஆக் கேட்கும் பொழுது தங்களுடைய ஹக்கைக் கொண்டும் தங்களுக்கு முன்னுண்டான நபிமார்களது ஹக்கைக் கொண்டும் துஆக் கேட்டிருக்கிறார்கள்.

அகில உலகத்திற்கும் அருட்கொடையாகவும், சகல படைப்புகளையும் மன்றாடி கரை சேர்த்து இரட்சிக்கும் வள்ளலாகவும் அவர்கள் இருந்தும் அவர்களே தங்களைக் கொண்டும், மற்றும் நபிமார்களைக் கொண்டும் வஸீலா தேடி இருக்கிறார்கள். மற்றோர்கள் எப்படி அவர்களைக் கொண்டு வஸீலாத் தேடாமலிருக்க முடியும்! இவ்விதம் இமாம் ஸுபுக்கி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய ஷிபா உஸ்ஸிகாம் என்ற நூலிலும், இமாம் இபுனு ஹஜருல் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய ஜவ்ஹருல் முனள்ளம் என்ற நூலிலும் சொல்லப்படுவதாக ‘‘அபுளலுஸ் ஸலவாத்து’’ என்ற கிரந்தத்தில் எடுத்துரைக்கப்படுகிறது.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், அல்லாஹ்வுக்கு கலீபாவும், ஆதிநபியும், ஆதிபிதாவுமான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆண்டவனுடைய ஓர் ஏவலுக்கு வெளிரங்கத்தில் மாறு செய்த ஒரு குற்றத்தை வஸீலாவின்றி மன்னிக்கப்படவில்லை என்றால், கால முழுவதும் கணக்கற்ற குற்றங்கள், பாவங்கள் புரிந்து வரும் நம்போன்றவர்கள் அன்பியா, அவுலியர், காமிலீன்களின் வஸிலாவின்றி ஈடேற்றம் அடைவது எங்ஙனம்? என்பதேயாம்.

(யா அய்யுஹல்லதீன ஆமனுத்தகுல்லாஹ-வப்த்தகூ இலைஹில் வஸீலத்த....)

“ஓ, ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள், மேலும், அவனளவில் வஸீலா தேடிக் கொள்ளுங்கள்” என்பதாக இறைவன் தனது பரிசுத்தத் திருமறையில் கூறியுள்ளான. (5:35)

“ஆண்டவனளவில் சேருவதற்கு வஸீலாவை கொண்டேயல்லாமால் வேறு வழியில்லை. வஸீலாவின் தாத்பரியம் அவுலியா காமிலீன்களே” என்று மேறசொன்ன திருமறை வசன விளக்கத்தில் தப்ஸீர் ரூஹுல் பயான் 2-வது பாகம் 388-வது பக்கத்தில் வியாக்கியானம் செய்யப் பெற்றிருக்கின்றது.

எவனுக்கு (ரஸுலுல்லாஹ் மீது) மஹப்பத்து இல்லையோ அவனுக்கு ஈமான் இல்லை” என்பதாகவும் ஹதீது வந்துள்ளது.

أُطْلُبُوا الْحَوَائِجَ إِلَى ذَوِي الرَّحْمَةِ مِنْ أُمَّتِي

“என்னுடைய றஹ்மத்து உடைய கூட்டத்தார் (அவுலியாக்) களிடத்தில் உங்களுடைய தேவைகளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்” என்ற ஹதீதை பைஹக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஸுனன் குப்றாவிலும் தப்றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மு.’.ஜம் அவ்ஸத்திலும், அபீஸயீது குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்கிறார்கள். இந்த ஹதீதையே இமாம் மனாவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹு ஜாமிஉஸ்ஸகீர் 1-வது பாகத்திலும், முல்லா அலி காரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹுஐனல் இல்மிலும் எடுத்துரைத்துள்ளார்கள்.

“நிச்சயமாக அல்லாஹ்வுடைய அடியார்கள் சிலர் இருக்கின்றார்கள், ஜனங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்தென்றே அவன் அவர்களைச் சொந்தப்படுத்தி வைத்திருக்கின்றான். தங்களுடைய தேவைகளைப் பூர்த்தியாக்கிக் கொள்வதற்காக ஜனங்கள் அவர்களை அண்டுவார்கள். அவர்கள் அல்லாஹ்வின் வேதனையை விட்டும் அச்சம் தீர்ந்தவர்கள்” என்ற ஹதீது இபுனு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு தபறானியில் வருவதாக அல்ஜாமிஉஸ்ஸகீர், 1-வது பாகம், பக்கம் 78ல் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

إِذَا تَحَيَّرْتُمْ فِي الْأُمُورِ فَاسْتَعِينُوا
مِنْ أَهْلِ الْقُبُورِ

(இதா தஹய்யர்த்தும் பில உமூரி,

பஸ்த்தயீனூமின் அஹ்லில் குபூரி)

“கருமங்களில் திகைப்படைந்து விடுவீர்களேயானால் கபுருகளை உடையவர்களை (அவுலியாக்களைக்) கொண்டு உதவி தேடிக் கொள்ளுங்கள்” என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீது, அப்துல்லாஹ் இபுனு மஸ்வூது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு முஹத்திது இபுனு அபித்துன்யா கர்ஷீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு (வபாத்து ஹிஜ்ரி 281) அவர்கள் ரிவாயத்துச் செய்வதாக, தஸ்ரீஹுல் அவ்தக் - தர்ஜுமா ஷரஹு பர்ஜக் பக்கம் 319-ல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இன்னமும், மேலே குறிப்பிட்ட ஹதீது பற்றி ஸிராஜுல் மு.ஃ.மினீன், ஷரஹுஐனுல்இல்மு, ஹரஹு பர்ஜக், கஜானத்துல் ஜலாலீ, பதாவா ஸாதுல்லபீப் முதலிய கிரந்தங்களிலும் அறிவிக்கப்பட்டுள்ளது, என்பதாக துல்பகார் ஹைதரிய்யா 213-வது பக்கத்தில் முற்காலத்து முப்தீ முப்தில் பாஜில் ஹைதர் ஷாஹ் காதிரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும், ஷரஹுஐனுல் இல்மு 53-வது பக்கத்தில் இமாம் முல்லா அலி காரீ மக்கி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், தப்ஸீர் ரூஹுல் பயான், 5-வது பாகம், 380-வது பக்கத்தில் உம்தத்துல் முபஸ்ஸிரீன் ஷைகு இஸ்மாயில் ஹக்கீ பரூஸி ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் தஸ்ரீஹுல் அவ்தக்பீ தர்ஜுமா ஷரஹுல் பர்ஜக் 319-வது பக்கத்திலும் ஆதாரத்துடன் கூறுகின்றார்கள்.

மேற்கண்ட ஹதீதை குத்வதுஸ் ஸாலிக்கீன், ஸுப்தத்துல் ஆரிபீன், சுல்தான் பாஹு வலிய்யுல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் முஹ்கமுல் புகராவில் எடுத்தறிவித்திருப்பதுடன், “அவுலியாக்கள் பூமியின் கீழ் தனித்து கல்வத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு அச்சமென்பதில்லை. அவர்கள் ஆண்டவனோடிருக்கிறார்கள். மனு, ஜின் யாராகட்டும், தேவையுடையவர்கள். விஷயத்தையுடையவர்களான அவுலியாக்களின் கபுரு (சமாதிக்குழி) களுக்குச் செல்லட்டும்! அப்படிப் போகின்ற அவர்களுடைய கஷ்டங்களெல்லாம் நீங்கி இலகுவாகிவிடும்” என்பதாகக் கூறியுள்ளார்கள்.

“மானிடனுக்கு ஏதாவது கஷ்ட நஷ்டம் ஏற்பட்டால் அவன் அவுலியா உல்லாக்களில் ஒருவரைக் கூப்பிட்டு உதவி தேடட்டும். அந்தவலி உயிரோடிருந்தால் நொடிப்பொழுதில் காற்று அவருக்கு எட்டிவைக்கும். அல்லது அவர் ஞானதிருஷ்டி (கஷ்பு) மூலம் தெரிந்துகொள்வார். ஆவர் மரணித்துப் போயிருந்தால் வானவர் (மலக்கு) அவருக்கு அறிவித்து வைப்பார். அவர் ஆண்டவனிடத்தில் சிபாரிசு தேடி நிவர்த்தி செய்து தருவார். இவ்வாறு காமிலீன்கள் கூட மலக்கின் அறிவிப்பின்றி தாங்களாகவே கேட்டுக்கொள்கின்றார்கள்” என்று ஹதீதில் வருவதாக ஷரஹு பர்ஜக்கில்

காணப்படுகிறது என்று பத்ஹுல் ஹக்கு 101-வது பக்கத்தில் சொல்லப்படுகிறது.

وَإِذَا انْفَلَتَتْ دَابَّةٌ فَلْيُنَادِ أَعِينُونِي عِبَادَ اللهِ
رَحِمَكُمُ اللهُ

“எவருடைய கால்நடைப் பிராணியாவது காணாமற் போய்விட்டால், ‘அல்லாஹ்வின் அடியார்களே, அல்லாஹ் உங்களுக்கு நல்லருள் பாலிப்பானாக, தாங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூப்பிட்டுக் கேளுங்கள்’’ என்பதாக உள்ள ஹதீதை இபுனு அப்பாஸ் ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்யப்படுகிறது என்று ஹிஸ்னுன் ஹஸீனில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏவருடைய கால்நடைப் பிராணியாவது காட்டின் பக்கம் விரண்டோடி விட்டால், “அல்லாஹ்வின் அடியார்களே அதைப் பிடித்து நிறுத்துங்கள் - அல்லாஹ்வின் அடியார்களே - அதைப்பிடித்து நிறுத்துங்கள் - அல்லாஹ்வின் அடியார்களே அதைப்பிடித்து நிறுத்துங்கள் என்று கூவி அழைக்கட்டும் என்பதாக உள்ள ஹதீது, இபுனு மஸ்வூது ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்யப்படுகிறதாகவும் மேற்படி ஹிஸ்னுன் ஹஸீன் கிரந்தத்தில் வரையப்பட்டுள்ளது.

إِنْ أَرَادَ عَوْنًا فَلْيَقُلْ يَا عِبَادَ اللهِ أَعِينُونِي
يَا عِبَادَ اللهِ أَعِينُونِي يَا عِبَادَ اللهِ أَعِينُونِي
- طبراني حصن حصين صحيح ابن عوانه

“எவருக்காவது உதவி தேவைப்படுமானால் அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! என்று கூறட்டும்’’ என்று நாயகம் ஸல்லல்லாஹுˆ அலைஹி வஸல்லம் திருவாய் மலர்ந்தருளியிருக்கும் ஹதீது தப்றானீ-ஹிஸ்னுன் ஹஸீன்-ஸஹீஹ் இபுனு அவானா முதலான கிரந்தங்களில் வந்துள்ளன.

இது பற்றி ஆதாரம் ‘வஸீலா ஜலீலா’ பக்கம் 108லும் ‘துரருஸ்ஸனிய்யா-பீ-றத்தி அலல் வஹ்ஹாபிய்யா பக்கம் 33-லும், ‘பஸ்லுல்-

கித்தாபு' பக்கம் 132 லும் பத்ஹுல் ஹக்கு பக்கம் 71 லும் வரையப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ஹதீதுகளில் காணப்படும் (இபாதுல்லாஹ்) அல்லாஹ்வுடைய அடியார்கள் என்பதற்குக் கருத்து முஸ்லிமான மனிதர்கள் - முஸ்லிமான ஜின்கள் - மலக்குகள் - ரிஜாலுல் கைபு - (மறைந்து வாழும் மனிதர்கள்) - அப்தால்கள் - அவுத்தாதுகள் - குத்புமார்கள் முதலியவர்களே. இவர்கள் உயிரோடிருப்பினும் சரியே, மரணித்திருப்பினும் சரியே இவர்களை அழைத்து உதவி தேடிப் பெறுதல் ஆகும் என்பதற்கு மேலே சொல்லப்பட்ட ஹதீதுகளே போதிய ஆதாரங்களாகும் என்பதாய 'இஹ்காக்குல்ஹகாயிகு' என்ற நூலில் வரையப்பட்டிருப்பதாக, சென்னைப் பிரதம முப்தீ மௌலானா மௌலவி அல்ஹாஜ் முஹம்மது ஹபீபுல்லா சாஹிபு கவர்ன்மெண்டு சீப் காஜீ அஹ்ல ஸுன்னத்து வல்ஜமாஅத் அவர்களது பத்வா - தர் - பயானே - ஜவாஸ் இஸ்த்திம்தாது - அன்பியா - வ - அவுலியா உல்லாஹி எனும் பத்வாச் சான்றும், 'வஸீலா ஜலீலா', பத்ஹுல்ஹக்கு முதலிய நூற்களும் கூறுகின்றன.

மேலும் இவ்வாறான அத்தாட்சி 'பரக்காத்துல் இம்தாது - லி - அஹ்லில் - இஸ்த்திம்தாத்' என்ற நூலிலும் காணப்படுகின்றது.

"காபிர்கள் விக்ரகங்களை ஆண்டவனுக்கு இணையாக ஆக்கி, தங்களது தேவைகளை அவைகளே சுயமாக நிறைவேற்றுகின்றன என்று கருதி அவற்றின்பால் உதவி தேடுகிறார்கள். முஸ்லிம்களே அன்பியா, அவுலியாக்களை ஆண்டவனுக்கு இணையாக ஆக்கிவைக்காமல் ஆண்டவனது அஸ்மா ஸிபாத்து வெளியாகும் மள்ஹர் ஆகக் கருதி, அவர்களிடம் உதவி தேடுகிறார்கள்.

விக்கிரகங்களைக் கூப்பிட்டவர்கள் நஷ்டவாளிகளாயினர். அன்பியா அவுலியாக்களைக் கூப்பிட்டவர்கள் ஜெயம் பெற்றவர்களாயினர்" என்று குத்வத்துஸ் ஸாலிக்கீன், மௌலானா, அல்ஹாஜ் ஸெய்யிது ஷாஹ் உமர் ஸாஹிபு காதிரி ஹைதராபாதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தப்ஸீர் கஷ்புல் குலூபில்' வரைந்துள்ளார்கள்.

ஷாபியீ மதுஹபின் இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸுஷ் ஷாபியீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் செய்யதுனா இமாம் மூஸல் காலிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுருஷரீபுக்குச் சென்று ஜியாரத்துச் செய்யும் போது அந்தச் சங்கையான கபுரை நோக்கி, "நிச்சயமாக இது பிராத்தனைகளை ஏற்று ஒப்புக்கொள்ளப்படும் என்று அனுபவத்தில் பரீட்சிக்கப் பட்ட ஔடதமாகும்" என்று உரைத்தார்கள்.

இவ்விவரத்தை அல்லாமா ஷெய்கு அப்துல் ஹக் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'அஷி அத்துல் லமஆத் தர்ஜுமதுல் மிஷ்காத்' 1-வது பாகம், 633-வது பக்கத்திலும், இமாம் இபுனு

ஜௌஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'ஸப்வத்துல் ஸப்வா' விலும், ஷெய்கு முஹம்மது மள்ஹர் நக்ஷபந்தீ திஹ்லவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'துர்ருல் முனள்ளம்' விலும் கூறுவதாக, முப்தீ அல்லாமா மஹ்மூது சாஹிபு மத்றாஸி அவர்கள் ஸில்குல் முஅள்ளம், 38-வது பக்கத்தில் எடுத்துரைத்துள்ளார்கள்.

"இமாமுல் அஃளம் ஸெய்யிதுனா அபூஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுரு ஷரீபு திட்டமாக நமது முறைப்பாட்டைக் கேட்டு தேவைகளை நிறைவேற்றிதர வல்லதாயிருக்கின்றது" என்பதாக, கல்லுடைந்தாலும் சொல்லுடையாத அல்லாமா இமாம் இபுனு ஹஜர்மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'கைராத்துல் - ஹிஸானில்' கூறுவதாக, அல்லாமா முப்த்தீ மஹ்மூது ஸாஹிபு மதறாஸீ அவர்கள் பத்ஹுல் ஹக்கு 78 வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

"இமாம் ஷெய்கு மஃரூபுல் கர்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பரகத்துச் செய்யப்பட்ட மனிதர்களுள் மேலானவர்கள். ஆவர்களது கபுரு ஷரீபு நிச்சயமாகப் பரீட்சித்து சோதனை செய்யப்பட்ட அவிழ்தமாகும். ஏவரொருவர், அந்தக் கபுரு ஷரீபிலிருந்து (தமது துன்பம், துயர் விலக வேண்டுமென்ற எண்ணத்துடன்) யாதொரு வஸ்த்துவை எடுப்பரேல் அவரது பலாய் முஸீபத்துகள் நிவர்த்தியாக்கப்படும்" என்பதாக, ஷைகுல் இஸ்லாம், ஐக்கரிய்யல் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'ஷரஹுரிஸாலத் தில்-குஷைரிய்யா'வில் குறிப்பிட்டுள்ளதாக, ஆரிபுபில்லாஹ், ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாஹிபு வேலூரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'பஸ்லுல்-கித்தாப் 115-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

ஹஜ்ரத் ஷெய்கு மஃரூபுல் கர்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது வபாத்து ஹிஜ்ரி 201. அவர்களது அடக்கத்தலம் பகுதாதில் இருக்கிறது. அவர்கள் வேண்டுகோளுக்குப் பதில் அளிக்கக் கூடியவர்கள். அவர்களது கபுரு ஷரீபைக் கொண்டு பகுதாது வாசிகள் பிணி நோய் நீங்க ஷிபாவைத் தேடிப்பெறுகின்றனர். அந்தக் கபுரு ஷரீபு அனுபவபூர்வமாகப் பரீட்சிக்கப்பட்ட சஞ்சீவியாகும்" என்று இமாம் அபுல்காஸிம் குஷைரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஷைகுல் இஸ்லாம் ஐகரிய்யல் அன்சாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு இருவரும் தங்கள் ரிஸாலாக்களில் வரைந்திருப்பதாய், அல்லாமா முப்த்தி மஹ்மூது ஸாஹிபு மதறாஸீ அவர்கள் 'பத்ஹுல்ஹக்கு 80-வது பக்கத்தில் எடுத்து அறிவிக்கின்றார்கள்.

இவ்வாறாக இமாம் யாபியீ யமனி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் சொல்வதாக அல்லாமா ஷைகு யூசுபு நபஹானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'ஜாமிஉல் கறாமத்தில் அவுலியா' 2வது பாகம் 267-வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்கள்.

குத்புல் அக்பர், ஷைகு அபுல்ஹஸன் அலிய்யுஷ் ஷாதுலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது 5-வது கலீபா, அல்குத்பு

ஸெய்யிது ஷம்சுத்தின் ஹனபிய்யில்-ஹமவிய்யிஷ்-ஷாதுலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது வபாத்தின் வேளையில், ''தேவையுள்ள எவரும் என்னுடைய கபுருக்கு வந்து அவரது நாட்டங்களைக் கேட்பரேல் அவற்றை நான் நிறைவேற்றித் தருவேன். ஏனெனில் எனக்கும் (தேவையைக் கோரும்) அவருக்கும் இடையில் ஒரு முளம் மண்ணே தூரம். தன்னைச் சார்ந்தவர்களை ஒரு முளம் மண் தடுக்குமெயானால் அவன் ஆண் பிள்ளையன்று'' என்று சொன்னதாக அல்குத்பு இமாம் அப்துல்-வஹ்ஹாபுஷ் ஷ.்.றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'தபகாத்துல்-குப்றா' 2-வது பாகம், 86-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

அல்குத்பு ஷெய்கு முஹம்மது இபுனு அஹ்மது பர்கல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ''நான் கபுரிலிருந்து வெளிவந்து உலாவக் கூடிய தஸர்ரபாத்தெனும் சக்தியை உடையவன். எவருக்கேனும் ஹாஜத்து நாட்ட தேட்டம், இருக்குமானால், என் முகத்திற்கெதிரே வந்து, என்னிடத்தில் தேவைகளைக் கேட்பாராயின், நான் நிறைவேற்றித் தருவேன்'' எனக் கூறியிருக்கிறார்கள் என்பதாக இமாம் ஷ.்.ரானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தபக்காத்து, 2-வது பாகம், 93-வது பக்கத்தில் அறிவித்துள்ளார்கள்.

'எவரொருவருக்கு தமது தேவைகள். நாட்ட தேட்டங்கள், நிறைவேற வேண்டுமென்றிருக்குமானால், அவர் ஸூரத்துல் பாத்திஹா, ஆயத்துல் குர்ஸீ, அலம் நஷ்ரஹ்ஸூரா இவைகளை ஓதி, அவற்றின் தவாபை குத்புல் அக்த்தாபு, ஹஜ்ரத் அஷ்ஷைகு அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்கு அளிக்கவேண்டும், பிறகு பகுதாது திசையை முன்னோக்கி பதினொரு எட்டெடுத்து வைத்து, 'யா ஸெய்யிதீ அப்துல் காதிர்' என்று பத்து விடுத்தம் அழைத்து வேண்டி, தமது நாட்ட தேட்டங்களைக் கேட்க வேண்டும்'' என்பதாய இமாம் ஷெய்கு ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'கித்தாபுர்-ரஹ்மா-பித்திப்பி-வல்-ஹிக்மா' என்ற நூலின் 284-வது பக்கத்தில் உரைத்துள்ளார்கள்.

மேலே கண்ட விஷயங்களை நாம் இங்கு ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். இஸ்லாத்தின் சட்ட திட்டங்களைத் தொகுத்துக் கொடுத்து 'மதுஹபு'வை ஏற்படுத்தித் தந்த இமாம் ஷா.்.பீயி முஹம்மது இபுனு இத்ரீஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு சட்ட நிபுணர்களாகிய இமாம் இபுனுஹஜர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு, இமாம் குஷைரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு, இமாம் ஜக்கரிய்யயல் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களும், அல்குத்பு ஷம்சுத்தீன் ஹமவீ மிஸ்ரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அல்குத்பு முஹம்மது இபுனு அஹ்மது பர்கல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகிய குத்புமார்களும் கபுருகளைக் குறிப்பிட்டு இவ்வாறு கூறியுள்ளார்களென்றால் நோய் நீங்கவும், வறுமை விலகவும், வியாபாரம் விருத்தியாகவும், நாடு செழிக்கவும், நிக்காஹ் முதலான நல்ல காரியங்கள் மங்களமாய் நடைபெறவும், தேவைகளையும்

தாராளமாக வஸீலா மூலம் கேட்டுப் பெறலாம். ஏன் வஸிலாவாகக் கேட்டுப் பெறக்கூடாது என்பதே.

இவையனைத்திற்கும் மேம்பட்டு, அவுலியாக்களுக்கெல்லாம் அரசரான, அல்குத்புர் ரப்பானீ, வல் கௌதுஸ் ஸமதானீ ஸெய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹுﷻ தஆலா அன்ஹுﷻ அவர்கள் 'ஐய்னிய்யா'வில் கூறியுள்ளதைப் புத்திசாலிகள் படித்துப் பயனடைவார்களாக.

அவர்கள் உபதேசித்துக் கூறுவது யாதெனில்:-

"நீ ஓதிப் படித்த புத்தகங்களை விட்டுவிடு. ஏனெனில் அந்த அவுலியாக்களுடைய நடப்புக்கள அநேகக் கித்தாபுகளில் நின்றுதான் ஏற்பட்டுள்ளன. எங்களுடைய வழிக்கும் அந்த அவுலியாக்கள் தான் வழிகாட்டிகள். நாம் ஆதரவு வைப்பதற்கு அன்னவர்களே போதுமான புதையல்கள்.

அந்த அவுலியாக்களைப் பின்பற்றியவன் நேர்வழி பெறுவான். எவன் பின்பற்றவில்லையோ அவன் வழிகெட்டான்.

ஆபிதீன்கள் எல்லோரும் அந்த அவுலியாக்களையே பற்றிப் பிடித்துக் கொண்டார்கள். அந்த அவுலியாக்கள்தான் மனிதரென மதிக்கப்படுபவர்கள்.
அவர்களின் திருச்சமுகத்தை நீ பற்றிப் பிடித்துக்கொள்.

உலகத்தார்கள் பிரதிப் பிரயோஜனங்கள் பெறுவதற்கு அந்த அவுலியாக்களே ஒதுங்கும் தலங்களாகும்" என்பதே.

அஷ்ஷெய்கு முஹிய்யித்தீன் இபுனு அறபீ ரலியல்லாஹுﷻ தஆலா அன்ஹுﷻ அவர்கள் இமாம் பகுறுத்தீன் றாஜீ ரலியல்லாஹுﷻ தஆலா அன்ஹுﷻ அவர்களுக்கு உபதேசமாக எழுதியதாவது: யாதெனில்:-

"எம்மனிதன் உண்மை என சாதிக்க, தர்க்கவாதம் புரிவதை விட்டு வெளிப்படவில்லையோ, அம்மனிதன் அவுலியாக்களிடத்தில் ஒரு போதும் பூரண ஈமான் உடையவனாக மாட்டான். ஏனெனில், அந்த மனிதன் தான் கற்ற சொற்ப கல்வியை எல்லையில்லாததாகக் கண்டு, அந்த அற்பத்தையே துருவி ஆராய்வதில் தனது மேலான வயதைப் போக்கடிக்கிறான். ஆசல் நோக்கத்தை அடைந்தவனாக மாட்டான்" என்பதே.

இமாம் அஹ்மது இபுனு ஹம்பல் ரலியல்லாஹுﷻ தஆலா அன்ஹுﷻ, ஷைகு இஸ்ஸுﷻத்தீன் ரலியல்லாஹுﷻ தஆலா அன்ஹுﷻ ஆகிய இருவரும் தகுதி வாய்ந்த சிறந்த இரு முஹத்திதுகள், இன்காருக்குப் பிறகே இவர்கள் அவுலியாக்களின் அந்தரங்கப் பேறுகளைப் பெற்றார்கள்.

இமாம் அஹ்மது இபுனு ஹம்பல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹஜரத் அபூஹம்ஜா பகுதாதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய மஜ்லிஸில் உட்கார்ந்த பிறகுதான் இமாம் அவர்களுக்கு அகக்கண்கள் திறந்தன.

இமாம் அஹ்மது இபுனு ஹம்பல ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தமது குமாரருக்கு செய்யும் உபதேசத்தில், ''மகனே! அவுலியாக்கள் பால் ஒரு பொழுதும் கெட்ட எண்ணம் கொள்ளாதே! அவர்களுடைய சகவாசத்தை ஒரு போதும் மறந்திருக்காதே! அவர்கள் அகமியத்தின் பொக்கிஷங்களை அறிந்தவர்கள், நாமோ, அவ்வாறு அறிந்திராத துரதிர்ஷ்டசாலிகள்'' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஷெய்கு இஸ்ஸுத்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, குத்புல் அக்பர் அபுல்ஹஸன் அலிய்யுஷ் ஷாதுலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடைய சகவாசத்தால் பெரும் பேறுகளைப் பெற்றார்கள்.

''அவுலியாக்கள் தான் ஹகீகத்தை உடையவர்கள். ஆவர்களுடைய நேர்மைக்கு இதுவே போதுமாக அத்தாட்சியாகும். மற்றவர்கள் வெறும் பழக்க வழக்கங்களில் அகப்பட்டுக் கொண்டு கிடக்கின்றனர்'' என்று ஷெய்கு இஸ்ஸுத்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

உண்மை இவ்வாறிருக்க, 'வஸீலா'வை நிராகரிக்கக்கூடிய வரம்பு மீறிய கூட்டத்தார்கள், அன்பியாக்களை, அவுலியாக்களை, யாரஸுலல்லாஹ்! யாவலிய்யல்லாஹ்! என்பன போன்ற சொற்களைக் கொண்டு அழைக்கக் கூடாது என பலமாக விவாதம் புரிகின்றார்கள். தங்களது குருட்டுத்தனமான இத்தகைய விதண்டாவாதத்திற்குச் சாதகமாகப் பின்வரும் திருக்குர்ஆன் வசனங்களின் கருத்தைத் தவறான முறையிலாக்கி தங்களுக்குச் சாதகமான ஆதாரங்கள் என மனப்பால் குடிக்கின்றனர்.

(பலா தத்ஊமஅல்லாஹி அஹதன்) என்ற 72:18 குர்ஆன் ஆயத்திற்கு, ''எனவே, அல்லாஹ்வுடன் எவரையும் வணங்காதீர்கள்'' எனவும்.

(''வலா தத்உ மஅல்லாஹி இலாஹன் ஆகர லா இலாஹ இல்லாஹுவ) என்ற 28:88 குர்ஆன் ஆயத்திற்கு ''அல்லாஹ்வுடன் வேறொரு நாயனை நீர் வணங்காதீர் அவனைத் தவிர்த்து (வணக்கத்துக்குரிய) நாயன் (வேறு) இல்லை'' எனவும், ஸுன்னத்து வல்ஜமா அத்து முபஸ்ஸிரீன்கள் கருத்துத் தெரிவித்திருக்க வஸீலாவை நிராகரிக்கக்கூடிய மேற்சொன்ன, அகீதாப் பிசகிய கூட்டத்தார்கள், மேற்கண்ட இரு ஆயத்துக்களுக்கும் ''நீங்கள் அல்லாஹ்வுடன் வேறொருவரையும் அழைக்கவேண்டாம்'' எனவும், 'நீர் அல்லாஹ்வுடன் வேறொரு நாயனை அழைக்க வேண்டாம். அவனைத் தவிர (வணக்கத்துக்குரிய) நாயன் (வேறு) இல்லை'' எனவும் அர்த்தம் கற்பித்து தங்களது விதண்டாவாதத்திற்கு ஆதாரங்காட்ட முற்படுகின்றனர்.

இவை போன்ற “லாதத்உ” என்று வரக்கூடிய மற்ற ஆயத்துக்களைக் கொண்டும் இவர்கள் இவ்வாறே மேறகோள் காட்டுகின்றனர்.

அழைத்தல், விளித்தல், கூப்பிடுதல் என்ற வார்த்தைகளுக்குரிய கருத்துடன் திருமறையில் ‘துஆ’ எனும் பதம் சில இடங்களில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. ‘வணங்குதல்’ என்ற கருத்துடனும் திருமறையில் சில இடங்களில் ‘துஆ’ எனும் பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

‘துஆ’ எனும் சொல்லிற்கு இருவிதமான பொருட்கள் உள்ளன. வணக்கத்தைப் பொதிந்தில்லாத சாதாரண அழைப்பு, விளிப்பு, கூப்பிடுதல் என்ற வகைப் பொருள் ஒன்று.

இபாதத்து எனும் வணக்கத்தைத் தன்னுள்ளடக்கிக் கொண்ட பிராத்தனையான அர்த்தத்துடன் கூடிய பொருள் மற்றொன்று.

முந்திய வகை பற்றி இறைவன் தனது பரிசுத்தத் திருமறையில் (உத்வு இலாஸபீலி றப்பிக்கபில் ஹிக்மத்தி வல் மவ் இளத்தில் ஹஸனத்தி)

“(நபியே) நீர் உமது இரட்சகனுடைய பாதையின் பால் ஹிக்மத்தை (விவேகம்) கொண்டும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப்பீராக) என்று கூறுகின்றான். (16:125)

இவ்வசனத்தில் ‘உத்உ’ என்ற துஆப் பதம், வணக்கத்தைப் பொதிந்ததாயில்லாத அர்த்தத்தில் ‘அழைப்பீராக’ என்று வழங்கப்பட்டுள்ளது.

பிந்தியது பற்றி, வஸீலாவை ஆட்சேபிக்கும் பொருட்டு நிராகரிப்போர் அத்தாட்சியாக எடுத்துக் காண்பிக்கும் ஆயத்துக்களில் வணக்கத்தைப் பொதிந்துள்ள கருத்தில் பிரயோகிக்கப் பெற்றிருக்கும் துஆக்களைப் போல் அல்லாஹ்வுடன் வேறு தெய்வத்தை வணங்க வேண்டாமென்பதே. இப்பொருளையே வேறு ஆயத்துக்களும் விளக்கிக் காண்பிக்கின்றன.

நீங்கள் அல்லாஹ்வையன்றி தங்களுக்குப் பிரயோஜனத்தையாவது தங்கடத்தையாவது செய்ய இயலாதவற்றை (இபாதத்துச் செய்து) வணங்குகின்றார்கள். (10:18) என்றும், இவை போன்று இதர ஆயத்துக்கள் கூறுவதையும் சிந்தித்துச் சீர் தூக்கி ஆராய்ந்துணர்க!

எனவே, அன்பியா அவுலியாக்களை அழைத்துக் கூப்பிடுதல் கூடாது என்பதற்கு ஆதாரங்களாக எதிரிகள் கூறும் ஆயத்துக்களிலுள்ள ‘துஆ’ வானது, அல்லாஹ்வைத் தவிரவுள்ளவை தெய்வத் தன்மைக்கு உரித்தானவை, வணக்கத்திற்கு பாத்திரமானவை, என்று கருதியுள்ள அவிசுவாசிகள் விஷயத்தில் தான் பொருந்துமெ யல்லாது, ஹகீகத்தில் எல்லாம் அல்லாஹ் ஒருவனைக் கொண்டே நடைபெறுகின்றன. தெய்வத்தன்மைக்கு தகுதியுடையான் வணக்கத்திற்குப் பாத்திரவான் அவனையன்றி வேறு எவருமில்லை என்று விசுவாசம் (ஈமான்) கொண்டுள்ள

முஸ்லிம்கள் அன்பியா, அவுலியாக்களை விளித்து அழைக்கும் விஷயத்திற்கு முற்றிலும் பொருந்தாது என்பது யாருக்கும் தெரிந்த வெளிப்படையான விஷயமாகும்.

“உங்களில் சிலர் சிலரை அழைப்பதே போல உங்களுக்கிடையில் றஸுலை அழைப்பதை நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள்” என்ற (24:63) குறிப்புடன் கூடிய திருமறை வசனமொன்றுண்டு.

தப்ஸீர் காஜின் - தப்ஸீர் ரூஹுல்பயான் ஸாவீ முதலியவற்றில் அறிவிக்கப்பட்டுள்ளபடி, இதன் தாத்பரியம் யாதெனில் உங்களுள் சிலர் சிலரை கண்ணியக் குறைவாகவும், சாதாரணமாகவும் அழைப்பதை போல நபி பெருமானார், றஸுலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைக்காமல் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், யா றஸுலல்லாஹ்! யா ஹபீபல்லாஹ்! யா நபிய்யல்லாஹ்! போன்ற அழகிய, கண்ணியமான வார்த்தைகளைக் கொண்டு அழைக்க வேண்டுமென்பதே.

சில சந்தர்ப்பங்களில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அழைத்தல் இபாதத்திற்கு அவசியமானதாயும் ஆகி விடுகிறது.

(அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு)
*“அருமை நபியவர்களே! உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக” என்று அவர்களை அழைத்தல் அத்தஹிய்யாத்தில் அவசியமான காரியமாகும். அத்தஹிய்யாத்து இவ்வழைப்பின்றி பூர்த்தியாகாது. அத்தஹிய்யாத்தின்றி தொழுகை பூர்த்தியாகாது. இதை கவனித்து நோட்டமிட வேண்டும்.*

ஆகவே, முஸ்லிம்கள் கூப்பிட்டழைக்கும் விளிப்பு, அழைத்தல் சிலவேளை ஆகுமான காரியமாயும் சிலவேளை கட்டாயமான காரியமாயும் அமைந்துள்ளது என்பது மேற்சொன்ன ஆதாரங்களைக் கொண்டு நன்கு தெரியவருகிறது.

அல்லாஹ்வை அழைப்பதற்கு துஆ என்றும், மற்றவர்களை அழைப்பதற்கு ‘நிதா’ என்றும் சொல்லப்படும். இந்தத் தாரதம்மியத்தை அறியாதபடி ‘யாறஸுலல்லாஹ் - யா வலிய்யல்லாஹ் யா முஹிய்யத்தீன் - யா ஷைகு’ போன்ற பதங்களால் அழைத்தல் ஆகாது என்பதாகத் தெரியாத தன்மை கொண்டு வஹ்ஹாபிகளாக சிலர் கூறுகின்றனர்” என்பதாக ஹஜ்ரத் ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாஹிபு வேலூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பஸ்லுல் கித்தாபில் இமாம்களைக் கொண்டு அறிவிக்கின்றார்கள்.

மேலும் இத்தகைய விபரத்தை அல்லாமா முப்தீ மஹ்மூது ஸாஹிப் மதறாஸீ அவர்களும் பத்ஹுல் ஹக்கில் கூறியுள்ளார்கள். எனவே வஸீலாவை முன்னிட்டு அன்பியா, அவுலியா, காமிலீன்களை அழைத்துக் கூப்பிடுதல் ஒருக்காலும் இறை வணக்கமாய் மாறிவிடாது. ஷிருக்கும் அல்ல.

அஸ்ஹாபுஸ்-ஸுஃப்பாவிலுள்ள றபீஆ இபுனு கபுல் அன்ஸாரீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள் றிவாயத்துச் செய்கின்றார்கள்:-

“நபி பெருமானார் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்களோடு நானிருந்தேன். வுலுச் செய்வதற்குத் தண்ணீர், மிஸ்வாக்கு, சீப்பு வகையறாக்களை எடுத்துச் சென்று கொடுத்தேன். அச்சமயத்தில் நாயகம் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள் என்னை நோக்கி இம்மை, மறுமைக்குரிய நலவான காரியங்களில் உனக்குத் தேவையானவற்றை என்னிடத்தில்கேள்” என்று சொன்னார்கள்.

“தங்களுடன் சொர்க்கத்திலாகி இருப்பதை ஆசிக்கின்றேன்” என்று கூறினேன்.

“இத்தோடு இன்னும் வேறென்ன தேவை?” என்று மீண்டும் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள் வினவினார்கள்.

“இதேயல்லாது வேறொன்றும் தேவையில்லை” என்று உரைத்தேன்.

மேலே குறிப்பிட்ட ஹதீது ஸஹீஹுஂ முஸ்லிம் - இபுனு மாஜா மு.ஃ.ஜம் கபீர் தப்ரானீ - அஷி.ஃ. அத்துல்லமஆத் ஆகிய கிரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஹதீதில், நாயகம் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள், உனக்குத் தேவையானதை என்னிடம் கேள். ஸுஂவால் செய் என்று கூறியது இம்மை, மறுமைப் பேறுகளை அளிப்பதைக் குறிக்கின்றது என்பதாக ஹதீதின் விரிவுரையாளர்கள் வரைகின்றார்கள்.

ஷைகு அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள் இந்த ஹதீதின் ஷரஹில், “இம்மையும் மறுமையும் உங்களால் கிடைத்த சன்மானத்தில் நின்றுமே உண்டானவை, மேலும், லவ்ஹுஂகலம் உடைய கல்வி உங்களின் ஞானங்களிலிருந்தே உண்டானவை.

فَإِنَّ مِنْ جُوْدِكَ الدُّنْيَا وَضَرَّتَهَا
وَمِنْ عُلُوْمِكَ عِلْمَ اللَّوْحِ وَالْقَلَمِ

(பஇன்ன மின் ஜுஂதிகத் துன்யா வளர்ரத்தஹா-வமின் உலூமிக்க இல்மல் லவ்ஹி வல்கலமி) என்று கஸீதத்துல் புர்தாவில் இமாம் பூஸரி ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள் சொல்லியிருப்பதையும் குறிப்பிட்டுள்ளார்கள்.

"ஆண்டவனுடைய உத்திரவு கொண்டு ஸர்வரே ஆலம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இம்மை, மறுமையின் அருட்கொடை நி.:.மத்துகளை அளிக்கின்றார்கள். அவ்வாறாக அளிக்க வல்லமையுடையவர்கள்" என்பதே ஸுன்னத் வல்ஜமாஅத்தாரின் விசுவாசமாகும்.

أَنَا قَاسِمٌ وَاللّٰهُ يُعْطِي

(அன காஸிமுன் வல்லாஹு யு.:.த்தீ)

***"கொடுக்கின்றவன் அல்லாஹ், பங்கு வைப்பவன் நான்"*** என்று ஸஹீஹ் புகாரியில் காணப்படும் ஹதீதை, இமாம் இபுனு ஹஜர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ஷரஹு ஹம்ஸிய்யா, 192-வது பக்கத்தில் எடுத்துரைத்து "ஆண்டவன் தனக்குச் சொந்தமாயுள்ள உணவளித்தல் உள்பட அறிவு, ஞானம், வழிப்பாடு முதலிய எல்லாவிதமான பொக்கிஷங்களின் சாவிகளையும் தனக்குப் பிரதிநிதியும், (ஹபீபு) தோழருமான நபி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வசம் கொடுத்திருக்கின்றான். அவர்கள் பங்கு வைத்துக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மூலமாகவே சகலமும் அளிக்கப் படுகின்றன" என்பதாக கூறுகின்றார்கள்.

மேலும், புதூஹத்தல் அஹ்மதிய்யா-பீ-மினஹில் முஹம்மதிய்யா, 89-வது பக்கத்தில், அல்லாமா ஷைகு சுலைமான் ஜமல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் இப்படியே கூறுகின்றார்கள்.

"அல்லாஹ் ஒருவனைத் தவிர்த்து வேறு யாரிடமும் எந்தவித உதவியும் தேடவே கூடாது" என்ற வாதத்திற்குச் சிலர் இய்யாக்க ந.:.புது-வஇய்யாக்க நஸ்த்தயீன்" என்ற (1:4) ஆயத்தை மேற்கோளாகக் காட்டுவதுடன், நபியோ, றஸுலோ, குத்போ, வலியோ யாருக்காயினும் லாபநஷ்டத்தை உண்டாக்கும் சக்தியுண்டென்று நம்புவதும், அவர்களிடம் உதவி தேடுவதும் மாபெரும் குற்றம் என்பதாய் விரிவுரையும் கூறுகின்றனர். இது அவர்களது அறியாமையையே காட்டுகின்றது.

ஏனெனில், ஸுரத்துல் பாத்திஹா, அம்ரு-நஹீ, ஏவல்-விலக்கல், மஸாயில்களை விட்டும் நீங்கியது, அதில் கட்டுப்பட்டதல்ல" என்று தப்ஸீர் அஹ்மதிய்யா கூறுகின்றது.

"ஏவல், விலக்கல் (அம்ரு, நஹீ) உடைய ஆயத்துக்கள் குர்ஆனில் ஐந்நூறும், ஹதீதில் மூவாயிரமும் காணப்படுகின்றன. இய்யாக்க ந.:.புது-வ-இய்யாக்க நஸ்த்தயீன்" என்ற (1:4) ஆயத்து அதில் சேர்ந்ததல்ல" என்று வஸீலா ஜலீலா, 46-வது பக்கத்தில் சொல்லப்படுகிறது.

மேலும் அதே பக்கத்திலேயே, உன்னை ஒருவனென்னு உறுதிகொண்டு உனது வணக்கத்திற்கு உன்னிடமே உதவி தேடுகின்றோம் என்பதே 1:4 ஆயத்திற்குப் பொருளாகும். என்பதாக ஸெய்யிதுனா இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு இக்ரிமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான விளக்க விபரத்தை ஸிரர்ஜுல் ஹிதாயா 77-வது பக்கத்திலும், ஸாயிக்கத்துல் மவுத்துவஜனுல் ஹயாத்திலும், தப்ஸீர் மதாரிக்கிலும் காண்க.

ஆகவே, ஏவல் விலக்கலில் சேராத ஒன்றைச் செய்தல் ஆகுமென விளங்கக் கிடக்கின்றது. இந்த ஆயத்து ஏவல், விலக்கலுடையது அல்லவாகையால், அன்பியா அவுலியாக்கள் பால் உதவியொத்தாசைத் தேடக் கூடாதென்பதற்கு ஆதாரமாகாது, உதவி தேடக் கூடாதென்றிருக்குமெயானால் (வஸ்த்தயீனு பிஸ்ஸபுரி வஸ்ஸலாத்தி) - பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்'' என்ற வேத வாக்கும், (வப்த்தகூ இலைஹில் வஸீலத்த) ''அவனளவில் வஸீலாவைத் தேடிக்கொள்ளுங்கள்'' என்ற (5:35) வேதவாக்கும் வந்திருக்காது. (உத்லுபல் ஹவாயிஜ இலாதவிர் ரஹ்மத்திமின் உம்மத்தீ) என்னுடைய றஹ்மத்து உடைய கூட்டத்தார் (அவுலியாக்) களிடத்தில் உங்களுடைய தேவைகளைத் தேடிப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்ற ஹதீதும்.

(இதா தஹய்யர்த்தும் பில் உமூரி பஸ்த்தயீனூ மின் அஹ்லில் குபூர்) ''கருமங்களில் நீங்கள் திகைப்படைந்து விடுவீர்களேயானால் கபுருகளை உடையவர்களை (அவுலியாக்களை)க் கொண்டு உதவி தேடுங்கள்'' என்ற ஹதீதும்.

''எவருடைய கால்நடைப் பிராணியாவது, காணாமற்போய் விட்டால், அல்லாஹ்வின் அடியார்களே, அல்லாஹ் உங்களுக்கு நல்லருள் பாலிப்பானாக, தாங்கள் எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூப்பிட்டுக் கேளுங்கள்'' என்ற ஹதீதும்.

''எவருக்காவது உதவி தேவைப்படுமானால் அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! அல்லாஹ்வுடைய அடியார்களே! எனக்கு உதவி புரியுங்கள்! என்று அவர் கூறட்டும்'' என்ற ஹதீதும்,

மற்றும் இவை போன்ற ஹதீதுகளும் வந்திருக்கத் தேவையில்லை.

முஹக்கிகுல் ஹனபிய்யி, அஷ்-ஷைகு அப்துல்கனி நாபல்ஸீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள், திமஷ்கு நகரில் ஸலீமா என்ற இடத்தில் குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியான விளக்கம் செய்துக் கொண்டிருக்கையில், (யா அய்யுஹல்லதீன ஆமனூ இஸ்த்தயீனூ பிஸ்ஸப்ரி வஸ்ஸலாத்தி) 'ஓ, ஈமான் கொண்டவர்களே! பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்!'' என்ற (25:153) ஆயத்தைச் சுட்டிக்காட்டி, ''ஆண்டவனைத் தவிர்த்துப் பிறரிடம், உதவி தேடக்கூடாது என்று சொல்கிறவனுக்கு இது ரத்தாகும், அப்படிச் சொல்கிறவன் காபிராகி விட்டான், ஏனெனில் குர்ஆனுடைய நஸ்ஸுக்கு (தெளிவாகவும், வெளிப்படையாகவும் வந்துள்ள ஏவலுக்கு) மாற்றமாக இருக்கும் காரணத்தினால், தேவைகள் நிறைவேற அவுலியாக்களைக் கொண்டு உதவி தேடுவதே சிறந்த வழியாகும்'' என்று கூறினார்கள்.

விபரத்தை அல்லாமா ஷைகு யூஸுபுன் னபஹானீ, மிஸ்ரீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள், ஷவாஹிதுல் ஹக்கு 251-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

''ஜீவிய காலத்தில் உதவி தேடுவதற்கு எவர்கள் தகுதியானவர்களோ அவர்களிடம் வபாத்திற்குப் பிறகும் உதவி தேடலாம்'' என்பதாக இமாம், ஹுஜ்ஜத்துல் இஸ்லாம், கஸ்ஸாலீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களைக் கொண்டு அல்லாமா ஷைகு அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள் 'அஷிஅத்துல் லமஆத்-தர்ஜுமா மிஷ்காத்' முதல் பாகத்தில் வரைந்துள்ளார்கள்.

''கஷ்ட காலத்தில் அவுலியாக்களிடத்தில் இரட்சிக்கும்படி உதவி தேடுதல் கூடும். மவுத்துக்குப் பிறகும் அவர்கள் இரட்சிப்புத் தரக்கூடியவர்கள். ஏனெனில், அன்பியாக்களுடைய முஃஜிஸாத்தும் அவுலியாக்களுடைய கறாமாத்தும் மவுத்துக்குப் பிறகும் விடுபட்டுப் போக மாட்டா. ஆவர்கள் ஹயாத்துள்ளவர்கள். பர்ஜகுடைய ஆலத்தில் தொழவும் செய்கின்றார்கள். ஹஜ்ஜுஂம் செய்கின்றார்கள். இவ்வாறு ஆதாரமான ஹதீதுகள் வந்திருக்கின்றன''.

மேற் சொன்ன விபரம், அல்புதூஹாத்துல் அஹ்மதிய்யா 90-வது பக்கத்தில், அல்லாமா ஷைகு ஸுலைமானுல் ஜமல் ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களும். ஷவாஹிதுல் ஹக்கு, 69-வது பக்கத்தில் அல்லாமா ஷைகு யூஸுபுன் னபஹானீ மிஸ்ரீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களும் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

''அவுலியாக்களிடத்தில் உதவிதேடும் விஷய சம்பந்தமாய் 'கஷ்பு' (கல்புக்கண்) உடைய மஷாயிகுகளைக் கொண்டுள்ள ரிவாயத்துக்கள் அநேகமுண்டு. இது பற்றி கிதாபுகளிலும், ரிஸாலாக்களிலும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

வாதத்திற்கு மருந்துண்டு. பிடிவாதத்திற்கு மருந்தில்லையாதலால் பிடிவாதமாக மறுப்பவர்களுக்கு அவை பிரயோஜனங் கொடுக்கமாட்டா. ஆகையால், அது பற்றி இங்கு எழுத வேண்டிய அவசியமில்லை. இத்தகைய பிடிவாதத் தன்மையை விட்டும் ஆண்டவன் நம்மைக் காப்பாற்றிக் கொள்வானாக!'' என்தாக ஷைகுல் ஹிந்து, அப்துல் ஹக் முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'அஷிஅத்துல் லமஆத் தர்ஜுமா மிஷ்காத்' பாகம் 3, பக்கம் 375-ல் கூறுகின்றார்கள்.

மக்ரீபு தேசத்தில் வலுப்பமான பகீஹாயும், பிரபல்யமான ஆரிபாயுமிருந்த ஸெய்யிது அஹ்மது இபுனு ஐர்ரூக்குஷ் ஷாதுலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்:-

''அவுலியாக்கள் ஹயாத்தில் செய்யும் உதவி வலுப்பானதா? மௌத்திற்கப்பால் செய்யும் உதவி வலுப்பமானதா?'' என்று ஷைகு அபுல் அப்பாஸ் ஹள்ரமீ அவர்கள் என்னிடம் வினவியதற்கு, மௌத்தான பின்பு அவர்கள் புரியும் உதவிதான் மிகவும் வலுப்பமானது'' என்று கூறினேன். எனது இந்த விடையை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள் என்பதே.

விபரம் 'அஷிஅத்துல் லமஆத் தர்ஜுமா மிஷ்காத்' 1-வது பாகம் 633-வது பக்கத்தில் காணப்படுகின்றது.

''மௌத்திற்குப் பிறகு அவுலியாக்களிடத்தில் உதவி தேடலாமென்பது மிகுதமான மஷாயிகுமார்களின் தீர்மானமாகும்.

ஆரிபீன்களில், உலமாக்களில் மிகுதமாக பேர்களுடைய அகீதா (நிர்ணயம்) இதுவேதான்'' என்பதாக இமாம் ஷைகு அபூஸயீது ஸலமீ ஹனபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹ் பர்ஜக்கில் கூறுகின்றார்கள்.

மேலும், அவர்கள் அதில் மௌத்தை இரு வகையாக விபரிக்கின்றார்கள்.

''மௌத்துக்குப் பிறது ரூஹு நித்தியமானது. அழிவற்றது. ஆனால் இந்த வெளிரங்கமான திரேகம் அழிந்துவிடும். இவர்கள் சாமான்யர்களான அவாம்கள். இவர்கள் பிறருக்கு உதவி செய்ய சக்தி பெற்றவர்கள் இது ஒருவகை. மௌத்திற்குப் பிறகு ரூஹும் அழியாது, உடலும் அழியாது. உள்ரங்கமான உயிருடலுடன் ஹயாத்துடமே என்றுமிருப்பர். இவர்கள் அன்பியா, அவுலியாக்கள், உயிரோடு இருப்பவர்களுக்கு இவர்கள் உதவி செய்ய சக்தி பெற்றவர்கள். இது மற்றொரு வகை.

ஸஹீஹான ஹதீதுகளில் இதற்குப் பலமான ஆதாரங்களுண்டு. இதை எவரும் மறுக்க சக்தி பெற மாட்டார்கள்'' என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

வஸீலா - சிபாரிசு - இஸ்த்திம்தாது - இஸ்த்திகாதா -இஸ்த்திஷ்பா - இஸ்த்தி ஆனா முதலிய பதங்கள் பலவிதமாக இருப்பினும் இவை கருத்தில் ஒன்றே.

ஒத்தாசை தேடல், சிபாரிசு தேடல், உதவி தேடல், இரட்சிப்புத் தேடல், நோய் நிவாரணம் பெறத் தேடல், உபகாரம் தேடல் முதலியன முறையே அவற்றின் பதப்பொருளாகும்.

## வஸீலா

வஸீலா மூன்று வகைப்படும். உதாரணத்திற்காக அவ்வகைகளை அடியில் காண்க.

“ஆண்டவா! ஸெய்யிது அப்துல் காதிறு ஜீலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பொருட்டால் என் பிணியை நீயே நீக்குவாயாக” என்று எல்லாம் வல்ல இறைவனிடம் இறைஞ்சி வேண்டுவது ஒரு வகை.

“யாமுஹிய்யத்தீன்! முஹிய்யத்தீன் ஆண்டகையவர்களே! என் பிணி தீர நாயனிடம் பிறார்த்தனை புரிவீர்களாக!” என்று விண்ணப்பித்துக் கொள்வது இன்னொரு வகை.

“யா முஹிய்யத்தீன்! யா கௌதுல் அ:ளம்! (கௌதுல் அ:ளம், முஹிய்யத்தீன் ஆண்டகையவர்களே!) தாங்கள் அல்லாஹ்வின் பிரதிநிதியாகவும், அவனில் நின்றும் தத்துவத்தைப் பெற்றவர்களாகவும் இருக்கின்றீர்கள். ஆனபடியால், தாங்களன்றி எனக்கு வேறு கதியில்லை. என் பிணியைத் தாங்களே நிவர்த்திக்க வேண்டும்” என்று நேரடியாக வேண்டுதல் செய்து மற்றொரு வகை.

இவ்வாறாக மூன்று விதமாகக் கேட்பதுவும் ஆகும். இந்த மூன்றும் ஒன்றுதான்” என்பதாக இமாம், முஜ்த்தஹிது, தகிய்யுத்தீன் ஸுபுக்கீ, ஷாபிஇய்யி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷிபாஉஸ்ஸிகாம். 134-வது பக்கத்தில் வரைந்துள்ளார்கள்.

‘அன்பினா, அவுலியாக்கள் ஆண்டவனது அஸ்மா, ஸிபாத்துக்கள் வெளியாகும் மளுஹர்கள். ஆண்டவன் அளித்திருக்கக்கூடிய தத்துவத்தை வெளியாக்கித்தர வல்லவர்கள் என்ற எண்ணத்துடன் நேரடியாக அன்னவர்கள் பால் நமது தேவைகளைக் கேட்கலாம். ஆண்டவனும் அன்னவர்களுக்கு அத்தகைய சக்தியைக் கொடுத்துள்ளான்” என்பதாக, மதறாஸ் முப்த்தி,

கவர்ன்மெண்டு காஜீ, அல்ஹாஜ் முஹம்மது ஹபீபுல்லாஹ் ஸாஹிபு அவர்களும், அல்ஹாஜ் முஹம்மது தமீம் ஸாஹிபு ஆலிம் முப்தி அவர்களும், காஜி உபைதுல்லா ஸாஹிபு அவர்களும் மற்றும் பல உலமாக்களும், முப்த்திகளும் பத்வா கொடுத்துள்ளார்கள்.

இங்ஙனமிருக்க, "ஆண்டவனுக்குப் பயப்படுவதையும், அவனுக்கு வழிபடுவதையும் பற்றிப் பிடித்துக்கொள்வீர்!

அல்லாஹ்வைத் தவிர்த்து யாரிடமும் பயமோ, ஆதரவோ கொள்ளாதீர்! சர்வதேவைகளையும் அல்லாஹ்வின்பால் ஒப்படைத்து, அவனிடமே எல்லாத் தேவைகளையும் கேட்பீராக! அல்லாஹ் அல்லாதவற்றின் மீது ஆதரவு வைக்காமல் அவனிடமே நம்பிக்கை கொள்வீராக!" என்பதாய் ஸெய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது மவுத்தின் போது தங்கள் மகனார் ஸெய்யிது அப்துல் வஹ்ஹாபு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுக்குச் செய்த வஸிய்யத்தை எடுத்துக் காட்டி, அன்பியா அவுலியாக்கள்பால் உதவி தேடுதல் கூடாதெனக் கூறுகின்றனர்.

இதற்கு 'இஸ்த்திஆனத்-ஹகீகீ' என்று பெயர். குர்ஆன், ஹதீது கொண்டு, 'இஸ்த்திஆனத்-மஜாஸீ' ஆகுமான காரியமே என்பதை ஹஜ்ரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அறிந்தே இருக்கின்றார்கள். மக்கள் அவர்கள் பால் உதவி தேடியதையும், தேடுவதையும், மவுத்திற்குப் பிறகு தேடப்போவதையும் அவர்கள் தெரிந்தே இருக்கிறார்கள், ஆகையால் இதை அவர்கள் விலக்கவுமில்லை. எத்தகைய தேவைகளை மக்கள் அவர்களிடம் தேடினார்கள். அவற்றை அவர்கள் எவ்வாறு நிறைவேற்றிக் கொடுத்தார்கள் எனும் விபரங்கள் அவர்களது சரித்திரங்களில் கூறப்பெற்றிருக்கின்றன.

அவர்கள் இரட்சிப்பதில் வலுப்பமானவர்கள். ஆண்டவன் அவர்களுக்கு இரட்சித்து உதவிசெய்யக் கூடிய தத்துவத்தைக் கொடுத்துள்ளான்.

ஷெய்குனா குத்புல் அக்த்தாபு, கௌதுஸ் ஸமதானீ, மஹ்பூபு ஸுபுஹானீ, முஹிய்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறி இருப்பதையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்து உண்மையை உணருங்கள்!

**(இஸ்மீ-க-இஸ்மில் அஃளம்)**

**"(நாட்ட தேட்டங்களை நிறைவேற்றி வைப்பதில்) எனது திருநாமம், வலுப்பமான ஆண்டவனது (இஸ்முல் அஃளம்) தெய்வீகத் திருநாமத்தைப் போன்றுள்ளது"** என்பது அவர்களுடைய பொன்மொழி. இவ்விபரம், ஆதாரமான பிரபல்யமிக்க 'மனாகிபு' கிரந்தங்களிலெல்லாம் காணக்கிடக்கின்றது.

ஹைதராபாத்தின் முற்கால முப்த்தி மௌலானா மௌலவி முஹம்மது ஸயீதுகான் ஸாஹிபு அவர்களும் இது சம்பந்தமாய கொடுத்துள்ள பத்வாவிலும் இதுபற்றி விளக்கப்படுத்தியுள்ளார்கள்.

மேலும் இமாம், அப்துல்லாஹ் யாபியீ யமனீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்களது 'குலாஸத்துல் மபாகிர்' எனும் கிதாபில் ஸைய்யிதுனா, ஸுஅல்த்தானுல் அவுலியா, ஸெய்யிது முஹ்யித்தீன் ஷைகு அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் சொல்ல நான் கேட்டேனென்று ஷெய்கு உமருல் பஸ்ஸார் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்களைத் தொட்டும் ரிவாயத்து அறிவிக்கப்பட்டுள்ளது. என்னவெனில்:-

"எவனொருவன், ஒரு முஸீபத்தில் சங்கடத்தில் அகப்பட்டுக் கிடக்கும் போது அவன் என்னைக் கொண்டு ரட்சிப்புத் தேடுவானாயின் அவனை விட்டும் அந்த முஸீபத்தை, சங்கடத்தை நீக்கப்படும்.

மேலும், யாராவது வருத்தத்தில் அகப்பட நேர்ந்தால் என்னைக் கொண்டு ரட்சிப்புத் தேடட்டும். அவனை விட்டும் அந்த வருத்தத்தை நீக்கப்படும்.

இன்னும் யாராவது ஒரு (ஹாஜத்து) நாட்டத்தை நாடி அல்லாஹ்தஆலா அளவில் என்னைக் கொண்டு வஸீலா சிபாரிசு தேவானாகில் அந்த ஹாஜத்தை அவனுக்கு நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

மேலும் எவரொருவர் இரண்டு ரக்அத்து, ஒவ்வொரு ரக்அத்திலும் ஸுஅரத்து பாத்திஹாவுக்குப் பிறகு ஸுஅரத்து இக்லாஸ், (குல்ஹுஅவல்லாஹுஅ அஹது ஸுஅராவை) 11 விடுத்தம் ஓதி தொழுது ஸலாம் கொடுத்த பிறகு நாயகம் ஸல்லல்லாஹுஅ அலைஹி வஸல்லம் அவர்களை நினைவுகூர்ந்து அவர்கள் பேரில் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லியதற்கப்பால், என்னுடைய நாமத்தை உச்சரித்த வண்ணம், தனது நாட்டத்தையும் நினைவு கொண்டவனாக, இராக்கு தேசத்தளவில் 11 எட்டு எடுத்து வைத்தானாகில் அந்த ஹாஜத்தை நிறைவேற்றிக் கொடுக்கப்படும்" என்பதே.

இதற்கொப்ப ஹஜ்ரத் ஷெய்கு அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவி ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் 'ஜுஅப்ததுல் ஆதார்' என்ற நூலிலும், இமாம் முல்லா காரீ மக்கீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள், "நுஸ்ஹத்துல் காத்திருல் பாத்திர்" என்ற நூலிலும் எடுத்துரைத்துள்ளார்கள்.

இன்னமும், குத்புரப்பானீ, கௌதுல் அ∴ளம் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் தங்களது மக்களை நோக்கிக் கூறியதைப் பாருங்கள்:-

அவர்கள், தங்கள் மக்களை நோக்கி, என்னை விட்டும் செல்லுங்கள். வெளிரங்கத்தில் நான் உங்களுடன் இருக்கின்றேன. உள்ரங்கத்தில்

மற்றொருவனுடன் இருக்கின்றேன. எனக்கும், உங்களுக்கும் இதர சிருஷ்டிகளுக்கும் இடையே வானத்திற்கும் பூமிக்குமுள்ள தூர வித்தியாசமிருக்கிறது. என்னை இதரர்களை போல் ஊகிக்க வேண்டாம்.

நான் உங்கள் யுக்திக்கு அப்பாற்பட்டவன். என்னிலையை நீங்கள் யாரும் அறியமாட்டீர்கள். நான் உங்களைவிட உயர்ந்த உச்சநிலையிலிருக்கிறேன்'' என்று கூறியுள்ளார்கள்.

மேலும், தங்கள் குமாரர் ஸெய்யிது அப்துல் ஜப்பார் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கூப்பிட்டு, "நீர் உறங்குகின்றீரா, விழித்திருக்கின்றீரா? என்னில் நீர் பனாவாகிவிடும். விழிப்படைவீர்'' என்று உரைத்துள்ளார்கள்.

மேலும் அவர்கள், "ஆண்டவனால் எனக்கருளப்பெற்ற அகக் கண்ணைக் கொண்டு நான் இவ்வுலகைக் கையிலுள்ள ஒரு கடுகைப் போல் காண்கின்றேன்'' என்றும் கூறியுள்ளார்கள்.

அத்தகைய மஹ்பூபு ஸுபுஹானி, ம.்.ஷுக்குறஹ்மானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் உரைத்துள்ள பைத்து (செய்யுள்) களைப் பாருங்கள்.

فَمَنْ كَانَ يَهْوَانَا يَجِيْ لِمَحَلِّنَا
وَيَدْخُلْ حِمَى السَّادَاتِ يَلْقَى الْغَنِيْمَةِ

எவரொருவர் நம்மை உகந்து நமது இடத்திற்கு வருகிறாரோ அவர் நாயகத்தனம் பெற்ற நாதாக்களுடைய கோட்டைக்குள் புகுந்து நம்முடைய கார்மானத்திலாகி மிகுதியான சம்பத்தைப் பெற்றுக்கொள்வார்.''

أَنَا لِمُرِيْدِيْ حَافِظٌ مَا يَخَافُهُ
وَأُنْجِيْهِ مِنْ شَرِّ الْأُمُوْرِ وَبَلْوَةِ

مُرِيْدِيْ لَكَ الْبُشْرٰى تَكُوْنُ عَلَى الْوَفَا
إِذَا كُنْتَ فِيْ هَمٍّ أُغِثْكَ بِهِمَّتِيْ
مُرِيْدِيْ تَمَسَّكْ بِيْ وَكُنْ بِيْ وَاثِقًا
لِأَحْمِيْكَ فِي الدُّنْيَا وَيَوْمَ الْقِيٰمَةِ
أَنَا لِمُرِيْدِيْ حَافِظٌ مَا يَخَافُهُ
وَأَحْرُسُهُ مِنْ كُلِّ شَرٍّ وَفِتْنَةِ
مُرِيْدِيْ إِذَا كَانَ شَرْقًا وَمَغْرِبًا
أُغِثْهُ إِذَا مَا صَارَ فِيْ أَيِّ بَلْدَةِ

“என்னுடைய முரீதுக்கு எவ்விதமாக பயங்கரமும் வந்தணுகாமல், நான் அவனை அவனுடைய கருமங்களில் எந்தவிதமான தீங்குகள். பலாய் முஸீபத்துகள் வராமல் பாதுகாத்துக் கொள்வேன்”.

“என்னுடைய முரீதே! உனக்கு நல்மாராயம் உண்டாவதாக! உன்னுடைய தேவைகள் அனைத்தையும் உனக்கு நிறைவேற்றித்தருவதன் பேரில் உனக்குச் சோபனம்! யாதொரு கருமத்தைப் பற்றியாவது நீ வியாகூலமடைந்து துக்கித்தவனாக இருப்பாயானால், அவ்வேளையில் நான் எனது ஹிம்மத் எனும் துணிச்சல் கொண்டு உனக்கு உதவி செய்து நான் உன்னை ரட்சிப்பேன்”.

“என்னுடைய முரீதே! என்னைப் பற்றிப் பிடித்துக் கொள்! என்னை விசுவாசித்தவனாக இருந்துகொள்! அப்படியானால் நான் உன்னை இவ்வுலகிலும் மறுவுலகிலும் காப்பாற்றுவேன்”.

“என்னுடைய முரீது அஞ்சி நடுங்கும் வேளையில் அவனது அச்சத்தை நீக்கி வைக்கும் பாதுகாவலான நான் இருக்கிறேன். எல்லா விதமான பித்னாச் சோதனைகளிலிருந்தும், பொல்லாங்குகளிலிருந்தும் நான் அவனைப் பேணி பாதுகாத்துக் கொள்வேன்”.

“என்னுடைய முரீது கிழக்கிலோ, மேற்கிலோ உள்ள எந்த ஊரிலிருப்பினும் அவனது அழைப்பிற்கு நான் விரைந்து சென்று உடனே அவனை இரட்சிப்பேன்”.

تَوَسَّلْ بِنَا فِيْ كُلِّ هَوْلٍ وَشِدَّةٍ
أُغِثْكَ فِي الْأَشْيَاءِ طُرًّا بِهِمَّتِيْ

“எத்தகைய கஷ்டத்திலும், பயத்திலும் நீ என்னிடம் உதவி தேடு. எல்லாக் காரியங்களிலும் நான் உனக்கு உதவி புரிந்து இரட்சிக்க எனது ஹிம்மத்துடன் ஆஜராவேன்”.

وَشَاءُوْسُ مُلْكِيْ سَارَ شَرْقًا وَمَغْرِبًا
وَصِيْتُ لِأَهْلِ الْكَرْبِ غَوْثًا وَرَحْمَةً

யாருக்காவது யாதொரு வருத்தம் வியாகூலம் உண்டாயிருக்குமாயின், அவர்களை விட்டும் அந்தத் துன்பம் துயர் வியாகூலங்களை நான் நிவர்த்தி செய்து கொடுத்து அவர்களுக்கு இரட்சிப்புக் கொடுக்கும் உதவியாகவும், கிருபையாகவும் ஆகி இருக்கிறேன். ஆதலால், எனது செங்கோலைக் குறித்துக் கட்டியம் கூறுதலெனும் சங்க நாதம் கிழக்கு, மேற்கு எப்பகுதிகளிலும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது”.

وَمُرِيْدِيْ إِذَا دَعَانِيْ بِشَرْقٍ
أَوْ بِغَرْبٍ أَوْ نَازِلًا بَحْرَ طَامِيْ
فَأُغِثْهُ أَوْ طَارَ فَوْقَ هَوَاءٍ
أَنَا سَيْفُ الْقَضَا لِكُلِّ خِصَامِ

“என்னுடைய முரீது உதயகிரியிலோ அல்லது அஸ்தகிரியிலோ அல்லது ஆழிய சமுத்திரத்தின் அடிவாரத்திலிறங்கி நின்றோ, ஆகாயத்தின் உச்சியில் நின்றோ எந்நிலையில் என்னிடம் உதவி அபயம் தேடி அழைத்தாலும் உடனே நான் அவனைக் காத்து இரட்சிப்பேன். என்னை

எதிர்த்து வழக்காடும் அத்தனை பேர்களையும் சம்கரித்துத் தீர்ப்புச் செய்யும் கூரிய வாளாக நானிருக்கிறேன்''.

وَمَا قُلْتُ هٰذَا الْقَوْلَ فَخْرًا وَاِنَّمَا
اَتَى الْاِذْنُ حَتّٰى يَعْرِفُوْنَ حَقِيْقَتِيْ
وَمَا قُلْتُ حَتّٰى قِيْلَ لِيْ قُلْ وَلَا تَخَفْ
فَاَنْتَ وَلِيِّيْ فِيْ مَقَامِ الْوِلَايَةِ

''இப்போது சொன்ன சொற்களெல்லாம் பெருமையை நாடி நான் சொல்லவில்லை. ஆண்டவனிடமிருந்து அவ்வாறு சொல்லும்படி வந்த உத்திரவின் பிரகாரம்தான் நான் சொன்னேன். ஏனெனில், ஜனங்கள் எனது ஹகீக்கத்தை அறிவதற்காகவே''.

''அவ்வாறான வார்த்தைகள் எதையும், இறை சமுகத்திலிருந்து, நீர் சொல்லும் - அஞ்ச வேண்டாம் - விலாயத்தினுடைய உயர்ந்த தனிப் பெரும் அந்தஸ்த்தில் நீர் நம்முடைய வலியாக இருக்கறீர் என்ற உத்திரவு வந்தேயல்லாது நான் சொல்லவில்லை''.

ஹஜ்ரத் கௌதுல் அ.்.ளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இவ்வாறு வாக்குறுதி செய்திருக்கின்றார்கள். சொன்னதற் கொப்ப செயலிலும் செய்து காட்டியுள்ளார்கள். செய்து கொண்டே இருக்கின்றார்கள். மேன்மை மிக்க அவர்களது இந்தச் சத்தியவாக்குகள் 'புயூளாத்துர் ரப்பானிய்யா' போன்ற நூற்களில் காணப்படுகின்றன''.

தனிப் பெரும் தகுதி படைத்த அந்த அண்ணல் முஹிய்யித்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை வியந்து புகழ்ந்து பாராட்டிப் புகழ்மாலையாக,

''அண்ட கோடிகளுமோர் பந்தெனக் கைக்குள்
அடக்கி விளையாடவல்லீர்!
அகிலமோ ரேழினையும் ஆடுங்கறங்குபோல்
ஆட்டி விளையாட வல்லீர்!
மண்டலத் தண்டரை அழைத்தருகிருத்தியே
வைத்து விளையாட வல்லீா!
மண்ணகமும் விண்ணகமு மணுவைத் துளைத்ததின்
மாட்டி விளையாட வல்லீர்!
கண்டித்த கடுகில் எழுகடலைப் புகட்டிக்
கலக்கி விளையாட வல்லீர்!
கருதரிய சித்தெல்லாம் வல்லநீர் அடிமை என்

கண்முன் வருசித்தில்லையோ!
நண்டளந்திடு நாழியாவனோ தேவரீர்
நல்லடிக்காளாகியும்!
நற்குணங்குடி கொண்ட பாதுஷாவான குரு
நாதன் முஹிய்யித்தீனே!''

என்றும்,

''சொல்லான் முழக்கமிட்டோலமிடு வேதமுஞ்
சொன்னதுடனின்ன மின்னஞ்
சுருதி முதலாகம புராணகலை யோதிய
சுலொகங்களென் சொல்லுகேன்!
பல்லாயிரம் கோடியண்ட பகிரண்டமுன்
பாதபங்கயமல்லவோ!
பரிபூரணானந்தமே யுனது முடியெனப்
பகர்வதும் பொய்யாகுமோ!
வல்லானெனும் பெயர் உனக்குள தல்லாது
மற்றவர் தமக்குமுளதோ!
வானவர் தினந்தினம் வந்துன்பதம் பணியும்
மகிமை சொல வாயுமுண்டோ!
நல்லோர் தமக்கலாதெல்லார் தமக்குமனை
நலிலுதற் கெளிதாகுமோ!
நற்குணங்குடி கொண்ட பாதுஷாவான குரு
நாதன் முஹிய்யித்தீனே!''

என்றும், மெய்ஞ்ஞான மேதை, அல் ஆரிபுல்காமில், குணங்குடி மஸ்தான் எனும் ஹஜ்ரத், ஸுல்தான் அப்துல் காதிரு ஆலீம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் உரைத்துள்ளார்கள்.

ஆகவே, எவரெவர் திரிகரண சுத்தியுடன், அபாய வேளையில், அபயந் தேடி ''எந்த வேளையும் யாமுஹிய்யித்தீனென்று இயம்பினோர்க்குகந்து அந்நத்த வேளை வந்துதவி செய்வேனென்றருள் செய்தீர்! இந்த நல்வேளை இதுவெளை வேளையிது சமய் வந்தெனக் கருள் புரிவீர் முஹிய்யித்தீனாண்டகையே!'' என்று அழைத்துக் கூப்பிட்டு உதவி தேடுகின்றனரோ அன்னவர்கள் கைகொடுத்துக் காப்பாற்றப்படுவார்கள் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

எல்லாக் குத்புமார்களுக்கும் சக்கரவர்த்தியான ஹஜ்ரத் குத்புல் அக்த்தாபு, கௌதுல் அஃளம், முஹிய்யித்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நிலைபற்றி இதுகாறும் பேசி வந்தோம். அவர்களது ஏவலாளல்களான, தொண்டர்களான, ஏனைய குத்புமார்களும் கூட தங்களது அன்பர்களுக்கு உதவிபுரியும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள்.

ஸஹீஹுல் புகாரிக்கு ஷரஹ் எழுதியிருக்கும் இமாம் ஷஹாபுத்தீன் குஸ்த்தலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது உஸ்த்தாது

குரநாதராகிய, ஹஜ்ரத் இமாம், ஷைகு அஹ்மது அபுல் அப்பாஸில் முர்ஸி, ஜர்ரூக்கி, மக்ரிபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்:-

“என்னுடைய முரீதுக்குக் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு அவன் தட்டழிந்து திகைத்திருக்கும் சமயம் நான் அவனைப் பாதுகாத்து ஆறுதலளிப்பேன்.”

“இன்னும் இயலாமை, கஷ்டம், பயங்கரம் உண்டான போது என்னுடைய முரீது ‘யாஜர்ரூக்!’ என்று என் பெயரைச் சொல்லி அழைப்பானேயானால் நான் விரைந்து வந்து பாதுகாப்பேன்”.

இவ்விபரம், ஹஜ்ரத் ஷாஹ் அப்துல் அஸீஸ் முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ‘புஸ்த்தானுல்-முஹத்திதீனில்’ குறப்பிட்டுள்ளார்கள் என, ‘அன்வாருல் இந்திபாஹ்-பீ-ஹல்லி நிதாயி - யா றஸூலல்லாஹ்’ என்ற நூலின் 29-வது பக்கத்தில், ஹஜ்ரத் முப்தி ஷாஹ் அஹ்மதுரிளா கான் காதிரீ பரேலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வரைந்துள்ளார்கள்.

மகத்துவமிக்க நாதாக்களான அவுலியாக்கள் தவுஹீதின் காவலர்களான முத்தகீன்கள். வரஇய்யீன்கள் எல்லாம் ‘வஸீலாவை’ எவ்வண்ணம் பற்றிப் பிடித்துள்ளார்கள் என்பதைப் பின் வரும் விஷயத்தைப் படித்து உணர்ச்சி பெறுவோமாக!

يَا حَبِيبَ الْإِلٰهِ خُذْ بِيَدِيْ
مَا لِعَجْزِيْ سِوَاكَ مُسْتَنَدِيْ

எம்பெருமானார், ஷபீஉல் முத்னிபீன், றஹ்மத்துன் லில் ஆலமீன், நபிகள் திலகம், ஸெய்யிதுனா முஹம்மது, றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஹஜ்ரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அழைத்துக் கூப்பிட்டு

“ஆண்டவனுடைய தோழரான அருமை ஹபீபுல்லா அவர்களே! எனது கையைப் பிடித்துக் காப்பாற்றி அருள்வீராக, எனது இயலாத் தன்மைக்குத் தங்களையன்றி கார்மானம் எனக்கு யாரும் இல்லையே!” என்று கூறி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிம் வஸீலா தேடினார்கள்.

يَا أَكْرَمَ الْخَلْقِ مَا لِيْ مَنْ أَلُوذُ بِهِ
سِوَاكَ عِنْدَ حُلُوْلِ الْحَادِثِ الْعَمَمِ

“சிருஷ்டிகளிளெல்லாம் மகாப் பெரும் சிரேஷ்டமானவர்களே! பேராபத்து, இடர்கள் வந்துற்றபோது அபயந் தேடி ஒதுங்குவதற்கு தங்களையன்றி எனக்கு வேறு யாரும் இல்லையே!” என்று ஆஷிக்கே றஸுல், இமாம் முஹம்மது பூஸரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ‘கஸீதத்துல் புர்தாவில்’ உதவி தேடியுள்ளார்கள்.

فيا غوثي احلل عني اشكال عقدتي
وعن عنقي ارفع في الفرائض عهدتي
وكن لي لدى صدم النوائب عدتي
لقائك قصدي يا شفيعي وعمدتي
وكم لي بيوم الحشر عندك سول

“என்னை இரட்சித்துக் காப்பாற்றக்கூடிய நாயகமே! என்னுடைய நாவிலுண்டான முடிச்சின் வருத்தங்களை என்னை விட்டும் அவிழ்த்துவிடுங்கள்!

பறுலான அமல்களில் என்னுடைய கழுத்தில் ஏறிக் கொண்டிருக்கும் கடன்களை என் கழுத்தை விட்டும் நீக்குங்கள்!

மேலும் துன்பம் துயரங்கள் என்னை வந்து மோதும் போது அவற்றைத் தட்டி விலக்க தாங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்!

எனக்காக மன்றாடிக் கரை சேர்க்கும் கருணை வள்ளலே! நான் பற்றிப் பிடிக்கும் ஆதரவுப் பொருளே! தங்களைத் தரிசிப்பதுதான் என்னுடைய நாட்டமும், தேட்டமும். இது மட்டுமா? இறுதித் தீர்ப்பு நாளன்று, மஹ்ஷர் மைதானத்தில் தங்களிடம் நான் கேட்க வேண்டிய ஹாஜாத்துக்கள் எத்தனை எத்தனையோ உண்டு!” என்பதாக மாதிஹுர் ரஸுல், ஷைகு ஸதக்கத்துல்லாஹில் காதிரிய்யில் காஹிரிய்யி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இரட்சிப்பு வஸீலா தேடிய சான்று ‘வித்ரிய்யா கஸீதாவில்’ காணப்படுகின்றது.

وصلى عليك الله يا خير خلقه
ويا خير مأمول ويا خير واهب

وَيَا مَنْ يُرْجَى لِكَشْفِ رَزِيَّةٍ
وَمَنْ جُوْدُهُ قَدْ فَاقَ جُوْدَ السَّحَائِبِ

‘சிருஷ்டிகளிளெல்லாம் சிரேஷ்டமானவர்களே!
ஆதரவு வைப்பதற்கு மேலாம்பரமானவர்களே!
அல்லாஹுத்தஆலா தங்கள் மீது கிருபை செய்தருள்வானாக!
மேலாம்பரமான கொடையளிக்கும் கொடை வள்ளலே!
கஷ்டங்களை எல்லாம் விலக்கி வைத்து உதவி செய்வதற்கு
உத்தமமானவர்களே!

**மழை பொழியும் கார்முகிலின் கொடையைவிட தங்களது உயர் கொடைதான் மேலாம்பரமாகி மிகைத்துவிட்டது” என்று கண்ணிய மிக்க ஹுஜ்ரத் ஷாஹ் வலிய்யுல்லாஹ் முஹத்திதுதிஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் எம்பெருமானார் முஹம்மது முஸ்த்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அபயம் தேடியுள்ளார்கள்.**

“அல்லாஹ்வுடைய திருத் தூதராகிய றஸுலவர்களே! தங்களின் திருமுகத்தை விட்டும் திரையைச் சற்று நீக்கி தங்களின் தரிசனத்தை எனக்கருளுங்கள்!

தங்களுடைய திருமுகத்தின் ஜோதி கொண்டு என்னுடைய நேத்திரங்களுக்குப் பிரகாசத்தையளியுங்கள்! வேற்றுமையின் இருளை விட்டும் என்னைக் காபாற்றுங்கள்!

நான் நல்லவனோ கெட்டவனோ எப்படியிருப்பினும், தங்களுடையவனாகி விட்டேனே! அதுவே போதும்! இப்போது வேண்டுமானால் ஆதரியுங்கள் அல்லது வெருட்டுங்கள்! (நான் தங்களை விட்டு அசைய மாட்டேன்)

கப்பலோட்டி நடுக்கடலில் வழிதவறித் திகைத்தாற் போல நான் வாழ்க்கைப் புயலில் நிலை தவறி தத்தளிக்கிறேன். என்னைக் கரைசேருங்கள்!

நான் தகுதியற்றவனாயிருப்பினும் தங்களுடைய கிருபையின் பேரில் எனக்கு ஆதரவு உண்டு. என்னை மதீனாவுக்கு அழைத்துக் கொள்ளுங்கள்!

இயலாமையுள்ள இந்த இம்தாத் என்பவனைத் தங்களுடைய காதல் வலையில் அகப்படச் செய்யுங்கள்! இத்தருணம் ஈருலகிலும் இவனை விடுதலை பெற்று ஈடேற்றம் அடையச் செய்யுங்கள்”!

மேற்சொன்ன விதமாக, தேவுபந்திகள் அனைவருடையவும் பீரும், முரிஷிதுமாகிய ஆரிபு பில்லாஹ் ஹாஜி ஹாபிஸ், ஷாஹ் முஹம்மது இம்தாதுல்லாஹ் ஸாஹிபு, முஹாஜிர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு முறையிடு செய்துள்ளார்கள்.

குத்புஸ் ஸமான், தைக்கா ஸாஹிபு, வலியுல்லாஹி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தங்களது 'அஹ்மதுல்லாஹல் வலீ' என்ற பைத்தில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை 'யாகைரன்னபீ-யாகைரன்ன-பீ' (நபிமார்களிலெல்லாம் சிரேஷ்டமான நன்னபியே) என்று அழைத்து, அழைத்து இவ்வுலக சம்பந்தமான, மறு உலக சம்பந்தமான அத்தனை கோரிக்கைகளையும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமே நேருக்கு நேர் வேண்டுதல் செய்து இறைஞ்சுகிறார்கள்.

வலிகள் திலகம் கௌதுல் அ.்.ளம், ஸெய்யிதுனா முஹிய்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை, ஷரஹுப்புலி, ஷைகு ஸதக்கத்துல்லாஹ் அப்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் நேருக்கு நேர் அழைத்து,

(யா ஸையிதீ ஸனதீ கௌதீ வயா மததீ) எனது தலைவரவர்களே! ஏனது ஆதாரமே! ஏனது இரட்சகரே! எனது உதவியாளரே! புகைவர்களின் தீங்கு ஏதும் வந்தணுகாமல் என்னைக் காப்பாற்றி, பாவத்தில் நான் சிக்கி மோசம் போய்விடாமல் என்னைக் கைப்பிடித்துப் பாதுகாத்து உதவி புரிவீர்களாக! அல்லாஹ்வுடைய கலீபாவெனும் பிரதிநிதியாக எங்கள் பால் வந்துதித்த முஹிய்யித்தீன் ஆண்டகையவர்களே!'' என்று முனாஜாத்து செய்துள்ளார்கள்.

ஞானக்களஞ்சியம், குணங்குடி மஸ்த்தான் ஸாஹிபு ஒலியுல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், இரட்சிப்புத் தேடியிருப்பதைப் பாருங்கள்!

''மன்னிய தவத்தினர்க் கருள் தந்த குருவும் நீ
மாதா பிதாவும் நீயே!
மட்டறு பவக்கடல்தொலைக்கு மொரு கவிழா
மரக்கலமும் நீயல்லவோ!
அன்னியமதான பிரபஞ்சமாம் பெருநெருப்
படக்குமட பெரும் பாலமாய்
அன்புடன் எனைப் பெற்ற அப்பனே அருள் தந்த
ஆண்டவனும் நீயல்லவோ!
என்னை உனையன்றி இனி யாள்வரெவ ரையனே
எந்தையே எம்பிரானே!
இகபர மிரண்டிலுஞ் சுக துக்க மற்றுயான்
ஈடேற அருள் புரிவையே!
நன்னிலையமாக வென் முன்னிலையில் வந்து எந்

நாளும் ரட்சித் தருள்வையே!
நற்குணங்குடி கொண்ட பாதுஷாவான குரு
நாதன் முஹியியத்தீனே!''
என்று அவர்கள் உரைத்துள்ளார்கள்.

குத்புல் அகத்தாபு, பர்துல் அஹ்பாபு, ஸையிது அப்துல் காதிர், மீரான் ஸாஹிபு, ஷாஹுல் ஹமீது, நாகூர் ஆண்டகை ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை அழைத்து,

(யா ஸாஹிபன் னாஹுரி குன்லீ நாஸிரி)

"நாகூர் வாழ் எஜமானே! ஏனது கேள்விப் புலனும், பார்வைக்குப் புலனும் உறுப்புக்களும் ஸலாமத்தாக இருக்க எனக்கு நல்லருள் செய்வீர்களாக! இன்னும் நான் குறைந்த அற்பாயுள் வயதுடையவனான இல்லாமல் நீடித்த வாணாள் உடையவனாயிருக்க நீங்கள் நல்லுதவி செய்தருள்வீர்களாக! எல்லாவித நன்மைகளும் ஒருங்கே சேகரமாய் பொதிந்து அமைந்த அப்துல் காதிரு வொலி அவர்களே! என்று காயல்பதியில் பிறந்து கீழக்கரையில் அடங்கி ஜோதி கொண்டிலங்கும், கல்விக் கடல், ஷைகு ஸதக்கத்துல்லாஹ் அப்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் உதவி தேடியுள்ளார்கள்.

நாகூர் பாதுஷா நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நோக்கி, குணங்குடி மஸ்த்தான் ஸாஹிபு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்,

திக்குத் திகந்தமுங் கொண்டாடியே வந்து
தீன் கூறி நிற்பர் கோடி!
சிங்காசனாதிபர்கள் நதரேந்தியே வந்து
ஜெய ஜெயா வென்பர் கோடி!
ஹக்கனருள் பெற்ற பெரியோாகளொலிமார்கள்
அணி அணியாக நிற்பர் கோடி!
அஞ்ஞான வேரறுத்திட்ட மெஞ்ஞானிகள்
அணைந்தருகு நிற்பர் கோடி!
மக்க நகராளு முஹம்மதுர் ரஸுல் தந்த
மன்னரே என்பர் கோடி!
வசனித்து நிற்கவே கொலுவீற்றிருக்குமும்
மகிமைசொல வாயுமுண்டோ
தக்க பெரியோனருள் தங்கியே நிற்கின்ற
தவராஜ செம்மேருவே!
தயை வைத்தெனையாள் சற்குணங் குடிகொண்ட
ஷாஹுல் ஹமீதரசரே!''
என்று வேண்டுதல் செய்திருக்கிறார்கள்.

ஹஜ்ரத் அபுல் ஹஸன் அலி ஷாதுலீ ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்களை அழைத்து நோக்கி, காயல்பட்டணம் ஷெய்கு நூஹ் ஸாஹிபு அல்லாமா ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்கள் (யா ஸய்யிதீ ஸய்யிதஸ்ஸாதாத்தி யாஸனதீ...) என்று கூறியிருக்கும் முனாஜாத்தில்

“எங்கள் தலைவரவர்களே! தலைவர்களுக்கெல்லாம் தலைவரானவர்களே! எனது ஆதாரப் பொருளே! எனக்கும் எனது சகோதரருக்கும் நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித் தந்திட நீங்கள் உதவியாக இருங்கள்.

என்னை கைவிட்டுவிடாதீர்கள்! எனது நாட்ட தேட்டம் நிறைவேறு மட்டும், எனது உதவியாளரே, நீங்கள் என்னை கைப்பிடித்து உதவவேண்டும் அபுல் ஹஸன் (ஷாதுலீ) அவர்களே!” என்பதாகக் கூறியுள்ளார்கள்.

ஸுல்த்தானுல் மஷாயிகு, புர்ஹானுல் ஹகாயிகு, அல்குத்பு நிஜாமுத்தீன் அவுலியா ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்களை நோக்கி, “எல்லையில்லாப் பாவக்கடலில் ஆழ்ந்து நிர்க்கதியாக நிற்கும் இந்த ஏழையைத் தாங்கள் கைகொடுத்து உதவிக் காப்பாற்றுங்கள்! தங்களுடைய சீர்பாதங்களில் என்னுயிரைத் தத்தஞ் செய்ய என் தலையைத் தூக்கி விடுங்கள்!” என்பதாக மௌலானா மௌலவி ஸெய்யிது முஹம்மது முபாரக் அலவிய்யில் கிர்மானீ ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்கள் உதவி தேடியுள்ளார்கள்.

அஹ்லுபைத்துகளாகிய நாயகம் ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் உடைய குடும்பத்தவர்கள் மீது ஆதரவு வைத்தவர்களாக, ஷைகு ஸஃதீ ஷீராஸீ ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்கள், இறைவா! பாத்திமா நாயகி ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ உடைய பிச்சளங்களின் பொருட்டால் எனது முடிவை

ஈமான் ஸலாமத்துடன் ஆக்கி வைப்பாயாக!

நீ எனது பிராத்தனையை ஏற்றாலும் சரி, நிராகரித்தாலும் சரி, நான் நாயகம் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்களது குடும்பத்தார்கள் உடைய முந்தாணியைப் பற்றிப் பிடித்தவனாக இருக்கின்றேன்” என்பதாக உரைத்துள்ளார்கள்.

சுருதி, யுக்த்த ஆதாரங்களை ஓரளவு மேலே காண்பித்துள்ளோம். இவ்வாறு மாபெரும் மகாத்மாக்களும், மகான்களும், ஷரஹைப்பேணி நடந்த நாதாக்களும், தவுஹீதைப் பற்றிப் பிடித்த முவஹ்ஹிதீன்களும், நாயகம் ஸல்லல்லாஹுஃ அலைஹி வஸல்லம் அவர்களையும், கௌதுல் அஃளம் ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்களையும், நாகூர் ஷாஹுல்ஹமீது ஆண்டகை ரலியல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர்களையும், மற்றும் குத்புமார்களையும், வொலிமார்களையும் அழைத்து, கூப்பிட்டு

அன்னவர்களிடம் இரட்சிப்பு-உதவி வஸீலா தேடி இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேற் சொன்ன மகானுபாவர்களை எல்லாம் விட, வஸீலா தேடலாகாது உதவி, இரட்சிப்புக் கேட்கலாகாது - யாறஸுலல்லாஹ், யாமுஹிய்யத்தீன், யா கௌது என்றெல்லாம் சொல்லக்கூடாது என்று கூறி அலையும் கூட்டத்தினர் எந்த வகையில் விசேஷமானவர்கள் என்பதுதான் விளங்கவில்லை.

எனவே, நிச்சயமாக அன்பியாக்கள், அவுலியாக்கள பால் இரட்சிப்பு, உதவி, உபகாரம் வஸீலா எக்காலமும் தேடலாம் என்பதே ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களின் ஏகோபித்த தீர்மானமாகும். இதை மறுப்பவன் மு.்.த்தஸிலா, வஹ்ஹாபி காதியானீ கூட்டங்களைச் சேர்ந்தவன் என்பதில் ஐயமில்லை. மேலும் இவன் சத்தியத்திற்கு மாறுபாடாக நடந்தவனுமாவான்.

## கறாமாத்து உண்டா?

அவுலியாக்கள் ஹயாத்திலும், மவுத்திற்கப்பாலும் காண்பித்துவரும் கறாமாத்தெனும் அற்புதங்களை நாம் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் வருகின்ற இக்காலத்தில் ஒரு சிலர் அவற்றை இன்கார் (நிராகரிப்பு) செய்கின்றனர்.

நான்கு மதுஹபுகளில் யாதாவதொன்றைக் கடைபிடித்து ஒழுக வேண்டியது மார்க்கக் கடமையாகும். முஸ்லிம்கள் எல்லாருமே மதுஹபைப் பின்பற்றி நடப்பதாகவே ஒப்புக் கொள்கின்றனர்.

எப்பொழுது மதுஹபை ஏற்றிருக்கிறார்களோ அப்பொழுது அந்த மதுஹபுக்குரிய அகீதாக் (கொள்கை) களையும் அங்கீகரித்தாக வேண்டும். அன்பியாக்களுடைய மு.்.ஜிஸாத்துகள், அவுலியாக்களுடைய கராமாத்துகள் உண்மை என்பதும் அகீதாக்களுள் ஒன்று. மு.்.ஜிஸாத்தையோ, கறாமாத்தையோ ஒப்புக்கொள்ளவில்லையானால் அவனுக்கு மதுஹபு இல்லை. மதுஹபு இல்லையானால் அவன் ஸுன்னத:-வல்-ஜமாஅத்தைச் சேர்ந்தவனல்லன். ஆகவேதான் இத்தகையவை மு.்.த்தஸிலாப் போன்ற கூட்டத்தைச் சேர்ந்தவதென்று நான்கு மதுஹபுடைய உலமாக்கள் எல்லோரும் கருத்தொருமித்துக் கூறியுள்ளார்கள்.

وَلَا يُنْكِرُ الْكَرَامَةَ بَعْدَ الْمَوْتِ اِلَّا فَاسِدَ
الْاِعْتِقَادِ

"அகீதாவில் மோசமான கொள்கை உடையவனேயல்லாமல் வேறு எவரும் (அவுலியாக்கள்) மரணத்திற்கப்பால் கராமாத்து நிகழ்த்துவதைப்

பற்றி நிராகரிப்புச் செய்யமாட்டார்கள்'' என்பதாக ஷரஹுல் புகாரியில் ஷாபிஉ இபுனு ஹஜர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு வரைந்துள்ளார்கள்.

அவுலியாக்களுக்கு கராமத்து உண்டென்று சொல் - அதை இல்லை என்று இன்கார் செய்பவனுடைய சொல்லைத் தள்ளிவிடு'' என்று 'ஜவ்ஹரா' எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

''மனிதர்களுடைய நாட்ட தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக அல்லாஹ் தஆலா வலிமார்களுடைய கபுரில் ஒரு மலக்கைச் சாட்டுவான். மற்றொருவிதமாக, வலிமார்களைக் கபுரை விட்டும் வெளிப்படுத்தி மனிதர்களது நாட்ட, தேட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கவும் செய்வான்'' என்பதாக அப்துல் வஹ்ஹா புஷ்ஷ.ஃ.றானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் யவாக்கீத்துல் ஜவாஹிரில் குறிப்பிட்டுள்ளார்கள்.

நபிமார்களில் அநேகரின் மு.ஃ.ஜிஸாத்துகளைப் பற்றி குர்ஆன் ஷரீபிலும், ஹதீது ஷரீபிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மு.ஃ.ஜிஸாத்துகள் பற்றியும், ஸஹாபாக்கள் அநேகம் பேர்களுடைய கராமத்துகள் பற்றியும் ஹதீதுஷரீபிலும் வந்துள்ளன.

அவுலியாக்களுடைய கராமத்துகளைப் பற்றி சரித்திரங்களில் எண்ணிக்கையிலடங்காவண்ணம் உள்ளன. அவையனைத்தையும் இங்கு எடுத்தெழுதுவதென்றால் சாத்தியமில்லை. எனினும், அவற்றிலிருந்து ஒரு சிலவற்றை குறிப்பிடுகிறோம்.

''ஹயாத்திலும், வபாத்திற்குப்பாலும் அவுலியாக்கள் கறாமாத்துச் செய்ய சக்தி பெற்றிருக்கின்றார்களா? மவுத்தாகிப் போனவைகளை அவர்களால் ஹயாத்தாக்க முடியுமா?'' என்று இமாம் ஷைகு முஹம்மது கலீலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் வினவப் பட்டதற்கு, ''அவர்கள் கறாமாத்துச் செய்ய சக்தி பெற்றிருக்கிறார்கள். மவுத்தாகிப் போனவைகளை ஹயாத்தாக்கவும் அவர்களால் முடியும்'' என்று அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். இவ்விபரம் 'பதாவாகலீலீ', 1-வது பாகம் 79-வது பக்கத்தில் காணப்படுகின்றது.

உவமைக்குச் சில நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுகின்றோம்.

அமீருல் மூமினீன் ஹஜ்ரத் உமர்பாருக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கிலாபத்தின் காலத்தில், ஸஹாபிகளில் ஒருவராகிய ஸாரியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது தலைமையின் கீழ் நஹாவந்து என்னும் ஊருக்கு ஒரு பட்டாளம் அனுப்பப்பட்டது. குப்பார்களை எதிர்த்துக் கடுமையாகப் போர் செய்து கொண்டே முஸ்லிம்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மலையின் கணவாய் வழியே

பின்பக்கமாகப் பதுங்கிச் சென்று இஸ்லாமியப் படையைச் சூழ்ந்து திடீர் தாக்குதல் செய்ய குப்பார்கள் இரகசிய திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்.

அன்று வெள்ளிக்கிழமை, அந்நேரத்தில் கலீபா உமர்பாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மதீனாவில் மஸ்ஜிதுன்னபவிய்யின் மிம்பர் மீது நின்று குத்பா ஓதிக்கொண்டிருந்தார்கள். அவ்வமயம் அங்கிருந்து கொண்டே, வெகுதொலை தூரத்திலுள்ள நஹாவந்து யுத்தகளத்தை கஷ்பு (அகக்கண்) கொண்டு நோக்கினார்கள்.

ஏதிரிகளின் சதித்திட்டத்தை கஷ்பு மூலம் உணர்ந்த அவர்கள், ‘‘ஸாரியாவே! மலைக்கணவாயைப் பாதுகாப்பீர்’’ (ஸாரியா அல்-ஜபல்) என்று சப்தங்கொடுத்தார்கள்.

கலீபாவின் இந்த எச்சரிக்கை யுத்த களத்தில் இருந்த ஸாரியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது காதுக்கு எட்டிற்று. உடனே அவர்கள் மலைக்கணவாயில் முன்னேறி பாதுகாப்புச் செய்து கொண்டார்கள். எதிரிகளின் இரகசிய சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. முஸ்லிம்கள் வெற்றிபெற்றனர். இவ்வற்புத சம்பவம் அவர்களுடைய மனாகிபு (சரித்திரச் சிறப்பு நூல்)களில் வரையப்பட்டிருக்கின்றது.

‘‘ஹளரத் றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சமுகத்திற்கு, அஸீதுப்னுஹுளைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், உப்பாதுப்னுபஷர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் இருள் சூழ்நத ஓர் இரவில் சென்றிருந்தார்கள். பிறகு அவ்விருவரும் ஒன்றாக திரும்பி வரும்போது அவர்களுக்கு முன்பதாக இரு ஜோதிப்பிரகாசங்கள் போய்க்கொண்டிருந்தன. அவர்கள் பிரிந்து தனித்தனியே பிரிந்து அவரவருடன் போய்க் கொண்டிருந்தன’’ என்பதாக அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். இந்த ஹதீது ஸஹீஹுல் புகாரியில் கூறப்பட்டுள்ளது.

நாயகம் றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விருந்தளிக்க ஜாபிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தனது வீட்டில் ஓர் ஆட்டுக்குட்டிளை அறுத்து சமையலுக்கு ஏற்பாடு செய்தார்கள். ஆட்டுக்குட்டியைத் தந்தை அறுப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்களது மூத்தபுதல்வன் தன்னுடைய தம்பியைப் பிடித்து அவ்வாறே அறுத்து விட்டான். இதைக்கண்ட அவனுடைய தாய் விரட்டிப் பிடிக்க ஓடவே மூத்த மகனாகிய அவன் மாடியிலேறி கால் தவறி கீழே விழுந்து இறந்தான்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விருந்துண்ண வந்த சந்தர்ப்பத்தில் மூத்த மகனுடையவும், இளைய மகனுடையவும் மரண சேதியையறிந்து துஆச் செய்தார்கள். இறைவனருளால் அவ்விருவரும் உயிர் பெற்றெழுந்தார்கள்.

இவ்வரலாறு ஷவாஹுதுன் னுபுவ்வத்தில் வருவதாக அன்வாரே-ஆப்த்தாபே-ஸதகாத், 2-வது பாகம், 207-வது பக்கத்தில் கூறப்படுகின்றது. மேலும் இஹ்யாஉல்குலூப் - பீ - மவுலிதில் மஹ்பூப் 94-வது பக்கத்திலும் சொல்லப்பட்டுள்ளது.

ஒரு நாளைய தினத்தில் ஹளரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பகுதாது நகரத்துக் கடைத்தெரு வழியே சென்று கொண்டிருந்த போது, ஒரு கிறிஸ்தவரும், ஒரு முஸ்லிமும் தர்க்கஞ் செய்து கொண்டிருப்பதைக் கண்டு, அவ்விடம் நின்று கவனித்தார்கள்.

கிறிஸ்தவர், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களது முஃஜிஸாத்துக்கள் பலவற்றைக்கூறி அவர்களே மேலானவர்கள் என்று கூறினார். முஸ்லிம், நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முஃஜிஸாக்கள் பலவற்றைக் கூறி அவர்களே மிகவும் மேலானவர்கள் என்று கூறினார். குடைசியாக, அந்தக் கிறிஸ்தவர், எங்கள் ஈஸா, மரித்தவர்களை உயிர்ப்பித்திருக்கிறார்கள், உங்கள் நபி அவ்விதம் செய்திருக்கின்றார்களா? என்று கடாவினார். இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் அந்த முஸ்லிம் சிறிது தயங்கினார். உடனே தாம் ஜெயித்து விட்டதாக அந்தக் கிறிஸ்தவர் ஆரவாரம் செய்யலானார்.

இவ்விருவருடைய விவாதங்களைக் கவனித்துக் கொண்டிருந்த கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் முன் வந்து அந்தக் கிறிஸ்தவரை நோக்கி, 'நீர் கூறிய அத்தனை விஷயமும் உண்மைதான். அவற்றை நாங்களும் ஒப்புக்கொள்ளவே செய்கின்றோம். நான் ஒரு முஸ்லிம், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்துக்களில் நானுமொருவன், இறந்து போன மையித்து எதையாவது நீ காண்பி. ஆதை நான் உயிர் பெறச்செய்கிறேன் என்றுரைத்தார்கள்.

அந்தக் கிறிஸ்தவர் தமது முன்னோர்களை அடக்கம் செய்யப்பட்டிருக்கும் ஒரு மையித்துக் கொல்லை, கல்லறைக்கு அழைத்துக் சென்று. பல்லாண்டுகளுக்கு முன்பு புதைக்கப்பட்ட ஒரு புராதனப் புதைக்குழியை காண்பித்து, 'இதில் அடக்கம் செய்யப்பட்டிருப்பவர் ஒரு பாடகர். இவர் உயிர் பெற்றெழுந்து என்னுடன் பேசுவாராகில் நான் உங்களது மார்க்கத்தைத் தழுவுகின்றேன். இல்லாவிடில் நீங்கள் எனது மார்க்கத்தைத் தழுவ வேண்டும். சம்மதம்தானா? என்பதாய்ச் சபதம் கூறினார்.

''அப்படியே, சம்மதம்'' என்பதாக ஹஜ்ரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் உடன்பட்டு, 'உங்கள் நபி மரித்தோரை எவ்வாறு உயிர்ப்பித்தார்கள்? என்று வினவினார்கள்.

“ஆண்டவனுடைய உத்திரவு கொண்டு எழுந்திரு என்பார்கள். ஊடனே எழுந்திருக்கும்’ என்று அவர் விடையளித்தார்.

‘அப்படியா! இப்போது நான் எனது உத்திரவு கொண்டு எழுந்திருக்கச் செய்கிறேன்! பார்’ என்று கூறி, “எனது உத்திரவு கொண்டு எழுந்திரு” (கும்பி இதுனீ) என்று மொழிந்தார்கள்.

அந்த உடனே, மடிந்து மண்ணோடு மண்ணாகிக் கிடந்த அந்தப் பாடகர், வாத்தியத்தை இசைத்தவராய்ப் பாடிக் கொண்டே சவக்குழியிலிருந்து வெளியே புறப்பட்டார். அந்தச் சங்கீத வித்வான் அந்தக் கிருஸ்தவரை நோக்கி, திருக்கலிமாவைக் கூறி இஸ்லாத்தை தழுவ இன்னும் தாமதம் ஏன்? என்றும் வினவினார்.

அந்தக் கிறிஸ்தவர் பேராச்சரியமுற்றவராய், அக்கணமே கலிமாவை மொழிந்து முஸ்லிமாகி விட்டார்.

சரித்திர பூர்வமான இவ் வரலாற்றை தப்ரீஜுல்காத்திர் 16-வது பக்கத்திலும், மனாகிபு கௌதிய்யா 66-வது பக்கத்திலும் பார்வையிடலாம்.

“வலிமார்களுடைய கறாமாத் அற்புதங்கள் ஜீவியத்திலிருப்பதுபோல, அவர்களது மரணத்திற்கப்பாலும் நடைபெறுமா?” என்று ஷைகுல் இஸ்லாம், அல்லாமா, அல்பக்கீஹ், ஷைகுமுஹம்மது ஷவ்பரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் வினவப் பெற்றது.

அதற்கு அவர்கள், ‘மரணத்திற்கப்பாலும் அவுலியாக்களுடைய கறாமாத்து அற்புதங்கள் நடைபெற்றே வரும், அவை எடுபட்டுப் போகா. அன்பியாக்களுடைய மு.ஃஜிஸாத் அவுலியாக்களுடைய கறாமாத்தாயிருக்கும். இதை மறுத்தால் குப்ரைக் கொண்டு பயப்பட வேண்டும்” என்று விடையளித்தார்கள்.

இவ்விபரம், மிஸ்ரில் முப்த்தியாயிருந்த அல்லாமா ஷைகு முஹம்மது பகீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது ஷிபாஉஸ்ஸிகாம்’ என்ற நூலுடன் இணைத்து வெளியிடப் பெற்றிருக்கும் ‘ஷவ்பரி - பத்வா’ வில், 238-வது பக்கத்தில் காணப்படுகின்றது.

உவமைக்கு மற்றொரு சம்பவத்தையும் கவனியுங்கள்.

“ஒருவன் ஹஜ்ரத் ஸெய்யிதுனா அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நிந்தித்து அவதூறாகப் பேசுவதையே தொழிலாகக் கொண்டிருந்தான். அவன் ஓரிரவு நித்திரை செய்கையில், ஹஜ்ரத் அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அவனது கனவில் தோன்றி அவனுடைய முகத்தில் ஓங்கி அறைந்தார்கள். அவன் பயந்து திடுக்கிட்டு விழித்துப் பார்க்கும் போது, தன்னுடைய ஸூரத் (கோலம்)

மாற்றப்பட்டிருப்பதைக் கண்டு கை சேதப்பட்டான்'' என்பதாக கிதாபுர்-ரூஹ் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

அவுலியாக்களையும், கராமாத்துக்களையும் நம்புவதற்கில்லாமல் இன்கார் செய்யும் கூட்டத்தார்கள் பெரும்பாலும் இபுனுதைமியாவையும், அவரைச் சேர்ந்தவர்களையுமே விசேஷமாகக் கருதி, அவர்களது நூற்களையே மேற்கோள்களாகக் காட்டுவார்கள். வஹ்ஹாபி சித்தாந்தங்களுக்கு மூலகுருவான இபுனு தைமியாவின் பிரதான சீடர் இபுனகையிம் என்பவரே. அவர் இயற்றிய நூல்தான் மேலே குறிப்பிடப்பட்ட, 'கிதாபுர் ரூஹ்' என்பதாம். அவர் இயற்றிய அல்கபாயிரு-பிஸ்-ஸுன்னத்தி வல் பிதுஅத்தி' என்ற நூலிலும் மேலே சொல்லப்பட்டது போன்ற கறாமாத்து அற்புதங்கள் சிலவற்றையும் அவர் வரைந்துள்ளார்.

'மஸ்னவீ-ஷரீபின்' ஆசிரிய மேதை, ஹஜ்ரத் மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் குறிப்பிடும் அற்புத சம்பவமொன்றையும் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:-

'காரீ ஒருவர் மத்ரஸாவில் குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கிறார். 'மந்திக்' எனும் தத்துவ சாத்திரத்தைக் கற்ற ஒருவர் அப்போது அந்தப் பக்கம் செல்கிறார். அப்போது அந்தக்காரீ (குல்-அர-அய்த்தும்-இன் அஸ்பஹமாஉக்கும்...)

உங்களுடைய (குடி) தண்ணீர் பூமிக்குள் சென்று வற்றி வரண்டு போய்விட்டால் ஓடும் ஜலத்தை உங்களுக்குக் கொண்டு வருபவர் யார்?'' என்ற (67:30) திருவசனத்தை ஓதிக்கொண்டிருப்பதை அவர் காதில் கேட்டார்.

உடனே அந்தத் தத்துவ சாஸ்திரி, ''ஏன்! கடற்பாறை மண்வெட்டி கொண்டு பூமியைத் தோண்டி தண்ணீரை நான் வெளியே கொண்டு வருவேனே!'' என்று துடுக்காக உரைத்தான்.

அன்றிரவு அவன் கனவொன்று காணுகிறான். அதில் ஒரு பெரியார் தோன்றி, ''நீ தண்ணீர் கொண்டு வருவதிருக்கட்டும். உனது கண்ணொளியைக் கொண்டு வா, பார்ப்போம்'' என்று கூறி அவனது முகத்தில் ஓங்கி அறைந்தார்.

உடனே, அவன் திடுக்கிட்டுப் பதறி விழித்தெழுந்து அமருகிறான். உண்மையிலேயே தனது கண்ணொளி மறைந்து தான் அந்தகனாய் விட்டதை உணர்ந்து கை சேதமுற்றான்.

இவ்விபரம், மஸ்னவீ ஷரீப், 2-வது பாகத்தில் சொல்லப்பட்டுள்ளது. தப்ஸீர், ஜாஹிதியிலும் இதுபோன்றதோர் நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கறாமாத்தைக் கொண்டு அவுலியாவை ஜியாரத்துச் செய்வதற்காக க∴பத்துல்லா போகுமா?'' என்று இமாம் நஸபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடத்தில் வினவப்பட்டது. அப்போது இமாம் அவர்கள், "கறாமாத்தால் அது போகக் கூடும். ஸுன்னத் வல்-ஜமாஅத்துக் கொள்கைப்படி அவ்வாறு போவது ஆகும்'' என்பதாக விடையளித்தார்கள் என்ற விபரத்தை ஹனபி மதுஹப், கிரந்தமாகிய துர்ருல்-முக்த்தாரில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை அந்நூலின் ஹாஷியா-றத்துல் முஹ்த்தார், 2-வது பாகம், 684-வது பக்கத்தில் உறுதிப்படுத்தப் பெற்றிருப்பதோடு, "அவுலியாக்களிடம் க∴பத்துல்லாஹ் ஜியாரத்திற்குப் போவது அவர்களுடைய கறாமாத்திலுள்ளதாகும். இத்தகைய கறாமாத்தை இன்கார் செய்பவன் வழி கெட்ட மு∴த்தஸிலா கூட்டத்தைச் சேர்ந்தவனாவான்'' என்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

"றாபி அத்துல் அதவிய்யா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களைக் க∴பதுல்லாஹ் ஜியாரத்துச் செய்ய சென்றது'' என்ற விபரம் ரூஹுல்-பயான், 9-வது பாகம், 112-வது பக்கத்திலும், இஹ்யா உலூமுத்தீன், 1-வது பாகம், 242-வது பக்கத்திலும் காணப்படுகின்றது.

"ஹஜருல் அஸ்வதைவிட, இன்ஸான்-காமில் (பரிபூரணத்துவம் அடைந்த அவுலியா) உடைய கை மேன்மையானது'' என்றும், "க∴பத்துல்லாஹ்வைப் பார்க்கினும் இன்ஸான்காமில் மேலாம்பரமானவர்'' என்றும் ரூஹுல் பயான், 9-வது பாகம், 23-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளன.

ஹஜ்ரத் அபூயஸீதல் புஸ்த்தாமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வழியில் ஷைகைத் தேடினவர்களாய். ஹஜ்ஜு உம்றாவுக்குப் புறப்பட்டார்கள். இறுதியில் ஒரு குத்பையடைந்தார்கள்.

"நீர் செல்வதெங்கே? பிரயாணத்திற்காக வைத்திருப்பதென்ன? என்று குத்பு அவர்கள் வினவியதற்கு, அபூஸயீதுல் புஸ்த்தாமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், "நான் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டுச் செல்கிறேன. பிரயாணத்திற்காக 200 திர்ஹங்கள் வைத்துள்ளேன்'' என்று விடையளித்தார்கள்.

அப்படியானால், திர்ஹமை எனக்குக் காணிக்கையாக வைத்து என்னைத் தவாபு செய்யும், ஹஜ்ஜும், உம்றாவும் உமக்கு நிறைவேறிவிடும். ஸபா, மர்வாவில் ஸயீ செய்வதும் நிறைவேறிவிடும், ஆண்டவன் மீது சத்தியமாக, அவன் க∴பாவை விட எனக்குச் சங்கையளித்துள்ளான்.

க∴பா வணக்கத்திற்குரிய வீடு. எனது உள்ளமையோ அவனது அகமியத்தின் இல்லம். க∴பாவும் அவனுடைய தஜல்லியாத்தின் தோற்றந்தான். ஆனால் இன்ஸான் காமிலின் மீது உண்டாகும் தஜல்லியாத்து க∴பாவில் உண்டாவதில்லை. நீர் என்னைத் தரிசித்தது இறைவனைக்

கண்டது போலாம். உண்மை க.்.பாவை நீர் தவாபு செய்துவிட்டீர். நீர் எனக்குச் செய்த ஊழியம் இறைவனைப் புகழ்ந்து அவனுக்கு வழிபட்டதாகும்.

உஷார்! ஆண்டவனை விட்டும் நான் வேறானவனல்லன். ஆண்டவனுடைய நூர் உம்மீது உண்டாவதாக! கண்ணைத் திறந்து என்னை நோக்கிப் பாரும்! க.்.பாவை என்னுடைய வீடு என்று ஆண்டவன் ஒரு முறை தான் சொன்னான். 'என் அடியானே!' என்று என்னை எழுபது விடுத்தம் கூப்பிட்டுள்ளான்.

அபாயஸீதே! உமக்குக் க.்.பா கிடைத்தது, ஆண்டவனிடத்தில் உமக்கு நூர் பிரகாசமும், சங்கையும், மகத்துவமும் உண்டாகி விட்டது என்பதாக அந்த குத்பு கூறினார்கள்.

இவ்விபரத்தை மௌலானா ஜலாலுத்தீன் ரூமி ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் மஸ்னவி-ஷரீபு, 2-வது பாகத்தில், பீர்-முரீது ஹிகாயத்தில் கூறியுள்ளார்கள்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் க.்.பாவை நோக்கி, "சந்தேகமின்றி, இறைவன் உனக்குச் சிறப்பைக் கொடுத்துள்ளான். ஆனால், இறைவனிடத்தில் மு.்.மின் உன்னை விட அதிகச் சிறப்பை உடையவன்" என்று கூறினார்கள் என்பதாக, மிப்தாஹுால் உலூம்-ஷாஹுா மஸ்னவீ மௌலானா ரூமி, 7-வது பாகம், 142-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒருநாள், உமர் ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் க.்.பாவை நோக்கி, "உனக்குப் பெருமையும் சங்கையும் உண்டு. அல்லாஹ்விடத்தில் மு.்.மின் உன்னைவிட அதிக சங்கை உடையவன்" என்று கூறினார்கள் என்பதாக இபுனு உமர் ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்களைக் கொண்டு திர்மதி ஷரீபில் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.

"கியாமத்து நாளில் க.்.பத்துல்லாஹ், என்னுடைய கபுருக்கு வந்து 'அஸ்ஸலாமு அலைக்க' என்று ஸலாம் சொல்லும். 'வஅலைக் கஸ்ஸலாம்' என்று பதில கூறி, பைத்துல்லாஹ்வே, எனக்குப் பிறகு என்னுடைய உம்மத்து உன்னளவில் வந்து எவ்வாறு நடந்து கொண்டார்கள்? என்று கேட்பேன்.

அவ்வமயம் அது சொல்லும்: "என்னிடத்தில் வந்தவர்களுக்கு நான் போதுமானவன். அவர்களுக்காக நான் மன்றாடுவேன். என்னிடம் வராதவர்களுக்குத் தாங்கள் போதுமானவர்கள் அவர்களுக்காகத் தாங்கள் மன்றாடுவீர்கள்" என்பதாய் நாயகம் ஸல்லல்லாஹுா அலைஹி வஸல்லம் அவர்கள் அருள் செய்திருப்பதை ஜாபிர் ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா அவர்கள் ரிவாயத்துச் செய்வதாக, இஸ்பஹானீ ரலியல்லாஹுா தஆலா அன்ஹுா "கிதா புத்தர்கீபில்" அறிவித்துள்ளதாக, அல்லாமா, காஜீ,

உபைதுல்லாஹ் ஸாஹிபு மத்றாஸீ ரலியல்லாஹுﬞ தஆலா அன்ஹுﬞ ''துஹ்பதுஸ்ஸாயிரீனில்'' வரைந்துள்ளார்கள்.

كُلُّ قُطْبٍ يَطُوفُ بِالْبَيْتِ سَبْعًا
وَأَنَا الْبَيْتُ طَائِفٌ بِخِيَامِي

(குல்லு குத்பின் யத்தூபு பில பைத்தி ஸப்அன்

வ அனல் பைத்து தாயிபுன் பி கியாமீ)

''ஒவ்வொரு குத்புமார்களும் க.்.பாவிலுள்ள இல்லத்தை ஏழு முறை தவாபு செய்வார்கள். நானோ, அந்தக் க.்.பாவின் இல்லமாகிறது என்னுடைய கூடாரத்தைச் சுற்றி தவாபு செய்கிறது'' என்று ஸெய்யிதுனா குத்புல்-அக்த்தாபு, முஹிய்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரலியல்லாஹுﬞ தஆலா அன்ஹுﬞ அவர்கள் தங்களது முபாராக்கான, 'துப்-பி ஹானீ'' பைத்தில் கூறியுள்ளார்கள்.

ஆகவே, மேலே குறிப்பிட்ப்பட்டுள்ள அத்தாட்சிகளிலிருந்து இன்ஸான காமில் க.்.பத்துல்லாஹ்வை விட மேலாம்பரத்திலுள்ளவர் எனவே, அத்தகைய தகுதி வாய்ந்த அவுலியாக்களை க.்.பத்துல்ல்ாஹ் தேடிச் சென்று தரிசிக்கிறது என்பதில் வியப்பில்லை அல்லவா?

அன்பியா, அவுலியாக்களுக்கு ஆண்டவன் பக்கமிருந்து எல்லாவிதமான தத்துவங்களும் உண்டாயிருக்கின்றன. அவர்கள் உயிரோடு இருந்துவந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கிருந்த திரேக பலமும். பார்வையின் கூர்மையும், கேள்வியின் வலிமையும், ஆன்மசக்தியும் வபாத்தானதற்கப்பால் மேலும் அதிகப்பட்டு வலுவடைகின்றன.

ஹயாத்தில், சரீரம் என்ற கூண்டில் அடைபட்டுக் கிடந்த ஆன்மாக்கள், வபாத்திற்குப் பிறகு விடுதலை பெற்றுச் சுதந்திரம் அடைகின்றன. அப்போது, அவர்கள் ஈருலகையும் கைக்கடுகு போலப் பார்க்கிறார்கள். நாடிய இடங்களுக்கெல்லாம் நொடிப் பொழுதில் செல்கிறார்கள். அவர்கள் ஜீவனோடிருந்த காலங்களில் எங்ஙனம் மனிதர்களுடைய நாட்ட தேட்டங்களை நிறைவேற்றி வந்தார்களோ, அங்ஙனமே. மரணத்திற்குப் பின்பும் செய்யக் கூடிய ஆற்றலை ஆண்டவன் அவர்களுக்களித்துள்ளான். அவர்கள் எங்கிருந்த போதிலும் சரி, ஆபத்து காலத்தில் அவர்களது திருநாமத்தை விளித்துக் கூப்பிட்டவர்களுக்கு உடனே கைகொடுத்துக் காப்பாற்றி இரட்சிக்கும் தத்துவத்தையும் ஆண்டவன் அவர்களுக்குக் கொடுத்துள்ளான்.

''அவுலியாக்களுக்கு ஆண்டவன் பக்கமிருந்து குத்ரத்து (சக்தி) உடைய கரம் உண்டாயிருக்கின்றது. எதிர் நோக்கிப் பாய்ந்து வரும்

அம்பையும் கூட வேறு வழியில் திருப்பி அகற்றக் கூடிய வல்லமையுடையவர்கள் அவர்கள்'' என்று மஸ்னவீ-ஷரீபு முழங்குகின்றது.

''நான் அஸ்தகிரியிலும், எனது முரீது உதயகிரியிலும் இருந்த போதிலும் சரியே. அவனை ஓநாய் கடிக்க வந்தாலும் எனக்குத் தெரியும். ஊடனே அதிலிருந்தும் அவனைக் காப்பாற்றுவேன். அத்தகைய கரமும் ஆண்டவனால் எனக்கு அளிக்கப் பெற்றதேயாகும்'' என்று தாஜுல் அவுலியா, ஷைகு முஹிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் அருளியுள்ளார்கள்.

பூலோக ஜனத்தொகையில் ஐந்திலொரு பாகத்தினரான, கோடானு கோடி முஸ்லிம்களில், ஆண்களும், பெண்களும் இவ்விருபாலரும். தத்தமக்கு ஆபத்து, இடர்கள் சம்பவிக்கும் சந்தர்ப்பங்களிலும். ஆனந்த சமயங்களிலும், இந்த அப்துல் காதிர் முஹிய்யித்தீன் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது திருநாமத்தைத் தாராளமாக உச்சரிப்பதைப் பிரத்தியட்சமாகப் பார்க்கலாம். கடல் போல் விரிவான இவர்களது அற்புத காரணங்கள், கறாமாத்துகள், மனாக்கிபு கௌதிய்யா, பஹ்ஜத்துல் அஸ்றார், தப்ரீஜுல்காத்திர் முதலிய கிரந்தங்களில் நிறைந்துள்ளன.

''கௌதுல் அ.்.ளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது அற்புத காரணங்கள் ஏராளம், ஏராளமான ஏடகளையும் கிரந்தங்களையும் நிரப்பிப் பொங்கி வழிகின்றன'' (மல அத் முதவ்வனத்தன், குதுபன் முஅல்ல பதன்...) என்று மாதிஹுர் ரஸூல், ஸதக்கத்துல்லாஹ் அப்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'யாகுத்பா மாலையில், சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு பாடலிலேயே, அந்த கௌது நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது அற்புதக் காரணச் சிறப்பை வெகுவாக அமைத்துத் தந்து விட்டார்கள், மகான் குணங்குடி மஸ்தான் அப்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், இதோ பாருங்கள்!

கடலிற் கவிழ்த்ததோர் கப்பலா லாத்துடன்
    கடுகிவரவே யழைத்தீர்!
கம்பமுட னோடியே வந்ததோர் கப்பலை
    கடிபூனை யாக்கி வைத்தீர்!
குடிகொண்டு கர்ப்பவறை யுள்ளிருக்கையிலுமைக்
    கொலைசெய்ய வந்த முனியைக்
குதிகொண்டு வெளி சென்றுமிருதுண்டுகண்டுபின்
    கூர்கர்ப்ப வரை புகுந்தீர்!
பிடியிற் பிடித்துண்ட பிள்ளை சன்னியாசி குடற்
    பீறி வரவே யழைத்தீர்!
பிரியம் வைத்தெனையாள வென்னிடத்திந்த விரு
    பேரையுந் தூதுவிட்டீர்!

நடனமிடு பாதார விந்ததென் சென்னியுற
நாட்செல்லுமொ சொல்லுமெ!
நற்குணங்குடி கொண்ட பாதுஷாவான குரு
நாதன் முஹிய் யத்தீனே!

இவ்வாறாக அற்புதக் காரணங்கள், அன்பியாக்களைக் கொண்டு நிகழ்ந்தால் “மு.ஃ.ஜிஸாத்து” என்றும் அவுலியாக்களைக் கொண்டு நிகழ்ந்தால் “கராமாத்து” என்றும், வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விரு பதங்களும் இயற்கைக்கு மாற்றமான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவனவாகும். ஆகவே தான் அன்னார்களுக்கு ‘கவாரிகுல் ஆதாத்’ - “இயற்கையின் வழமைக்கு மாற்றமாக அற்புத நிகழ்ச்சிகளை நடத்தக் கூடியவர்கள்” என்று பெயர் உண்டு.

இவ்விதமான கறாமாத்துகள் இறுதித் தீர்ப்பு நாள் (கியாமத்து) வரை நடைபெற்றுக் கொண்டே இருக்கும், அறுபட்டு நின்று விடாது. ஆகவே அத்தகைய ஆற்றல் பெற்ற மகானுபாவர்கள் பால் நேராக நாட்ட தேட்டங்களை நிறைவேற்றித் தரும்படி கேட்பது ‘ஜாயிஸூம்’ ‘முஸ்தஹப்பு’ மாகும். இவ்வாறாக பத்வாக்களும் உள்ளன.

“கறாமாத்துக்களை இன்கார் (நிராகரிப்பு) செய்தால், ஸுன்னத்-வல்-ஜமாஅத்துக் கூட்டத்தை விட்டும் நீங்கி வழி கெட்ட மு.ஃ.தஸிலாக்களின் கூட்டத்திலாகி விடுவான்” என்று ‘பதாவா-கலீலீ’, 2-வது பாகம், 249-வது பக்கத்திலும், ‘தம்ஹீது’ 81-வது பக்கத்திலும், ஷரஹுபிக்ஹுல் அக்பர்’ 69-வது பக்கத்திலும், ‘அல்-யவாக்கீத்து-வல்-ஜவா ஹிர்-பீ-பயானி-அகாயிதில் அகாபிர், 2-வது பாகம், 90-வது பக்கத்திலும் வந்துள்ளன.

இன்னும், இவ்வாறாகவே, ஷரஹு தரீக்கத்துல் முஹம்மதிய்யா, நபஹாத்துல் குர்பு வல் இத்திஸால் முதலிய பல கிரந்தங்களிலும் காணப்படுகின்றன.

உண்மை இவ்வாறிருக்க, பிள்ளைப் பாக்கியம், அவுலாது உண்டாக அவுலியாக்களிடம் கேட்கக் கூடாதெனவும், அது பற்றி இழிவாகவும் பலர் கூறியும், எழுதியும் வருவதோடு, தகாத, அடாத சொற்பதங்களையும் பிரயோகிப்பது வருந்தத் தக்கதாகும். அத்தகையவர்கள் அறிவு, உணர்ச்சி பெறும் பொருட்டு மேலும் சில ஆதாரங்களைத் தருகிறோம்.

“தனக்குக் குழந்தை உண்டாக வேண்டுமென்று விரும்புகிறவன், ஹஜ்ரத், உஸ்த்தாது, அபுல் அப்பாஸ், ஸப்தீ, வலிய்யுல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுரை ஜியாரத்துச் செய்வதைப் பற்றிப் பிடித்துக் கொள்வானாக. ஏனெனில, அவன் நாடித்தேடுகின்ற நாட்டம் அவனுக்கு நிறைவேறி அவனது மனைவியும் அல்லாஹ்வின் ஏற்பாட்டைக் கொண்டு துரிதமாய்க் கர்ப்பமாகி விடுவாள் என்பதற்கேயாம். இது அனுபவத்தில் சோதிக்கப்பெற்று நேரில் கண்டு

அனுபவத்த அதியாச்சரியமான இரகசியமாகும்'' என்று அல்லாமா, இமாம், அபூ அப்துல்லாஹ், ஷைகு ஸனூஸீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள், 'முஜர்ரபாத்'திலும், அல்லாமா இமாம் தைரபீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ, 'ஹாமிஷா' 52-வது பக்கத்திலும் அறிவித்துள்ளார்கள்.

உலகம் போற்றும் உத்தமமப் பெரியார் ஒருவருடைய பிறப்பைப் பற்றியும் இங்கு உதாரணப்படுத்திக் கூறுவது மிகமிகப் பொருத்தமென நினைக்கின்றோம்.

வாரி வழங்கிக் கொடை கொடுத்த வள்ளலும், பரோபகாரம் புரிவதே தனது தொழிலாகக் கொண்டிருந்தவருமான 'ஹாத்திம் தாயீ' குடும்பத்தைச் சேர்ந்தவரும், ஐரோப்பாவிலே ஸ்பெயின் தேசத்திலே 'முர்ஸியா' என்ற ஊரிலே, ஹிஜ்ரி 560 றமலான் 17, திங்கட்கிழமை இரவில் பிறந்து, இபுனு சுறாக்கா என்னும் பெயருடன் ஸ்பெயினில் 38 வருட காலம் வாழ்ந்து, ஹிஜிரி 598-ல், ஸ்பெயினை விட்டும் புறப்பட்டு ஆப்பிரிக்கா, அரேபியா, இராக் ஆசியா மைனர் முதலிய பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்து பெரியார்களது கபுருகளை ஜியாரத்துச் செய்து, பல ஹஜ்ஜுகளும் புரிந்து, சிறிதும் பெரிதுமாக 289 நூற்களுக்குக் குறைவின்றி இயற்றிப் புகழ்பெற்று, 78 வருடம், 7 மாதம், 9 நாள் குடும்பத்துடன் மாலிக்கீ மதுஹபில் வாழ்ந்து, ஒரே புத்திரனைப் பெற்று ஹிஜ்ரி 638, றபீவுல் ஆகிர் 28, வெள்ளிக்கிழமை இரவில் வபாத்தாகி ஸிரியாவிலே திமிஷ்க் நகரிலே, காஸீயூன் குன்றின் மீது அடக்கமாகி இருப்பவருமான அற்புத அவதாரப் புருஷரின் பிறப்புச் சிறப்பு விபரம் வருமாறு:-

"பிரபல்ய வியாபாரியும், செல்வந்தருமான ஸ்பெயின் வாசி ஒருவருக்கு எல்லாவிதமான ஐசவரியச் சம்பத்துகளிருந்தும் ஒரே ஒரு பெருங்குறை, அது தான் புத்திர சம்பத்தில்லாத குறை.

தான் கேள்வியுற்றிருந்த பெரியார்கள் யாவரிடத்திலும் தேடிச்சென்று தனது மனக்குறையை அவர் தெரிவித்தார். யாவரும் அவருக்கு விதியிலேயே பிள்ளை பாக்கியம் பெறுவதற்கு இடமில்லை என்ற பதிலையே கூறினர். அவரும் மிகவும் வியாகூலமடைந்து கவலையோடிருந்து வந்தார்.

கடைசியாக, ஹஜ்ரத் கௌதுல் அ஼ளம், ஸெய்யிதுனா, முஹ்யித்தீன் அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்களது கீர்த்திப் பிரஸ்தாபத்தைக் கேள்வியுற்று, அவர் பகுதாதுமா நகருக்குச் சென்று தனது முறைப்பாட்டை அந்த மஹான் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்களிடம் சென்று கூறினார்.

கௌதுல் அ஼ளம் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள், "லவ்ஹை நோக்கினேன். அதில் உமக்குப் பிள்ளைக்குட்டி பாக்கியம் இல்லை என்றே தெரிய வருகிறது'' என்று சொன்னார்கள்.

உடனே அம்மனிதர் கலங்கிப் பரிதவித்து, “நாயகமே! இந்தத் துர்ப்பாக்கியனுக்குப் பிள்ளை இல்லை என்று எல்லோருமே கூறிவிட்டார்கள். இரப்பார்க்கு இல்லை என்று சொல்லாமல் கேட்டதை ஈந்து வழங்கும் வள்ளலாகிய தங்கள் வாயிலைத் தேடி தமியேன் இந்தக் கோரிக்கையுடன் வந்திருக்கிறேன். பாவியின் மீது தயை கூர்ந்து கிருபை செய்தருளி இவனது அபேட்சையைப் பூர்த்தி செய்தருள வேண்டுகிறேன” என்று மன்றாடினார்.

ஆவரது மனோநிலையறிந்து மனமிரங்கி, ஹஜ்ரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், “அலியே! என்னில் நின்றும் உமக்கொரு பிள்ளையைத் தருகின்றேன. உமது முதுகை எனது முதுகுடன் சேரும். ஏனது முதுகுத் தண்டிலிருப்பது ஆண் குழந்தை. அது உமது இல்லத்தில் பிறக்கும். எமது எல்லாவித இல்முகளுக்கும் அந்தப் பிள்ளையே வாரிசாவார். அவர் எமர் நாவாகவே இருப்பார். ஏவரும் வெளிப்படுத்தாத அகமிய இரகசியங்களை எல்லாம் அவர் பகிரங்கப் படுத்துவார். புகழோடும் கீர்த்தியோடும் விளங்குவார். அவருடைய பெயர் முஹம்மது. ஆனால், முஹிய்யித்தீன் என்ற காரணப் பெயருடன் விளங்குவார்” என்று ஆசி கூறியனுப்பினார்கள்.

அவரும் சந்தோஷத்துடன் வீடு திரும்பினார். அன்று, அவர் மனைவி கர்ப்பவதியாகி அப்பால் ஜனனமானவர்கள் தான், ஹஜ்ரத் ஷைகுல் அக்பர், ஸையிதுனா முஹம்மது முஹிய்யத்தீன் இப்னு அரபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவாகளாவர்.

இவ்வரலாறு, ‘மனாகிப்-கௌதிய்யா’ 76-வது பக்கத்திலும், ‘கலாயிதுல்-ஜவாஹிர்’ கிரந்தத்திலும் காணலாம்.

“கறாமாத்தைக் கொண்டு தகப்பனின்றி பிள்ளையை வெளிப்படுத்த அவுலியாக்களுக்குச் சக்தியுண்டா? என்று ஆரிபுபில்லாஹ் ஷைகு முஹம்மது கலீலீ, ஷாபியீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களிடம் வினவப்பட்டதற்கு “அங்ஙனம் செய்ய அவர்களுக்குச் சக்தியுண்டு என்பதாக விடை பகர்ந்தார்கள்.

இவ்விபரம், பதாவா-கலீலீ, 1-வது பாகம், 79-வது பக்கத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

தகப்பனின்றி ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறந்த வரலாறு குர்ஆன் ஷரீபில் கூறப்படுகின்றது.

அவுலியாக்களின் கறாமாத்தில் மற்றொன்றையும் தருகின்றோம். பாருங்கள்!

ஹஜ்ரத் ஷாஹ் ஹஸன் அலீ அஜீமாபாதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வலுப்பமான வலியுல்லாஹ்வாகவும், பிர்தவுஸிய்யாத

தரீக்காவின் ஷைகாகவும் இருந்தார்கள். அவர்களது முரீதுகளில் ஒருவருக்கு வெகு காலமாகக் குழந்தையில்லை. அவரது மனைவி மலடியாக இருந்தாள். அவர் தமது இக்குறையை ஷைகு அவர்களிடம் முறையிட்டார். ஷைகவர்கள் அவரது மனைவியை கல்வத்திலிருக்கச் செய்து, கன்னிப் பெண் யாரும் அப்பக்கத்தில் போகக் கூடாதென்று தடைவிதித்திருந்தார்கள். கல்வத்திலிருந்த அப்பெண்மணியை வெளியிலிருந்து கொண்டு ஷைகவர்கள் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள். தற்செயலாய் ஒன்பது வயதுள்ள ஒரு சிறுமி, கதவு துவாரத்தின் வழியாய் நோக்கி பார்த்தாள். ஷைகவர்களின் கூர்மையான நோக்கு அந்தக் கன்னியின் மீதும் விழுந்தது. அந்தப் பெண்ணும் கர்ப்பவதியானாள். அந்தச் சிறுமியும் கர்ப்பமானாள். இவ்வற்புத வரலாறு, ‘‘மிர்ஆத்துல்-கவனைன்’’ என்ற நூலில், 443-வது பக்கத்தில் சொல்லப்படுகின்றது.

ஆகவே, எக்காலமும் அவுலியாக்களுக்கு கறாமாத்துச் செய்ய சக்தியுண்டு. மவுத்தானவர்களை ஹயாத்தாக்கவும் தத்துவமுண்டு. பிதாவின்றி பிள்ளையை வெளிப்படுத்தவும் வல்லமையுண்டு. அவுலாது பிள்ளைக்குட்டி பாக்கியம் வேண்டுமென்று அவர்களிடம் கேட்பதும் ஆகும்.

இவை எல்லாம் குர்ஆன், ஹதீது, பெரியார்களின் சரித்திரங்களைக் கொண்டு ஸ்திரமாகின்றன. இவற்றை மறுப்பவன் சத்தியத்தை மறுப்பவனாவான்.

## கப்ரு, ஜியாரத்து கூடுமா?

அல்லாஹ்வின் தனிப்பட்ட அருளுக்கும், அன்புக்கும் பாத்தியமான இப்பேர்ப்பட்ட நாதாக்களான அவுலியாக்கள், மஹான்கள் மாதவப் புரடர்களது கப்ரு ஷரீபுகளுக்குச் சென்று ஜியாரத்துச் செய்வது ஆண், பெண் இரு பாலருக்கும் ஸுன்னத்தும், முஸ்த்தஹப்புமாகும்.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே தங்களது அன்னையின் கப்ருக்குச் சென்று ஜியாரத்துச் செய்திருக்கின்றார்கள். மேலும் அவர்கள் உஹது யுத்தத்தில் ஷஹீதான ஸஹாபாக்களுடைய கப்ருகளுக்குப் போய் ஜியாரத்துப் புரிந்திருக்கின்றார்கள். ஸஹாபாக்களையும், மற்றவர்களையும் ஜியாரத்திற்குப் போகும் படியாக ஏவி இருக்கின்றார்கள். அங்ஙனமே ஸஹாபாக்களும் கப்ருகளுக்குச் சென்று ஜியாரத்துச் செய்திருக்கிறார்கள். இவ்விபரங்களைப் பற்றிய ஆதாரங்கள் ஸஹீஹுஸ்ஸித்தா ஹதீது கிரந்தங்களிலும், மிஷ்காத்து ஷரீபிலும் வந்துள்ளன. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களை நோக்கி, நான் உங்களைக் கப்ருகளை ஜியாரத்துச் செய்வதை விட்டும் ஏற்கனவே விலக்கி வந்தேன். (ஆனால்) இப்போது அவைகளை ஜியாரத்துச் செய்யுங்கள் (என்று ஏவுகிறேன்).

ஏனெனில், நிச்சயமாக அது மறுமை வாழ்க்கையை நினைவூட்டக் கூடியதாக இருக்கிறது'' என்று திருவாய் மலர்ந்தருளிய ஹதீது மிஷ்காத் ஷரீபிலும், ஸஹீஹுு முஸ்லிம், இபுனு மாஜா, திர்மிதீ அபூ தாவூது, நஸயீ முதலிய ஹதீது கிரந்தங்களிலும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

திரு நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களது இத் திருவாக்கைக் கவனிக்குங்கால் கபுருகள் இருக்கும் தலங்களுக்குச் சென்று ஜியாரத் செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்ட தெல்லாம் நல்ல மனதைப் பெற்று, நற்கிரியைகளை யனுஷ்டித்து, மோட்ச கதியை அடைய வேண்டும் என்பதற்கேயாம்.

''கபுருகள் மறுமையைப் பற்றி ஞாபகப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன'' என்ற நாயக வாக்கியமும் ''ஸஹீஹுு முஸ்லிம்'' கிரந்தத்தில் காணப்படுகின்றது.

எனவே கபுருகள் மறுமை வாழ்க்கையை நினைவூட்டக் கூடிய ஞாபகார்த்தச் சின்னங்களாகவே இருக்கின்றன என்பதை ஹதீதுகளை எண்பித்துக் காட்டுகின்றன.

எம்பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தான பின்பு, பெண்களுக்கரசி, ஸெய்யிதத்துனா ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்களது இல்லத்தின் அறையிலேயே தபன் செய்து அடக்கப் பெற்றார்கள். ஆயிஷா நாயகி ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் திறந்த முகத்துடன் அந்த அறைக்குச் சென்று தங்களது கணவர் பெருமான நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்களையும், வேறு இடத்தில் அடக்கமாகி இருக்கும் தங்களது சகோதரர் அப்துர் ரஹ்மான் ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்களது கபுருக்கும் சென்று ஸலாம் அவர்களை ஜியாரத்துச் செய்திருக்கிறார்கள். தங்களது அருமைத் தந்தை ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக்கு ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் வபாத்தானதும் அந்த அறையிலேயே அடக்கம் செய்யப்பட்ட பின்பும் திறந்த முகத்துடனேயே ஜியாரத்துச் செய்வது வழக்கம்.

ஸெய்யிதுனா உமர் பாரூக் ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் வபாத்தானதும் அவர்களும் அந்த அறையிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். அன்று முதல் அன்னையார் ஆயிஷா நாயகி ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் நாணத்துடன் முகத்தை மூடினவர்களாய் ''புர்கா''வுடன் சென்று ஜியாரத்துச் செய்துவரலானார்கள். இவ்விபரம் மிஷ்காத் ஷரீபில் கூறப்படுகின்றது.

மேலே கண்ட ஹதீதைக் கொண்டு தெளிவாகத் தெரிய வருவது யாதெனில்:-

“கபுருகளில் ஸாலிஹீன்கள் ஹயாத்துடனேயே இருக்கிறார்கள் என்பதும், அவர்களை யார் யார் ஜியாரத்துச் செய்கிறார்களோ அவர்களை அந்த ஸாலிஹீன்கள் நன்கு அறிகின்றார்கள் என்பதும் தெளிவாகப் புலனாகிறது.

இக்காரணம் பற்றியே அவர்களை ஜியாரத்துச் செய்பவர்கள் “அதபு” மரியாதையுடன் ஜியாரத்துச் செய்ய வேண்டியது கடமை, வாஜிபு என்றும் இவர்களின் பதவிக்குத் தக்கவாறு ஹயாத்தாயிருக்குங் காலத்தில் அவர்களுடன் ஒழுகி நடந்துக் கொள்வது போல, வ.்.பாத்திற்குப் பிறகும் அவர்களை ஹயாத்தானவர்களாகவே இருக்கிறார்கள் என்பதாகக் கருதி மரியாதையுடனும், பேணுதலுடனும் நடந்துக் கொள்வது அத்தியாவசியமாகின்றது.

ஏனெனில், “தன்னை ஜியாரத்துச் செய்யும் மனிதர்களுக்கு அவர்களின் ஒழுக்கம் பக்திக்குத் தக்கவாறு மகானின் உதவியுபகாரம் உண்டாயிருக்கும்” என்று ஷைகுல் ஹிந்து, அல்லாமா அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தர்ஜுமா மிஷ்காத் 1-வது பாகம் 656-வது பக்கத்தில் எடுத்தறிவிக்கின்றார்கள்.

மேலும் “ஸெய்யிதத்துனா, பாத்திமா நாயகி நாச்சி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் ஸெய்யிதுனா ஹம்ஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடைய கப்ரை ஜியாரத் செய்வதற்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போய் வந்தார்கள்” என்பதாக, ஷைகுல் இஸ்லாம் இமாம் பக்ருத்தீன் ஐனீ ஹனபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், உம்மத்துல்-காரீ-ஷரஹு ஸஹீஹுல் புகாரி” யில் உரைத்துள்ளார்கள்.

“ஆண், பெண் யாவரும் வலிமார்களுடைய கப்ரு, ஜியாரத்திற்காகப் போவது முஸ்த்தஹப்பாகும்” என்று பதாவாஹம்மாதிய்யா, பஹ்ருர்-ராயிக், “ஜாமிஉர்-ருமூஸ்”, “றத்துல் முஹ்தார்” முதலிய கிரந்தங்களும் கூறுகின்றன.

மேலும், “கபுருகளை ஜியாரத்துச் செய்கின்ற பெண்களை அல்லாஹ் ல.்.னத்துச் செய்கிறான்” என்ற ஹதீதை ஸனது-தலீல் பிடித்து சிலர் “பெண்கள் ஜியாரத்திற்குச் செல்லக் கூடாது என்று சொல்லுகிறார்கள்.” இந்த ஹதீதை ஊன்றுதல் பிடிப்பது ஸஹீஹ் ஆகாது. ஏனெனில, இந்த ஹதீது ளயீபு என்று இமாம் முஹத்திது இபுனு ஹஜர் அஸ்க்கலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு “தக்ரீபு என்ற கிரந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆகையால் இந்த ளயீபான ஹதீதைக் கொண்டு ஏவல், விலக்கல்களுக்கு அத்தாட்சி ஊன்றுதல் பிடிக்கப்படமாட்டாது” என்று அல்லாமா ஸெய்யிது அமீர் அலவீ அஜ்மீரீ அவர்கள் “இஹ்லாக்குல் வஹ்ஹாபீன்” என்ற நூலில் தக்க ஸனது ஆதாரத்துடன் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள். மேற்சொன்ன நூலை ஸுன்னத்து ஜமாஅத்து உலமாக்கள் பலர் சரி கண்டு ஒப்பம் வைத்துள்ளார்கள்.

“அவுலியாக்கள், உலமாக்கள் உடைய கபுருகளைப் பெண்களும் ஜியாரத்துச் செய்வது ஸுன்னத்தாகும், அது விலக்கப்பட்டதல்ல” என்று இமாம் ஷைகு முஹம்மது கலீலீ ஷாபியீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களுடைய “பதாவா கலீலீ” 2-வது பாகம், 251-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

இஸ்லாமின் ஆரம்ப காலத்தில், சில பெண்கள் ஜியாரத்திற்குச் செல்லும் சந்தர்ப்பங்களில் அங்கு நின்று ஒப்பாரி வைப்பதும், கூக்குரலிடுவதுமாக இருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில், நாயகம் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள், கபுருகளை ஜியாரத்துச் செய்யும் பெண்களை அல்லாஹ் சபிப்பானாக” என்று கூறினார்கள். பின்பு, நாயகம் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள், நான் முன்பு உங்களை ஜியாரத்தை விட்டும் விலக்கி வந்தேன். இப்போது நீங்கள் ஜியாரத்துச் செய்யுங்கள்” என்று உரைத்து ஜியாரத்தைப் பற்றி ஏவதல் செய்தார்கள். இந்த ஹதீதின்படி, முன்பு விலக்கிய அந்த ஹதீது (மன்ஸுஂகு) மாற்றப்பட்டதாகி விட்டது என்று முஹத்திதீன்கள், முபஸ்ஸிரீன்கள் விளக்கம் தருகிறார்கள்.

ஹஜ்ரத் அபூஹுஂரைறா ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களும், ஹஜ்ரத் இபுனு அப்பாஸ் ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்களும் எடுத்தறிவிக்கும் ஜியாரத்தின் ஏவதல் பற்றிய ஹதீதின் விளக்கத்தில், “நாயகம் ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்கள், “நீங்கள் ஜியாரத்துச் செய்யுங்கள் (பஜுஂருஹா) என்று சொன்னதில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து அடைய வளைத்தே சொல்லப்பட்டுள்ளது. இது கொண்டு ஆண், பெண் இருபாலருக்கும் ஜியாரத்துச் செய்வதற்கு உத்தரவு கிடைத்துள்ளது” என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விபரங்கள் “ஷரஹுஂபர்ஜக்”, அஷிஅத்துல்லமஆத் தர்ஜுஂமா மிஷ்காத் முதலிய கிரந்தங்களில் தரப்பட்டுள்ளன.

“ஆண், பெண் இருபாலரும் நாயகம் றஸுஂலுல்லாஹி ஸல்லல்லாஹுஂ அலைஹி வஸல்லம் அவர்களது மேலாம்பரமான, திரு ரவுளா, கபுரு ஷரீபை ஜியாரத்துச் செய்வது வலுப்பமான, குரபாத் (முடுகுதல்) உடைய புண்ணிய அமல்களில் நின்றுமுள்ளதாகும். மற்றுமுண்டான அன்பியா அவுலியாக்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்வதும் புண்ணியமான நல் அமல்களில் நின்றுமுள்ளதே” என்று இமாம் ஷம்சுத்தீன் றமலீ ரலியல்லாஹுஂ தஆலா அன்ஹுஂ அவர்கள், ஷாபியீ மதுஹபின் பிரபல்யமான, ஊன்றுதல் மிக்க, ஏடான, “நிஹாயத்துல் முஹ்த்தாஜ்-ஷரஹில் மின்ஹாஜ்” 2-வது பாகம், 250-வது பக்கத்தில் சொல்லியுள்ளார்கள். இவ்வாறே, ஷாபியீ மதுஹபின் பிரபல்ய மிக்க, ஊன்றுதலுடைய நூலான “இஆனத்துத்தாலிபீனிலும்” வந்துள்ளது.

குறிப்பிட்ட ஒரு தினத்தில் ஆணும், பெண்ணும் ஒன்றாகக் குழமியிருக்கும் நேரத்திலும் விலக்கலான கருமங்கள் முற்றும் நிறைந்திருக்கும் சந்தர்ப்பத்திலும் அவுலியாக்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்யலாமா? அல்லது ஜியாரத் செய்யலாகாதா? என்ற கேள்வி எழக்கூடும். அல்லாமா, இபுனு ஹஜர் ஹைத்தமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய பத்வாவில் இவ்வினாவிற்கு விடை காணப்படுகின்றது. அதன் சுருக்கமாவது:-

“குறிப்பிட்ட அந்நாள் முழுவதும் விலக்கலான கருமங்களை விட்டும் நீங்கினதாயிருப்பது ஒரு வகை. அந்நாள் முழுவதும் விலக்கலான கருமங்களைக் கொண்டதாக இருப்பது இன்னொரு வகை, அத்தினம், சில வேளை விலக்கலான கருமங்களை விட்டும் நீங்கினதாயும், சில வேளை விலக்கலான கருமங்களை கொண்டாதாயும் இருப்பது மற்றொரு வகை. இவ்விதமான சந்தர்ப்பங்களில், ஆகாத கருமங்களில்லாத நேரத்தில் ஜியாரத்துச் செய்வது மேல. ஆகாத கருமங்களுள்ள நேரத்தில் ஆணும், பெண்ணும் ஒன்றாகக் கலந்து நிற்பதை விட்டு விலகுவதும், ஆகாத செயல்களை வெறுப்பதும். சாத்தியமானமட்டில் அவற்றைத் தவிர்த்து தமது அமலைச் செய்வது ஆகும்” என்பதே.

ஆகவே இமாம் இபுனு ஹஜர் ஹைத்தமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய “பத்வா” ஜியாரத்துச் செய்யும் தலங்களில் விலக்கப்பட்ட கருமங்கள் நிகழக்கூடிய நேரத்தில் ஜியாரத்துச் செய்யும் விதத்தை விவரிப்பதுடன், ஜியாரத்து செய்வதை அனுமதிக்கிறது. மேலும் இதுபற்றி அல்லாமா, ஷைகு இபுனு ஆபிதீன் என்று பிரக்கியாதி பெற்ற முஹம்மது அமீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் “றத்துல்-முஹ்த்தாரில்” குறிப்பிட்டிருக்கும் விஷயமாவது:-

“ஜியாரத்துச் செய்யுமிடத்தில் விலக்கப் பெற்ற, ஆகாத கருமங்கள் இருப்பினும், ஆணும், பெண்ணும் கலந்திருப்பது போன்ற குற்றங்கள் நிகழ்வதாயிருப்பினும், நீ ஜியாரத்தை விட்டுவிட வேண்டாம்! இவை போன்ற காரணங்களுக்காகப் புண்ணியமான கருமங்கள் விடப்படமாட்டா. ஜியாரத்துச் செய்ய வேண்டியது மானிட்ன மீது பொறுப்பாகும். பிதுஅத்தானவற்றை வெறுக்க வேண்டும். இயலுமாயின், அவற்றை நீக்க வேண்டும் என்பதுதான் இமாம் இபுனு ஹஜருலியல்லாஹு தஆலா அன்ஹு ஹைத்தமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது பத்வாவின் கருத்தாகும்” என்று இவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

“ஒருவன் வலியுல்லாஹ் உடைய கபுருக்குப் போய் அவ்விடத்தில் சிறிது நேரம் தரிபட்டிருப்பதைக் கொண்டு அவனுக்குப் பிரயோஜனமுண்டு - ஜியாரத்து சன்மார்க்கத்தின் (ஷரஇய்யத்) நல் வழக்கமான ஆக்கப்பட்டிருப்பதன் மூல நோக்கம். அதில பற்பல நுட்பமானவைகளும், அந்தரங்கமானவைகளுமான (அஸ்ராரு) இரகசியங்களிருப்பதன் காரணத்தை முன்னிட்டேதான்” என்று இமாம் பக்ருத்தீன் றாஸீ ரலியல்லாஹு தஆலா

அன்ஹு அவர்கள் "மாதலிப்" எனும் கிரந்தத்தில் "ஜியாரத்தின் மூலம் அடையப்படக் கூடிய அரும்பெரும் பலன்" என்னும் அத்தியாத்தில் வரைந்திருப்பதாய், மக்கா முஅள்ளமாவின் முப்த்தியாக இருந்த அலலாமா இமாம். ஸெய்யிது தஹ்லானீ மக்கீ, ஷாபியீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "தக்ரீபுல் உஸுல்" 80-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

எவரொருவர் தமது தாய் தந்தையுடைய கப்ருகளை அல்லது அவ்விருவருள் ஒருவருடைய கப்ரை வெள்ளிக் கிழமைகளில் ஜியாரத்துச் செய்வாராயின், அவர் ஹஜ்ஜு செய்தவரைப் போலாவார்" என்பதாகவும்,

"மாதா பிதா இருவருள் ஒருவருடைய கப்ரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் யாராவது ஜியாரத்துச் செய்வாராயின் அவருடைய பிழைகள் பொறுக்கப்படுவதுடன் அவர் நன்றியுடைய நல்லடியாராகவும் எழுதப்படுகிறார்" என்பதாகவும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்துள்ளார்கள்.

மேற்கண்ட இரு ஹதீதுகளும் 'மிஷ்காத்-ஷரீபில்' கூறப்பட்டுள்ளன.

"கப்ருகளை ஜியாரத்துச் செய்வது பாவத்திற்குப் பிராயச் சித்தமாகும்" என்றும் ஹதீது வந்துள்ள விபரம் தஹ்தீபில்' சொல்லப்பட்டிருக்கிறது.

மேலேயுள்ள மூன்று ஹதீதுகளும், ஷாபியீ மதுஹபின் நூலாகிய, 'இஆனா', 2-வது பாகம், 166-வது பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நாயக வாக்குகளைக் கொண்டு தெரிய வருவது யாதெனில்,

சாமானியர்களான மாதா, பிதாக்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்வதே ஹஜ்ஜுக்கு ஒப்பானதாகும், பாவ நிவாரணமாகவும், பாபதோஷ பிராயச்சித்தமாகவும் ஆகிவிடுகிறது என்றிருந்தால், ஹக்கு தஆலா அளவில் பனாவாகி, இன்ஸான் காமிலான, பரிபூரணத்துவம் அடைந்த, அச்சந் தீர்ந்த, அவுலியாக்களுடைய கபுருகளை ஜியாரத்துச் செய்வதன் மர்த்தபா, பதவி, உன்னத அந்தஸ்து, தரஜா எவ்வளவு மகத்துவமிக்கதா யிருக்கவேண்டும்! அதுகொண்டு பாவிகளான ஜனங்களுக்கு எவ்வளவு உயர்ந்த பட்சம் பாவ மன்னிப்பும், பாவதோஷ நிவாரணமும் சித்தியாவிட வேண்டும்! இந்த உண்மையை நாம் நன்கு சிந்தித்து உணர வேண்டும்!

இவ்வாறாக அருமையான முடிவுத் தீர்ப்பை, அல்லாமா, ஷைகு யூசுபுன்னபஹானீ மிஸ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'ஷவாஹிதுல்-ஹக்கு' 253-வது பக்கத்தில் மிகத் தெளிவாக விளக்கித் தந்துள்ளார்கள்.

"நபிகள் கோமான், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், எவருடைய கப்ருமில்லாத முந்தின நபிமார்கள் ஜனங்களுக்கு

உபதேசஞ் செய்து கொண்டிருந்த மஸ்ஜிது குபாவுக்கு, ஒவ்வொரு வாரமும் சென்று ஜியாரத்துச் செய்து வந்திருக்கிறார்கள்'' என்ற விபரம் ஸஹீஹுல் புகாரீ' ஸஹீஹுல் முஸ்லிம், 'மிஷ்காத்' முதலிய ஹதீதுக் கிரந்தங்களில் காணப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட இந்த ஹதீதைக் கொண்டு, ''மகான்கள் இருந்த இடங்களையும் கூட ஜியாரத்துச் செய்வது முஸ்த்தஹப்பாகும்'' என்பதாக அல்லாமா, முல்லா அலிகாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'மிர்காத்' 1-வது பாகம் 448-வது பக்கத்தில் வரைகின்றார்கள்.

ஆகையால் மகான்கள் பிறந்த இடம், தொழுத இடம், கல்வத்சில்லா இருந்த இடம் முதலியவற்றை ஜியாரத்ததுச் செய்வதும் ஆகுமான காரியம்தான் என்பது விளங்க வருகிறது.

''கபுருகளை ஜியாரத்துச் செய்யுங்கள், (அவ்வாறு செய்வதை) பாவமென்றும், கெடுதியென்றும் கூறவேண்டாம்'' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உரைத்துள்ள ஹதீது, 'தப்றானியில்' வந்துள்ளது.

''பொதுவாக கபுரு ஜியாரத்தை வேண்டாம் என விலக்குவதானது குப்ரை உண்டாக்கும்'' என்பதாக, அல்லாமா, முல்லா அலிகாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'ஷரஹுஷ்-ஷிபா' 2-வது பாகம், 151-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

பொதுவாக ஜியாரத்தை விலக்குவது கொண்டு குப்ரு ஏற்படுமானால், 'பனாபில்லாஹ்' வாகி ஆண்டவனளவில் வாஸிலான நாதாக்களுடைய அவுலியாக்களுடைய கபுருகளை ஜியாரத் செய்யலாகாது எனக்குறிப்பாகத் தடுத்தால் எத்தகைய பயங்கரமான பாவமாக இருக்கவேண்டுமென்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

''ஜியாரத்திற்குப் போகக்கூடாது என எண்ணம் வைத்து விலக்குகிறவன் இஸ்லாத்தை விட்டு நீங்கியவனாகவும், அல்லாஹ்வுக்கும் றஸூலுக்கும் மாறுபாடு செய்தவனாகவும் ஆகிவிடுவான'' என்பதாக அல்லாமா குஸ்த்துலானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அல்லாமா முல்லா அலீகாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்கள் சொல்லியுள்ளார்கள் என்பதாக 'மவாஹிபுல்-லதுன்னிய்யா', 2-வது பாகம், 383-வது பக்கத்திலும், ஷரஹு ஷிபா' 2-வது பாகம் 151-வது பக்கத்திலும் வந்துள்ளன.

மேலும், இவ்வாறாக 'ஜவ்ஹர்-முனள்ளம்', 'ஷவாஹிதுல் ஹக்கு' 'மஷாரிக்குல் அன்வார், 'துரருஸ்-ஸனிய்யா-பீ-றத்தில்-வஹ்ஹாபிய்யா, முதலிய கிரந்தங்களும் கூறுகின்றன.

அவுலியாக்களையும் அவர்களது கபுருகளையும் ஜியாரத்துச் செய்வதையும், அவர்கள்பால் உதவி தேடுவதையும் இன்கார் செய்பவன் ஷைத்தானைப் போலாவான்'' என்பதாக, குர்ஆன் ஷரீபின் 11-வது ஸூரா 44-வது ஆயத்தின் வியாக்கியான விளக்கத்தில், தப்ஸீர் ரூஹுல்பயானில், 4-வது பாகம், 137-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

அவுலியாக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பதவிக்குத் தகுந்தாற்போல், ஆண்டவன்பால் முடகியிருப்பதில் நிச்சயமாகத் தரஜாக்களில் தாரதம்மியமுண்டு, அங்ஙனமே அவுலியாக்களுடைய தகுதிப்படிக்கு, அவர்களை ஜியாரத்துச் செய்கிறவர்கள் பிரயோஜனங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.'' என்று 'றத்துல்-முஹ்த்தார்', 1-வது பாகம், 665-து பக்கததில் சொல்லப்பட்டிருக்கின்றது.

''க.ஃ.பா, ஜம்ஜம், ஸபா, மர்வா, அரபாத், முஜ்தலிபா, மினா கல்லெறியுமிடங்கள், அன்பியாக்களின் கபுருகள் ஆகிய இத்தலங்களிலெல்லாம் துஆக்கள் அங்கீகாரமாகி ஒப்புக்கொள்ளப் படுகின்றன. இவ்விடங்களைப்ப போல் அவுலியாக்களின் கபுருகளிடத்திலும் 'துஆக்கள்' கபூலாகி ஏற்கப்படுவதை அனுபவபூர்வமாகக் கண்டு சோதிக்கப் பெற்றிருக்கின்றது'' என்பதாக 'தப்ஸீர் ரூஹுல் பயான்' 1-வது பாகம், 298-299-வது பக்கங்களில் கூறப்பட்டிருக்கின்றது.

ஹஜ்ரத், ஸுல்த்தானுல் ஆரிபீன், ஸெய்யிது அஹ்மது கபீர், ரிபாயி, ஆரிபு நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தங்களது கலீபாக்களுக்கும், முரீதீன்களுக்கும், முஹிப்பீன்களுக்கும், மற்றும் பெரியோர்களுக்கும், ''நீங்கள் பகுதாது ஷரீபுக்குப் போவீர்களாயின் முதன் முதலாக கௌதுல் அ.ஃ.ளம், அப்துல் காதிர், முஹிய்யித்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை ஜியாரத்துச் செய்த பின்புதான் மற்றக் காரியங்களைக் கவனிக்க முற்பட வேண்டும்'' என்று உபதேசம் செய்தவர்களாயாகி இருந்தார்கள்.

ரிபாயீ நாயகம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சமுகம் ஒரு நாள் ஒரு மனிதர் வந்து தாம் பகுதாதுவுக்குப் போக நாட்டம் கொண்டிருப்பதாயும் தனக்கு உபதேசம் செய்து பயண விடையளிக்குமாறும் வேண்டிநின்றார்.

அதற்கு ஆரிபு நாயகம் ரிபாயீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'நீங்கள் பகுதாதுக்குள் நுழைந்தால் நேரே சென்று ஷெய்கு அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைத் தரிசித்துக் கொள்வீராக. அவர்கள் ஹயாத்தாக இருக்குங் காலத்திலும் சரி, வபாத்தாகி விட்ட காலத்திற்கப்பாலும் சரி, அவர்களை ஜியாரத்துச் செய்யாமல் நீர் எந்தக் காரியத்தையும் செய்ய முற்பட்டு விடக்கூடாது. விலாயத்துடையவர் எவராயிருப்பினும் சரி, பகுதாதுக்குள் நுழைந்த போது ஷெய்கு அப்துல் காதிரு ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை ஜியாரத்துச் செய்யவில்லையானால், அவருடைய விலாயத்தைப்

பிடுங்கப்பட்டுப் போய்விடும் என்று அவர்களுக்கு அல்லாஹ்தஆலா வார்த்தைப்பாடு செய்துள்ளான்'' என்பதாக உபதேசித்து விடை கொடுத்தனுப்பினார்கள்.

இவ்விபரம் 'பஹ்ஜத்துல் அஸ்றார்' 238-வது பக்கத்திலும் 'தப்ரீஜுல் காத்திர்' 53-வது பக்கத்திலும் காணப்படுகின்றது. 'மனாகிபு-கௌதிய்யா'விலும் சொல்லப்பட்டுள்ளது.

இதைக் கொண்டு அறியப்படுவது யாதெனில், எந்த ஊருக்குச் சென்ற போதிலும் அந்த ஊரிலுள்ள பிரபல்யமான அவுலியாவின் தர்காவுக்குப் போய் ஜியாரத்தை முடித்து விட்டுத்தான் இதர காரியத்தில் ஈடுபட வேண்டும். அதிலே தான் பரகத்துண்டு என்பதே. ஆகவேதான் குதுபுமார்களெல்லோரும் கப்ரு ஜியாரத்தைப் பேணி அனுஷ்டித்து வந்திருக்கின்றார்கள் என்பதற்கு அவர்களது நடவடிக்கைகள், சரித்திரங்கள் சாட்சியங்கள் பகருகின்றன.

மேலும், ''ஸாலிஹீன்களாகிய அவுலியாக்களை ஞாபகஞ் செய்யுமிடத்தில் ஆண்டவனது றஹ்மத்து இறங்குகின்றது'' என்ற ஹதீதைக் குறிப்பிட்டு, ''அன்பியா, அவுலியர், ஸாலிஹீன், உலமாக்கள் ஆகியோர்களுடைய தர்கா ஷரீபை, கப்ரு ஷரீபை நாடி, புண்ணியம் தேடிப் பிரயாணம் செய்து ஸபர் போவது முஸ்த்தஹப்பாகும்'' என்று ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இஹ்யா உலூமுத்தீன் கிரந்தத்தில் 'பிரயாணத்தின் ஒழுங்கு முறைகள்' என்னும் அத்தியாயத்தில் கூறுகின்றார்கள்.

''ஜியாரத்தை முன்னிட்டு யாத்திரை செல்வது முஸ்த்தஹப்பு'' என்று ''றத்துல்-முஹ்த்தார்'' 1-வது பாகத்தில் ஜியாரத்தின் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

''ஜியாரத்திற்காக என்று பிரயாணப்பட்டுப் போவது முஸ்த்தஹப்பு'' என்று ஷைகுல் இஸ்லாம், அபூ அப்தில்லாஹ் தஹ்பீ, ஹாபிளு ஜைனுத்தீன் இறாக்கீ, ஹாபிளு இபுனு ஹஜர் அஸ்க்கலானீ, ஹாபிளு ஜலாலுத்தீன் ஸுயூத்தி, இமாம் தீபீ, இமாம் குஸ்த்துலானீ, இமாம் அப்துல்லாஹ் இபுனு ஸலாம் மக்கீ, இமாம் தகிய்யுத்தீன் ஸுப்கீ, இமாமுல் ஹரமைக் இமாம் கஸ்ஸாலீ, ஷைகு அப்துல் ஹக்கு முஹத்திதுத் திஹ்லவீ, காளில் குளாத் இமாம் பக்ருத்தீன் ஜனீ, இமாம் இபுனல் ஹுமாம், முல்லா அலிகாரீ, இமாம் மனாவீ, இமாம் இபுனு அப்துல் பர்ரு, இமாம் ஐக்கானீ, இமாம் இபுனு ஹஜர் மக்கீ, இமாம் புர்ஹானுத்தீன் ஹலபீ, இமாம் பைளாவீ, இமாம் இபுனல் ஹாஜ் ரலியல்லாஹு தஆலா அன்ஹும் ஆகிய மாபெரும் மேதைகளும், மற்றும் அநேகமான முஹத்திதீன்களும், முஹக்கிகீன்களும் கூறியுள்ளார்கள் என்ற விபரத்தை அல்லாமா ஸெய்யிது அமீர் அலவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'இஹ்லாக்குல்-வஹ்ஹாபீனில்' எடுத்துரைத்துள்ளார்கள்.

ஆகையால், இறை நேசச் செல்வர்களாகிய அல்லாஹ்வின் ஹபீபுகளாகிய நபிமார்களையும், வலிமார்களையும் ஜியாரத்துச் செய்வது றஹ்மத்தும், ஈடேற்றத்திற்கு, முக்திக்கு வஸீலாவுமாகும்.

எவனொருவன் என்னுடைய கபுரை ஜியாரத்துச் செய்தானோ அவனுக்கு ஷபாஅத்துச் செய்வது என் பேரில் வாஜிபாகிவிட்டது" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியுள்ளார்கள்.

இன்னமும், இமாம் அபூ ஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கப்ரு ஷரீபை இமாம்களுகம், உலமாக்களும் ஜியாரத்துச் செய்திருக்கிறார்கள். நாட்ட தேட்டமுடையவர்கள், இரட்சிப்பு கோரியவர்கள் அவர்களை வஸீலாவாக்கி ஜியாரத்துச் செய்து அந்தப்படி அவர்களைக் கொண்டு நாட்ட தேட்டங்களை நிறைவேறப் பெற்றுள்ளனர். ரட்சிப்பைப் பெற்றுள்ளனர்.

இதுபொலவே, இமாம் மூஸல் காளிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கப்ரு ஷரீபை ஜியாரத்துச் செய்வதைக் கொண்டும் நாட்ட தேட்டங்களை நிறைவேறப் பெற்றுள்ளனர். பலவிதமான அருட்பாக்கியங்களையும் அடைந்துள்ளனர்.

மேன்மைக்குரிய ஷாபியி மத்ஹபின் இமாம் ஹஜ்ரத் முஹம்மதுப்னு இத்ரீஸ் ஷாபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் இமாமுல் அஃளம் அபூஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களையும், ஹஜ்ரத் மூஸல்காளிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களையும் ஜியாரத்துச் செய்து, அவர்களிடமே வஸீலாத்தேடி, ஹாஜத்துக்களை நிறைவேற்றிப் பெற்றிருக்கின்றார்கள். இது ரிவாயத்தைக் கொண்டு தரிப்படுத்தப்பட்ட உண்மை.

இவ்வாறாகவே ஸர்தார், குத்புர் ரப்பானீ, கௌதுஸ் ஸமதானீ, முஹிய்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய முபாரக்கான கபுரு ஷரீபை பெரிய உலமாக்களும், குத்புமார்களும், அவுலியாக்களும் நாடித் தேடி ஜியாரத்துச் செய்து தங்களது நாட்ட தேட்டங்கள் கைகூடப்பெற்றும், அருளை அடையப் பெற்றும் பாக்கியமடைந்துள்ளனர்.

இன்னும் ஸெய்யிதுனா குத்புல் மஜீது ஸெய்யிது அப்துல் காதிர், ஷாகுல் ஹமீது, நாகூர் மீரான் ஸாஹிபு நாயகம் ஆண்டகை ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய புண்ணிய கபுரு ஷரீபை பெரும் பெரும் உலமாக்களும், வலிமார்களும், மஷாயிகுகளும், குத்புகளும், மெஞ்ஞானிகளும், தவயோகிகளும் ஹாஜத்து உடையவர்களும் ஜியாரத்து செய்வதைக் கொண்டு கோரிக்கைகளெல்லாம் நிறைவேற்றப் பெற்று அருட்பாக்கியங்களை அடைந்துள்ளனர்.

மாதிஹுர் ரஸுல், ஷெய்கு, ஸதக்கத்துல்லாஹில் காஹிரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், ஹஜ்ரத் கௌதுல் அ.்.ளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது ஜியாரத்தை நாடி பகுதாதுக்குச் சென்று 'யாகுத்பா' மாலையை சமர்ப்பணம் செய்தும், நாகூர் ஆண்டவர்கள் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நாடி நாகூருக்கு வந்து ஜியாரத்துச் செய்து, யாஸய்யிதீ ஷெய்கீ வஸத்ரஸ் ஸாதிரீ'' மாலையை சமர்ப்பணம் செய்தும் வஸீலாத் தேடி இருக்கின்றார்கள். கார்மானம் தேடி இருக்கிறார்கள், இரட்சிப்பு தேடி இருக்கிறார்கள், ஈருலகின் நற்பயனுக்கு உதவி தேடி இருக்கிறார்கள்.

இத்தகைய உண்மைகளை உணரமுற்படாமல் ஒரேயடியாய் ஜியாரத்துக் கூடவே கூடாது என்று பொதுவாக யாராகிலும் கூறிவிலக்குவார்களானால் அச்சொல்லுக்கு எவ்விதத்திலும் மதிப்பில்லை என்பது திண்ணம். உண்மையை மறைத்து அவ்விதம் கூறுபவர்கள் மு.்.த்தஸிலா, வஹ்ஹாபீ, காதியானீ கூட்டங்களிலுள்ளவர்கள் என்பதிலும் சந்தேகமில்லை. உண்மையை உணர்ந்தும் வேண்டுமென்றே மனமுரண்டாக அங்ஙனம் மறுப்புக் கூறுபவர்கள் அல்லாஹ்வுக்கும், ரஸுலுக்கும் மாறு செய்தவர்களென்பதிலும் ஐயமில்லை.

## ஜியாரத்தின் ஒழுங்குமுறை

ஜியாரத்திற்காகச் செல்லும் ஆண், பெண் இருபாலரும் ஷரீஅத்தைப் பேணி, ஒழுங்கு மரியாதையோடு, நாடிவந்த காரியத்தை முடித்துக் கொண்டு திரும்புதல் வேண்டும். ஒழுங்கு தவறி நடப்பவர் பயனைப் பெறாது போவதுடன், அம்மகான்களின் கோபப் பார்வைக்கும் ஆளாக நேரிடும். ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிக கவனமாயிருக்க வேண்டும். உத்தமரொருவர் தாம் பார்க்கப் பாத்தியதையற்ற பெண்மணியின் முகத்தைக் கண்டு நாணமுறுவது போலு, முகந்திறந்து ஜியாரத்துச் செய்யும் பெண்மணிகளைக் கண்டு வலிமார்கள் வெட்கமடைகின்றார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உம்மஹாத்துல் மூமினின், ஹஜ்ரத் ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் பெண்களுக்கோர் அழகிய முன்மாதிரியாக இருக்கின்றார்கள். ஜீவியமுள்ள மனிதர் முன்பு நடந்து கொள்வது போன்றே வபாத்தாகிவிட்டவர்களது முன்பும் நடந்து காண்பித்து அன்னாரது உயர்நடவடிக்கைப் பெண்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

'அன்பியா, அவுலியாக்களை ஜியாரத்துச் செய்யும் போது அவர்களை முன்னோக்காமல், அவர்களது முகங்களின் பக்கம் தமது முதுகுப்பக்கம் இருக்கும்படியாக, கிபுலாவை முன்னோக்கியே துஆ ஓதவேண்டுமென காலஞ்சென்ற, நஜ்து அரசர் அப்துல் அஜீஸ் இபுனு ஸவூதியின்

நடத்தையைச் சிலர் முன்மாதிரியாகக் கொண்டு பேசுகின்றனர். அவர்கள், மக்கா, மதீனாவிலும் தற்போது இங்ஙனமே நடைபெற்று வருகிறது என்பதாகவும் எடுத்துக் காட்டிப் பேசுகின்றனர். இவை, ஸஹ்ஹாபியத்தான செயல்களாகும்.

'ஜியாரத்துச் செய்யும்போது கப்ரு ஷரீபை முன்னோக்கியும், கிபுலாவின் பக்கம் முதகைத்திருப்பியும் அதபுடன் நிற்க வேண்டும்'' என்பதுவே, மத்ஹபுகளை ஏற்படுத்தித் தந்துள்ள நான்கு இமாம்களின் வழிமுறையாகும்.

''கப்ருகளை ஜியாரத்துச் செய்யும்போது கிபுலாவை முன்னோக்கியே செய்ய வேண்டுமென்று வரும் ரிவாயத் ரத்துச் செய்யப்பட்டதாகும்'' என்பதாக 'பத்ஹுல்-கதீர்', 2-வது பாகம், 336-வது பக்கத்திலும், 'ஸர்க்கானீ', 8-வது பாகம் 305-வது பக்கத்திலும், 'ஷவாஹிதுல்-ஹக்கு 46-வது பக்கத்திலும், 'தூருஸ்ஸனிய்யா-பீ-றத்தி-அஹ்லில் வஹ்ஹாபிய்யா'' கிரந்தத்திலும் எடுத்துரைக்கப் பெற்றுள்ளது.

ஹஜ்ரத் றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய புனித ரவுளாவில் கபுரு ஷரீபை முன்னோக்கி நின்று, கிபுலாவின் பக்கம் முதகைத் திருப்பியவண்ணம், **அஸ்ஸலாமு அலைக்கும் அய்யுஹன்னபிய்யு-வறஹ்மதுல்லாஹி-வபரகாத்துஹு** என்று மரியாதையுடன் ஸலாம் சொல்லி செய்வதே ஸுன்னத்தாகும்'' என்பதாக, இபுனு உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத்து வந்துள்ளது, என்று இமாமுல் அஃளம் அபூஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியுள்ளார்கள். இவ்விபரம் 'காயத்துல் அவ்த்தார்-தர்ஜுமா துர்ருல் முக்த்தார்' 624-வது பக்கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

''அனஸ் இபுனு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை ஜியாரத்துச் செய்யும் போது, அவர்களது புனித கபுரு ஷரீபை முன்னோக்கி, தொழுகையில், நிற்கின்ற நிலை போல நின்று. இடது கைமீது வலது கையை வைத்து கைகட்டி அதபுடன் ஜியாரத்துச் செய்தார்கள்'' என்ற வாசகம், 'ஷரஹுஷ்ஷிபா' 152-வது பக்கத்திலும், இஹ்யா உலூமுத்தீன்' 4-வது பாகம், 419-வது பக்கத்திலும் காணப்படுகின்றது.

''இந்த அதபு ஒழுங்குப்படி ஜியாரத்து செய்வது முஸ்த்தஹப்பாகும்'' என்று நான்கு மதுஹபுடைய உலமாக்களும் சொல்லியுள்ளார்கள் என்பதாக, 'ஸீரத்துன்-னபவிய்யா', 'வபாவுல்-வபா', ஜவ்ஹர்-முன்ளம்', பதாவா-ஆலம்கீர், ஐதுபுல்-குலூப், பஸ்லுல்-கிதாப், பத்ஹுல்-ஹக் ஆகிய கிரந்தங்கள் கூறுகின்றன.

பக்தாது நகரில் ஆட்சி புரிந்து அப்பாஸிய்யா கலீபா அபூ ஜஃபர், மன்ஸூர் தானீ, ஹஜ்ஜு செய்து விட்டு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஜியாரத்தை நாடி மதீனாவுக்குச்

சென்றார். அவ்வமயம், இமாம் மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மஸ்ஜிதுன் னபவிய்யில் வீற்றிருப்பதைக் கண்டு அவர்களை நோக்கி அல்லாஹ்வின் அடியாரே! இவ்வமயம் நான் கிபுலாவை முன்னோக்கி வேண்டுதல் செய்ய வேண்டுமோ? அல்லது றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முன்னோக்கி வேண்டுதல் புரியவேண்டுமா?'' என்று வினவினார்.

அதற்கு இமாம் மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ''உங்களின் முகத்தை அவர்களை விட்டும் திருப்பிவிட வேண்டாம். அவர்கள் உங்களுக்கும், பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் அல்லாஹ்தஆலா அளவில் வஸீலாவாய் ஆக்கப் பெற்றவர்கள். ஏனவே, அவர்களை முன்னோக்கி நின்றே வேண்டுதல் செய்து அவர்களைக் கொண்டு வஸீலாப் பிராத்தனை தேடுங்கள்'' என்று விடைப்பகர்ந்தார்கள்.

இவ்விபரம், 'ஷவாஹிதுல்-ஹக்' 48-வது பக்கத்திலும் 'மஷாரிக்குல்-அன்வார்', 55-வது பக்கத்திலும் வந்துள்ளது.

''ஜியாரத்துச் செய்கிறவர்கள் கபுராளிகளின் முகத்தை முன்னோக்கி தொழுகையில் கைகட்டுவது போல கைகட்டி, ஒழுங்குமரியாதையுடன் நின்று, ஸலாம் கூறி, குர்ஆனிலிருந்து அல்ஹம்து, 'யாஸீன்' முதலிய ஸூறாக்களை ஓதி கை ஏந்தி துஆக் கேட்டு ஜியாரத் செய்ய வேண்டும்'' என்பதாக, துர்றுல் முன்ளம்', இதன் ஷரஹு ஸூல்குல்-முஅள்ளம்', ஷரஹு மனாகில் பலாஹ், 'றத்துல்-முஹ்த்தார்', குன்யத்துத் தாலிபீன்', ஈலாஹில்-மனாஸிக்கு, பத்ஹுல் கதீர் ஷவாஹிதுல்ஹக் மஷாரிக்குல் அன்வார் முதலியன கூறுகின்றன.

''றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மேன்மையான ரவுலா ஷரீபுக்கு ஆஜராவீர்! தலைமாட்டுச் சுவற்றின் மூலையிலிருக்கும் தூணுக்கு மூன்று நான்கு முழத் தூரத்திற்கப்பால் மரியாதையுடமன் நிற்பீர்! குிபுலாவின் பக்கம் முதகைத் திருப்பி, இடது புறம் சற்றுச் சாய்வாக நிற்பீர்! அப்போது அவர்களது திருமுகம் இருக்கும் பக்கம் நேராக முன்னோக்கியதாகும். மரியாதையுடனும், பரிபூரணமான பயபக்தியுடனும் நின்று கொள்வீர்! மேன்மைமிக்க இந்தத்தலம் மரியாதையும், பயபக்தியும் உள்ள இடமாகையால் அதிகச் சமீபம் நெருங்காதீர்! சுவற்றைத் தொடாதீர்! கபுரு ஷரீபில் கிபுலாவின் பக்கம் தங்களது முகத்தை திருப்பி இருக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருமுகத்தை ஞாபகப்படுத்தி, 'அஸ்ஸலாமு அழைக்க யாறஸூலல்லாஹ்' என்று கூறுவீர்!' என்பதாக, கபுரை முன்னோக்கி ஜியாரத்துச் செய்யக் கூடாது என வழக்கடிக்கும் கூட்டத்தார்கள் தங்களது பெரிய இமாம், குத்பு என்று ஏற்று ஒப்புக் கொண்டிருக்கும் மௌலவி றஷீது அஹ்மது கொங்கோஹீ என்பவர், 'ஜிப்தத்துல்-மனாஸிக்' என்ற நூலில் 144-வது பக்கத்தில், ஜியாரத்துச் செய்யும் முறைபற்றி பேசுமிடத்தில் விளக்கியுள்ளார்.

மறுப்புக்கூறுபவர்கள் குருவுக்கும் மிஞ்சிய சீடர்கள் போலும்!

“மகான்களின் ஹயாத்தில் எவ்வாறு ஒழுங்கு மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டுமோ அவ்வாறே அவர்களின் வபாத்திற்குப் பிறகும், அவர்களை ஜியாரத்துச் செய்யும் போது ‘அதபு’, ஒழுக்கம், மரியாதை பேணுவது கடமை வாஜிபாகும்” என்பதாய், அஷிஅத்துல்-லமஆத், 1-வது பாகம், 636-வது பக்கத்தில் ஷைகு அப்துல் ஹக்கு, முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

ஆகவே, ஜியாரத்துச் செய்வது ஸுன்னத் தென்பதும் ஒழுங்கு, மரியாதை பேணுவது வாஜிபு எனத் தெரியவருகிறது.

ஜியாரத்துச் செய்யும் போது அனுஷ்டிக்கப்பட வேண்டிய அதபு, ஒழுக்கநிலை பற்றி, ‘பதாவா ஆலம்கீரில்’ சொல்லப்பட்டுள்ள விபரம் வருமாறு:-

“ஜியாரத்திற்குள்ள மேலான முறை: முதன் முதலில் தமது வீட்டில் இரண்டு ரக்அத்து நபில் தொழவேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும், ‘அல்ஹம்து’ ஸூரத்தும், ஆயத்துல் குர்ஸீயம் ஒவ்வொரு விடுத்தமும், குல்ஹுவல்லாஹு அஹது, ஸூரத்து மூன்று விடுத்தங்களும் ஓதி இரண்டு ரக்அத்துத் தொழுது முடிந்ததும் அதன் தவாபைக் கபுராளிக்கு அளித்துவிட வேண்டும். இந்த அமலைக் கொண்டு இறைவன் அந்தக் கபுரில் ‘நூர்’ என்னும் பிரகாசத்தை உண்டு பண்ணுவதுடன், ஜியாரத்துச் செய்கின்றவர்களுக்கும் கிருபை செய்கின்றான். இதற்கப்பால் ஜியாரத்தின் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். வழியில், அவசியமற்றதும் பிரயோஜனமற்றதுமான எந்தக் கருமத்தையும் செய்யலாகாது. உலக சம்பந்தமான எந்த சம்பாஷனையிலும் பராக்காகக் கூடாது. மக்பறாவுக்கு வெளியே பாதரட்சைகளைக் கழற்றிவிடவேண்டும். கபுரின் வலது பக்கத்தில் கிபுலாவின் பக்கம் முதுகைத் திருப்பி, கபுராளியின் முகத்தை நோக்கி நின்று ஸலாம் கூறி ‘பாத்திஹா’ முதலியன ஓத வேண்டும்” என்பதாம்.

குர்ஆன், பாத்திஹா, ஸலவாத்து முதலியன ஓதி அவற்றின் தவாபை கபுராளிகளுக்குச் சேர்த்து வைப்பதில் இருவித கருத்துக்களுண்டு.

(1) அவாம்களாகிய மவுத்தாக்களுக்கு அவை ஸதக்கா உடைய ஸ்தானத்திலிருக்கின்றது. அவற்றின் பொருட்டால் கபுராளிகளுக்கு அதாபு இலேசாகின்றது. ஈடேற்றம், ஸலாமத்துண்டாகின்றது.

குழந்தைகள் பெற்றோர்களையும், இயலாத்தன்மையுள்ள பெற்றோர்கள் வாலிப மக்களையும் எதிர்பார்ப்பதே போல நாமனுப்பும் இத்தகைய கத்தம், பாத்திஹா, ஸதக்கா முதலானவற்றின் தவாபுகளை அந்தக் கபுராளிகள் எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றார்கள்.

(2) அன்பியா, அவுலியாக்களுக்கு கத்தம், பாத்திஹா, ஸலவாத்து, முதலானவைகளை (ஓதி அவற்றின் தவாபை அவர்களுக்குச் சேர்த்து வைத்தலானது 'துஹ்பா' எனும் காணிக்கை செலுத்துவதாகும். அவற்றின் பொருட்டால் அல்லாஹ் அருள்புரிகிறான். தேவைகளை நிறைவேற்றித் தருகிறான்.

இத்தகைய 'துஹ்பா'க் காணிக்கைகளை அவர்கள் எதிர்பார்த்தவர்களல்லர். எனினும், அங்ஙனம் செய்வது அவர்களைக் கண்ணியப் படுத்துவதாகும். ஆகவே, அன்பியா அவுலியாக்கள் பேரால் கத்தம், பாத்திஹா, ஸலவாத் முதலியன ஓதுவது துஹ்பாக் காணிக்கையாகும்.

"கணிகள் நிறைந்த மரக்கொப்பு, தாழ்மையாகத் தலை கவிழ்ந்து எங்ஙனம், பூமியை நோக்கி வளைந்து கிடக்கின்றதோ அங்ஙனமே, அறிஞர்கள் தாழ்ச்சி கொண்டு நடப்பார்கள்" என்று ஷைகு முஸ்லிஹுத்தீன், ஸஅக்தீஷீராஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்குள் 'கரீமா'வில் உதாரணங் கூறியுள்ளார்கள்.

எனவே, ஜியாரத்தின் போது தாழ்மையையும், கீழ்படிதலையும் அனுஷ்டிப்பவர்கள் அதற்குரிய சன்மானத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

ஆகவே, ஜியாரத்துக்குச் செல்லக்கூடியவர்கள் தாங்கள் அனுஷ்டிக்க வேண்டிய அதபு, ஒழுக்க முறைகளைக் கடைபிடிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

## கபுரை முத்தமிடலாமா?

"அவுலியாக்களுடைய ஜியாரத்திற்காகச் செல்பவர்களில் சிலர் கபுரையோ, அல்லது வாசற்படியையோ முத்தமிடுகிறார்கள். இதுபற்றி ஒரு கூட்டத்தார்கள் இன்கார் செய்கின்றார்கள். இன்கார் செய்வதற்கு இடமில்லை. ஏனெனில, அவ்வாறு கபுரை முத்தமிடுவதும், வாசற்படியை முத்தமிடுவதும் ஆகுமான காரியங்கள் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன.

"ஹஜருல் அஸ்வது கல்லை முத்தமிடுவதை ஆதாரமாகக் கொண்டு ஸாலிஹீன்களுடைய கபுருகளை பரக்கத்துடைய நாட்டத்தோடு முத்தமிடலாம் என்று ஆரிபீன்களான உலமாக்கள் சிலர் கூறுகின்றனர்" என்பதாய், இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'தவஷீஹ்' எனும் நூலில் குறிப்பிடுகிறார்கள் என்பதாக 'இஹ்லாக்குல்-வஹ்ஹாபிய்யீன்' என்ற நூலில் வந்துள்ளது.

ஹஜருல் அஸ்வதைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஹஜ்ரத் அமீருல் மு.்.மினீன், உமர் பாரூக் ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ அவர்கள், ஹஜருல் அஸ்வதை முத்தமிட்டுக் கொண்டு, பின்பு, சந்தேகமின்றி நீ ஒரு கல். உன்னை முத்தமிடுவதால், நீ நன்மை செய்வதுமில்லை. முத்தமிட்டால் நீ தீமை செய்வதுமில்லை. நபி கரீம் ஸல்லல்லாஹுௗ அலைஹி வஸல்லம் அவர்கள் உன்னை முத்தமிடாதிருந்தால் நான் உன்னை முத்தமிட்டிருக்கமாட்டேன்'' என்று கூறினார்கள்.

இதைக் கேட்ட ஹஜ்ரத் அலி கர்ரமல்லாஹுௗ வஜ்ஹஹுௗ அவர்கள், ''(மஹ்லன்! யா உமர்) உமர் அவர்களே! சற்று நிதானியுங்கள்! நூலைப் பேணுங்கள்! முத்தமிடுவதால் இந்தக் கல் நிச்சயமாகப் பிரயோஜனத்தைக் கொடுக்கின்றது, முத்தமிடாவிட்டால் நஷ்டத்தைக் கொடுக்கின்றது'' என்று உரைத்தார்கள்.

அவர்களது அந்தக் கூற்றுக்கு விளக்கம் தரும்படியாக உமர் ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ அவர்கள் கேட்கவே, அலி ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ அவர்கள் பின் வருமாறு விளக்கம் சொன்னார்கள்.

(இல்லா மனித்தகத-இன்தர் ரஹ்மானி-அஹ்தா)

''ரஹ்மானிடம் அறுதிமானம் எடுத்துள்ளவனைத் தவிர'' என்று திருமறையில் இறைவன் கூறியுள்ளதன் கருத்து யாதெனில், ஆன்ம உலகில் நாம் அல்லாஹ்விடம், அறுதிமானம் செய்த உறுதிப் பிரமாணம் இந்தக் கல்லின் வாயினுள் வைக்கப்பட்டிருக்கிறது.

(அந்த அறுதிமான வார்த்தைப்பாடு, எழுதப்பட்டுள்ள சத்திய நாமாவையே நாம் முத்தமிடுகிறோமேயல்லாது கல்லையல்ல, நாம் அங்கு காட்டுகின்ற மரியாதை ஒழுக்கம் யாவும் கல்லுக்காக அல்ல.

''ஹஜருல் அஸ்வது உலகில் அல்லாஹ்வின் கரம் (யமீனுல்லாஹி) என்பதாக நாயகம் ஸல்லல்லாஹுௗ அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

உமர் அவர்களே! இதற்கப்பாலும் தாங்கள் இதை ஒரு சாதாரணக் கல்தானே என்றே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் போலும்!'' என்று அலி ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ உரைத்து விளக்கினார்கள்.

இவ்வகமியம் உமர் ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ அவர்களுக்கு வெளிப்பட்டதும், ''அலி இல்லாவிட்டால் உமா ஹலாக்காகி இருப்பார்'' என்று உமர் ரலியல்லாஹுௗ தஆலா அன்ஹுௗ கூறினார்களாம்.

இவ்வாறான விபரம், மிர்காத்-ஷரஹுமிஷ்காத் 3-ம் பாகம் பக்கம் 214. ‘உம்மத்துல்-காரீ-பீ-ஷரஹி-ஸஹீஹில்-புகாரீ’ பாகம்-2, பக்கம் 266, ‘இர்ஷாதுஸ் ஸாரீ-ஷரஹீ-ஸஹீஹில் புகாரீ’, பாகம்-3, பக்கம் 156 ஆகியனவற்றிலும் மற்றும் பத்ஹுல்கதீர், ஷரஹுல் இனாயா அலல் ஹிதாயா முதலிய பிக்ஹுக் கிரந்தங்களிலும் காணலாம்.

“கியாமத்து நாளில் ஹஜருல் அஸ்வதுக்கு இரு கண்கள் இருக்கும். அவற்றைக் கொண்டு பார்க்கும். நாவும் இருக்கும். தன்னை முத்தமிட்டவர்களைப் பற்றி அதைக் கொண்டு சாட்சி பகரும்” என்று நபிமணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உரைத்துள்ளார்கள் என்பதாக இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு இபுனுமாஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு, பைஹக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு இருவர்களும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.

மேலும், “அது தன்னை முத்தமிட்டவர்களைப் பற்றி சாட்சி கூறி அவர்களுக்காக ஷபாஅத்தும் செய்யும்” என்று உம்முல் மு.ஃ.மினீன், ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களைக் கொண்டு, தபறானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்” என்பதாக, அல்லாமா, காஜீ உபைதுல்லாஹ் ஸாஹிபு மதறாஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், துஹ்பத்துலஸ் ஸாயிரீனில் கூறியுள்ளார்கள்.

ஆகவே மானிடவர்க்கத்தின் அஹ்துநாமா, சத்திய உறுதிப்பாட்டு ரிக்கார்டைத் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஹஜருல் அஸ்வதை முத்தமிடுவதை ஆதாரமாகக் கொண்டே, அந்தக் கல்லையும் விட மேன்மையான இன்ஸான் காமிலைத் தன்னகத்துள்ளே அடக்கிப் பெற்றிருக்கக் கூடிய ‘கபுரை’ பரக்கத்தை நாடி முத்தமிடுதல் ஆகுமான காரியமே என்பதுதான் ஆரிபீன்களுடைய சொல்லாகும். இக்கல்லைக் கொண்டு நன்மை, தீமை உண்டாகக் கூடியதாகயிருந்தால் அவுலியாக்களின் கபுருகளை நல்லெண்ணத்துடனும், தூய மனதுடனும் பரக்கத்தைக் கருதி முத்தமிடுவதில் பிரயோஜனம் இல்லாமலில்லை என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

மர்வான் மதீனமா நகரில் அதிகாரியாக இருந்த காலத்தில் ஒரு சம்பவம் நடைபெற்றது. ஸஹாபிகளில் ஒருவரான அபூஐபுல் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கபுரு ஷரீபின் மீது தமது முகத்தை வைத்துப் புரட்டிக் கொண்டிருப்பவராக மர்வான் கண்டார்.

உடனே, அவர் அந்த ஸஹாபியின் பிடரியைப் பிடித்துக் கொண்டு, “நீர் என்ன காரியம் செய்கறீா என்பதை அறிவீரா” என வினவினார்.

அந்த ஸஹாபி ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்கள், மர்வானின் பக்கமாகத் திரும்பி, ஆம்! நான் அறிவேன்! மண்ணும் கல்லும் இருக்குமிடத்திற்கு நான் வரவில்லை. றஸுܼலுல்லாஹி ஸல்லல்லாஹுܼ அலைஹி வஸல்லம் அவர்களது சன்னிதானத்திற்கு வந்திருக்கிறேன்'' என்று கூறினார்கள்.

இந்நிகழ்ச்சியைப் பற்றிய ஆதாரம் இமாம் அஹ்மது இபுனு ஹம்பல் ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்களது 'முஸ்னது', 5-வது பாகம் 423-வது பக்கத்தில் காணப்படுகின்றது.

“நபி பிரான் ஸல்லல்லாஹுܼ அலைஹி வஸல்லம் அவர்கள் வீற்றிருந்து குத்பா ஓதிக் கொண்டிருந்து 'மிம்பர்' படியை, அப்துல்லாஹ் இபுனு உமர் ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்கள் தமது கையால் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்'' என்பதாய் ஷரஹுܼஷிபா 153-வது பக்கத்தில் சொல்லப்படுகின்றது.

“ஸையிதுனா அல்இமாம் ஹஸன், ஸையிதுனா அல்இமாம் ஹுܼஸைன் ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ இருவர்களும் வாகனங்களில் அமர்ந்திருப்பதைக் கண்ட அப்துல்லாஹ் இபுனு உமர் ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்களும் மற்றும் சில ஸஹாபாக்களும் அவ்விருவரும் கால்களை தொட்டுக் கொண்டிருந்த அங்கவடிகளை முத்தமிட்டார்கள்'' என்ற விபரம் 'பஸ்லுல்-கிதாப்', 77-வது பக்கத்தில் வரையப்பட்டிருக்கின்றது.

“தாய் தந்தையர்களுடைய கபுருகளை முத்தமிடுவது ஆகும் என்பதாய், பதாவா ஆலம்கீர், கன்ஜுܼல் இபாது ஷரஹுܼ மிஷ்காத் ஆகியவற்றில் வந்துள்ளது என, அல்லாமா முப்தீ மஹ்மூது ஸாஹிபு மதறாஸீ ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்கள் ஸுܼல்குல் முஅள்ளம் என்ற நூலில் கூறுகின்றார்கள். மேலும், இமாம் பைஹக்கீ ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்களைக் கொண்டு, அல்லாமா ஷைகு அப்துல் ஹக் முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹுܼ தஆலா அன்ஹுܼ அவர்கள், 'தர்ஜுܼமா-மிஷ்காத்' 1-வது பாகம், 633-வது பக்கத்தில் ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள்.

நபி நாயகம் ஸல்லல்லாஹுܼ அலைஹி வஸல்லம் அவர்கள் சமுகத்தில் ஒருவர் வந்து, “நாயகமே! சுவர்க்கத்து வாசல்படியையும், ஹுܼருல்ஈன் பெண்ணையும் முத்தமிடுவதாக நான் சத்தியஞ் செய்து கொண்டேன். இதற்குப் பரிகாரமென்ன?'' என்று விண்ணப்பித்தார்.

அதற்கு, நாயகம் ஸல்லல்லாஹுܼ அலைஹி வஸல்லம் அவர்கள், “உனது தாயுடைய காலையும், தகப்பனுடைய முகத்தையும் முத்தமிட்டுக்கொள!'' என்று சொன்னார்கள்.

“தாய், தந்தை இல்லாவிட்டால் என்ன செய்வது?'' என்றார் அவர்.

“உனது தாய் தந்தையர்களுடைய கபுருகளை முத்தமிடுவாயாக” என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் நவின்றார்கள்.

மீண்டும் அவர், ‘அவர்களுடைய கபுருகளின் அடையாளங்களும் காணப்படாவிட்டால் என்ன செய்வேன்” என்று கேட்டார்.

அதற்கு, நபிபெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “இரண்டு கோடுகளைக் கீறி அவற்றில் ஒன்றை அன்னையின் கபுராகவும், மற்றொன்றை தந்தையின் கபுராகவும் எண்ணிக் கொண்டு நீ முத்தமிடு! உமது சத்தியத்தை முறிக்காதீர்!” என்றருளினார்கள்.

இந்த ஹதீது ‘கன்ஜுல்-இபாது’, ‘தில்க்க-அஷ்ரத்துன்-காமிலா’ ஆகிய நூற்களில் வருகின்றதாக, தொண்டி, காஜி, மவுலானா மவுலவி, முஹம்மது இஸ்மரியில் ஸாஹிபு அவர்கள் உடைய பத்வாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த பத்வாவைச் சரிகண்டு, நாகப்பட்டினம், அல்லாமா அபுல்கைர், அஹ்மது இபுறாஹீம் அவர்களது தந்தை, மௌலானா மௌலவி ஸெய்யிது முஹம்மது இபுனு காஜா முஹம்மது, நாகூர் கனி தம்பி என்றழைக்கப்படும், மௌலானா மௌலவி முஹம்மது ஆலிம் ஸாஹிபு, நாகூர் தர்கா உஸ்தாது, அல்லாமா நெயினார் முஹம்மது, ஸாஹிபு ஆகியவர்களும் ‘கபுரை முத்தமிடுதல் ஆகும்’ என்பதாகக் கையொப்பங்கள் செய்திருக்கின்றார்கள்.

மேற்கண்ட ஹதீது, ‘கிபாயத்துஷ்-ஷு.ஃ.மீ” லில் வருவதாக, முப்த்தீ ஹைதர்ஷா பெங்களுரீ அவர்கள் ‘துல்பகார்-ஹைதரிய்யா’ 139-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

“வித்தாரமான சன்மார்க்க ஞானமுடைய இமாம் ஸுப்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், இமாம் நவவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது காலடிப்பட்ட இடத்தை முத்தமிடும் பாக்கியம் பெற்றேனே என்று ஆனந்தத்துடன் கூறிக் கொண்டே அந்த இடத்தில் தங்களது முகத்தை வைத்து முத்தி முகந்து புரட்டினார்கள்” என்பதாய், பஸ்லுல்-கித்தாபு 98-வது பக்கத்திலும், பத்ஹுல்முயீன் உடைய ஷரஹு இஆனா, 1-வது பாகம், 18-வது பக்கத்திலும் வந்திருக்கின்றது.

‘பரக்கத்தை நாடி கபுரை முத்தமிடுமல் நான்கு மதுஹபின் பிரகாரமும் ஆகுமானகே” என்று அல்லாமா ஷைகு அப்துல் கனி நாபல்ஸீ முஹக்கிகு, ஹனபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ‘ஜம்உல் அஸ்றாரில் கூறுவதாக, அல்லாமா ஷைகு யூசுபுன்னபஹானி மிஸ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ஷவாஹிதுல்-ஹக் 56-வது பக்கத்தில் வரைகின்றார்கள்.

“கபுரை வாயால் முத்தமிடுவதும், கரத்தால் தொட்டு முத்தி முகருவதும் ஆகும். அவ்விதம் செய்வது ஸாலிஹீன்களான உலமாக்களின்

செயலாகும்'' என்று ஹஜ்ரத், அல்லாமா, ஷாஹ் அஹ்மது ஸயீது, முஜத்திதுத்திஹ்லவீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள், தஹ்கீக்குல் ஹக்கில்-முபீன் 33-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

''அவுலியாக்களின் கபுருகளை பரக்கத்தை நாடி முத்தமிடுவது ஆகும் என பெரும்பாலான இமாம்கள் கூறியுள்ளார்கள்'' என்பதாக அல்லாமா, ஷைகு யூசுபுன் னபஹானீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள் 'ஷவாஹிதுல் ஹக்' 57-வது பக்கத்தில் சொல்லுகின்றார்கள்.

''வலிமார்களின் கபுருகளை பரக்கத்தை நாடி முத்தமிடுவது ஆகுமா?'' என்று அல்லாமா இமாம் முஹம்மது கலீலீ மக்தஸீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்களிடம் கேட்கப்பட்டபோது, ''அப்படிச் செய்வது விலக்கப்பட்ட காரியமல்ல, ஆகுமான காரியமே'' என்று பதில் சொல்லியுள்ளார்கள். இவ்விபரம், பதாவா-கலீலீ 2-வது பாகம் 250-வது பக்கத்தில் காணலாம்.

குர்ஆனை முத்தமிடுவதும், ஹதீதுகளுடைய பகுதிகளை முத்தமிடுவதும், ஸாலிஹீன்களுடைய கபுருகளை முத்தமிடுவதும் ஆகமானவைகளே'' என்று இமாம் இபுனு அபீஸைபு, எமனீ, ஷாபியீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்களைக் கொண்டு அறிவிக்கப்பட்டிருப்பதாக, ஷைகுல் இஸ்லாம், ஹாபிளு, இமாம் இபுனு ஹஜர் அஸ்கலானீ, ஷாபியீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள் ஸஹீஹுˇல்-புகாரீ யின் ஷரஹுˇகிதாபாகிய, பத்ஹுˇல்-பாரீ, 3-வது பாகம், 309-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

''நிச்சயமாக சில ஸாலிஹீன்கள் குர்ஆன் ஷரீபைப் பார்ப்பார்களேயானால் அதை முத்தமிடுவார்கள், ஹதீது ஷரீபின் பகுதிகளைப் பார்ப்பார்களேயானால் அதை முத்தமிடுவார்கள், ஸாலிஹீன்களின் கபுரு ஷரீபுகளைக் கண்டால் அவற்றை முத்தமிடுவார்கள்'' என்று ஷைகுல் இஸ்லாம், இமாம் பதுருத்தீன், மஹ்மூது ஐனீ ஹனபீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள் 'உம்தத்துல்காரீ-பீ-ஷரஹிஸஹீஹில் புகாரீ', 4-வது பாகம், 607-வது பக்கத்தில் எடுத்தறிவித்துள்ளார்கள்.

'குர்ஆன் ஷரீபையும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுˇ அலைஹி வஸல்லம் அவர்களுடைய கபுரு ஷரீபையும், அன்பியா அவுலியாக்களுடைய கபுரு ஷரீபுகளையும். முத்தமிடுவதும், உலமாக்கள், ஸாலிஹீன்கள், தாய் தந்தையர்கள் முதலியவர்களைப் போன்றவர்களுடைய கை கால்களை முத்தமிடுவதும் ஸுˇன்னத்தாகும்'' என்று இமாம் இபுனு அபிஸ் ஸைபு யமனீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள் போன்ற ஷாபீ மதுஹபுடைய இமாம்கள் சொல்லி இருப்பதாக, அல்லாமா, அல்ஹாஜ், அல்முப்தீ, முஹம்மது தமீம் ஸாஹிபு மத்றாஸீ ரலியல்லாஹுˇ தஆலா அன்ஹுˇ அவர்கள் 'உம்தத்துஸ்-ஸிப்யான்' 281-ம் பக்கத்தின் ஹாஷியாவில் கூறுகின்றார்கள்.

“அவுலியாக்களின் றவுலா கபுரு ஷரீபின் வாசல்படியை பரக்கத்தை ஆதரவு வைத்து முத்தமிடுவது மக்ரூஹ் என்பது கிடையாது. அது ஆகுமான காரியமே’ என்று இமாம் ஷம்சுத்தீன் றமலீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் பத்வா கொடுத்திருப்பதாய், ‘நிஹாயத்துல் முஹ்த்தாஜ்-பீ-ஷரஹில்-மின்ஹாஜ்’, 2-வது பாகம் 218வது பக்கத்தில் காணக் கிடைக்கின்றது. ‘நிஹாயா’ வில் வருகிறதாக, ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாஹிபு வேலூரீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள், பஸ்லுல்-கித்தாபு 115-வது பக்கத்தில் குறிப்பிட்டு, பல ஆதாரங்களுடன் விரிவாகக் கூறுகின்றார்கள்.

‘பரக்கத்தை நாடி கபுருகளையும், அவற்றின் வாசற்படிகளையும் முத்தமிடுவது மக்ரூஹ் அன்றியே ஆகும்’ என்று அல்லாமா நூருத்தீன் மிஸ்ரீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் பலமான பத்வா விடுத்திருக்கின்றார்கள்.

அல்லாமா மகுதூம் ஹாஜீ முஹம்மது ஹாஷிம் ஸிந்தீ ஹனபீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் ஹிஜ்ரி பதினோராம் நூற்றாண்டிலுள்ளவர்கள். இவர்கள் ஹதீது, பிக்ஹுˆக்களைத் திரட்டியிருப்பதுடன், ஷரஹுˆகளும் எழுதியுள்ளார்கள்.

“அவுலியாக்களின் கபுருகளையும், அவற்றின் வாசற்படிகளையும் பரக்கத்திற்காக முத்தமிடலாமா?” என்று அவர்களிடத்தில் வினவப்பட்ட போது, “அவ்விதம் செய்வது ஆகும் என்பதே மார்க்கத்தின் தீர்ப்பும், பலமான சொல்லுமாகும்” என்று விடையளித்தார்கள்.

இவ்வாறாக முப்தீ, ஹைதர், ஷாஹ் காதிரீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் ‘துல்பகார்-ஹைதரிய்யா’ 145-வது பக்கத்தில் குறிப்பிடுகின்றார்கள்.

“ஒலிமார்களுடைய வாசற்படிகளை முத்தமிடுவது அவர்களைச் சங்கைப் படுத்துவதாகும்” என்று குத்வத்துல் ஆரிபீன், இமாம் முஸ்த்தபல்-பக்ரீ-ஹனபீ-திமஷ்க்கீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் ‘லம்உ-பர்க்கில்-மகாமத்’தில் சொல்லியுள்ளார்கள் என்பதாக அல்லாமா ஷைகு யூசுபுன்னபஹானீ மிஸ்ரி ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள், ஷவாஹிதுல்-ஹக்கு, 254-வது பக்கத்தில் அறிவித்துள்ளார்கள்.

“அவுலியாக்களின் கபுருகளை அல்லது அவற்றின் வாசற்படிகளை முத்தமிடுவது ‘தவாளுஉ’ என்னும் பணிவான ஒழுக்கத்தோடு கூடிய மரியாதையைச் சார்ந்ததாகும்.” என்று அல்லாமா ஸெய்யிது ஷாஹ்முஹிய்யித்தீன் ஸாஹிபு ஆரிபுபில்லாஹ் காதிரீ வேலூரீ ரலியல்லாஹுˆ தஆலா அன்ஹுˆ அவர்கள் பஸ்லுல்-கிதாபு 98-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

“அவுலியாக்களின் தருகாக்களுக்குச் சென்று ஜியாரத்துச் செய்ய போகின்றவர், அந்த அவுலியாக்களின் வபாத்திற்கு முன்பு எவ்வளவு நெருங்கி நிற்கக் கூடுமோ அவ்வளவுக்கு அவர்களுடைய ரவுலா ஷரீபுக்குச் சமீபமாகி ஜியாரத்துச் செய்வது ஸுன்னத்தாகும். அவர்களுடைய வாசற்படிகளைத் தபர்ருக்குடைய நாட்டத்தோடு முத்தமிடலாம். ஸெய்யிது அஹ்மது பதவீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் தர்காவில் நடைபெற்று வருவது போல் ஆணும் பெண்ணும் கலந்த சந்தடியாய் வாசற்படியை முத்தமிட இயலாவிட்டால், கூட்டம் கலைகின்ற வரையில் தனக்கு ஓதத் தெரிந்த மட்டில் யாதாவது ஓதிக்கொண்டே காத்து நின்று அப்பால் முத்தமிடலாம். கூட்டம் கலைவதாக இல்லை என்றால் தனது கையை கொண்டோ, கையிலுள்ள அஸா கம்பைக் கொண்டோ முத்தமிடுவது போல சமிக்கை செய்வதும் ஆகும்” என்பதாக ஹாஷியத்துல் - பாஜுரி, 1-வது பாகம் 318-வது பக்கத்தில் விரிவாக்க காணப்படுகின்றது. நிஹாயாவின் ஹாஷியத்து ஷைகு அலீ ஷிப்றாமல்ஸீ, 2-வது பாகம், 218-வது பக்கத்திலும் சொல்லப் பெற்றிருக்கின்றது.

“அவுலியாக்களின் கபுருகளை பரக்கத்தை நாடி முத்தமிடுவது மக்ரூஹ் அல்ல, அது ஆகுமானதே” என்று இமாம் றமலீ ஷாபியீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ இமாம் ஷெய்கு முஹம்மது ஷவ்பரீ ஷாபியீ மிஸ்ரீ ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்களும் பதவா கொடுத்திருக்கின்றார்கள்.

இவ்வாறே துஹ்பாவின் ஹாஷியா ஷர்வானீ, பிக்யா, பதாவா ஸுஅலைமானுல் குர்தீ ஆகியவைகளும் கூறுகின்றன.

“அவுலியாக்கள், உஸ்த்தாதுமார்கள் ஆகியவர்களுடைய கபுருகளை பரக்கத்தை நாடி தொட்டு முத்தமிடுவது மக்ரூஹ் அல்ல, அவை ஆகுமான காரியங்களே” என்பதாய ‘ஹாஷியத்துல் இஜ்னாஉ’வில் வருகின்றது என்பதாக, மேன்மைக்குரிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்று பெயர் விளங்கும் அல்லாமா ஸெய்யிது முஹம்மது ஸாஹிபு ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் ‘பத்ஹுஅத்தையான்’ 183-வது பக்கத்திலும். ‘மகானீ’ 188-வது பக்கத்திலும் அறிவித்துள்ளார்கள்.

“வலிமார்களுடைய கபுருகளை பரக்கத்தை நாடி முத்தமிடுவது, “மு.:.த்தமது” உறுதியான சொற்படி, மக்ரூஹ் என்பது கிடையாது, அது ஆகுமானதே” என்று அலலாமா, ஷைகு, சுலைமான் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் ‘ஹாஷியத்துல் - புஜைரமீ - அலாஷரஹில்-மின் ஹாஜ்’, 1-வது பாகம், 548-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

“கபுருகளை முத்தமிடுவது மக்ரூஹ் என்று இபுனு ஹஜர் ரலியல்லாஹுஅ தஆலா அன்ஹுஅ அவர்கள் சொல்லியிருப்பினும் ஒலிமார்களுடைய பரக்கத்தை நாடி முத்தமிடுவது மக்ரூஹ் இன்றி கூடும் என்பதே ‘மு.:.த்தமது’ எனும் உறுதியான சொல்லாகும்” என்று பாஸில்

பர்மாவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள் என்பதாக ‘குஹ்லுல்-உயூன்-பீ-தபயிஷ்-ஷிப்ஹி-வள்ளுனூன்’, 55-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

குர்ஆன் ஷரீபைத் தவிர்த்து, அன்பியாக்களுடைய கபுருகளையும், எவர்களைக் கொண்டு பரக்கத்துத் தேடப்படுமோ அவர்களுடைய கபுருகளையும் முத்தமிடும் விஷயத்தில் சிலர் ஆகுமென்றும், சிலர் மக்ரூஹ் என்றும் சொல்கின்றார்கள். ஆனால் மேன்மைக்குரிய இமாம் முஹம்மது இதுரீஸுஷ் ஷாபியீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தபர்ருக்குடைய நாட்டத்தோடு கபுரை முத்தமிடுதல் ஆகும் என்று கூறி இருக்கின்றார்கள்.

இமாம் ஐனீ ஹனபீ, இமாம் ஜம்ஹுத்தி ஷாபியீ, இமாம் முகிர்ரீ மாலிகீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியோரும், இன்னும் உலமாக்களில் ஒரு கூட்டத்தாரும் இமாம் ஷாபியீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய இச்சொல்லை உறுதிப்படுத்தி அங்கீகாரம் செய்துள்ளார்கள்.

“தபர்ருக்குடைய நிய்யத்தைக் கொண்டு கட்டுப்படுத்தப் பெற்றிருப்பதால் மக்ரூஹுக்கு இடமில்லை (இன்னமல் அ.ஃமாலு பின்னிய்யாத்) அமல்களெல்லாம் எண்ணத்தைப் பொறுத்தேயுள்ளன” எனும் விபரம் ‘தவாவிஉல் - அன்வார் - ஷரஹுதுர்ருல் முக்தாரில்’ வருவதாக ‘துல்பகார்-ஹைதரிய்யா’ 136, 137-வது பக்கங்களில் கூறப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் இமாமுல் அ.ஃளம் அபூஹனீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சீடரும், ஹனபி மதுஹபின் முஜ்த்தஹிதுமாகிய ஹஜ்ரத் இமாம் முஹம்மது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு, வொலிமார்களுடைய கபுருகளை முத்தமிடுதல் கூடும் என்பது ஸ்திரமாக்கப் பெற்றிருப்பதால், ஹனபிய்யாக்களுக்கு இதுபலமான அத்தாட்சியாகும். இது விஷயத்தில் எவரும் இன்கார் செய்ய இடமில்லை என்பதாக முப்த்தீ ஸெய்யிது ஷாஹ் காதிரீ பெங்களூரீ அவர்கள் ‘துல்பகார்-ஹைதரிய்யா’வில் வரைகின்றார்கள்.

“உகப்புடையவர்களின் கிருபையைப் பெற்றுக் கொள்வதற்காக நபி பெருமானர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய வாசல்படியை நான் முத்தமிடுகிறேன்” (உகப்பிலுல்-அஉத்தாப) என்று இமாம் கஸ்ஸாலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இயற்றியதாகச் சொல்லப்படும் ‘ஸுபுஹானமவுலீது ஷரீபில்’ காணப்படுகின்றது.

**“எம் பெருமானார் முஹம்மத் முஸ்த்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருமேனியைப் பொதிந்துள்ள மண்ணின் நறுமணத்திற்கு எந்த மணமும் நிகராக மாட்டாது, அந்தப் புனித தேகத்தைப் பொதிந்துள்ள மண்ணை முத்தி முகந்தவருடைய பாக்கியமே பாக்கியம்!” (லாத்தீப - ய.ஃதிலு - துர்பன் - ளம்ம - அ.ஃளுமஹு) என்பதாக இமாம்**

**முஹம்மது பூஸரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் புர்தா ஷரீபில் கூறியுள்ளார்கள்.**

மேலும், ஷரஹுப்புலி, ஸதகதுல்லாஹில் காஹிரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வித்ரிய்யாவில், 'ஸாத்' உடைய பகுதியில், (ஹாஜத் - லி - தக்பீலி - கப்ரிஹீ - வ - கப்ரி - அபீபக்ரின் - வ - கப்ரி - அபீ - ஹப்ஸின்), "தமியேனுடைய ஆசையானது அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய கபுரையும், அபூபக்கர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுரையும் அபூஹப்ஸ் எனும் பெயருடைய உமர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுரையும் முத்தமிடவேண்டுமென்று அலை மோதி துடிதுடித்துக் கொண்டிருக்கிறது" என்பதாக உரைத்துள்ளார்கள்.

"ஆதி முதல் அந்தம் வரை எவ்விதத் திரையும் மறைவுமின்றி காணவேண்டுமானால் அவுலியாக்களுடைய மண்ணை சுர்மாவாகக் கண்ணில் தீட்டி நேத்திர ஜோதியைப் பெற்றுக் கொள்வீர்களாக" என்று மௌலானா முஹம்மது ஜலாலுத்தீன் ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'மஸ்னவி-ஷரீபில் பகர்ந்துள்ளார்கள்.

"அவுலியாக்களுடைய கபுருகளை உண்மையான நல்லெண்ணத்துடனும், கலப்பற்ற நிர்ணயத்துடனும், தூய்மையான மனதுடனும் நீ முத்தமிடுவாயானால், அந்த அவுலியா மீது சத்தியமாக உனக்கு பாத்தின் உடைய நூர் (அந்தரங்க ஜோதிப் பிரகாசம்) உண்டாகும்" என்று இமாம் ஜவ்ஸி முஹத்திது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது சீடர், ஷைகு ஸஃநீ ஷீராஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் போஸ்த்தானின் உரைத்துள்ளார்கள்.

இவை நிற்க, "இமாம்களின் 'இஜ்மாஉ' ஏகோபித்த அபிப்பிராயமில்லாத, கருத்து வேற்றுமை (கிலாபு) உள்ள மஸ்அலாக்களின் பேரில் இன்கார் செய்து, குற்றங்குறை கூறுவதும், விலக்குவதும், மார்க்கச் சட்டமேதைகளான 'புகஹா'க்களின் உஸூல் எனும் மார்க்க அடிப்படை வழி முறைச்சட்டப்படி கூடாது" என்பதாகக் குறிப்பிட்டு, "ஸாயுன்க்கரு-இல்லா-மா-உஜ்மிஅ-அலா-மன்யிஹீ" எனும் கோட்பாட்டை மேற்கோளாக, அல்லாமா முப்த்தீ மஹ்மூது சாஹிபு மத்றாஸீ அவர்கள், 'பத்ஹுல் ஹக்', 89-வது பக்கத்தில் அத்தாட்சியாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இதுபற்றியும், இதைப்போன்ற சிக்கலான பல மஸ்அலாக்கள் பற்றியும் விரிவாக, பஞ்சாப், லூதியானாவிலுள்ள. காஜீபஜ்லு அஹ்மது ஹனபீ, நக்ஷபந்தீ அவர்கள் இரு பாகங்களாக எழுதிய 'அன்வாரே-ஆப்த்தாபெ-ஸதாகத்' எனும் நூலில் எழுதியுள்ளார்கள். இந்தக் கிதாபை சரிகண்டு பல ஊாகளிலுள்ள 66 பிரபல்யமான உலமாக்கள் கையொப்பம் செய்துள்ளனர். அவர்களுள் சங்கைக்குரிய மீரட் மௌலானா அப்துல் அலீம் ஸித்தீக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் ஒருவர்.

கபுருகளை முத்தமிடும் விஷயத்தில் சில உலமாக்கள் அபிப்பிராய பேதங்கொண்டுள்ளனர். ஹயாத்தோடுள்ள மகான்களிடத்தில் ஒழுக்கம் மரியாதையைப் பேணியும், பயபக்தியைக் கொண்டும் அவர்களுக்கு மிகவும் சமீபத்தில் நெருங்கியிருப்பதுமில்லை. அவர்களைத் தொட்டுப் பேசுவதுமில்லை. சற்று அகன்று நின்று சம்பாஷிப்பது தான் ஒழுக்கமும், மரியாதையுமாகும். அவ்விதமின்றி மற்ற சாமானியமானவர்களுடன் பழகுவதுபோல மகான்களிடம் நடந்து கொள்வது வெறுக்கத்தக்கதாகும். அந்த மகான்கள் வபாத்திற்குப் பிறகும் ஹயாத்துள்ளவர்கள். அவர்கள் ஜியாரத்துச் செய்ய வருகின்றவர்களை அறிகின்றார்கள், ஸலாம் சொல்லுகிறவர்களுக்குப் பதிலும் கூறுகின்றார்கள். கபுருகளில் அவர்கள் தொழுது கொண்டும், ஹஜ்ஜு செய்து கொண்டும் இருக்கின்றார்கள். ஆகவே, ஜீவியத்தில் நடந்து கொண்டதுபோலவே மரணத்திற்கப்பாலும் நடந்து கொள்வதுதான் ஒழுக்கமும் மரியாதையுமாகும்.

கபுருகளுக்குச் சற்று அகன்று நின்று தூரத்திலிருந்தே பயபக்தியோடும், அதபு-ஒழுக்கத்தோடும் ஜியாரத்துச் செய்வதுதான் ஒழுக்க முறையாகும் என்பதே அந்த உலமாக்களின் அந்தரங்க நோக்கமாகும். இந்நோக்கத்துடனேயே வாயாலோ, கரத்தாலோ தொட்டு முத்தமிடுதல் ‘மக்ரூஹ்’ வெறுக்கத்தக்கது என்பது தான் சில உலமாக்களின் அபிப்பிராயமேயல்லாது, பரக்கத்தை நாடி முத்தமிடுதல் ஆகாது என்பதல்ல.

ஜீவிய காலத்தில் மகான்களைச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படும்போது பரக்கத்தைநாடி அவர்களின் பாதங்களைத் தொட்டு முத்திக் கொள்கின்றோம். கரங்களைப் பிடித்துக் கண்களில் ஒத்தி வாயால் முத்தமிடுகின்றோம். அம்மகான்களின் வபாத்திற்குப் பிறகும் அதே எண்ணத்துடன் பரக்கத்தை நாடி அவர்களது கபுரு ஷரீபுகளையும், அவற்றின் வாசல்படிகளையும் கரத்தால் தொட்டோ, தொடுவதுபோல் சமிக்கை செய்தோ முத்தமிடுதல், நல்லொழுக்க மரியாதையைச் சார்ந்ததே என்பது பெரும்பாலான உலமாக்களின் அபிப்ராயமாகும்.

எனவே, மேலே கண்ட ஆதாரங்களைக் கொண்டு பரக்கத்தை நாடி கபுருகளை மட்டுமல்ல, அவற்றைச் சார்ந்த வாசல்படிகளையும், பெரியார்களது காலடிபட்ட இடங்களையும் முத்தமிடலாம் என்ற விபரம் குன்றின் மேலிட்ட தீபம் போல விளங்கக் கிடக்கின்றது. இத்தன்மையில் அவ்வாறு செய்வது கூடாதெனக் கூறுபவர்கள் உண்மைகளை மூடிமறைத்தோராவார்கள்.

## கொடி ஏற்றலாமா?

கம்பத்தில் பறக்கும் கொடிக்கு அலம் - நிஷான் - ஜண்டா என்றெல்லாம் கூறப்படுகின்றது. நபிகட்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போர்முனைகளுக்குக் கொடிகளுடன் சென்றிருப்பதாயும்

ஸஹாபாக்கள் யுத்தங்களுக்குச் செல்லுகையில் அவர்களுக்கு நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கொடிகள் கொடுத்தனுப்பியதாயும், வெற்றிகளுக்குப் பிறகு அந்த இடங்களில் கம்பங்களில் கொடிகளைப் பறக்க விட்டதாயும், மக்கா நகரை பத்ஹு செய்து பிடித்ததும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்கள் சகிதம் வெள்ளைக் கொடியுடன் பிரவேசித்ததாகவும் ‘இபுனு மாஜா’வில் இபுனு அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதுடன் மிஷ்காத் ஷரீபிலும் காணப்படுகின்றது.

ஹரமைனிஷ் ஷரீபைனிகளின் குலபாயே றாஷிதீன்கள் உடைய உர்ஸு நாட்களில் கொடிகள் ஏற்றப்படுவதாக, பிரபல்ய உலமாக்கள் கையொப்பமிட்ட ‘பத்வா-நூர்-தஹ்கீக்காத்’திலும், ‘துல்பகார் ஹைதரிய்யா’விலும் காணப்படுகின்றது.

“வொலியுடைய கபுரு என்பதையறிந்து யாவரும் ஜியாரத்துச் செய்வார்கள் என்ற எண்ணத்துடன் ஆங்கு கொடி மரம் நட்டுவது ஆகும். அதற்காகச் செலவு செய்வது வீணில்லை” என்று இமாம் தாஷுத்தீன் இபுனு ஜக்கரிய்யா, நக்ஷபந்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இயற்றிய, “கஷ்புள்-ளுலமா பீ-பயானி-பிர்கா-ஹாதிஹில்-உம்மா” எனும் நூலில் வருகிறது என்பதாக காயல் பதியில் பிறந்து கீழக்கரையில் அடங்கியிருக்கும் மகானுபாவர் மாப்பிள்ளை லெப்பை ஆலீம் என்ற அல்லாமதுல் பாளில், ஷைகுல் ஸெய்யிது முஹம்மது காதிரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ‘கனீமத்துஸ்-ஸாலிக்கீன்’ என்ற கிரந்தத்தில் வரைந்துள்ளார்கள்.

குத்புல் அக்பர். ஸெய்யிதுனா அபுல்ஹஸன் ஷாதுலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் வாகனத்தில் அமர்ந்து செல்லுங்கால், அருள் தங்கிய பெரியார்களும், ஐசுவரியம் படைத்த அதிபர்களும் அவர்களைச் சூழ்ந்து செல்வார்கள். கொடிகள் அவர்களது தலைக்கு மேல் பிடிக்கப்படும். “குத்பைப் பார்க்க நாடுகிறவர் ஷாதுலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைப் பற்றிப் பிடித்துக்கொள்வாராக”, என்று கூறும்படி கட்டியங் கூறுகிறவருக்கு உத்திரவு செய்வார்கள் என்பதாக, ஜாமிஉல்-உஸூல் கிரந்தத்தில் 83-வது பக்கத்தில் வரையப்பட்டுள்ளது.

“ஜனங்கள் வழக்கமாக செய்துவரும் கருமத்தைக் குறிப்பாகத் தடுப்பது கூடாது” என்றும்,

“விலக்கல் இல்லாத கருமத்தைச் செய்வது ஆகும்” என்றும் அல்லாமா, இமாம், ஜர்க்கஷீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மப்ஸூத்தில் வரைகின்றார்கள்.

“குர்ஆனைக் கொண்டோ, ஹதீதைக் கொண்டோ, ஸஹாபாக்களின் சொற்களைக் கொண்டோ, இமாம்களின் வசனங்களைக் கொண்டோ விலக்கல் வராத ஒரு கருமத்தைச் செய்வது ஆகுமானதே” என்று அல்லாமா இமாம்

இபுனு ஹுமாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள். பத்ஹுல்-கதீர், 1-வது பாகம், 384-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

குர்ஆன், ஹதீது, இஜ்மாவுக்கு மாற்றமில்லாது ஜனங்கள் வழக்கமாய்ச் செய்துவரும் கருமம் ஆகும் என்பது அறியக்கிடக்கின்றது. "முஸ்லிம்கள் எதெதை அழகாகக் கண்டார்களோ அது அல்லாஹ்விடத்திலும் அழகானது" என்று ஸஹீஹான ஹதீது, முஅத்தாவில் இபுனு மஸ்ஊது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வையகத்தில் மண்ணாசை பிடித்த உலக மன்னர்கள் போரிட்டு கோடிக்கணக்கான பொருள்களை விரயஞ் செய்து இலட்சக்கணக்கான மனிதர்களின் உயிர்களைப் போக்கி, வெற்றியடைந்ததற்கு அறிகுறியாக கொடியேற்று விழாக்கள் நடைபெற்று வருவதையும் சுதந்திரம் அடைந்த சுப சேதிக்காக கொடியேற்று வைபவங்கள் நடத்தப்படுவதையும் கண் கூடாகக் காண்கின்றோம். இவற்றிற்கு முற்றிலும் மாற்றமாக நபுஸுடன் போர் புரிந்து, முவ்வாசைத் தொடர்பும், மும்மலப் பற்றும் விட்டு முற்றுத் துறந்து, இபுலீஸு, துனியாவின் அடிமைத் தளைகளையெல்லாம் நீங்கி ஆத்மார்த்த சுதந்திரம் அடைந்த ஜெயவெற்றி வீரர்களாகிய மாதவப் புரடர்களான அவுலியாக்களுடைய உர்ஸு தினங்களில் கொடியேற்றுவது ஜாயிஸ் - ஆகுமானதே என்பது தெளிவாகத் தெரிய வருகின்றது. இது ஆகும் என்பதற்கு அதிக விரிவான பல ஆதாரங்களுடன் மௌலானா அல்லாமா முற்காலத்திய பிரதம முப்த்தீ, ஸெய்யிது ஹைதர் ஷாஹ் காதிரிய்யி ஹனபீ பெங்களூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் "துல்பகார் ஹைதரிய்யா"வில் வரைந்திருந்கிறார்கள்.

எனவே, அழிந்துபோகக்கூடிய உலகத்தின் அரசர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் மனமுவந்து கொடியேற்ற இசைபவர்கள், அழிவற்ற அல்லாஹ்வின் நேசர்களாகிய அவுலியாக்களுக்கு மகிமை கொடுத்து கொடியேற்ற பின்னடைவது பேதமையாகும்!

## உர்ஸு, கந்தூரி நடத்தலாமா?

ஷுஹதா, அவுலியாக்கள் என்றும் ஜீவனுள்ளவர்கள், பயமோ சஞ்சலமோ அவர்களுக்கில்லை, இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்குச் சுபம் உண்டு என்பதாய்க் குர்ஆனும், ஹதீதும் கூறுகின்றன. அத்தகைய மகான்கள் வபாத்தான நாட்களை உர்ஸ் தினங்களாக உலகம் கொண்டாடி வருகின்றது.

اُذْكُرُوْا مَحَاسِنَ مَوْتَاكُمْ - ابوداؤد = ترمذي

(உத்குரு-மஹாஸின-மவ்த்தாக்கும்)

“உங்களுள் மரணித்தவர்களின் கீர்த்திப் பிரதாபங்களை நீங்கள் பிரஸ்தாபஞ் செய்து கொள்வீர்களாக” என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளிய ஹதீதை அபூதாவூதும், திர்மதியும் கூறுகின்றன.

நாயகம் றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷுஹதாக்களுடைய கபுரு ஷரீபுகளை ஜியாரத்துச் செய்வதற்காக வருடந்தோறும் போய் வந்ததாகவும் அருமை ஸஹாபாக்களும் அவ்வாறே சென்று வந்ததாகவும் ஹதீதுகளில் வந்திருப்பதாக இமாம் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ‘தப்ஸீர் துர்ரு மன்தூரிலும்’ இமாம் இபுனு ஹஜர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹுஸ்னு-தவஸ்ஸுலிலும் வரைந்திருப்பதாய், மௌலானா மௌலவி முஹம்மது நதீர் அஹ்மது கான்சாஹிபு அஹ்மதாபாதீ, குஜராத்தீ அவர்கள், ‘மஜ்மூஅத்துர்-ரஸாயில் - பீ - தஹ்கீக்கில் - மஸாயில், 24வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

மேலும், இமாம் இபுனு ஆபிதீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் றத்துல் முஹ்த்தார், 1வது பாகம், 665வது பக்கத்திலும், இமாம் இபுனு ஹுமாம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தப்ஸீர் கபீரிலும் எடுத்துரைத்துள்ளதாய் அல்லாமா ஸெய்யிது அமீர் அலவீ அஜ்மீரி அவர்கள், ‘இஹ்லாக் குல் வஹ்ஹாபிய்யீனில்’ கூறுகின்றார்கள்.

இன்னும், ஜலாலுத்தீன் ஸுயூத்தி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தப்ஸீர் துர்ரு - மன்தூரில், “நீங்கள் (உங்கள் வாழ்க்கையில் கஷ்டங்களைப்) பொறுமையுடன் சகித்துக்கொண்ட காரணமாக உங்களுக்குச் சாந்தியும், சமாதானமும் உண்டாகுக! (உங்களுடைய) கடைசி வீடு மிக்க நல்லதாயிற்று! (என்று சொர்க்கவாதிகளை நோக்கி மலக்குகள் கூறுவார்கள்)” என்ற 13:24 ஆயத்தின் கீழ், அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு இபுனு முனதிரு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும், இபுனு மர்தவிய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள் எனப் பின்வருமாறு வரைந்துள்ளார்கள்.

“றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு வருடமும் உஹது மலைக்கு வந்து அங்குள்ள ஷுஹதாக்களுக்கு ஸலாம் கூறி நீங்கள் மேற்கொண்ட மேலான பொறுமையின் பொருட்டால் நீங்கள் பெற்றிருக்கின்ற சொர்க்க வீடே மேலாம்பரமான வீடு என்று உரைப்பார்கள்” என்பதாக.

மேலே கண்ட விஷயத்தையும் வரைந்து இவ்வாறே அபூபக்கர், உமர், உதுமான், அலி ரலியல்லாஹு தஆலா அன்ஹும் ஆகியவர்களும் செய்து வந்தார்கள் என்பதாய் முஹம்மது இபுனு இபுராஹீம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு, இபுனு ஜரீர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அவர்கள் ரிவாயத்துச் செய்துள்ளார்கள். இன்னமும் பாத்திமா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள், அப்துல் முத்தலிபுடைய குமாரர் ஹம்ஸா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கப்ருக்கு வருடந்தோறும் வந்த ஜியாரத்து செய்தார்கள் என்றும், அவ்வழக்கத்தைத் தொடர்ந்து அனுஷ்டித்து வந்தார்கள் என்றும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இது போன்ற இமாம் ராஸீ, அபூஸுஊது, இபுனு கதீர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களுடைய தப்ஸீர்களிலும் கூறப்பட்டிருக்கின்றன.

அல்லாமா ஷைகு அஹ்மது இபுனு முஹம்மது பாரூக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'தவ்ளீஹுல்ஹுதா'வில் சொல்லியுள்ளதாக பத்ஹுல் ஹக் கூறுவதாவது:-

"அல்லாஹ்வின் உகப்புக்குச் சொந்தமான நல்லடியார்கள், உலமாக்கள், ஷைகுமார்கள் ஆகியோருடைய கபுருகளில் கூட்டமாகக் கூடியிருக்க நாம் கண்டிருக்கின்றோம். அவ்வாறு ஆங்கு, அவர்கள் கூடியிருக்கும் காரணம் குர்ஆன், பாத்திஹா ஓதவும், துஆக்கள் கேட்கவும், தீனிய்யத்துச் சம்பந்தமான தங்களின் கோரிக்கைகள் நிறைவேற, அந்த கபுராளிகளின் ரூஹுகளைக் கொண்டு உதவி தேடுவதற்கே இவ்வழிகளில் பன்முறை அவர்கள் பெரிதும் ஜெயம் பெற்று அனுபவத்தில் உணர்ந்துள்ளனர். குறிப்பாக, உர்ஸு நாட்களில் தான் தங்களின் அந்தரங்கமான பிரயோஜனங்களை அவர்கள் பெற்றுள்ளனர். இக்காரணம் பற்றியே அவர்கள், அந்தக் கபுராளிகளின் ரூஹுகள் பிரிந்த வபாத் நாட்களில் அங்கு திரள் திரளாகத் தீவிர அபிலாஷை கொண்டு, ஹிம்மத்தோடு வந்து கூடி, பாத்திஹா முதலியன ஓதுகின்றார்கள். சாமானிய ஜனங்களும் அவ்வாறே அங்கு கூட்டம் கூடி பாத்திஹா முதலியன ஓதி, தங்களின் தீனிய்யத்தான கோரிக்கைகளோ, துன்யா சம்பந்தமான நாட்ட தேட்டங்களோ நிறைவேற அந்தக் கபுராளிகளைக் கொண்டு உதவி தேடுகின்றார்கள்" என்பதே.

இன்னும், பற்பல வகைகளில் இவற்றுக்குச் சான்றாக உள்ள ஹதீதுகளும் அநேகமிருக்கின்றன. அவற்றைக் கொண்டே இமாம்களெல்லாரும் ஆதாரம் தேடியுள்ளார்கள். மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு தீனுல் இஸ்லாத்தில் உர்ஸு நடத்த பலமான ஆதாரங்கள் உள்ளன என்பது தெள்ளத் தெளிவாகி விட்டது என்பதாய் மேலே மூன்று பாராக்களில் குறிப்பிடப்பட்டவற்றையும் மேற்கோளாக வரைந்து, மௌலானா, மௌலவி, ஷஹாபுத்தீன் அஹ்மது கோயா, ஷாலியாத்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹிஜ்ரீ 1371ம் ஆண்டில் பத்வா கொடுத்துள்ளார்கள். இந்த பத்வாவைச் சரி கண்டு மதறாஸ் முப்த்தீ அல்ஹாஜ் முஹம்மது ஹபீபல்லாஹ் ஸாஹிபு (கவர்ன்மெண்டு பிரதம காஜியார்), முஹம்மது கலீலுர் ரஹ்மான் காதிரீ, ரிளவீ, பீஹாரீ, நாஸிருத்தீன் முஹம்மது இபுனு காஜீ உபைதுல்லாஹ், காதிரு அலி (முதர்ரிஸ், மத்ரஸா

முஹம்மதீ) என்ற முஹம்மது இபுராஹீம் பாசில் தேவ்பந்து (முதர்ரிஸ், மத்ரஸா ஜமாலிய்யா) ஆகியவர்களும், இன்னும் பல உலமாக்களும் கையொப்பம் வைத்துள்ளார்கள்.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வபாத்தாகி இரு நாட்கள் வரையில் கலீபா நியமனத்திலும், அடக்க ஸ்தலத்தை நிர்ணயிப்பதிலும் காலதாமதமாகி, கடைசியாக, ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பின் நாயகி ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களது இல்லத்தின் அறையிலேயே தபன் (அடக்கம்) செய்யப்பெற்றார்கள். அன்று மதீனாவிலுள்ள ஜனங்கள் அனைவருக்கும் அமீருல் முமினீன் ஸெய்யிதுனா அபூபக்கர் ஸித்தீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'ஈஸால்-தவாபு'க்காக வேண்டி, உணவு தயார் செய்தார்கள். யாது காரணத்திற்காக இவ்விதம் செய்கின்றார்கள் என்ற ஜனங்கள் வினவியதற்கு இன்று ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உர்ஸு என்பதாய் விஷயமறிந்தவர்கள் விடையளித்தார்கள் என்பதாக, குத்வத்துஸ் ஸாலிக்கீன், ஷாஹ் ஷர்புத்தீன் இபுனு அஹ்மது எஹ்யா முனீரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மல்பூளாத்தில் சொல்வதாக, அல்லாமா முப்த்தீ ஸெய்யிது அமீர் அலவி, அஜ்மீரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், 'இஹ்லாக்குல்-வஹ்ஹாபிய்யீனிலும்' நூறு ஒட்டகங்கள் அறுத்து உர்ஸு நடத்தியதாக, மதறாஸ் முப்த்தி மஹ்மூது ஸாஹிபு அவர்கள், பத்ஹுல்-ஹக்கிலும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

"உரூஸ் (வபாத்) உடைய நாளைப் பேணி, ஜியாரத்துச் செய்வதில் மிகுதமான பிரயோசனங்கள் உண்டு" என்பதாய், ஷெய்கு அஹ்மது இபுனு முஹம்மது பாரூகி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தவ்ளீஹுல் ஹுதாவிலும், அல்லாமா, அப்துல்ஹக், முஹத்திதுத்திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'மா-தபத்த-பிஸ்ஸுன்னா'விலும், அல்லாமா முப்தீ மஹ்மூது ஸாஹிபு, மத்றாஸீ அவர்கள், 'பத்ஹுல்-ஹக்கிலும் கூறுகின்றார்கள்.

"உருஸ் தினத்தைப் பேணி ஜியாரத்துச் செய்வது முக்கியமாகும்" என்று, 'மஜ்மூஉர்-ரிவாயத்'திலும், 'பதாவாதன்பதா'விலும் வருகிறது என்பதாக முப்தீ மஹ்மூது ஸாஹிபு மதறாஸீ அவர்கள் பத்ஹுல்-ஹக்கில் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

மஹ்பூபே இலாஹி, ஷைகு நிஜாமுத்தீன் அவுலியா ரலியல்லாஹு தஆலா அன்ஹு குத்வத்துல் அவுலியா ஷைகு நஸீரத்தீன் ஷீறாகீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு சுல்தானுல் அவுலியா முஹம்மது ஹுஸைன் பந்தா நவாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு வலிய்யுல்காமில் ஷைகு பஹாவுத்தீன் ஜகரிய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகியவர்களும் இன்னும் மற்றும் அவுலியாக்களும் உலமாக்களும் அவரவர்களது ஷைகுமார்கள், பாட்டன்மார்கள், தாய் தந்தையர் முதலானோர்கள் வபாத்தான நாட்களாகிய உர்ஸு தினங்களில் 'பாத்திஹா' கத்தங்கள் செய்திருப்பதாய்

ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாஹிபு வேலூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'பஸ்லுல்-கிதாப்' 50-வது பக்கத்தில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

ஷைகு அப்துல் ஹக் முஹத்திது திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், தமது தந்தையின் வபாத்து நாளாகிய உர்ஸை வருடந்தோறும் நடத்தி வந்திருக்கின்றார்கள். மௌலவி அப்துல் ஹக்கீம் ஸாஹிபு இதைக் கண்டித்து, 'உர்ஸை பறுலாக எண்ணி நீங்கள் ஒவ்வொரு வருடமும் செய்து வருகின்றீர்களே! என்று எழுதிக் கேட்டார்.

அதற்கு ஷாஹ் ஸாஹிபு ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கொடுத்த விடை:- 'ஜுப்தத்துன்-னஸாயிஹு 42-வது பக்கத்தில் ஆதாரமான ஹதீதுகளைக் குறிப்பிட்டு காண்பித்து கூறுவதாவது:-

"இவ்விதம் குற்றங்குறை கூறுவது அறியாமையை அறிவிக்கின்றது. ஏனெனில், பறுலு, அல்லாததை எவரும் பறுலு என்று கூறுவது கிடையாது. கபுரை ஜியாரத்துச் செய்வதும், உதவி தேடுவதும், குர்ஆன் ஓதி சோறு, சீரணி வழங்கி தவாபைச் சேர்த்து வைப்பதும் முஸ்த்தஹப்பும், அழகான கருமமுமாகும். அநித்தியமான இவ்வுலகிலிருந்து நித்தியமான அவ்வுலகுக்குச் சென்ற ஞாபகார்ந்த நாளாகிய உருஸைக் குறிப்பிட்ட தினத்தில் நடத்துவது கூடுமென்பது உலமாக்களின் ஏகோபித்த அபிப்பிராயம். றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல்லும் செயலும், ஸஹாபாக்களின் நடத்தைகளுமே இதற்குப் போதுமான ஆதாரங்களாகும்" என்பதே.

"உருஸ் காலங்களில் தருகாக்களில் பிதுஅத்துகள் நடைபெறுகின்றனவே! அவ்வமயம் ஆங்கு செல்லலாமா? என்ற வினா எழுகின்றது.

அதற்குரிய விடை இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணுற்று சந்தேகத்தை போக்கிக் கொள்வார்களாக.

"உருஸுடைய காலத்தில் பிதுஅத்துகள் நடந்தால் ஜியாரத்திற்காகப் போவதற்கு அவை தடையாக மாட்டா" என்று றத்துல் முஹ்த்தார் 1-வது பாகம் 665வது பக்கத்திலும் பதாவாகுப்றா 2-வது பாகம் 24-வது பக்கத்திலும் சொல்லப்படுகின்றது.

"அற்ப விஷயத்தை முன்னிட்டுப் பெரிய காரியத்தை விட்டுவிட வேண்டியதில்லை" என்று அல்லாமா ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாஹிபு வேலூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் 'பஸ்லுல் கிதாபு' 113-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

"சொற்ப கெடுதலின் காரணமாக மிகுதமான நன்மையை விட்டு விடுதலே அதிகக் கெடுதலாகும்" என்று அல்லாமா, ஷைகு இஸ்மாயில்

ஹக்கீ, பரூஸீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் ரூஹுۥல் பயான், 1-வது பாகம், 88-வது பக்கத்தில் மொழிந்துள்ளார்கள்.

“உருஸ் உடைய காலத்தில் பிதுஅத்துகள் நடந்த போதிலும் ஜியாரத்திற்குப் போகலாம்” என்பதாய், ஷம்ஸுۥல் உலமா பட்டம் பெற்ற அல்லாமா குலாம் றஸுۥல் சாஹிபு மதறாஸீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் பத்வாக் கொடுத்திருக்கின்றார்கள். அதைச் சரிகண்டு மதறாஸ் முப்த்தீ அல்லாமா அல்ஹாஜ் தமீம் ஸாஹிபு அவர்களும் அதில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

“சகோதரனே! உருஸ் உடைய பிரயோஜனங்கள் அதன் கெடுதலைக்காண அதிகமென்பதை அறிவாயாக: (புகஹாக்களே!) சட்ட நிபுணர்களே! அதைத் தடுப்பதை விட்டு விட்டு, தங்களைப் பேணிக்கொண்டு நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர்களாக!” என்பதாய் அல்குத்பு, அப்துல் வஹ்ஹாபு ஷ.ஃ.றானீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் அல்பஹ்றுல்-மவ்ரூதுல்-கபீர்’ ஏ்னற கிரந்தத்தில் கூறுவதாக மௌலானா, அஸ்ஸையிது முஹம்மது இபுனு அஸ்ஸையிது முஹம்மது புகாரிய்யுல் ஹுۥஸைனிய்யிஷ ஷாபியீ, ஷவ்காத்தீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள், ‘தஷவ்வுபல்-இஸ்மாவு’ 18-வது பக்கத்தில் சொல்கிறதை. அல்லாமா ஷஹாபுத்தீன் அஹ்மது கோயா, ஷாலியாத்தீ அவர்கள் சரிகண்டு கையெழுத்து இட்டுள்ளார்கள்.

“உருஸுۥடைய மகிமையையும், பிரயோஜனத்தையும் அறிந்த ஷைகு ஸ.ஃ.தீ, ஷீராஸீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் ‘புதுமாப்பிள்ளைபோல் சயனிப்பீராக’ என்று கப்ருகளிலிருக்கும் நல்லடியார்களை நோக்கி மலக்குகள் சோபனம் கூறும் ‘நம்-க-நவ்மத்தில்-அரூஸ்’ எனும் ஹதீதை ஆதாரமாகக் கொண்டு நீ ஈமானுடன் மவுத்தாகும் அந்நாள் சந்தோஷமும் மங்களமும் உடைய உருஸாகிவிடும் என்பதாய் போஸ்த்தானில் கூறியுள்ளார்கள்.

உலகப் பிரசித்தமான, அல்குத்பு, ஸெய்யிது அஹ்மது பதவீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்களது உர்ஸை இன்கார் செய்த அக்கால மேதாவிகளுக்கு ஏற்பட்ட சம்பவங்கள் பற்றி, அல்லாமா, ஷைகு யூசுபந் நபஹானீ, மிஸ்ரீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் இயற்றியுள்ள ‘ஜாமிஉ-கறாமாத்தில்-அவுலியா’ 1-வது பாகம், 317-வது பக்கத்தையும், அல்குத்பு, இமாம் ஷ.ஃ.றானீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்கள் இயற்றிய ‘தபக்காத்துல்-குப்றா’, 1-வது பாகம் 155-வது பக்கத்தையும் நோட்டமிடுக.

பெரியோர்களுடைய ஜியாரத்திற்காகச் செல்லும்போது கொடி கொண்டு போகலாமா? குபுருகளை முத்தமிடலாமா’ என்று இமாம் கலீலீ ரலியல்லாஹுۥ தஆலா அன்ஹுۥ அவர்களிடத்தில் கேட்கப்பட்டதற்கு, “அவுலியாக்களுடைய ஜியாரத்திற்காகச் செல்லும்போது கொடிகொண்டு போவதும், தபர்ருக்குடைய

எண்ணத்துடன் கபுரை முத்தமிடுவதும் ஆகும். இதை இன்கார் செய்கிறவன் வழி கெட்ட பிதுஅத்துக்காரனாவான்'' என்று பதில கூறி இருப்பதாய், 'பதாவா-கலீலீ' 2-வது பாகம் 250-வது பக்கத்தில் காணப்ப:டுகின்றது. இவ்விஷயத்தை அல்லாமா, ஸெய்யிது முஹம்மது புகாரி, ஹுஸைனீ, மலபாரீ தங்கள் அவர்கள் 'தஷவ்வுபல்-இஸ்மாஉ' எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதை அங்கீகாரம் செய்து, சரி கண்டு அல்லாமா ஷஹாபுத்தீன் அஹமது கோயா, ஷாலியாத்தீ (மலபாரீ) அவர்களும் கையொப்பமிட்டிருக்கின்றார்கள்.

அல்லாமா இமாம் முஹம்மது கலீலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய பதாவாவில் பின்வருமாறு வினா விடை, விளக்கம் தரப்பட்டுள்ளது:-

வினா: நபிமார்களை அவுலியாக்களை ஜியாரத்துச் செய்வதற்காகப் போகும் போது கொடிகளை ஏந்திக் கொண்டும், தபல்பாஜ் எனும் கொட்டடித்துக் கொண்டும், மிஸ்ஹர் எனும் வாத்தியம் வாசித்துக் கொண்டும், சில கூட்டத்தினர் செல்கின்றனரே! இவை ஹராமாகுமா அல்லவா?

விடை: இவ்விஷயம் எதுவும் விலக்கப்பட்ட கருமமல்ல.

இவ்வாறாக பத்வாவில் விடையளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விஷயங்கள் விரிவஞ்சி சுருக்கமான முறையில் கூறப்பட்டுள்ளதாக அல்லாமா அஹ்மது கோயா ஷாலியாத்தீ அவர்கள் தங்களது பத்வாவில் இதைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே ஆதி காலம் தொட்டு மாக்களை மக்களாக்கி முக்தி பெறத்தக்க மெய்ஞ்ஞான உபதேசஞ் செய்து, வழிபிசகித்தடுமாறிப் போகாவண்ணம் பாதுகாத்து மீட்டு, நேரான பாதையில் கரை சேரும் உபாயம் சொல்லித் தந்த மெய்ஞ்ஞானிகளுக்கு உர்ஸு நடத்துவதும், உர்ஸுக்காகப் பிரயாணப்பட்டு, ஜியாரத்தை நாடிப் பயணம் போவதும் ஆகும் என்பது நன்கு தெரிய வருகின்றது.

மேலும், அந்த மகான்களுடைய ஞாபகார்த்தமாக, அவர்கள் அடக்கமல்லாத இதர இடங்களிலும் அவர்கள் பேரால் உர்ஸு நடத்தலாமென்பதும் அறியக் கிடைக்கின்றது.

## நேர்ச்சை செய்யலாமா?

நேர்ச்சைக்கு 'துஹ்பா' என்றும் 'நதர்' என்றும் 'நியாஸ்' என்றும் சொல்வதுண்டு. நேர்ச்சை இரு வகைப்படும். அல்லாஹ் பெயரால் வைக்கும் நேர்ச்சைக்கு பிக்ஹி என்றும், அவுலியாப்பெயரால் வைக்கும் நேர்ச்சைக்கு பிக்ஹி என்றும் சொல்லப்படும். இவ்விதம் ஷாஹ் அப்துல் அஜீஸ்

முஹத்திதுத் திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் சகோதரர் ஷாஹ் ரபீவுத்தீன் முஹத்திஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரிஸாலத்துன்-நுதூரிலும், ஷாஹ் ஸாஹிப் வேலூரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பஸ்லுல்-கிதாபிலும் எடுத்துரைத்துள்ளர்ர்கள்.

ஒரு பெண், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது திருச்சமுகத்திற்கு வந்து, 'யாரஸுலல்லாஹ்! தங்கள் முன் தப் அடிப்பதற்கு நேர்ச்சை செய்து கொண்டுள்ளேன்'' என்றாள். அதற்கு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''உனது நேர்ச்சையை நிறைவேற்றிக் கொள்'' என்பதாய் கூறினார்கள் என்ற விபரம் மிர்க்காத்-ஷரஹு மிஷ்காத் 3-வது பாகம், பக்கம் 568-ல் காணப்படுகிறது.

''உமக்கு ஏதாவதொரு தேவையிருந்து அது நிறைவேற வேண்டும் என நீா நாடுவீராயின், ஸையிதத்து நபீஸா தாஹிறா மிஸ்ரிய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹா வுக்கு ஒரு பைசா (பல்ஸ்) காசாகிலும் நேர்ச்சை செய்து கொள்வீர். உமது நாட்டம் நிறைவேறும் என்று நபி கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு பிரசன்னமாகிப் பகர்ந்துள்ளார்கள்'' என்று குத்பு ஷைகு முஹம்மது அபுல் மவாஹிபுஷ் ஷாதுலி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறி இருக்கிறார்கள் என்ற விஷயம் தபகாத்துல்-குப்றா பாகம் 2 - பக்கம் 66-ல் சொல்லப்பட்டுள்ளது.

''அவுலியாக்களுடைய நேர்ச்சை, தேவைகளை நிறைவேற்றி வைப்பதில் பெரியோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதாயும், வழக்கத்திலுள்ளதாயும் இருக்கின்றது'' என்று அல்லாமா ஷாஹ் அப்துல் அஜீஸ் முஹத்திது திஹ்லவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொல்வதாய பஸ்லுல் கிதாப் 52-வது பக்கத்தில் கூறப்படுகின்றது.

''எவரொருவர் எந்த வஸ்துவை எந்த இடத்திற்கு நேர்ச்சை செய்கிறாரோ அதை அதே இடத்திற்கே நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியது வாஜிபு (கடமை)'' என்று முல்லா அலி காரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மிர்காத்-ஷரஹுமிஷ்காத் 3-வது பாகம் 567வது பக்கத்தில் கூறுகின்றார்கள். அஷி∴அத்துல்-லம்ஆத், 3-வது பாகம் 203 வது பக்கத்திலும் சொல்லப்படுகின்றது.

ஸஹாபி ஒருவர் பவானா என்ற இடத்தில் ஒட்டகம் ஒன்றை அறுப்பதற்கு நேர்ச்சை செய்து இருந்தார்கள். அந்த ஸஹாபி, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்து இவ்விஷயத்தைக் கூறினார்கள். அவ்விடத்தில் முஷ்ரிக்குகளுடைய விக்கிரகம் ஏதாவது உண்டா? என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்க. அங்கு அப்படிக் கிடையாது என்றார்கள்.

காபிர்களுடைய திருவிழா ஏதாவது நடைபெறுவதுண்டா? என்று வினவியதற்கு அவ்விதம் இல்லை என்றார்கள்.

அப்படியானால் உம்முடைய நேர்ச்சையை நிறைவேற்றும் என்று உத்திரவிட்டார்கள் எனும் ஹதீது அபூதாவூதில் வருகிறதாக மிஷ்காத் ஷரீப் கூறுகின்றது.

இவ்விதமாக ஹதீது இன்னும் சில உண்டு. இதைக் கொண்டு நேர்ச்சை செய்யலாம் என்றும், வலிமார்களின் தர்ஹாக்களில் நேர்ச்சை செய்யப்பட்ட ஆடு, மாடு, கோழி வகையறாக்களை அறுக்கலாமென்றும் தெரிந்து கொள்கிறோம். ஏனெனில், தர்காக்களில் எவ்விதமான விக்கிரகமோ, காபிர்களின் திருவிழாவோ நடைபெறுவதில்லை.

ஷாஹ் அப்துல் அஜீஸ் முஹத்திதுத் திஹ்லவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கீழ் வருமாறு கூறியுள்ளது இதற்கு விளக்கமாக இருக்கின்றது:-

“ஹஜ்ரத் கௌதுல் அஃளம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் பேரால் ஆடுவளர்ப்பதாகும். அவற்றை அறுத்துச் சமைத்து நேர்ச்சையின் பாத்திஹா ஓதி ஜனங்களுக்கு விருந்தளிப்பதுமாகும். இதில் யாதொரு தடையுமில்லை. இத்தகைய நேர்ச்சை ஹயாத்தோடுள்ள பெரியாருக்குச் செய்யும் காணிக்கையாகும்” என்று ஜிப்ததுன் நஸாயிஹு 105-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் வலிமார்கள் மீதுள்ள முஹப்பத்தை முன்னிட்டு சங்கையை நாடி எண்ணெய் ஊதுபத்தி போன்றவைகளை அவர்களது கபுருகளில் கொளுத்த நேர்ச்சை செய்வது ஆகும். அதை விலக்கலாகாது என்பதாக அல்லாமா குதுவத்துல் முபஸ்ஸிரீன், ஷைகு இஸ்மாயில் ஹக்கீ பரூஸீ ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரூஹுல் பயான் 3-வது பாகம் 400-வது பக்கத்திலும் அல்லாமத்துல் முஹக்கிக் இமாம், அப்துல்கனி நாபிலிஸ் திமிஷ்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கஷ்புன்னூரிலும், முற்காலத்தில் மிஸ்ரில் முப்தியாய் இருந்த அல்லாமா ஷைகு அப்துல் காதிரு றாபியீ பாரூகி ஹனபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தஹ்ரீருல்-முக்தார் 1வது பாகம், 123வது பக்கத்திலும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள்.

பக்தாத் ஷரீபில் (முஸல்லல்-ஈது) பெருநாள் தொழுகை தொழுமிடத்தில் ஒரு கபுரு இருக்கின்றது. அதை கபுருன்னுதூர்-நேர்ச்சைகளுடைய கபுரு என்று அழைக்கப்படுகின்றது. நாட்டங்களை நிறைவேற்றி வைக்கக் கூடிய கபுரு என்று அதை ஜனங்கள் கருதுகின்றனர்.

சுல்தானுஷ் ஷுஹதா, ஸெய்யிதுனா இமாம் ஹுஸைன் ஷஹீதெகர்பலா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களது மூன்றாவது குமாரர் ஹஜ்ரத் அப்துல்லா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடைய கபுரு எனக் கூறப்படுகின்றது. எவர் எந்த தேவையை நாடினாலும் அது

அவருக்கு நிறைவேறுகின்ற காரணத்தை முன்னிட்டு கபுருன்னுதூர் என்ற பெயர் வழங்கப்படுகின்றது.

அல்லாமதுல் பாளில் அபூபக்கர் கத்திப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பக்தாத் உடைய சரித்திரத்தில் மேலே கண்டவற்றை வரைந்து, “அநேக தடவை நான் அந்தக் கபுரை நாடி நேர்ச்சை செய்து என் நாட்டம் நிறைவேறப் பெற்றிருக்கின்றேன்” என்றும் கூறியுள்ளார்கள்.

இவ்வரலாறு காதிமில் நக்லு செய்யப்பெற்றிருப்பதாய் பதாவா தன்பதா சொல்லுகின்றது. இவ்விஷயத்தை மதராஸ் முப்தி அல்லாமா மஹ்மூது ஸாஹிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் பத்ஹுல் ஹக் 77-வது பக்கத்தில் வரைகின்றார்கள்.

அவுலியாக்களுக்கு நேர்ச்சை செய்து நியாஸ் வைக்கலாம், அப்படி (நதர்) நேர்ச்சை வைப்பது ஆகும், அதை நிறைவேற்றுவது கடமை என்பதற்குப் போதுமான கிரந்தங்கள் பல உள்ளன. அவற்றுள் சில:

| கிரந்தங்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| பதாவா அபில்-லைது | பகீஹ் அபிலலைது ஸமர்கந்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| பதாவா குப்றா | ஷைகு இபுனுஹஜர் மக்கீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| பதாவா கலீலீ | இமாம் ஷைகு முஹம்மது கலீலீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| பதாவா அஜீஸிய்யா | ஷாஹ் அப்துல் அஜீஸ் திஹ்லவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| பதாவா றிஜ்விய்யா | ஷைகு அஹ்மதுரிஸாகான்பரேலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| தப்ஸீர் அஹ்மதிய்யா | முஹம்மது முல்லாஜியூன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| தப்ஸீர் ரூஹுல்பயான் | ஷைகு இஸ்மாயில் ஹக்கீபரூஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி |
| ஜாமிஉல் பரகாத், கஷ்புன்-நூர் | ஷாஹ் அப்துல் ஹக் திஹ்லவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு |

ஹக்கீகத்துன் - நதிய்யா ஷைகு அப்துல்கனி நாபிலிஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

தஹ்றீருல் - முக்தார் ஷைகு அப்துல்காதிர் மிஸ்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

றிஸாலத்துன் - நுதூர் ஷாஹ் ரபீஉத்தீன் திஹ்லவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி

பஸ்லுல் - கிதாப், ஸைபுல்-ஜப்பார் ஷாஹ் முஹியித்தீன் வேலூரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

பவாரீக் - முஹம்மதிய்யா ஷைகு பஜ்லுர் ரசூல் பதாயூனி ரஹ்மத்துல்லாஹி அலைஹி

வஸீலா - ஜலீலா வகீல் அஹமது ஸிக்கந்தர் பூரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

பத்ஹுல் ஹக் முபதிமஹ்மூது ஸாஹிப்மதராஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி

இர்ஷாதுல் - ஹக் ஸையிது அமீர் அலவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி

ஹதிய்யா - மக்கிய்யா வஹ்ஹாபிகளுக்கு றத்தாக மக்காவிலுள்ள உலமாக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஹிஜ்ரி 1221-ல் எழுதியது.

"வலிமார்களின் பேரால் நேர்ச்சை வைப்பது ஆகும்" என்றும் "நேர்ச்சையாக வைக்கப்பட்ட காணிக்கைகளை நிறைவேற்றுவது வாஜிபு - கடமை" என்றும் மேலே கண்ட கிரந்தகர்த்தாக்கள் கூறியுள்ளார்கள். நதர், நியாஸ் பற்றி அதிகம் அறிய ஆவலுள்ளவர்கள், இர்ஷாதுல் ஹக்கை பார்வையிடுக.

## கபுருகளில் போர்வை போர்த்தலாமா? சந்தனம் பூசலாமா? புஷ்பம் போடலாமா? வாசனைத் திரவியங்கள் சாம்புராணி புகை போடலாமா?

கபுருகளின் பேரில் போர்வைகள் போர்த்தப்படுகின்றன. உர்ஸுகாலங்களில் சந்தனம் பூசப்படுகின்றது. மற்ற நாட்களில் அத்தர் பன்னீர் தெளிக்கப்படுகின்றது. சாம்புராணி, ஊதுபத்தி, சந்தனக் கட்டை, அகில் கட்டை முதலிய வாசனைத் திரவியங்கள் புகைக்கப்படுகின்றன.

இவையெல்லாம் கூடுமா? என்ற ஐயம் எழுகின்றது. கீழே கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களை நன்கு படித்தறிந்து அத்தகைய சந்தேகத்தை போக்கிக் கொள்வீர்களாக.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத் ஆகி அடக்கமானதும் அந்த முபாரக்கான கபுரு ஷரீப் மீது போர்வை போர்த்தும் வழக்கம் ஸஹாபாக்கள் காலத்திலிருந்து ஆரம்பம் ஆகி இன்று வரை நடைபெற்று வருகின்றது.

காஸிம் இபுனு முஹம்மதிபுனு அபீபக்கர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹஜ்ரத் ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களிடஞ் சென்று, “அன்னையே ரசூலுல்லாஹ் அவர்களுடையவும் இரு ஸஹாபாக்கள் (அபூபக்கர், உமர்) உடையவும் கபுருகளை எனக்குத் திறந்து காட்டுங்கள் என்று கேட்டேன். அவர்கள் கபுருகளை திறந்து காண்பித்தார்கள் எனும் ஹதீது அபூதாவூதைக் கொண்டு அஷி.ஃ.அத்துல் லம்ஆத் பாகம் - 1, பக்கம் 616ல் ரிவாயத்துச் செய்யப்படுகிறது.

“ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது முபாரக்கான கபுரைத் திறந்து காண்பிக்கும்படி ஒரு பெண்மணி ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களைக் கேட்டுக் கொண்டார். அவர்கள் திறந்து காட்டினார்கள். அப்பெண்மிண தரிசனஞ் செய்து உயிர் போகின்றமட்டில் அழுதழுது அவ்விடத்திலேயே உயிர் துறந்தார்” எனும் ரிவாயத்து கிதாபுஷ்ஷிபா பக்கம் 199ல் சொல்லப்படுகின்றது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கபுரு ஷரீப் ஜனங்களின் பார்வையை விட்டும் மறைந்து வீட்டினுள் இருப்பதால் திறந்து காண்பிக்கும்படி ஆயிஷா நாயகி அவர்களிடம் அப்பெண்மணி கேட்க அவர்கள் கபுரு ஷரீப் மீதுள்ள போர்வையை அகற்றிக் காண்பித்தார்கள் என்பதாய மேலே கண்ட ஹதீதுக்கு நஸீமுர்ரியாள் - ஷரஹுஷிபா காலீ இயாலில் வியாக்கியானம் செய்யப்படுகிறது.

கபுரு ஷரீப் மீதுள்ள போர்வையை எடுத்துவிட்டுக் காண்பிக்கும்படி ஆயிஷா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களிடம் அப்பெண்மணி விண்ணப்பித்துக் கொண்டார். அவர்கள் கபுரு ஷரீபின் மீதிருந்த போர்வையை அகற்றிவிட்டுக கபுரைக் காண்பித்தார்கள் என்பதாக கிதாபுல் மததுல் பையாள்-பி நூரிஷ்ஷிபா காலீ இயால் பாகம் 2, பக்கம் 21-ல் கூறப்படுகிறது. இவற்றைக் கொண்டு நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கபுரு ஷரீபின் மீது போர்வை போர்த்தப்பட்டிருந்தது என்பது ஆதார பூர்வமாய் நன்கு விளங்குகின்றது.

போர்வைகள், தலைப்பாகைகள், துணி வகையறாக்கள் அவுலியாக்கள், ஸாலிஹீன்கள் உடைய கபுருகள் மீது வைப்பது மக்ரூஹ் என்று சில புகஹாக்கள் சொல்கின்றார்கள். ஆனால் சாமான்ய ஜனங்களின் பார்வையில்

கபுறாளிகள் கேவலமாகக் காணப்படாமல் வலுப்பமுள்ளவர்களாயும், மறதியாளருக்கும், தரிசனம் புரிவோர்க்கும் மரியாதையும் பக்தியும் உண்டாக வேண்டுமென்ற எண்ணத்துடனும். அவ்விதம் செய்வது ஜாயிஸ் (ஆகுமானது) என்று நாம் கூறுகிறோம். ஏனெனில் (இன்னமல் அ.்.மாலு பின்னிய்யாத்) செயல்களெல்லாம் எண்ணத்தைப் பொறுத்தேயுள்ளன என்பதாய் ரத்துல் முஹ்த்தார் 5வது பாகம், 256ம் பக்கத்தில் வரையப்பட்டுள்ளது. இவ்வாறே உஸ்தாது அப்துல்கனி நாபிலிஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் கிதாபு கஷ்புன் நூர் அன் அஸ்ஹாபில் குபூர் என்ற கிரந்தத்தில் கூறியுள்ளார்கள்.

மேலும், திரை, போர்வை முதலானவைகளை வொலிமார்கள், ஸாலிஹீன்களுடைய கபுரு ஷரீப்களில் போடுவது ஆகும். அதை விலக்கக் கூடாது. அவ்வாறு போடுவது அவர்களை சங்கை செய்து மரியாதைப்படுத்துவதிலுள்ளதாய் இருக்கும். அமல்கள் நிறைவேறுவது அவரது நிய்யத்து பிரகாரமாய் இருக்கும் என்று அல்லாமா இபுனு ஆபிதீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தன்கீஹுல் பதாவா ஹாமிதிய்யா, பாகம் 1, பக்கம் 357, ரத்துல் முஹ்தார் பாகம் 5, பக்கம் 256ல் குறிப்பிட்டிருப்பதுடன் தப்ஸீர் ரூஹுல் பயான், கஷ்புன் நூர், தஹ்ரீருல் முஹ்தார் முதலிய கிரந்தங்களிலும் நக்லு செய்யப்பட்டிருக்கின்றது.

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு உகப்பானவற்றுள் வாசனையும் ஒன்று என்பதாய் நாயகவாக்கியம் கூறுகின்றது. மலாயிக்கத்துகள் மணமான வாடையின் பேரில் பிரியமுள்ளவர்களாய் இருப்பதால் கபுரு ஷரீபுக்கு ஆஜர் ஆவதை நாடி கொஞ்கம் சந்தனம் வகையறாக்கள் பூசுவது மக்ரூஹ் இன்றியே ஆகுமானது - முஸ்தஹப்பானது என்று இமாம் ஸுபுகீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் சொல்வதாக துஹ்பத்துல்-முஹ்தாஜ் எனும் கிரந்தத்திலும் 'இதுபொல மணமான வாசனை பூசுவது ஸுன்னத்' தென்று துஹ்பாவுடைய ஹாஷியா ஷர்வானியிலும், இவ்விதம் செய்யது ஸுன்னத்தென்று ஹாஷியத்துல் பாஜுரி 1வது பாகம் 321-வது பக்கத்திலும் கூறப்படுகின்றன.

கபுரு ஷரீப்கள் மீது புஷ்பங்கள், ஈரமுள்ள பசுமையான வஸ்துக்கள் போடுவது முஸ்தஹப்பு. ஏனெனில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானதாக அப்துல்லா ஹிப்னு மஸ்ஊது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு இப்னு ஆபிதீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் றிவாயத்துச் செய்வதாவது, "ஒரு முஸ்லிமுடைய கப்ரின்மீது பூ போடுவரேல் அந்த மலரின் தஸ்பீஹைக் கொண்டு கப்ராளிக்கு அதாபு, இலேசாகின்றது.

மேலும் பூ போட்டவருக்கு நன்மை எழுதப்படுகின்றது" என்பதாக அல்லாமா இமாம் அபூஸய்து ஸல்மீ ஹனபீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஷரஹு-பர்ஜகில் 'நகல்' செய்கின்றார்கள்.

“கப்ரின் பேரில் பூ போடுவதும் பச்சைக் கொப்புக்களை நட்டுவதும் முஹ்தஹப்பும் அழகான கருமமுமாகும், அந்தப்பூ எதுவரைக் காயாதிருக்கின்றதோ அதுவரை அல்லாஹுத்தஆலாவைத் தஸ்பீஹ் செய்கின்றது”, என்று இமாம் ஸதுருஷ் ஷஹீது ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைக் கொண்டு ஷரஹுமஜ்மஉ-வில் நகல் செய்யப் பெற்றிருக்கின்றது.

“பன்னீர், புஷ்பம், ரைஹான் முதலானவற்றைக் கப்ருகள் மீது போடுதல் அழகான கருமமாகும் என்று பதாவா ஆலம்கீரியில் சொல்லப்படுகின்றது. கப்ருகளில் பூக்கள் போடுவது முஸ்தஹப்பு அதனால் கப்ராளிகளுக்கு ராஹத்துண்டாகிறது” என்று ஹாஷியத்துல் பாஜுரி 1-வது வாகம் 318-வது பக்கத்திலும், இஆனா 2-வது பாகம் 140-வது பக்கத்திலும் காணப்படுகின்றது.

“ஸுன்னத்-வல்-ஜமா அத்தைச் சேர்ந்தவர்கள், ஹதீதின் ரிவாயத்தைக் கொண்டு அமல் செய்யும் பொருட்டு சந்தூக் பேரிலும் கப்ரு மீதும் போர்வை பூ போடுகின்றார்கள்” என்பதாய் மௌலானா ஷாஹ் அஹமது ஸயீது முஜத்திது, திஹ்லவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தஹ்கீகுல்-ஹக்கில்-முபீன் 34-வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

“கப்ரின் பேரில் சந்தனம் பூசுவதும் பூ போடுவதும் ஆகும்” என்று மதராஸ் கவர்ன்மெண்ட் பிரதம காஜி மௌலானா மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது ஹபீபுல்லாஹ் ஸாஹிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள், ஹிஜ்ரி 1341-ல் மத்பஉ மக்தூமிய்யாவில் அச்சாகி இருக்கும் கிபாயத்துல்லபீப் எனும் பத்வாவில் கூறுகின்றார்கள். மதராஸிலுள்ள மேன்மை தங்கிய உலமாக்கள் அனைவரும் அதை சரிகண்டு கையெழுத்து வைத்திருக்கின்றார்கள். அவர்களுள் 1. அல்லாமா முப்தீ மஹ்மூது ஸாகிப், 2. ஷம்ஸுல் உலமா அல்ஹாஜ் உபைதுல்லா ஸாகிப் (கவர்ன்மெண்ட் காஜீ) 3. அல்லாமா முப்தீ அல்ஹாஜ் முஹம்மது தமீம் ஸாகிப், 4. அல்லாமத்துல் பாஜில் ஹகீம் அல்ஹாஜ் முஹம்மது தமீம் ஸாகிப், 5. அல்லாமத்துல் பாஜில் ஹகீம் அல்ஹாஜ் ஷாஹ் முஹம்மது பத்ருத்தீன் ஹுஸைன் ஸாகிப் சித்தீகி காதிரீ ஆகியவர்கள் பிரபல்யமானவர்கள்.

இரு கப்ருகளில் அதாபு நடப்பதைக் கண்டு பசுமையான பேரீத்தங் குச்சியை இரு கப்ருகளிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நாட்டி அவை காய்ந்து போகும் வரையில் வேதனை இலேசாகுமென்றும், அதன் தஸ்பீஹைக் கொண்டு கப்ராளிகளுக்கு ராஹத்துண்டாகின்றதென்றும் கூறினார்கள் என்னும் நாயக வாக்கியங்கள் காணப்படுகின்றன.

“மையித்தை தபன் செய்தபின் தலைமாட்டிலும் கால்மாட்டிலும் இரு பசுமையான கொப்புகளை நட்டுவது முஸ்தஹப்பாகும், ஏனெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பசுமையான ஒரு கொப்பை எடுத்து அதைக்கீறி இரண்டாக்ப பிளந்து கப்ரில் வைத்தார்கள்” என்று

ஸஹீஹுல் புஹாரீ ஸஹீஹுல் முஸ்லிம் இரு ஹதீஸ் கிரந்தங்களிலும் சொல்லப்படுகின்றது.

“ஸஹாபி புரைதா ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்கள் தன்னுடைய கப்ரில் இரு பசுமையான கொப்புகள் வைக்க வேண்டுமென வஸிய்யத்துச் செய்திருந்தார்கள். அவர்களுக்கு அவ்வாறே செய்யப் பெற்றது” என்று புஹாரி-ஷரீபில் கூறப்படுகிறது.

மேற்சொன்ன ஹதீஸ் மிஷ்காத் ஷரீபிலும் காணப்படுவதாய் அதனுடைய தர்ஜுமா அஷி.்.ப் அத்துல்-லம்ஆத் 1-வது பாகம் 183-ம் பக்கத்தில் குறிப்பிட்டு, ‘இந்த ஹதீஸைக் கொண்டு உலமாக்களில் ஒரு கூட்டத்தார் கப்றாளிகளின் பேரில் றைஹான் பூக்களும் பச்சைகளும் போடுவது ஆகும் என்று கூறுகின்றார்கள்.” என்பதாய் ஷைகு அப்துல்ஹக் முஹத்திஸ்திஹ்லவீ ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்கள் வரைந்துள்ளார்கள்.

மேலும், “எங்களுடைய பிந்திய தோழர்களில் நின்றும் சில இமாம்கள் மேற்சொன்ன ஹதீஸைக் கொண்டு கப்றாளிகளின் பேரில் பூ போடுவதும் பசுமையான குச்சி நாட்டுவதும் முஸ்தஹப்பென்று பத்வா கொடுத்திருக்கின்றார்கள்” என்பதாக அல்லாமா முல்லா அலி காரீ மக்கீ ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்கள் மிர்காத் ஷரஹுலமிஷ்காத் 1வது பாகம், 286வது பக்கத்தில் நகல் செய்திருக்கின்றார்கள்.

பாத்திஹா ஓதும்போது ஊதுபத்தி, சாம்புராணி போன்றவை புகைப்பது ஹனபீ கிரந்தத்தைக் கொண்டு ஆகுமென ஸ்தாபிக்கப் பெற்றிருக்கின்றது உம்தத்துல் பதாவாவில் நின்று வஸீலத்துன்-நஜாத் என்னும் கிரந்தத்தில் சொல்லப்படுவதாய் தஸ்ரீஹுல் - அவ்தக் - தர்ஜுமா ஷரஹுபர்ஜகி பக்கம் 340ல் வரையப்படுவதாவது: பாத்திஹா ஓதுகிற நேரத்தில் ஊதுபத்தி அம்பர் புகைப்பதும் மணமான வஸ்துக்களை வைப்பதும் தாபியீன்களைக்கொண்டு ஸ்திரமாக்கப் பெற்றிருக்கின்றது. ஹஜ்ரத் சுல்தான் அப்துல் அஜீஸ் ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்கள் மனைவியும் அவர்கள் மகள் உம்முஹானி ரலியல்லாஹுல தஆலா அன்ஹா அவர்களுமாக ஸஹாபாக்கள் முன்பாக இவ்வாறு செய்திருக்கிறார்கள். ஒருவரும் ஆட்சேபனை செய்யவில்லை. இவ்வழக்கம் அக்காலத்திலிருந்தே இக்காலம் வரை நடைபெற்று வருகின்றது” என்று இவ்விஷயத்தை மப்ரூக் எனும் கிரந்தத்தில் இமாம் பஜ்தவீ ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்களும் எழுதியுள்ளார்கள். மேலும் முப்தீ மஹ்மூது சாகிப் ரலியல்லாஹுல தஆலா அன்ஹுல அவர்களும் பத்ஹுல்ஹக் 33வது பக்கத்தில் கூறுகின்றார்கள்.

“வலிமார்களது கபுரு ஷரீபுள்ள இடங்களில் குளோபு, லைட், விளக்கு வகையறாக்கள் மெழுகுவத்திகள், முதலியவைகளை ஏற்றுவது அவர்களை சங்கை செய்து கண்ணியப்படுத்தி வைப்பதாகும். இவ்விதம் செய்வது அழகான நாட்டத்தின் உயர்ந்த இலட்சியமாகும். அவற்றை விலக்கக்கூடாது”

என்று தப்ஸீர் ரூஹுல் பயான் 3-வது பாகம் 400வது பக்கத்திலும், தஹ்ரீருல் முக்த்தார், 1-வது பாகம் 123வது பக்கத்திலும் கஷ்புன் நூரிலும் விரிவாக வரையப்பெற்றிருக்கின்றது.

ஆகவே, இத்தகைய காரணங்களால் சாதாரணமான கப்ருகளுக்குக்கூட செய்வது கூடும் என்றிருக்க, அவுலியாக்களுடைய கப்ரு ஷரீபுகளுக்கு வலுப்பத்தையும், ஒழுக்கத்தையும், மரியாதையும், நன்மையையும் நாடிச் செய்தல் ஆகுமானதுதான் என்பது ஹதீது, பிக்ஹுகுகளைக் கொண்டு வெட்ட வெளிச்சமாகத் தெரியவருகிறது.

## முடிவுரை

வணக்கவாளியுடைய எல்லா வணக்கங்களையும் விட அவுலியாக்களின் பேரில் உகப்பு (முஹப்பத்) வைப்பதானது மிகப் பெரிய வணக்கமாக இருக்கும்.

ஆகவே, அல்லாஹ் உடைய அவுலியாக்களை எவர்கள் உகப்புவைக்கிறார்களோ நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையே உகப்பு வைத்தவர்கள். எவர்கள் அல்லாஹ்வை உகப்பு வைப்பார்களோ அவர்களை அல்லாஹ்வும் உகப்பு வைப்பான். அதாவது, அல்லாஹ்வின் அவுலியாக்களை நேசிப்பதானது அமல்களிளெல்லாம் பெரிய தவ வணக்கமாகும். இந்த அடிப்படையிலேயேதான் மஹான்களெல்லாம் அல்லாஹ்வின் அவுலியாக்களை உகப்பு வைத்து நேசித்து தாங்களும் அவுலியாக்களானார்கள் என்பதாம். இதேபோல குத்புஷ்ஃறானீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் தபகாத்துல் குப்ரா 1-வது பாகம், 77-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு நாட்டு அரபி, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சமுகம் வந்து யாரஸுலல்லாஹ்! கியாமத்துநாள் எப்போது? என்று கேட்டபோது அவர்கள் அவரை நோக்கி அதற்காக நீ என்ன சேகரித்து வைத்திருக்கிறாய்? என்று வினவினார்கள்.

அப்போது அவர் ‘‘அல்லாஹ்வையும், அல்லாஹ் உடைய ரஸுலையும் உகப்பு வைத்திருக்கிறேன், மற்றபடி நான் தொழுகை நோன்பு இவற்றில் அதிகப்பட சேகரம் செய்யவில்லை’’ என்றார்.

அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (அல்-மர்உ - மஅமன்-அஹப்ப) ‘‘மனிதன் யார் யாரை உகந்தானோ அவர்களோடேயே ஆகியிருப்பான்’’ என்று கூறினார்கள்.

‘‘எனது அவுலியாக்கள் என்னுடைய பரிவட்டத்திற்குள் இருக்கின்றார்கள். என்னையன்றி வேறு யாரும் அறிய மாட்டார்கள்’’ என்று இறைவன் கூறியதாக ஹதீது குதுஸியில் வந்துள்ளது.

அவுலியாக்கள், குதுபுமார்கள் உலகத்துக்கு முளைகளாவார்கள்.

**அல்லாஹ்வின் பாதையில் ஆவிகளை தத்தம் செய்திருக்கக்கூடிய நாதாக்களான அவுலியாக்கள் வபாத்திற்குப் பிறகும் ஹயாத்துள்ளவர்கள்** எனத் திருமறை சான்று பகருகின்றது. அன்னார்களே ஹகீகத்தில் உலகத்தைக் கண்காணிப்பவர்கள் என நாயக வாக்கியம் போதிக்கின்றது.

உலகின் எந்த கோணத்திலிருந்தும் மானிடர் எந்தக் காலத்திலும் இகபரத்திற்காக நற்கருமங்களைக் குறித்து அவர்கள்பால் உதவி தேடல் கூடும். அவற்றை நிறைவேற்றி வைக்கும் சக்தியை அவர்களுக்கு அல்லாஹ் அளிததுள்ளான். இம்மாபெரும் தத்துவம் அவர்களிடத்தில் யுகமுடிவு வரை இருக்கவே செய்யும். ஆவர்களது திருநாமங்கள் ஆபத்து காலத்தில் அருமருந்தாயும், ஆனந்த சமயத்தில் அமிர்தமாயும் இருக்கின்றன.

"சிறிது நேரம் அவுலியாக்களுடைய சகவாசத்திலிருப்பது, முகஸ்துதியற்ற நூறு வருட வணக்கத்தை விட மேலானது" என்று மௌலானா ரூமி ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் மஸ்னவி ஷரீபில் மொழிந்துள்ளார்கள்.

வலியுல்லாவை நேசிக்கிறவன் அவர்களது திருச்சன்னிதானத்தில் இருக்கையில் அவர்களை மறந்து ஒரு வினாடியேனுமிராதே! ஜாக்கிரதை!" எனவும் ஸ∴தீ ஷீறாஸி ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் போஸ்தானில் எச்சரித்துள்ளார்கள்.

"உயிரோடு இருக்கையிலோ, உலகத்ததை விட்டு மறைந்த பின்னரோ அல்லாஹ்வின் வலி இடத்தில் சொற்ப நேரமாயினும் இருப்பது அமல்களில் மேலானது" என்பதாக ஸாலிஹீன்களில் சிலருக்கு நபி பெருமானார் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் காட்சி அளித்து கூறியுள்ளார்கள் என்பதாக அல்லாமா ஷஹாபுத்தீன் இபுனு ஷுஜாயீ ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு என்ற பெரியார் றிஸாலா-இதுபாத்து-கறாமாத்தில் அவுலியா 232வது பக்கத்தில் சொல்லியுள்ளார்கள். மேலும் இதை ஹதீக்கத்துன்-னதிய்யா-பீ-ஷரஹித்தரீக்கில் முஹம்மதிய்யா என்ற நூலின் 2வது பாகம், 81வது பக்கத்தில் அல்இமாம் ஷைகு அப்துல் கனி நாபல்ஸி ரலியல்லாஹுு தஆலா அன்ஹுு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ஆகவேதான், உலகோம்பும் உத்தமர்கள் எல்லோரும் குத்புமார்கள் உடைய இல்லங்களின் வாயில்களைக் காத்துக் கிடந்தனர். மேலும், காத்துக் கிடக்கின்றனர்.

இத்தகைய புனிதமான மஹாத்மாக்களைத் தான் ஆத்ம ஞானமற்ற அறிவிலிகள் சிலர் தூற்றுகின்றனர்.

புகாரி ஹதீதில், அபூஹுரைரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களைத் தொட்டும் ரிவாயத்து வந்துள்ளது:-

“எவன் ஒருவன் என்னுடைய வலிமார்களுடன் பகைமைச் செய்வானோ அவன் என்னுடன் போர் செய்வதற்கு தயாராக இருந்து கொள்ளட்டும் என்று அல்லாஹ் கூறியதாக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்!”

புத்தியுடைய ஒவ்வொரு மூமின் மக்கள் அறியக் கூடிய விஷயமாவது:- “அவுலியாக்களை இன்கார் செய்வதைக் கொண்டு ஹலாக்கு (நாசம்) உடைய பள்ளத்தில் விழ வேண்டாம். ஏனென்றால் அந்த இன்கார் ஆளைக் கொல்லக் கூடிய கொடிய விஷம். அது உங்களைக் கொன்று விடும். இதை எங்களுக்கு முன்னோர்கள் காலத்திலும் எங்களின் காலத்திலும் பிரத்தியட்சமாக கண்டிருக்கிறோம்” என்று இமாம் இபுனு ஹஜர் மக்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு தங்களுடைய பதாவாவில் தீர்ப்புச் செய்துள்ளார்கள்.

எவனொருவன் கெட்ட எண்ணத்தைக் கொண்டு அவுலியாக்களை நோவினைச் செய்வானேயானால் திட்டமாக அவன் ஷரீஅத்தின் (தாயிரா) எல்கையை விட்டும் வெளியே புறத்தியில் ஆகிவிட்டான்” என்று ஹளரத் ஷெய்குல் அக்பர் முஹிதீன் இபுனு அரபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு சொல்லியுள்ளார்கள்.

ஒளலியாக்களையும் ஆலிமீன்களான உலமாக்களையும் பகைமை கொள்வதாகிறது சின்ன விஷயம் அல்ல, மிகுதம் பேர்களிடத்தில் அது குபுரு என்பதாகவும் பயப்படப்படுகிறது.

ஒளலியாக்களை நாவைக் கொண்டோ, கல்பைக் கொண்டோ, அந்த ஒளலியாக்கள் ஹயாத்தானவர்களாகவோ அல்லது வபாத்தானவர்களாகவோ இருந்தாலும் சரியே, எப்படி ஆனாலும் அவர்களை இன்கார் செய்வதாகிறது. சந்தேகமின்றி குப்ராக இருக்கும். மதுஹபுகளின் தேட்டரவுப்படி முஸ்லீம்களின் இஜ்மாவைக் கொண்டு காபிராக இருக்கும். ஏனென்றால், அவன், தீனுல் இஸ்லாத்தையும், ஷரீஅத்து முஹம்மதிய்யாவையுமே இன்கார் செய்து விட்டான் என்பதே. இவ்விதம் ஷெய்கு அப்துல் கனி நாபில்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ஹதீகத்துன்னதிய்யா 1-வது பாகம், 165-வது பக்கத்தில் விரிவாகக் கூறியுள்ளார்கள்.

இதுபோவே ஷரஹு ஜவாஹிரின் நுஸுல் 2-வது பாகம் 59-வது பக்கத்திலும் குறிப்பிட்டுள்ளார்கள்.

எனவே அவுலியாக்களோடு மோதத் துணிகின்றவர்கள் இத்தகைய பயங்கர எச்சரிக்கைகளை கவனித்து நன்மையை நாடி உண்மையை உணர்ந்து கொள்ளட்டும்.

ஏகவல்ல இறைவனே! உனது நேசத்திற்குகந்த நல்லடியார்களை நெஞ்ச மஞ்சாது நிந்திக்கும் இந்த நயவஞ்சகர்களுக்கு நீயே நல்ல புத்தி கொடுக்க வேண்டும்.

அன்பர்களே! இறைநேசச் செல்வர்களான அவுலியாக்கள் செய்த கடும் தவங்களென்ன! இபாதத்துகளென்ன! அவர்களைக் கொண்டு இவ்வையகம் அடைந்திருக்கும் அதிர்ஷ்டங்களென்ன! நல்ல நஸீபுகளென்ன! இத்தகைய பெறுதற்கரிய பாக்கியங்களை அடைந்ததற்கு நாம் யாது கைம்மாறு அளிக்க வல்லோம்! என்பதை நினைத்து, நெஞுசுருகி மனமார இறைவனுக்கு நன்றி செலுத்தித் துதிக்க வேண்டி இருக்க தூற்றுவது என்ன நியாயம்! அது மிகப்பெரிய அநீதம்! இத்தகைய அநியாயக்கார சிற்றறிவுடையவர்களை மௌலானா ஜலாலுத்தீன் ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மஸ்னவி ஷரீபில் குறிப்பிடுகின்ற வழுக்கைத் தலையுடைய கிளிக்கு ஒப்பாகத் தான் சொல்ல வேண்டும், எவ்வாறெனில்:-

பலசரக்கு கடை வைத்திருந்த ஒரு வியாபாரி கிளியொன்று வளர்த்தான். அது, இனிய குரலோசையும், பஞ்சவர்ண நிறமும் பெற்றிருந்தது. பேசும் தன்மையுள்ள அந்த கிளி அவனது கடைக்கு காவலாகவும் இருக்கும். வாடிக்கைகாரர்களிடம் விகடமாகவும் பேசும். ஒருநாள் கடைக்காரன் வீட்டிற்குப்போய் இருந்த சமயம் கடைக்குக் காவலாய் இருந்தது கிளி.

பூனையொன்று எலியைப் பிடிப்பதற்கு திடீரென கடையினுள் குதித்தது. அதைக்கண்டதும் உயிருக்கஞ்சி கிளி விரண்டு பறந்தோடிற்று. அதனால் கடையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாதம் எண்ணை சீசாக்கள் கீழே விழுந்து உடைந்தன.

கடைக்காரன் திரும்பி வந்தான். சீசாக்கள் உடைந்து எண்ணை கொட்டி கிடப்பதைக் கண்டவன். ஆத்திரம் கொண்டு கிளியின் தலையில் அடிகள் பல கொடுத்தான். அதனால் அதன் தலை வழுக்கையாகிவிட்டது. பேச்சையும் அது மறந்து போயிற்று. இன்னிலையைக் கண்டு கடைக்காரன் கைசேதப்பட்டு தன்னைத்தானே நொந்து கொண்டான். அது மீளவும் மதுர மொழி பேசாதா என்று ஏங்கிநின்றான்.

நாட்கள் சில கழிந்தன. கம்பளி ஆடை அணிந்த பரதேசியொருவர், திறந்த வழுக்கைத் தலையுடன் அவ்வழியே சென்றார். அவரைக் கண்டதும் கிளி உரக்கக் கத்தி "ஓ வழுக்கைத்தலையாரே! யாது காரணத்தால் நீரும் வழுக்கை இனத்தைச் சேர்ந்தீர்! என்னைப் போலவே சீசாவை உடைத்து எண்ணையைக் கொட்டி அதன் மூலம் இந்த கதி அடைந்தீரா?" என்று பேச ஆரம்பித்தது.

கிளியின் இத்தகைய ஊகத்தைக் கண்டு அங்கிருந்த யாவரும் நகைத்துச் சிரித்தனர். ஏனெனில் கம்பளித்துணி அணிந்தவரை அது தன்னைப்போலவே பாவித்ததனாலேயாம்.

மௌலானா ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் மேலும் அறிவுறுத்துகின்றார்கள். அது வருமாறு:-

“பரிசுத்த மஹான்களின் செயல்களை உனது சிற்றறிவு கொண்டு முடிவு செய்து விடாதே ‘ஷேர்’, ‘ஷீ’ என்று வரைவதில் எழுத்துக்கள் (ஷீன்,ஏ,ரே) ஒத்திருந்த போதிலும் அர்த்தத்தில் வித்தியாசம் உண்டு. மனிதனை அடித்துக் கொண்டு புசிக்கும் புலிக்கு ஷேர் எனப்படுகின்றது. அவன் குடித்துப் பருகும் பாலுக்கு ஷீர் எனப்படுகின்றது. மேற்சொன்ன இந்தக் கிளியைப் போல் புத்தி படைத்த குறைமதியாளர்கள் தப்பபிப்பிராயம் கொண்ட காரணத்தாலேயே உலகத்தினர் வழி பிசகிப் போய்விட்டனர். அவ்லியாவுல்லாக்களின் செயல்களை நல்லறிவு படைத்த ஒரு சிலரே விளங்கிக் கொண்டார்கள். துற்பாக்கியவான்களான மற்றவர்களுக்கு அது பற்றிய உண்மை அறிவுகள் உண்டாகி இருக்கவில்லை ஆதலின், அவர்களுடைய பார்வைக்கு நல்லதும், கெட்டதும், ஒன்று போலவே தோன்றின. தங்களின் தவறான எண்ணத்தின் காரணத்தால் அவர்கள் அன்பியாக்களைத் தங்களுக்கு இணையாக்கினார்கள், அவுலியாக்களை தங்களைப் போலவே சமமாக எண்ணிக் கொண்டார்கள். நாமும் மனிதர்கள் தான், அவர்களும் மனிதர்கள் தான் எனவும், நாமும் உண்ணுகிறோம். உறங்குகிறோம். அவர்களும் உண்ணுகிறார்கள், உறங்குகிறார்கள் எனவும் சமப்படுத்தி தப்புக் கணக்கு போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் தங்களுக்கும் இடையே மலைபோன்ற வித்தியாசங்கள் உண்டாகி இருந்ததை அவர்கள் குருட்டுத் தன்மையால் அறிந்திருக்கவில்லை.

பாருங்கள்! குளவி, தேனீ இந்த இரு ஜந்துக்களும் ஒரே இடத்திலிருந்தே, அதாவது - மலர்களிலிருந்தே மதுவை அருந்துகின்றன. ஆனால் குளவியிலிருந்து விஷ எச்சிலும், தேனீயிலிருந்து மதுரமானதேனும் உற்பத்தியாகின்றன.

இருவகை மான்கள் புல்லையம் தண்ணீரையும்தான் அருந்துகின்றன. ஒரு வகையிலிருந்து வெறும் புளுக்கையும், விட்டையும் மற்ற வகையிலிருந்து கஸ்தூரியும் உண்டாகவில்லையா?

இருவித நாணல்கள் ஆற்றங்கரையில் ஒரே தண்ணீரைத் தான் அருந்துகின்றன. அவற்றுள் ஒன்று வெறும் மூங்கிலாகின்றது. மற்றது இன்பரசத்துடன் கரும்பாகின்றது. இவ்விதமாக எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

இன்னும் பாருங்கள்! ஒருவன் உண்ணுகின்றான். அவனில் நின்று வெறும் அசுத்தமே வெளியாகின்றது. மற்றொருவரும் உண்ணுகின்றார். அது

முற்றிலும் இறைவனது (நூர்) ஜோதியாக மாறுகின்றது. தீயவன் உண்ணுகிறான். அதிலிருந்து கோபம், பொறாமை, முதலியவை உண்டாகின்றன. நல்லவர் உண்ணுகிறார் அதன் மூலம் இறை ஜோதிப் பிரகாசமும், ஞானமும், தெய்வீகக் காதலும் உண்டாகின்றன.

நற்கருமங்கள் புரியும் நல்லவர் சுத்தமான, வளமுடைய நிலமாக இருக்கிறார். தீய காரியங்களில் தலையிடும் கெட்டவர் உபயோகமற்ற உவர் நிலமாக இருக்கின்றார். முந்தியவர் பரிசுத்தவானாக இருக்கிறார். பிந்தியவர் துஷ்டராகவும், அசுரராகவும், இருக்கின்றார். தோற்றத்தில் அவ்விருவருடைய உருவமும் ஒன்று போலவே ஒத்திருந்த போதிலும் என்ன?

மேலும் பாருங்கள்! முதுரமான நல்ல தண்ணீரும், கைப்பான உப்புத் தண்ணீரும் பார்வைக்கு ஒன்று போலவே இருக்கின்றன. ஆனால், நாவில் வைத்து ருசி பார்த்ததற்கப்பால்தான் இரண்டிற்கும் வித்தியாசம் தெரிய வருகிறது. அனுபவித்து அறிபவனைத் தவிர வேறு எவனும் அந்த நீரின் தன்மையை அறிய மாட்டான். அப்படிப்பட்ட அனுபவசாலிகளையே நீ தேடியடைதல் வேண்டும். ஏனெனில், அவர்களே கசப்பு நீரையும், மதுர நீரையும், பிறித்தறிவார்கள். பதார்த்தங்களின் சுவையை ருசித்தறிபவரைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார். தேனையும் மெழுகையும் எப்படி வேறுபடுத்தி அறிய முடியும்?”

இவ்வாறாக மௌலானா ரூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கதை ரூபமாய்ப் போதனை செய்துள்ளார்கள்.

யாவரும் நன்கு விளங்கி அறியும் பொருட்டு ஓா உதாரணம் கூறுகின்றோம். சாதாரண இரும்பை யாரும் கையால் தொடலாம். ஆதனால் எத்தகைய தீங்கும் இல்லை. ஆனால் அதை நெருப்பில் போட்டாலோ அதற்குச் சூடுண்டாகி சிவந்து அதுவும் நெருப்பாகவே காணப்படுகின்றது. தனது சுயநிறமாகிய கறுமையைப் போக்கி நெருப்பின் நிறமாகிச் செம்மையைப் பெறுகின்றது. அது சமயம் எவரும் அதைத் தொடமுடியாது. தொட்டாலோ கரித்துப்போடும். இவ்வாறே அல்லாஹ்வின் ஜலாலியத்தெனும் நெருப்புத் தன்மையைப் பெற்ற அவுலியாக்கள் முதலில் சாதாரண மனிதர்களாய் இருந்த போதிலும் அவனின் குணத்தைக் கொண்ட பிறகு தனிப்பட்ட மகத்துவமும் மாண்பும் சக்தியும் பெற்ற மேதாவிகளாகி விடுகின்றார்கள்.

எனவே குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, கியாஸ் ஆகியவற்றைக் கொண்டு மேலே ஒருவாறு கூறியுள்ளோம். அவற்றுக்காதாரமாக முஃதபரான கிரந்தங்களில் சிலவற்றை மேற்கோளாகக் காண்பித்திருக்கின்றோம்.

குர்ஆன், ஹதீது, இஜ்மாஃ, கியாஸ் இவற்றுள் சிலதை ஒப்புக் கொண்டு சிலதைத் தள்ளுவானேயானால் அவன் ஸுன்னத்து வல் ஜமாஅத்தை விட்டும் நீங்கினவனாவான்.

“நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் ஒரு விடுத்தம் நடந்த ஸுன்னத்தாகவிருந்தாலும் சரி, பல விடுத்தம் நடந்த ஸுன்னத்தாகவிருந்தாலும் சரி, அவற்றுள் ஒன்றை இலேசாகக் கண்டாலும், இன்கார் செய்தாலும் குப்ரு உண்டாகி விடுமென்று மார்க்கத்திலேற்பட்டிருக்க, ஓர் விடுத்தம் நடந்த ஸுன்னத்துதானே என்று சொல்வதுமின்றி, அந்த ஸுன்னத்தைத் தொடராமல் இன்காரும் செய்கின்றார்கள். இது மிக மிக ஆச்சரியம்!” என்று மௌலானா ஷாஹ் முஹிய்யித்தீன் ஸாகிபு வேலூரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் பஸ்லுல் கிதாப் 82-வது பக்கத்தில் தெளிவுபடக் கூறியுள்ளார்கள்.

“எனது உம்மத்துக்கள் பிற்காலத்தில் எழுபத்தி மூன்று கூட்டங்களாகப் பிரிவார்கள். அதில் எழுபத்திரண்டு கூட்டங்கள் நரகவாதிகள். ஒரு கூட்டத்தார் மாத்திரம் ஈடேற்றமடைவார்கள்” என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியபோது, “அந்த ஒரு கூட்டத்தார் யார்? என்று கேட்கப்பட்டது.

“நானும் எனது அஸ்ஹாபிகளும் எந்த ஒன்றின் பேரில் தரிக்கப்பட்டிருக்கிறோமோ அந்த ஒன்றின் பேரில் தரிப்பட்டவர்களாக இருக்கும்” என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கப்படுத்தினார்கள். (திர்மதி இபுனுமாஜா - அபூதாவூது)

மேற்குறிப்பிட்டபடி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது அருமைத் தோழர்களும் எந்தவொன்றின்பேரில் தரிப்பட்டிருக்கிறார்களோ, அந்த ஒன்றின் பேரில் தரிப்பட்டவர்கள்தான் ஸுன்னத்து வல்-ஜமாஅத்துக் கூட்டத்தாராக இருக்கும். இவர்கள் தான் அந்த 73 கூட்டத்தாரில் ஈடேற்றம் பெற்ற ஒரு கூட்டத்தாராக இருக்கும்.

மேலும், சன்மார்க்கத் தேர்ச்சிபெறாத சில அவாமிகளான ஜனங்கள் தப்ஸீர் ஞானமோ, ஹதீதின் தாத்பரியமோ விளங்காமல் தமது மனத்திற்குத் தோன்றிய பிரகாரமெல்லாம் குர்ஆன் ஷரீபின் ஆயத்துக்களுக்கு ஸபபு நுஸூல் தெரியாமல் தப்புந்தவறுமாகப் பொருள் கூறி மேற்கொள் காட்ட முற்பட்டிருக்கின்றனர்.

“குர்ஆனுக்குத் தனது சொந்த யோசனையைக் கொண்டு வியாக்கியானஞ் செய்வானேயானால் அவன் காபிராகி விட்டான்.” எனவும், “எவன் தன்னுடைய சுய அறிவைக் கொண்டு (தனது நோக்கத்தின்படி) குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்கிறானோ அவன் தன்னுடைய இடத்தை நரகத்தில் தேர்ந்து எடுத்துக்கொள்வான்” எனவும் திருத்தூதர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்.

மார்க்கம் இன்னதெனத் தெரியாதவர்கள், நாங்களும் இஸ்லாத்திற்காகச் சேவை செய்கின்றோம் - இஷாஅத்துச் செய்கின்றோம்

எனப் பறைசாற்றிக்கொண்டு, குர்ஆன் ஆயத்துகளுக்குத் தாறுமாறாக மனதில் தோன்றியபடியெல்லாம் அர்த்தங் கூறி, அனர்த்தம் செய்து, உண்மையான உலமாக்களையும், ஆரிபீன்களையும் தூஷணிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அன்னவர்களுடைய வேஷம் வெளுத்து அவருடைய துவேஷச் செயலை உலகுக்கு உணர்த்த இவ்வெளியீடு உதயமாகி இருக்கின்றது.

குர்ஆனுக்கு ளாஹிர், பாத்தின் (உள்ளரங்கம், வெளியரங்கம்) இருவிதப் பொருள்கண்டு. இவ்விரண்டையும் கடைப்பிடித்து ஒழுகி நடப்பவர்களே உண்மை உலமாக்களாவார்கள். மேலே, இருவித அபிப்பிராயங்களையும் காண்பித்திருப்பதால் விளங்கிக் கொள்ளச் சக்தியற்றவர்கள் குதர்க்கஞ் செய்யாது, ளாஹிர்-பாத்தின் இரண்டையுமறிந்த உலமாக்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வார்களாக!

கிருபையுள்ள அல்லாஹ்தஆலா நம்மனைவரையும் அந்த வழிகெட்ட எழுபத்திரண்டு கூட்டங்களில் நின்றும் விலக்கி, ஈமானை இழக்காமலும், குப்ரை நெருங்காமலும் காப்பாற்றி வெற்றி பெற்ற ஸுன்னத்-வல்-ஜமாஅத்துக் கூட்டத்திலேயே நிலைபெறச் செய்து, அழகான முத்திராங்கமான, ஹுஸ்னுல் காத்திமாவான நல்முடிவைத் தந்தருள்வானாக. ஆமீன்.

மேலும் அல்லாமா, ஆரிபுபில்லாஹ், இமாம் இஸ்மாயீல் ஹக்கீ பரூஸி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் ரூஹுல் பயான், 4-வது பாகம், 137வது பக்கத்தில் ஆண்டவன்பால் பிறார்த்திக்கும் துஆவுடன் நாம் பூர்த்தியுறச் செய்கின்றோம். அஃதாவது:-

“அவ்லியாக்களையும், அவர்களது கபுருகளையும் ஜியாரத்துப் புரிவதையும் அவர்கள்பால் உதவி தேடுவதையும் இன்கார் செய்கிறவன் எடுத்தெறியப்பட்ட ஷைத்தானைப் போலாவான். ஆகையால், இத்தகைய இன்கார்களில் நாங்கள் மோசம் போவதை விட்டும் பாதுகாத்துக்கொள்ளும்படி, யா அல்லாஹ், அடியார்களாகிய நாங்கள் உன்னிடம் கார்மானம் தேடுகின்றோம்.”

*ஆமீன்! யாறப்பல் ஆலமீன்!*

இங்ஙனம்,
சன்மார்க்க ஊழியன்
பெ.த.முஹம்மது பாக்கர் சாஹிபு